
# திருக்குறள்

(வ.சுப.மாணிக்கனார்-ன் தெளிவுரை)



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.WorldTamilAcademy.com

அறிவே வளம்

# திருக்குறள்

## வ. சுப. மாணிக்கனாரின்
## தெளிவுரை

இரு அடி குறளுக்கு இரு வரியில் தெளிவுரைக் கூறியவர் வ.சுப.மாணிக்கனார். அவர்களது உரையுடன் புதிய வடிவில் இத்திருக்குறள் புத்தகத்தினை உங்களுக்காக உலகத்தமிழ்க் கல்விக்கழகம் வடிவமைத்திருக்கிறது.

**உலகத்தமிழ்க் கல்விக்கழகம்**

www.worldtamilacademy.com

# திருக்குறள்

## பொருளடக்கம்


| வரிசை எண் | தொடர் எண் | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|---|
| 1 | 1 | அறத்துப்பால் | 10 - 86 |
| 1 | 1 | பாயிரவியல் | 11 - 18 |
| 1 | 1 | கடவுள் வாழ்த்து | 11 - 12 |
| 2 | 2 | வான் சிறப்பு | 13 - 14 |
| 3 | 3 | நீத்தார் பெருமை | 15 - 16 |
| 4 | 4 | அறன் வலியுறுத்தல் | 17 - 18 |
| 2 | 2 | இல்லறவியல் | 19 - 58 |
| 1 | 5 | இல்வாழ்க்கை | 19 - 20 |
| 2 | 6 | வாழ்க்கைத்துணை நலம் | 21 - 22 |
| 3 | 7 | புதல்வரைப் பெறுதல் | 23 - 24 |
| 4 | 8 | அன்பு உடைமை | 25 - 26 |
| 5 | 9 | விருந்து ஓம்பல் | 27 - 28 |
| 6 | 10 | இனியவை கூறல் | 29 - 30 |
| 7 | 11 | செய்ந்நன்றி அறிதல் | 31 - 32 |
| 8 | 12 | நடுவு நிலைமை | 33 - 34 |
| 9 | 13 | அடக்கமுடைமை | 35 - 36 |
| 10 | 14 | ஒழுக்கமுடைமை | 37 - 38 |
| 11 | 15 | பிறன் இல் விழையாமை | 39 - 40 |
| 12 | 16 | பொறை உடைமை | 41 - 42 |
| 13 | 17 | அழுக்காறாமை | 43 - 44 |
| 14 | 18 | வெஃகாமை | 45 - 46 |
| 15 | 19 | புறம் கூறாமை | 47 - 48 |
| 16 | 20 | பயன் இல சொல்லாமை | 49 - 50 |
| 17 | 21 | தீவினை அச்சம் | 51 - 52 |
| 18 | 22 | ஒப்புரவு அறிதல் | 53 - 54 |
| 19 | 23 | ஈகை | 55 - 56 |
| 20 | 24 | புகழ் | 57 - 58 |

| வரிசை எண் | தொடர் எண் | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|---|
| 3 | 3 | துறவறவியல் | 59 - 84 |
| 1 | 25 | அருளுடைமை | 59 - 60 |
| 2 | 26 | புலால் மறுத்தல் | 61 - 62 |
| 3 | 27 | தவம் | 63 - 64 |
| 4 | 28 | கூடா ஒழுக்கம் | 65 - 66 |
| 5 | 29 | கள்ளாமை | 67 - 68 |
| 6 | 30 | வாய்மை | 69 - 70 |
| 7 | 31 | வெகுளாமை | 71 - 72 |
| 8 | 32 | இன்னா செய்யாமை | 73 - 74 |
| 9 | 33 | கொல்லாமை | 75 - 76 |
| 10 | 34 | நிலையாமை | 77 - 78 |
| 11 | 35 | துறவு | 79 - 80 |
| 12 | 36 | மெய் உணர்தல் | 81 - 82 |
| 13 | 37 | அவா அறுத்தல் | 83 - 84 |
| 4 | 4 | ஊழியல் | 85 - 86 |
| 1 | 38 | ஊழ் | 85 - 86 |




இல்வாழ்க்கை



இனியவை கூறல்



ஈகை


விருந்தோம்பல்

வாய்மை

| வரிசை எண் | தொடர் எண் | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|---|
| 2 | 2 | பொருட்பால் | 87 - 227 |
| 1 | 5 | அரசியல் | 88 - 137 |
| 1 | 39 | இறைமாட்சி | 88 - 89 |
| 2 | 40 | கல்வி | 90 - 91 |
| 3 | 41 | கல்லாமை | 92 - 93 |
| 4 | 42 | கேள்வி | 94 - 95 |
| 5 | 43 | அறிவுடைமை | 96 - 97 |
| 6 | 44 | குற்றம் கடிதல் | 98 - 99 |
| 7 | 45 | பெரியாரைத் துணைக்கோடல் | 100 - 101 |
| 8 | 46 | சிற்றினம் சேராமை | 102 - 103 |
| 9 | 47 | தெரிந்து செயல்வகை | 104 - 105 |
| 10 | 48 | வலி அறிதல் | 106 - 107 |
| 11 | 49 | காலம் அறிதல் | 108 - 109 |
| 12 | 50 | இடன் அறிதல் | 110 - 111 |
| 13 | 51 | தெரிந்து தெளிதல் | 112 - 113 |
| 14 | 52 | தெரிந்து வினையாடல் | 114 - 115 |
| 15 | 53 | சுற்றம் தழால் | 116 - 117 |
| 16 | 54 | பொச்சாவாமை | 118 - 119 |
| 17 | 55 | செங்கோன்மை | 120 -121 |
| 18 | 56 | கொடுங்கோன்மை | 122 - 123 |
| 19 | 57 | வெருவந்த செய்யாமை | 124 - 125 |
| 20 | 58 | கண்ணோட்டம் | 126 - 127 |
| 21 | 59 | ஒற்று ஆடல் | 128 - 129 |
| 22 | 60 | ஊக்கம் உடைமை | 130 - 131 |
| 23 | 61 | மடி இன்மை | 132 - 133 |
| 24 | 62 | ஆள்வினை உடைமை | 134 - 135 |
| 25 | 63 | இடுக்கணழியாமை | 136 - 137 |

| வரிசை எண் | தொடர் எண் | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|---|
| 2 | 6 | அங்கவியல் | 138 - 201 |
| 1 | 64 | அமைச்சு | 138 - 139 |
| 2 | 65 | சொல் வன்மை | 140 - 141 |
| 3 | 66 | வினைத் தூய்மை | 142 - 143 |
| 4 | 67 | வினைத் திட்பம் | 144 - 145 |
| 5 | 68 | வினைசெயல்வகை | 146 - 147 |
| 6 | 69 | தூது | 148 - 149 |
| 7 | 70 | மன்னரைச் சேர்ந்து ஒழுகல் | 150 - 151 |
| 8 | 71 | குறிப்பு அறிதல் | 152 - 153 |
| 9 | 72 | அவை அறிதல் | 154 - 155 |
| 10 | 73 | அவை அஞ்சாமை | 156 - 157 |
| 11 | 74 | நாடு | 158 - 159 |
| 12 | 75 | அரண் | 160 -161 |
| 13 | 76 | பொருள் செயல்வகை | 162 - 163 |
| 14 | 77 | படை | 164 - 165 |
| 15 | 78 | படைச் செருக்கு | 166 - 167 |
| 16 | 79 | நட்பு | 168 - 169 |
| 17 | 80 | நட்பு ஆராய்தல் | 170 - 171 |
| 18 | 81 | பழைமை | 172 - 173 |
| 19 | 82 | தீ நட்பு | 174 - 175 |
| 20 | 83 | கூடா நட்பு | 176 - 177 |
| 21 | 84 | பேதைமை | 178 - 179 |
| 22 | 85 | புல்லறிவு ஆண்மை | 180 - 181 |
| 23 | 86 | இகல் | 182 - 183 |
| 24 | 87 | பகைமாட்சி | 184 - 185 |
| 25 | 88 | பகைத்திறம் தெரிதல் | 186 - 187 |
| 26 | 89 | உட்பகை | 188 - 189 |
| 27 | 90 | பெரியாரைப் பிழையாமை | 190 - 191 |
| 28 | 91 | பெண்வழிச் சேறல் | 192 - 193 |
| 29 | 92 | வரைவு இல் மகளிர் | 194 - 195 |
| 30 | 93 | கள் உண்ணாமை | 196 - 197 |
| 31 | 94 | சூது | 198 - 199 |
| 32 | 95 | மருந்து | 200 - 201 |

| வரிசை எண் | தொடர் எண் | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|---|
| 3 | 7 | ஒழிபியல் | 202 - 227 |
| 1 | 96 | குடிமை | 202 - 203 |
| 2 | 97 | மானம் | 204 - 205 |
| 3 | 98 | பெருமை | 206 - 207 |
| 4 | 99 | சான்றாண்மை | 208 - 209 |
| 5 | 100 | பண்பு உடைமை | 210 - 211 |
| 6 | 101 | நன்றியில் செல்வம் | 212 - 213 |
| 7 | 102 | நாண் உடைமை | 214 - 215 |
| 8 | 103 | குடிசெயல்வகை | 216 - 217 |
| 9 | 104 | உழவு | 218 - 219 |
| 10 | 105 | நல்குரவு | 220 - 221 |
| 11 | 106 | இரவு | 222 - 223 |
| 12 | 107 | இரவு அச்சம் | 224 - 225 |
| 13 | 108 | கயமை | 226 - 227 |

| வரிசை எண் | தொடர் எண் | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|---|
| **3** | **3** | **இன்பத்துப்பால்** | **228 - 278** |
| **1** | **8** | **களவியல்** | **229 - 242** |
| 1 | 109 | தகை அணங்கு உறுத்தல் | 229 - 230 |
| 2 | 110 | குறிப்பு அறிதல் | 231 - 232 |
| 3 | 111 | புணர்ச்சி மகிழ்தல் | 233 - 234 |
| 4 | 112 | நலம் புனைந்து உரைத்தல் | 235 - 236 |
| 5 | 113 | காதல் - சிறப்பு உரைத்தல் | 237 - 238 |
| 6 | 114 | நாணுத் துறவு உரைத்தல் | 239 - 240 |
| 7 | 115 | அலர் அறிவுறுத்தல் | 241 - 242 |
| **2** | **9** | **கற்பியல்** | **243 - 278** |
| 1 | 116 | பிரிவு ஆற்றாமை | 243 - 244 |
| 2 | 117 | படர் மெலிந்து இரங்கல் | 245 - 246 |
| 3 | 118 | கண் விதுப்பு அழிதல் | 247 - 248 |
| 4 | 119 | பசப்பு உறு பருவரல் | 249 - 250 |
| 5 | 120 | தனிப் படர் மிகுதி | 251 - 252 |
| 6 | 121 | நினைந்து அவர் புலம்பல் | 253 - 254 |
| 7 | 122 | கனவு நிலை உரைத்தல் | 255 - 256 |
| 8 | 123 | பொழுதுகண்டு இரங்கல் | 257 - 258 |
| 9 | 124 | உறுப்பு நலன் அழிதல் | 259 - 260 |
| 10 | 125 | நெஞ்சொடு கிளத்தல் | 261 - 262 |
| 11 | 126 | நிறை அழிதல் | 263 - 264 |
| 12 | 127 | அவர்வயின் விதும்பல் | 265 - 266 |
| 13 | 128 | குறிப்பு அறிவுறுத்தல் | 267 - 268 |
| 14 | 129 | புணர்ச்சி விதும்பல் | 269 - 270 |
| 15 | 130 | நெஞ்சொடு புலத்தல் | 271 - 272 |
| 16 | 131 | புலவி | 273 - 274 |
| 17 | 132 | புலவி நுணுக்கம் | 275 - 276 |
| 18 | 133 | ஊடல் உவகை | 277 - 278 |




# அறிமுகம் - திருக்குறள்

## *திரு + குறள் = திருக்குறள்*

திரு - மேன்மை பொருந்திய குறள் வெண்பாக்களால் ஆன நூலாதலின் திருக்குறள் எனப்பட்டது.

திருக்குறளில் **133 அதிகாரங்களும்** அதிகாரத்திற்குப் **பத்துக் குறள்கள்** வீதம் **1330 குறள்களும்** கொண்ட நூல்.

இவை அனைத்தும் குறள் வெண்பா என்னும் வெண்பா வகையைச் சார்ந்தது. இந்நூல் எழுசீர்களைக் கொண்ட ஈரடிச் செய்யுளாகும். திருக்குறள் **அறம், பொருள், இன்பம்** என்னும் மூன்று பால்களும் கொண்டமையால் இந்நூல் முப்பால் என்றும் அழைக்கப்படுகிறது.

**முப்பாலும் ஒன்பது இயல்களால் பகுக்கப்பட்டுள்ளது.**

| பால்கள் | | | இயல்கள் |
|---|---|---|---|
| **அறத்துப்பால்** | - | **4 இயல்கள் -** | **பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல்** |
| **பொருட்பால்** | - | **3 இயல்கள் -** | **அரசியல், அங்கவியல் (அரணியல், கூழியல், படையியல், நட்பியல்), ஒழிபியல் (குடியியல்)** |
| **இன்பத்துப்பால்** | - | **2 இயல்கள் -** | **களவியல், கற்பியல்** |

**திருக்குறளுக்குரிய வேறு பெயர்கள்:**

பொய்யா மொழி, உலகப்பொதுமறை, தெய்வநூல், வாயுறைவாழ்த்து, முப்பால், திரு வள்ளுவம், உத்தர வேதம், தமிழ் மறை.

திருவள்ளுவர் சிலை தமிழ்நாட்டின்
**கன்னியாகுமரியில்**
**ஜனவரி 1, 2000-ல்**
நிறுவப்பட்டது.

சிலையின்
**உயரம் 133 அடிகளும்,**
**எடை 7000 டன்களும்**
ஆகும்.

சிற்பி **ஸ்தபதி கணபதி**
அவர்களால் சிலை உருவாக்கப்பட்டு
அன்றைய முதல்வர்
**மு.கருணாநிதி** அவர்களால்
நிறுவப்பட்டது.




# அறிமுகம் - திருவள்ளுவர்

உயர் மொழியாம் உயிர் மொழி தமிழ் மொழி. உலகத்திற்கு அளித்திட்ட **உலகப்பொது மறை** திருக்குறள். இதனை இயற்றியவர் வான்புகழ் கொண்ட **திருவள்ளுவர்**. திருவள்ளுவரின் பெற்றோர் ஆதி பகவன் ஆவர். இவரின் மனைவியார் பெயர் வாசுகி. திருவள்ளுவரின் காலம் **கி.மு. முப்பத்தொன்றாம் (31) நூற்றாண்டு** என்றும் கூறுவர்.

**திருவள்ளுவருக்குரிய வேறு பெயர்கள்:**

தெய்வப்புலவர், பொய்யாமொழிப்புலவர், நான்முகனார், நாயனார், மாதனுபங்கி, செந்நாப் போதர், பெருநாவலர் என திருவள்ளுவருக்கு வேறு பல பெயர்களும் உண்டு.

திருவள்ளுவர் அனைத்து தமிழர்களாலும் அறிந்து போற்றப்படுபவராகவும் தமிழர்களின் பண்பாட்டுச் செறிவின் அடையாளமாகவும் திகழ்கிறார். இவரை உலகிற்கு நினைவுப் படுத்தும் விதமாக **கன்னியாகுமரிக் கடல் முனையில் நூற்றி முப்பத்து மூன்று (133) அடியில் சிலை** நிறுவப்பட்டுள்ளது.



# 1. அறத்துப்பால்

அறம் என்பது தனிமனித ஒழுக்கத்தையும் சமுதாய மேம்பாட்டிற்கான நன்னடத்தையையும், நற்பண்புகளையும், நற்செயல்களையும் எக்காலத்திற்கும் பொருந்தும் வகையில் எடுத்து இயம்புவதே அறத்துப்பாலாகும்.



விருந்தோம்பல்



இல்வாழ்க்கை



ஈகை



வாய்மை



இனியவை கூறல்

## தெளிவுரை

1 அகரஒலி எல்லா எழுத்துக்கும் முதலாகும்; 1
ஆதிபகவன் உலகுக்கெல்லாம் முதலாவான்.

2 கற்றதன் பயனென்ன? தூய அறிஞனது 2
நல்லதிருவடியை வணங்கா விட்டால்.

3 நெஞ்சமலரில் இருப்பவன் அடியை நினைப்பவர் 3
இவ்வுலகில் நெடுங்காலம் வாழ்வர்.

4 விருப்பு வெறுப்பு இல்லாதவனை நினைத்தவர்க்கு 4
என்றும் துன்பங்கள் இல்லை.

5 இறைவனது உண்மைப் புகழை விரும்புவாரை 5
அறிவில்லாத வினைகள் நெருங்கா.

6 ஐம்புலனையும் அழித்தவனது மெய்ந் நெறியைக் 6
கடைப் பிடித்தவர் நெடுங்காலம் வாழ்வர்.

7 உவமை கடந்தவன் அடியை நினைந்தாலன்றி 7
மனக் கவலையை மாற்ற முடியாது.

8 அறக்கடலாம் அருளாளன் அடியை நினைந் 8
தாலன்றிப் பாவக் கடலைக் கடக்க முடியாது.

9 எண்குணம் உடையவன் அடியை வணங்காத்தவை 9
பாராதகண் கேளாத செவிபோலப் பயனற்றது.

10 இறைவன் அடியை நினைந்தவர் பிறவிக்கடலைக் 10
கடப்பர்; நினையாதயர் கடவார்.

# கடவுள் வாழ்த்து

1 அகரம் முதல, எழுத்து எல்லாம்; ஆதி- 1
பகவன் முதற்றே, உலகு.

2 கற்றதனால் ஆய பயன் என்கொல்-வால்-அறிவன் 2
நல் தாள் தொழாஅர் எனின்?.

3 மலர்மிசை ஏகினான் மாண் அடி சேர்ந்தார் 3
நிலமிசை நீடு வாழ்வார்.

4 வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு 4
யாண்டும் இடும்பை இல.

5 இருள் சேர் இரு வினையும் சேரா, இறைவன் 5
பொருள் சேர் புகழ் புரிந்தார்மாட்டு.

6 பொறி வாயில் ஐந்து அவித்தான் பொய் தீர் ஒழுக்க 6
நெறி நின்றார் நீடு வாழ்வார்.

7 தனக்கு உவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால், 7
மனக் கவலை மாற்றல் அரிது.

8 அற ஆழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்கு அல்லால், 8
பிற ஆழி நீந்தல் அரிது.

9 கோள் இல் பொறியில் குணம் இலவே-எண்குணத்தான் 9
தாளை வணங்காத் தலை.

10 பிறவிப் பெருங் கடல் நீந்துவர்; நீந்தார், 10
இறைவன் அடி சேராதார்.

# வான் சிறப்பு

## தெளிவுரை

1 மழையால் உலகம் நிலைபெற்று வருவதால் 11
மழையே அமிழ்தம் என்று உணர வேண்டும்.

2 உண்பவர்க்கு நல்ல உணவுகளை உண்டாக்கித் 12
தானும் குடிநீராய்ப் பயன்படுவது மழை.

3 மழையில்லாது போகின் கடல்சூழ் உலகத்தில் 13
பசி உயிர்களை வாட்டும்.

4 மழைவருத்துக் குறையின் உழவர்கள் உழுவதற்கு 14
ஏர் பிடிக்கமாட்டார்கள்.

5 உழவர்களைக் கொடுக்கவும் துணை நின்று ஆக்கவும் 15
வல்ல பேராற்றல் உடையது மழை.

6 மேலிருந்து துளிமழை விழாவிட்டால் நிலத்தில் 16
பசும்புல்லின் நுனியையேனும் காண முடியுமா?

7 மேகம் நீரைத்தாங்கத் திரும்பப் பொழியாவிடின் 17
நெடுங்கடலும் தன்வளம் குறைந்து விடும்.

8 வானம் வறண்டால் திருவிழாவும் வழிபாடும் 18
உலகில் வானவர்க்கும் நிகழ மாட்டா.

9 மேலுலகம் நீரை வழங்கா விட்டால் 19
தானமும் தவமும் மறைந்து விடும்.

10 உலக நடப்புக்கு ஒழுக்கம் வேண்டும்; அவ்வொழுக்கம் 20
மழையில்லா விட்டால் யாரிடமும் இருக்குமா?

# வான் சிறப்பு

1 வான் நின்று உலகம் வழங்கி வருதலான், 11
தான் அமிழ்தம் என்று உணரல் பாற்று.

2 துப்பார்க்குத் துப்பு ஆய துப்பு ஆக்கி, துப்பார்க்குத் 12
துப்பு ஆயதூஉம் மழை.

3 விண் இன்று பொய்ப்பின், விரிநீர் வியன் உலகத்து - 13
உள் நின்று உடற்றும் பசி.

4 ஏரின் உழாஅர் உழவர், புயல் என்னும் 14
வாரி வளம் குன்றிக்கால்.

5 கெடுப்பதூஉம், கெட்டார்க்குச் சார்வாய் மற்று ஆங்கே 15
எடுப்பதூஉம், எல்லாம் மழை.

6 விசும்பின் துளி வீழின் அல்லால், மற்று ஆங்கே 16
பசும் புல் தலை காண்பு அரிது.

7 நெடுங் கடலும் தன் நீர்மை குன்றும், தடிந்து எழிலி - 17
தான் நல்காது ஆகிவிடின்.

8 சிறப்பொடு பூசனை செல்லாது-வானம் 18
வறக்குமேல், வானோர்க்கும், ஈண்டு.

9 தானம் தவம் இரண்டும் தங்கா, வியன் உலகம் 19
வானம் வழங்காது எனின்.

10 நீர் இன்று அமையாது உலகுஎனின், யார்யார்க்கும் 20
வான் இன்று அமையாது ஒழுக்கு.

# நீத்தார் பெருமை



## தெளிவுரை

1 ஒழுக்கம் விடாத துறவிகளின் பெருமையே 21
நூல்கள் ஒருமுகமாகப் பாராட்டும் பெருமை.

2 துறவிகளின் பெருமையை அளக்க முடியாது. 22
உலகில் இறந்தவர்களை எண்ண முடியுமா?

3 வாழ்வின் இருவேறு நிலைகளை ஆராய்ந்து 23
துறந்தவர் பெருமையே உலகில் விளங்கும்.

4 அறிவுக்கோலால் ஐம்பொறிகளை அடக்கியவன் 24
மேலான நிலத்துக்கு ஒரு வித்தாவான்.

5 ஐந்தும் அடக்கியவன் ஆற்றலுக்கு வானவர் 25
தலைவனாம் இந்திரனே தக்க சான்று.

6 அரிய செயல்களைச் செய்பவர் பெரியவர்; 26
அவற்றைச் செய்ய முயலாதவர் சிறியவர்.

7 சுவை ஒளி ஊறு ஓசை மணம் என்ற 27
ஐவகைகளை அறிந்தவன் வசம் உலகம்.

8 நிறைமொழி மாந்தரின் பெருமையை உலகுக்கு 28
அவர்கூறிய உண்மைகளால் அறியலாம்.

9 குணக்குன்று போலும் சான்றோரின் சினத்தைச் 29
சிறுபொழுதும் யாரும் தாங்க முடியாது.

10 அந்தணர் என்பவர் துறவிகளே. ஏன்? 30
அவர் எவ்வுயிர்க்கும் அருள் செய்பவர்.

# நீத்தார் பெருமை



1 ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து 21
வேண்டும்- பனுவல் துணிவு.

2 துறந்தார் பெருமை துணைக் கூறின், வையத்து 22
இறந்தாரை எண்ணிக்கொண்டற்று.

3 இருமை வகை தெரிந்து ஈண்டு அறம் பூண்டார் 23
பெருமை பிறங்கிற்று, உலகு.

4 உரன் என்னும் தோட்டியான், ஓர் ஐந்தும் காப்பான் 24
வரன் என்னும் வைப்பிற்கு ஓர் வித்து.

5 ஐந்து அவித்தான் ஆற்றல், அகல் விசும்புளார் கோமான் 25
இந்திரனே சாலும், கரி.

6 செயற்கு அரிய செய்வார் பெரியர்; சிறியர் 26
செயற்கு அரிய செய்கலாதார்.

7 சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று ஐந்தின் 27
வகை தெரிவான்கட்டே-உலகு.

8 நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து 28
மறைமொழி காட்டிவிடும்.

9 குணம் என்னும் குன்று ஏறி நின்றார் வெகுளி 29
கணம் ஏயும், காத்தல் அரிது.

10 அந்தணர் என்போர் அறவோர்-மற்று எவ் உயிர்க்கும் 30
செந் தண்மை பூண்டு ஒழுகலான்.

# அறன் வலியுறுத்தல்

## தெளிவுரை

1 அறம் மதிப்பும் செல்வமும் தரும்; ஆதலின் 31
அறத்தினும் வாழ்வுக்கு நல்லது வேறில்லை.

2 அறத்தைப் போல நன்மை வேறில்லை; அதனை 32
மறத்தலைப் போலக் கேடு வேறில்லை .

3 இயன்ற அளவு இடைவிடாது அறத்தை 33
ஏற்கும் இடமெல்லாம் செய்க.

4 மனப்பிழை யின்றி நட; அதுவே அறம்; 34
மற்றவை யெல்லாம் வெளிப்பகட்டு.

5 பொறாமை ஆசை சினம் கடுஞ்சொல் 35
வாராமல் ஒழுகுவதே அறம்.

6 சாகும்போது பார்த்துக் கொள்வோம் என்னாது 36
நாளும் அறஞ்செய்க; அதுவே உயிர்த்துணை.

7 பல்லக்கில் இருப்பவனையும் சுமப்பவனையும் 37
பார்த்து அறத்தின் பயனை மதிப்பிடாதே.

8 நாள் தவறாமல் அறம் செய்க; அது ஒருவன் 38
பிறப்பு வழியை அடைக்கும் கல்லாகும்.

9 அறநெறியால் வருவதே இன்பம்; 39
பிறவழியால் வருவன துன்பம், பழி.

10 யாரும் செய்ய வேண்டுவது அறமே; 40
யாரும் விடவேண்டியது பழியே.

# அறன் வலியுறுத்தல்



1 சிறப்பு ஈனும்; செல்வமும் ஈனும்; அறத்தின் ஊஉங்கு
ஆக்கம் எவனோ, உயிர்க்கு. 31

2 அறத்தின் ஊஉங்கு ஆக்கமும் இல்லை; அதனை
மறத்தலின் ஊங்கு இல்லை கேடு. 32

3 ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும் வாய் எல்லாம் செயல். 33

4 மனத்துக்கண் மாசு இலன் ஆதல்; அனைத்து அறன்;
ஆகுல நீர, பிற. 34

5 அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல், நான்கும்
இழுக்கா இயன்றது-அறம். 35

6 'அன்று அறிவாம்' என்னாது, அறம் செய்க; மற்று அது
பொன்றுங்கால் பொன்றாத் துணை. 36

7 'அறத்து ஆறு இது' என வேண்டா; சிவிகை
பொறுத்தானொடு ஊர்ந்தான் இடை. 37

8 வீழ் நாள் படாஅமை நன்று ஆற்றின், அஃது ஒருவன்
வாழ் நாள் வழி அடைக்கும் கல். 38

9 அறத்தான் வருவதே இன்பம்; மற்று எல்லாம்
புறத்த; புகழும் இல. 39

10 செயற்பாலது ஓரும் அறனே; ஒருவற்கு
உயற்பாலது ஓரும் பழி. 40

## தெளிவுரை

1 இல்லறத்தான் மரபான மூவேந்தர்க்கும் 41
நல்லாட்சிக்கு உற்ற துணையாவான்.

2 துறவிக்கும் வறியவர்க்கும் நிலைதிரிந்தவர்க்கும் 42
இல்லறத்தானே துணைவன்.

3 தென்புலத்தார் நிலத்தெய்வம் விருந்து சுற்றம் 43
தன்குடும்பம் என்ற ஐவகையையும் காக்க.

4 பழியஞ்சிப் பகுத்துண்ணும் இல்லறத்தானுக்கு 44
வாழ்வு குறையாது; வழியும் நில்லாது.

5 அன்பும் அறனும் உடைய குடும்பம் 45
நாகரிகமும் நலமும் பெற்று விளங்கும்.

6 அஅறத்தின்படி குடும்பம் நடத்தினால் அதனைத் 46
துறந்துபோய்ப் பெறுவது என்ன?

7 இயல்பாகக் குடும்ப வாழ்வு வாழ்பவன் 47
முன்னேற முயல்வார் எல்லாரினும் சிறந்தவன்.

8 பிறரை நெறிப்படுத்தித் தானும் நெறிநிற்கும் 48
இல்வாழ்வே தவத்தினும் ஆற்றல் உடையது.

9 அறமென்று உறுதிப்பட்டது குடும்ப வாழ்வே; 49
துறவும் பழியில்லா விட்டால் அறமாகும்.

10 உலகத்தில் மணந்து முறையாக வாழ்பவன் 50
மேலுலகத் தேவராக மதிக்கப்படுவான்.

# இல்வாழ்க்கை



1 இல்வாழ்வான் என்பான் இயல்பு உடைய மூவர்க்கும் 41
நல்லாற்றின் நின்ற துணை.

2 துறந்தார்க்கும், துவ்வாதவர்க்கும், இறந்தார்க்கும், 42
இல்வாழ்வான் என்பான் துணை.

3 தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான், என்று ஆங்கு 43
ஐம்புலத்து ஆறு ஓம்பல் தலை.

4 பழி அஞ்சிப் பாத்து ஊண் உடைத்தாயின், வாழ்க்கை 44
வழி எஞ்சல், எஞ்ஞான்றும், இல்.

5 அன்பும் அறனும் உடைத்துஆயின், இல்வாழ்க்கை 45
பண்பும் பயனும் அது.

6 அறத்து ஆற்றின் இல்வாழ்க்கை ஆற்றின், புறத்து ஆற்றில் 46
போஒய்ப் பெறுவது எவன்?.

7 இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான் 47
முயல்வாருள் எல்லாம் தலை.

8 ஆற்றின் ஒழுக்கி, அறன் இழுக்கா இல்வாழ்க்கை 48
நோற்பாரின் நோன்மை உடைத்து.

9 அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை; அஃதும் 49
பிறன் பழிப்பது இல் ஆயின் நன்று.

10 வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும் 50
தெய்வத்துள் வைக்கப்படும்.

# வாழ்க்கைத்துணை நலம்

## தெளிவுரை

1 வாழ்க்கைத்துணை யார்? குடும்பப் பண்பினள்; 51
கணவன் வருவாய்க்கேற்ப வாழ்பவள்.

2 வீட்டுப்பண்பு மனைவியிடத்து இல்லையானால் 52
வாழ்வில் பிறநலம் இருந்தும் பயனில்லை .

3 மனைவிக்குப் பண்பிருப்பின் எது இல்லை? 53
மனைவிக்குப் பண்பில்லை எனின் எது உண்டு?

4 கற்புத்திண்மை செறிவாக இருப்பின் ஆணுக்கு 54
மனைவியினும் நற்பேறு உண்டா?

5 தெய்வத்தை வணங்காது கணவனை வணங்குபவள் 55
பெய்யென்றால் மழையும் பெய்யுமே.

6 தன்னையும் கணவனையும் புகழையும் போற்றிச் 56
சுறுசுறுப்பாக இருப்பவளே மனைவி.

7 மனைவியர்க்குக் கற்புக் காவலே காவல்; 57
வீட்டுச் சிறை என்ன பயன் செய்யும்?

8 கணவனது அன்பைப் பெறும் மனைவியர் 58
மேலுலகிலும் பெருஞ்சிறப்புப் பெறுவர்.

9 மனைவி புகழ் காவாவிடின் பகைவர் முன் 59
காளை போன்ற நடை கணவனுக்கு இராது.

10 மனைவியின் பண்பே குடும்பத்துக்கு மங்கலம்; 60
குழந்தைப் பேறே குடும்பத்தின் நல்லணி.

# வாழ்க்கைத்துணை நலம்

| | | |
|---|---|---|
| 1 | மனைத் தக்க மாண்பு உடையள் ஆகி, தற் கொண்டான்<br>வளத்தக்காள் வாழ்க்கைத்துணை. | 51 |
| 2 | மனை மாட்சி இல்லாள்கண் இல் ஆயின், வாழ்க்கை<br>எனைமாட்சித்து ஆயினும், இல். | 52 |
| 3 | இல்லது என், இல்லவள் மாண்புஆனால்? உள்ளது என்,<br>இல்லவள் மாணாக்கடை?. | 53 |
| 4 | பெண்ணின் பெருந்தக்க யா உள-கற்பு என்னும்<br>திண்மை உண்டாகப்பெறின்?. | 54 |
| 5 | தெய்வம் தொழாஅள், கொழுநன்-தொழுது எழுவாள்,<br>'பெய்' என, பெய்யும் மழை. | 55 |
| 6 | தற்காத்து, தற் கொண்டாற் பேணி, தகை சான்ற<br>சொற்காத்து, சோர்வு இலாள்-பெண். | 56 |
| 7 | சிறை காக்கும் காப்பு எவன் செய்யும்? மகளிர்<br>நிறை காக்கும் காப்பே தலை. | 57 |
| 8 | பெற்றாற் பெறின் பெறுவர், பெண்டிர், பெருஞ் சிறப்புப்<br>புத்தேளிர் வாழும் உலகு. | 58 |
| 9 | புகழ் புரிந்த இல் இலோர்க்கு இல்லை-இகழ்வார்முன்<br>ஏறுபோல் பீடு நடை. | 59 |
| 10 | 'மங்கலம்' என்ப, மனைமாட்சி; மற்று அதன்<br>நன்கலம் நன் மக்கட் பேறு. | 60 |

# மக்கட்பேறு



## தெளிவுரை

1 அறிவுடைய குழந்தைச் செல்வத்தைத் தவிரப்
பிறசெல்வங்களை யாம் மதிப்பதில்லை. 61

2 பழியில்லாப் பண்புக் குழந்தைகளைப் பெற்றால்
பெற்றோரை எப்பிறவியும் தீயவை நெருங்கா. 62

3 தம் நல்வினையால் குழந்தைகள் பிறத்தலின்
குழந்தைகளே பெற்றோரின் பொருளாவார். 63

4 அமிழ்தினும் மிக இனிக்குமே தம் குழந்தைகள்
இளங்கையால் கிண்டிய உணவு. 64

5 குழந்தை மேனிபடுவது உடலுக்கு இன்பம்;
மழலைச் சொல் கேட்பது காதுக்கு இன்பம். 65

6 தம் குழந்தைகளின் மழலைச்சொல் கேளாதவரே
குழலிசை யாழிசை இனியது என்பர். 66

7 அவையில் முந்தியிருக்கும்படி அறிவளிப்பதே
தந்தை மகனுக்குச் செய்யும் கடமை. 67

8 தம் குழந்தைகளைப் பேரறிவுடையவர் ஆக்குவது
பெற்றோர்க்கும் எல்லோர்க்கும் இனியது. 68

9 தன் மகன் வீரன் என்று புகழக்கேட்ட தாய்
பெற்றகாலத்திலும் பெருமகிழ்ச்சி அடைவாள். 69

10 எத்தவஞ் செய்து பெற்றான் இவன் தந்தை என்று
பலர் சொல்லும்படி நடப்பதே மகன் கடமை. 70

# மக்கட்பேறு



1 பெறுமவற்றுள் யாம் அறிவது இல்லை-அறிவு அறிந்த 61
மக்கட்பேறு அல்ல பிற.

2 எழுபிறப்பும் தீயவை தீண்டா-பழி பிறங்காப் 62
பண்புடை மக்கட் பெறின்.

3 தம் பொருள் என்ப தம் மக்கள்; அவர் பொருள் 63
தம்தம் வினையால் வரும்.

4 அமிழ்தினும் ஆற்ற இனிதே-தம் மக்கள் 64
சிறு கை அளாவிய கூழ்.

5 மக்கள் மெய் தீண்டல் உடற்கு இன்பம்; மற்று அவர் 65
சொல் கேட்டல் இன்பம், செவிக்கு.

6 'குழல் இனிது; யாழ் இனிது' என்ப-தம் மக்கள் 66
மழலைச் சொல் கேளாதவர்.

7 தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து 67
முந்தி இருப்பச் செயல்.

8 தம்மின், தம் மக்கள் அறிவுடைமை மா நிலத்து 68
மன் உயிர்க்கு எல்லாம் இனிது.

9 ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும்-தன் மகனைச் 69
சான்றோன் எனக் கேட்ட தாய்.

10 மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி, 'இவன் தந்தை 70
என் நோற்றான்கொல்!' எனும் சொல்.

# அன்பு உடைமை



## தெளிவுரை

1 அன்புக்கும் அடைப்பு உண்டோ ? அன்புடையவர் 71
கண்ணரே உள்ளத்தைக் காட்டிவிடும்.

2 அன்பிலார் எல்லாம் தமக்கே கொள்வார்; 72
அன்பினர் உடம்பையும் பிறர்க்கு வழங்குவார்.

3 உயிர் உடம்பினைப் பெற்ற தொடர்பு 73
இருவர் அன்புத்தொடர்பால் வந்தது என்பர்.

4 அன்பு பழகும் விருப்பத்தைத் தரும்; 74
அவ்விருப்பம் புதிய நட்புச் சிறப்பைத் தரும்.

5 உலகத்தில் காதலர்கள் அடையும் சிறப்பு 75
அன்போடு வாழ்ந்ததால் வந்தது என்பர்.

6 அறத்திற்கு மட்டும் அன்பு துணையில்லை; 76
வீரத்திற்கும் அதுவே துணை.

7 எலும்பில்லாப் புழுவை வெயில் வருத்தும்; 77
அன்பில்லா உயிரை அறம் வருத்தும்.

8 நெஞ்சத்தில் அன்பின்றி வாழ முடியுமா? 78
பாலை நிலத்தில் பட்டமரம் தளிர்க்குமா?

9 அன்பாம் உறுப்பு அகத்தில் இல்லையெனின் 79
புறத்து உறுப்பெல்லாம் இருந்தும் என்ன?

10 உயிருடைய உடம்பாவது அன்புடைய வாழ்வு; 80
அன்பிலார் உடம்புகள் எலும்புத் தோல்கள்.

# அன்பு உடைமை



1 அன்பிற்கும் உண்டோ, அடைக்கும் தாழ்?ஆர்வலர் 71
புன்கண்நீர் பூசல் தரும்.

2 அன்பு இலார் எல்லாம் தமக்கு உரியர்; அன்பு உடையார் 72
என்பும் உரியர், பிறர்க்கு.

3 'அன்போடு இயைந்த வழக்கு' என்ப-'ஆர் உயிர்க்கு 73
என்போடு இயைந்த தொடர்பு'.

4 அன்பு ஈனும் ஆர்வம் உடைமை; அது ஈனும், 74
‘நண்பு’ என்னும் நாடாச் சிறப்பு.

5 'அன்புற்று அமர்ந்த வழக்கு' என்ப-'வையகத்து 75
இன்புற்றார் எய்தும் சிறப்பு'.

6 'அறத்திற்கே அன்பு சார்பு' என்ப, அறியார்; 76
மறத்திற்கும் அஃதே துணை.

7 என்பு இலதனை வெயில் போலக் காயுமே- 77
அன்பு இலதனை அறம்.

8 அன்பு அகத்து இல்லா உயிர் வாழ்க்கை வன்பாற்கண் 78
வற்றல்மரம் தளிர்த்தற்று.

9 புறத்து உறுப்பு எல்லாம் எவன் செய்யும்-யாக்கை 79
அகத்து உறுப்பு அன்பு இலவர்க்கு?.

10 அன்பின் வழியது உயிர்நிலை; அஃது இலார்க்கு 80
என்பு தோல் போர்த்த உடம்பு.

# விருந்து ஓம்பல்

## தெளிவுரை

1 குடும்பமாக இருந்து சிறந்து வாழ்வதெல்லாம் 81
விருந்து பேணி உதவி செய்தற்கே.

2 வந்த விருந்து வெளிப்புறம் இருக்க, தனக்குச் 82
சாவாமருந்து கிடைப்பினும் உண்ணல் ஆகாது.

3 நாளும் வருகின்ற விருந்தைப் போற்றுக 83
வாழ்வு துன்பப்பட்டு அழியாது.

4 முகம் மலர்ந்து விருந்து செய்பவன் வீட்டில் 84
அகம் மலர்ந்து திருமகள் தங்கிவிடுவாள்.

5 விருந்து செய்த பின் மிச்சத்தை உண்பவனது நிலத்துக்கு 85
விதைகூட இடவேண்டுமா?

6 வந்தாரைப் போற்றி வருவாரை ஏற்பவன் 86
தேவர்க்கு நல்விருந்து ஆவான்.

7 விருந்தின் பயன் இதுவென்று அளக்க முடியாது: 87
விருந்தினர் பெருமையே விருந்தின் பெருமை.

8 விருந்து என்னும் வேள்வியில் ஈடுபடாதவர் 88
காத்த பொருளையும் இழந்து பின் வருந்துவர்.

9 செல்வத்தில் வறுமை விருந்திடா மடமையாம்; 89
இக்குணம் முழுதும் அறிவிலியிடமே இருக்கும்.

10 அனிச்சப்பூ மோந்தால் வாடும் ; விருந்தோ 90
முகமாறிப் பார்த்தாலே வாடிப் போம்.

# விருந்து ஓம்பல்



1 இருந்துஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்துஓம்பி 81
வேளாண்மை செய்தற்பொருட்டு.

2 விருந்து புறத்ததாத் தான் உண்டல், சாவா 82
மருந்து எனினும் வேண்டற்பாற்று அன்று.

3 வரு விருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை 83
பருவந்து பாழ்படுதல் இன்று.

4 அகன் அமர்ந்து செய்யாள் உறையும்-முகன் அமர்ந்து 84
நல் விருந்து ஓம்புவான் இல்.

5 வித்தும் இடல்வேண்டும் கொல்லோ-விருந்து ஓம்பி, 85
மிச்சில் மிசைவான் புலம்?.

6 செல் விருந்து ஓம்பி, வரு விருந்து பார்த்திருப்பான் 86
நல் விருந்து, வானத்தவர்க்கு.

7 இனைத் துணைத்து என்பது ஒன்று இல்லை; விருந்தின் 87
துணைத் துணை-வேள்விப் பயன்.

8 'பரிந்து ஓம்பி, பற்று அற்றேம்' என்பர்-விருந்து ஓம்பி 88
வேள்வி தலைப்படாதார்.

9 உடைமையுள் இன்மை விருந்து ஓம்பல் ஓம்பா 89
மடமை; மடவார்கண் உண்டு.

10 மோப்பக் குழையும் அனிச்சம்;- முகம் திரிந்து 90
நோக்கக் குழையும் விருந்து.

# இனியவை கூறல்

## தெளிவுரை

1 அன்பும் தூய்மையும் அறமும் உடைய
உண்மையாளர் சொல்லே இன்சொல்லாம். 91

2 முகமலர்ந்து என்றும் இன்சொற் கூறின்
அகமலர்ந்து கொடுப்பதினும் சிறந்தது. 92

3 முகம் மலர்ந்து இனிமையாகப் பார்த்து
உள்ளத்தோடு சொல்லுக; அதுவே அறம். 93

4 யார்க்கும் இன்பச் சொல்லைச் சொல்லுக;
துன்பந்தரும் வறுமை வாராது. 94

5 பணிவும் இன்சொல்லுமே உயிரணிகள்:
பிறவெல்லாம் உடலணிகள். 95

6 நல்லவற்றைக் கண்டு இனிமையாகக் கூறின்
தீமை தேயும்; அறம் வளரும். 96

7 பிறர்க்கு நற்பயன் தரும் உயர் பண்புச்சொல்
தனக்கும் நயமும் நலமும் தரும். 97

8 சிறுதன்மை இல்லாத இன்சொல்
எப்பிறப்பிலும் இன்பம் தரும். 98

9 இன்சொல் தனக்கு நலந்தருவதைக் கண்டவன்
ஏன் பிறரிடம் கடுஞ்சொற் கூறுகிறான்? 99

10 இன்சொல் இருக்கவும் கடுஞ்சொல் கூறாதே;
கனியை விடுத்துக் காயைக் கவரலாமா? 100

# இனியவை கூறல்



1 இன் சொல்-ஆல் ஈரம் அளைஇ, படிறு இலஆம் 91
செம்பொருள் கண்டார் வாய்ச் சொல்.

2 அகன் அமர்ந்து ஈதலின் நன்றேமுகன் அமர்ந்து 92
இன்சொலன் ஆகப்பெறின்.

3 முகத்தான் அமர்ந்து, இனிது நோக்கி, அகத்தான் ஆம் 93
இன் சொலினதே அறம்.

4 துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும் 94
இன்புறூஉம் இன்சொலவர்க்கு.

5 பணிவு உடையன், இன்சொலன் ஆதல் ஒருவற்கு 95
அணி; அல்ல, மற்றுப் பிற.

6 அல்லவை தேய அறம் பெருகும் நல்லவை 96
நாடி, இனிய சொலின்.

7 நயன் ஈன்று நன்றி பயக்கும்பயன் ஈன்று 97
பண்பின் தலைப்பிரியாச் சொல்.

8 சிறுமையுள் நீங்கிய இன்சொல், மறுமையும் 98
இம்மையும், இன்பம் தரும்.

9 இன் சொல் இனிது ஈன்றல் காண்பான், எவன்கொலோ- 99
வன் சொல் வழங்குவது?.

10 இனிய உளவாக இன்னாத கூறல்- 100
கனி இருப்ப, காய் கவர்ந்தற்று.

# செய்ந்நன்றி அறிதல்



## தெளிவுரை

1 கேளாமலே முன்வந்து செய்த உதவிக்கு
உலகமும் வானமும் கொடுத்தாலும் ஈடாகா. 101

2 நற்சமயத்துச் செய்த உதவி சிறிதாயினும்
உலகத்தைவிட மிகச் சிறந்தது. 102

3 பயன் கருதாது செய்த உதவியின் நன்மை
எண்ணிப் பார்ப்பின், கடலினும் பெரியது. 103

4 சிறிதளவு நன்மை செய்தாலும் பயனறிந்தோர்
பெரிய நன்மையாகக் கருதுவர். 104

5 உதவி உதவிய பொருளைப் பொறுத்ததன்று;
உதவி பெற்றவரின் பண்பினைப் பொறுத்தது. 105

6 தூயவர் நட்பை மறவாதே; துன்பத்தில்
துணைசெய்தார் நட்பைத் துறவாதே. 106

7 துன்பக் கண்ணீரைத் துடைத்தவர் நட்பினை
எடுக்கின்ற பிறப்பெல்லாம் எண்ணுவர். 107

8 உதவியை மறப்பது என்றும் நல்லதில்லை;
உதவாமையை உடனே மறப்பது நல்லது. 108

9 ஒருநன்மை செய்தவர் பெருந்தீமை செய்தாலும்
அந்நன்மையை நினைக்கவே தீமை மறையும். 109

10 எந்த நலத்தை அழித்தாலும் பிழைக்கலாம்;
நன்றி கெட்டால் பிழைப்பில்லை. 110

# செய்ந்நன்றி அறிதல்



1 செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும் 101
வானகமும் ஆற்றல் அரிது.

2 காலத்தினால் செய்த நன்றி சிறிது 102
எனினும், ஞாலத்தின் மாணப் பெரிது.

3 பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின், 103
நன்மை கடலின் பெரிது.

4 தினைத் துணை நன்றி செயினும், பனைத் துணையாக் 104
கொள்வர்-பயன் தெரிவார்.

5 உதவி வரைத்து அன்று, உதவி; உதவி 105
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

6 மறவற்க, மாசு அற்றார் கேண்மை! துறவற்க, 106
துன்பத்துள் துப்பு ஆயார் நட்பு!.

7 எழுமை எழு பிறப்பும் உள்ளுவர்-தம்கண் 107
விழுமம் துடைத்தவர் நட்பு.

8 நன்றி மறப்பது நன்று அன்று; நன்று அல்லது 108
அன்றே மறப்பது நன்று.

9 கொன்றன்ன இன்னா செயினும், அவர் செய்த 109
ஒன்றும் நன்று உள்ள,கெடும்.

10 எந் நன்றி கொன்றார்க்கும் உய்வு உண்டாம்; உய்வு இல்லை, 110
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

# நடுவு நிலைமை



## தெளிவுரை

1 இடந்தோறும் முறையோடு ஒழுக முடியின் 111
நடுவு நிலைமை மிகச்சிறந்த அறமாம்.

2 நேர்மை உடையவனது செல்வம் குறையாமல் 112
வழி வழி மக்கட்குத் துணையாகும்.

3 நலமே தரினும் நேர்மையில்லா ஆக்கத்தை 113
அப்போதே விட்டு விடுக.

4 இவர் நேர்மையர் நேர்மையற்றவர் என்பது 114
அவரவர் வழியினரால் காணமுடியும்.

5 அழிதலும் ஆதலும் உலகியற்கை , ஆதலின் 115
மனம் சாயாமையே சான்றோர்க்கு அழகு.

6 நின் நெஞ்சம் நேர்மை தவறிச் செல்லின் 116
கேடு காலம் என்று தெரிந்து கொள்க.

7 நேர்மையாக நின்றமையால் தாழ்வு வரின் 117
அதனைக் கேடாக உலகம் கருதாது.

8 சமமாக நின்று பின் நிறுக்கும் தராசு போல 118
மனஞ்சாயா நேர்மையே நடுவர்க்கு அழகு.

9 உள்ளம் சிறிதும் சாயாமல் இருந்தாலன்றோ 119
சொல்லுகின்ற சொல் நேர்மைச் சொல்லாகும்.

10 விலைப்பொருளையும் கொள்பொருளாக மதித்தால் 120
வணிகர்க்கு நல்ல வணிகம் ஏற்படும்.

# நடுவு நிலைமை



1 தகுதி என ஒன்றும் நன்றே-பகுதியான் 111
பாற்பட்டு ஒழுகப்பெறின்.

2 செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவு இன்றி, 112
எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து.

3 நன்றே தரினும், நடுவு இகந்து ஆம் ஆக்கத்தை 113
அன்றே ஒழியவிடல்!.

4 தக்கார் தகவு இலர் என்பது அவர் அவர் 114
எச்சத்தால் காணப்படும்.

5 கேடும் பெருக்கமும் இல் அல்ல; நெஞ்சத்துக் 115
கோடாமை சான்றோர்க்கு அணி.

6 'கெடுவல் யான்' என்பது அறிக-தன் நெஞ்சம் 116
நடுவு ஓரீஇ, அல்ல செயின்.

7 கெடுவாக வையாது உலகம்-நடுவாக 117
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு.

8 சமன் செய்து சீர் தூக்கும் கோல்போல் அமைந்து, ஒருபால் 118
கோடாமை-சான்றோர்க்கு அணி.

9 சொற் கோட்டம் இல்லது, செப்பம்-ஒருதலையா 119
உட் கோட்டம் இன்மை பெறின்.

10 வாணிகம் செய்வார்க்கு வாணிகம்-பேணிப் 120
பிறவும் தமபோல் செயின்.

# அடக்கம் உடைமை

## தெளிவுரை

1 அடக்கம் வீரருள் ஒருவனாக்கும்; அடங்காமை 121
பேதைக் கூட்டத்தில் சேர்க்கும்.

2 அடக்கத்தை ஒரு குறிக்கோளாகப் போற்றுக; 122
உயிர்க்கு அதனினும் முன்னேற்றம் இல்லை.

3 அறிவன அறிந்து முறையோடு அடங்கின் 123
அதனை உலகம் தெரிந்து சிறப்பிக்கும்.

4 தரத்திலே குறையாது அடங்கியவன் தோற்றம் 124
மலையினும் பார்வைக்குச் சிறந்தது.

5 எல்லார்க்கும் பணிவுடைமை வேண்டும்; அது 125
செல்வர்க்கு இருப்பது இன்னும் செல்வமாம்.

6 ஒருபிறப்பில் ஆமைபோல் ஐம்பொறியும் அடக்கின் 126
எழு பிறப்பிலும் சேமம் உண்டு.

7 எவற்றை அடக்காவிடினும் நாவை அடக்குக; 127
அடக்காவிடின் சொற்குற்றப்பட்டு வருந்துவாய்.

8 ஒரு சொல்லிலேனும் தீமை நேருமாயின் 128
எல்லா நன்மையும் கெடுதலாகி விடும்.

9 தீச்சுட்ட புண்ணோ உள்ளே ஆறிப்போம்; 129
சுடுசொல்லோ வடுவாகி என்றும் ஆறாது.

10 உள்ளக் கொதிப்பை அடக்கிய வல்லவனைக் 130
காண்பதற்கு அறம் காத்துக் கிடக்கும்.

# அடக்கம் உடைமை

1 அடக்கம் அமரருள் உய்க்கும்; அடங்காமை 121
ஆர் இருள் உய்த்துவிடும்.

2 காக்க, பொருளா அடக்கத்தை-ஆக்கம் 122
அதனின் ஊங்கு இல்லை, உயிர்க்கு!.

3 செறிவு அறிந்து சீர்மை பயக்கும்-அறிவு அறிந்து 123
ஆற்றின் அடங்கப் பெறின்.

4 நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம் 124
மலையினும் மாணப் பெரிது.

5 எல்லார்க்கும் நன்று ஆம், பணிதல்; அவருள்ளும் 125
செல்வர்க்கே செல்வம் தகைத்து.

6 ஒருமையுள், ஆமைபோல், ஐந்து அடக்கல் ஆற்றின், 126
எழுமையும் ஏமாப்பு உடைத்து.

7 யா காவார் ஆயினும், நா காக்க; காவாக்கால், 127
சோகாப்பர், சொல் இழுக்குப் பட்டு.

8 ஒன்றானும் தீச்சொற் பொருட் பயன் உண்டாயின், 128
நன்று ஆகாது ஆகிவிடும்.

9 தீயினால் சுட்ட புண் உள் ஆறும்;- ஆறாதே 129
நாவினால் சுட்ட வடு.

10 கதம் காத்து, கற்று, அடங்கல் ஆற்றுவான் செவ்வி 130
அறம் பார்க்கும் ஆற்றின் நுழைந்து.

## தெளிவுரை

1 ஒழுக்கம் பெருஞ்சிறப்புத் தரும் ஆதலின்
உயிர் கொடுத்தும் காக்க வேண்டும். 131

2 எவ்வளவு வருந்தினாலும் ஒழுக்கமாக இரு;
எவ்வளவு ஆராய்ந்தாலும் அதுவே துணை. 132

3 விடா ஒழுக்கமே உயர்ந்த குடிப்பிறப்பு:
ஒழுக்கத்தை விடுவது விலங்குப் பிறப்பு. 133

4 கற்பவன் மறந்தாலும் படித்துக் கொள்ளலாம்;
மானிட ஒழுக்கம் குறைந்தாலோ கெடுவான். 134

5 பொறாமைப் பட்டவனுக்கு வளர்ச்சி உண்டோ?
ஒழுக்கம் கெட்டவனுக்கு உயர்வு உண்டோ ? 135

6 உரமுடையவர் ஒழுக்கம் சிறிதும் தளரார்;
தளரின் துன்பம் பல வருமென்று அறிவார். 136

7 விடா ஒழுக்கத்தால் முன்னேற்றம் வரும்;
விடுவதால் பொருந்தாப் பழி வரும். 137

8 நல்லொழுக்கம் நன்மைக்கெல்லாம் வித்து:
தீயொழுக்கத்தால் எந்நாளும் துன்பமே. 138

9 என்றும் ஒழுக்கம் உடையார் வாயிலிருந்து
தவறியும் தீய சொற்கள் தோன்றா. 139

10 உலகத்தோடு ஒட்டி ஒழுகத் தெரியாதவர்
பல கற்றிருந்தும் அறிவு இல்லாதவரே. 140

# ஒழுக்கம் உடைமை



1 ஒழுக்கம் விழுப்பம் தரலான், ஒழுக்கம் 131
உயிரினும் ஓம்பப்படும்.

2 பரிந்து ஓம்பிக் காக்க, ஒழுக்கம்-தெரிந்து ஓம்பித் 132
தேரினும், அஃதே துணை!.

3 ஒழுக்கம் உடைமை குடிமை; இழுக்கம் 133
இழிந்த பிறப்பாய்விடும்.

4 மறப்பினும், ஒத்துக் கொளல் ஆகும்; பார்ப்பான் 134
பிறப்பு ஒழுக்கம் குன்றக் கெடும்.

5 அழுக்காறு உடையான்கண் ஆக்கம் போன்று இல்லை- 135
ஒழுக்கம் இலான்கண் உயர்வு.

6 ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர்-இழுக்கத்தின் 136
ஏதம் படுபாக்கு அறிந்து.

7 ஒழுக்கத்தின் எய்துவர், மேன்மை; இழுக்கத்தின் 137
எய்துவர், எய்தாப் பழி.

8 நன்றிக்கு வித்து ஆகும் நல் ஒழுக்கம்; தீ ஒழுக்கம் 138
என்றும் இடும்பை தரும்.

9 ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே-தீய 139
வழுக்கியும், வாயால் சொலல்.

10 உலகத்தோடு ஒட்ட ஒழுகல், பல கற்றும், 140
கல்லார் அறிவிலாதார்.

# பிறன் இல் விழையாமை



## தெளிவுரை

1 பிறன் மனைவியை விரும்பும் மடமை உலகில்
அறம் பொருள் அறிந்தவரிடம் இருப்பதில்லை . 141

2 பிறனது வாயிலில் நிற்பவனைப் போலப்
பெரும்பாவியும் பெரும் பேதையும் இல்லை. 142

3 நம்பினவர் வீட்டில் தீமை செய்பவர்
செத்தவரல்லது வாழ்பவர் அல்லர். 143

4 அறிவின்றி அயலான் மனைவியை விரும்புபவன்
எவ்வளவு பெரியவனாயினும் என்ன? 144

5 எளிதென்று கருதிப் பிறன் மனை நுழைபவன்
என்றும் தீராத பழியை எய்துவான். 145

6 பகை பாவம் அச்சம் பழி என்ற நான்கும்
பிறன் வீட்டில் நுழைவானை விடமாட்டா. 146

7 நெறியோடு வாழும் குடும்பத்தான் யார்?
இன்னொரு குடும்பத்தாளை விரும்பாதவனே. 147

8 பிறன்மனையை விரும்பி நினையாத பேராற்றல்
சான்றோர்க்கு அறமும் ஒழுக்கமும் ஆம். 148

9 உலகில் எந்நன்மைக்கும் உரியவர் யார்?
பிறனுக்கு உரியவளை அணையாதவரே. 149

10 அறங்கடந்து தீமைபல செய்யினும் செய்க;
பிறன் மனை விருப்பத்தை அறவே ஒழிக. 150

# பிறன் இல் விழையாமை



1 பிறன் பொருளாள்-பெட்டு ஒழுகும் பேதைமை ஞாலத்து
அறம், பொருள், கண்டார்கண் இல். 141

2 அறன்கடை நின்றாருள் எல்லாம், பிறன்கடை
நின்றாரின், பேதையார் இல். 142

3 விளிந்தாரின் வேறு அல்லர் மன்ற-தெளிந்தார் இல்
தீமை புரிந்து ஒழுகுவார். 143

4 எனைத் துணையர் ஆயினும் என்னாம்-தினைத் துணையும்
தேரான், பிறன் இல் புகல்?. 144

5 'எளிது' என இல் இறப்பான் எய்தும்-எஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி. 145

6 பகை, பாவம், அச்சம், பழி என நான்கும்
இகவா ஆம்-இல் இறப்பான்கண். 146

7 அறன் இயலான் இல்வாழ்வான் என்பான்-பிறன் இயலாள்
பெண்மை நயவாதவன். 147

8 பிறன் மனை நோக்காத பேர் ஆண்மை, சான்றோர்க்கு
அறன் ஒன்றோ?ஆன்ற ஒழுக்கு. 148

9 'நலக்கு உரியார் யார்?' எனின், நாம நீர் வைப்பில்
பிறற்கு உரியாள் தோள் தோயாதார். 149

10 அறன் வரையான், அல்ல செயினும், பிறன் வரையாள்
பெண்மை நயவாமை நன்று. 150

# பொறை உடைமை

## தெளிவுரை

1 குழிபறிப்பாரையும் நிலம் சுமப்பது போல
நம்மை இகழ்வாரையும் பொறுப்பதே சிறப்பு. 151

2 பிறரது பெருங்குற்றத்தை என்றும் பொறுக்க;
முடியுமாயின் மறக்க; அது மிக நல்லது. 152

3 பெரியவறுமை வந்த விருந்தை நீக்குவது:
பெரியவலிமை பேதையைப் பொறுப்பது. 153

4 பெருந்தன்மை நீங்காதிருக்க வேண்டின்
பொறுக்குந் தன்மையைப் போற்றிக் கொள்க. 154

5 தண்டித்தவரை யார் மதிப்பர்? பொறுத்தவரையே
பொன்போல் போற்றி மதிப்பர். 155

6 தண்டித்தவர்க்கு அப்போதைய மகிழ்ச்சியே;
பொறுத்தவர்க்கோ உலகம் உள்ளளவும் புகழ். 156

7 பிறர் முறையல்லவற்றைச் செய்தாலும் வருந்தி
நீ அறமல்லவற்றைச் செய்யாதே. 157

8 தன் இறுமாப்பால் தீமை செய்தவரை நீ
உன் பொறுமைச் சிறப்பால் வென்று விடுக. 158

9 தரங்கெட்டவரின் வசவைப் பொறுப்பவர்
துறந்தவரினும் தூயவர். 159

10 பட்டினி கிடந்து நோன்பிருப்பவர் பெரியவர்:
அவரினும் பெரியவர் வசவைப் பொறுப்பவர். 160

# பொறை உடைமை



1 அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல, தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. 151

2 பொறுத்தல், இறப்பினை என்றும்; அதனை
மறத்தல் அதனினும் நன்று. 152

3 இன்மையுள் இன்மை விருந்து ஒரால்; வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை. 153

4 நிறை உடைமை நீங்காமை வேண்டின், பொறை உடைமை
போற்றி ஒழுகப் படும். 154

5 ஒறுத்தாரை ஒன்றாக வையாரே; வைப்பர்,
பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து. 155

6 ஒறுத்தார்க்கு ஒரு நாளை இன்பம்; பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ். 156

7 திறன் அல்ல தன்-பிறர் செய்யினும், நோ நொந்து,
அறன் அல்ல செய்யாமை நன்று. 157

8 மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம் தம்
தகுதியான் வென்று விடல்!. 158

9 துறந்தாரின் தூய்மை உடையர்-இறந்தார்வாய்
இன்னாச் சொல் நோற்கிற்பவர். 159

10 உண்ணாது நோற்பார் பெரியர்-பிறர் சொல்லும்
இன்னாச் சொல் நோற்பாரின் பின். 160

# அழுக்காறாமை

## தெளிவுரை

1 மனத்தில் பொறாமை இல்லாத நிலையே
ஒழுக்க நெறியாம் என்று கொள்க. 161

2 யார்மேலும் பொறாமை இல்லை எனின்
சிறந்த மேன்மை வேறில்லை. 162

3 தனக்கு நல்வளர்ச்சி வேண்டாம் என்பவனே
மற்றவன் வளர்ச்சிக்குப் பொறாமைப்படுவான். 163

4 பொறாமையால் தமக்குத் தீதுவரும் ஆதலின்
பொறாமையால் பிறர்க்குத் தீது செய்யார். 164

5 பொறாமையாளரைக் கெடுக்க அதுவே போதும்:
பகைவர் கெடுக்கத் தவறினும் அது தவறாது. 165

6 கொடுப்பதைக் கண்டு பொறாமைப்படுபவனது
சுற்றத்தாரும் உணவு உடை இன்றி அழிவர். 166

7 மனம் சுருங்கிப் பொறாமைப்படுபவனைச்
சீதேவி மூதேவியிடம் ஒப்படைப்பாள். 167

8 பொறாமையாகிய பாவம் செல்வம் கெடுத்துத்
தீய வழியிலும் கொண்டுபோய் விடும். 168

9 பொறாமைப்படுபவன் உண்மையில் வளர்கிறானா?
நல்லவன் கெடுகிறானா? எண்ணிப்பார். 169

10 பொறாமையால் வாழ்வு விரிந்தவரும் இல்லை;
பொறுப்பதால் வளர்ச்சி குறைந்தவரும் இல்லை. 170

# அழுக்காறாமை

1 ஒழுக்கு ஆறாக் கொள்க-ஒருவன் தன் நெஞ்சத்து 161
அழுக்காறு இலாத இயல்பு.

2 விழுப் பேற்றின் அஃது ஒப்பது இல்லை-யார்மாட்டும் 162
அழுக்காற்றின் அன்மை பெறின்.

3 அறன், ஆக்கம், வேண்டாதான் என்பான் பிறன் ஆக்கம் 163
பேணாது அழுக்கறுப்பான்.

4 அழுக்காற்றின் அல்லவை செய்யார்-இழுக்கு ஆற்றின் 164
ஏதம் படுபாக்கு அறிந்து.

5 அழுக்காறு உடையார்க்கு அது சாலும்- ஒன்னார் 165
வழுக்கியும் கேடு ஈன்பது.

6 கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம் 166
உண்பதூஉம் இன்றிக் கெடும்.

7 அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள் 167
தவ்வையைக் காட்டி விடும்.

8 அழுக்காறு என ஒரு பாவி திருச் செற்று, 168
தீயுழி உய்த்துவிடும்.

9 அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும், செவ்வியான் 169
கேடும், நினைக்கப்படும்.

10 அழுக்கற்று அகன்றாரும் இல்லை; அஃது இல்லார் 170
பெருக்கத்தின் தீர்ந்தாரும் இல்.

# வெஃகாமை



## தெளிவுரை

1 நேர்மை யின்றிப் பிறர் பொருளைக் கவர்ந்தால் 171
உடனே குடியழிந்து குற்றங்கள் பெருகும்.

2 கொள்ளை விரும்பிக் கூடாதன செய்யார் 172
நேர்மைக்கு அஞ்சும் பெரியவர்.

3 சிறுநலத்தை விரும்பிக் கொடியவை செய்யார் 173
பெருநலத்தை நாடுபவர்.

4 ஆசைகளை அடக்கிய உயர்ந்த அறிஞர் 174
இல்லை என்பதற்காகப் பிறர்பொருளை நாடார்.

5 எவர்பொருளையும் நச்சிக் கொடுமை செய்தால், 175
நுணுகிப் பரந்த அறிவால் பயன் என்ன?

6 அருளை நாடி, உரியவழியில் நிற்பவன் 176
பிறர் பொருளைக் கவர நினைப்பின் கெடுவான்.

7 பிறர்பொருளால் வரும் விளைவு மிகப் பொல்லாது; 177
ஆதலின் தீய முன்னேற்றத்தை வேண்டாதே.

8 தன் செல்வம் குறையாமைக்கு வழி யாது? 178
பிறன் செல்வத்தைப் பறிக்க விரும்பாமை.

9 முறையறிந்து பிறர் பொருளை விரும்பாத 179
அறிஞரைத் தெரிந்து திருமகள் அடைவாள்.

10 பின்வருவது பாராமல் விரும்புவது அழிவு: 180
வேண்டாம் என்னும் பெருமிதம் வெற்றி.

# வெஃகாமை

1 நடுவு இன்றி நன் பொருள் வெஃகின், குடி பொன்றி, 171
குற்றமும் ஆங்கே தரும்.

2 படு பயன் வெஃகி, பழிப்படுவ செய்யார்- 172
நடுவு அன்மை நாணுபவர்.

3 சிற்றின்பம் வெஃகி, அறன் அல்ல செய்யாரே- 173
மற்று இன்பம் வேண்டுபவர்.

4 'இலம்' என்று வெஃகுதல் செய்யார்-புலம் வென்ற 174
புன்மை இல் காட்சியவர்.

5 அஃகி அகன்ற அறிவு என் ஆம்-யார்மாட்டும் 175
வெஃகி, வெறிய செயின்?.

6 அருள் வெஃகி, ஆற்றின்கண் நின்றான், பொருள் வெஃகிப் 176
பொல்லாத சூழ, கெடும்.

7 வேண்டற்க, வெஃகி ஆம் ஆக்கம்-விளைவயின் 177
மாண்டற்கு அரிது ஆம் பயன்!.

8 'அஃகாமை செல்வத்திற்கு யாது?' எனின், வெஃகாமை 178
வேண்டும் பிறன் கைப் பொருள்.

9 அறன் அறிந்து வெஃகா அறிவு உடையார்ச் சேரும்- 179
திறன் அறிந்து ஆங்கே திரு.

10 இறல் ஈனும், எண்ணாது வெஃகின்; விறல் ஈனும், 180
வேண்டாமை என்னும் செருக்கு.

# புறம் கூறாமை

## தெளிவுரை

1 ஒருவன் அறத்தைப் பழித்துத் தீமை செய்யினும் 181
கோள் சொல்லான் என்பது காதுக்கு இனியது.

2 அறம் அழித்துச் செய்யும் தீமையினும் தீது 182
புறத்தே இகழ்ந்து முன்னே புகழ்வது.

3 கோள் சொல்லி நடித்து உயிர் வாழ்தலினும் 183
சாவது நல்லது; அறத்தின் பயன் கிடைக்கும்.

4 எதிரே கடுமையாகச் சொல்லினும் சொல்லலாம்; 184
ஆளில்லாதபோது கோள் சொல்லற்க.

5 இவன் நெஞ்சத்தில் நேர்மை இல்லை என்பது 185
கோள் சொல்வதிலிருந்து கண்டு கொள்ளலாமே?

6 பிறரது குறையை நீதேடிக் கூறின் 186
உன் பெரிய குறையை மற்றவர் விடுவாரோ?

7 மகிழ்ந்து பேசி நட்புச் செய்யத் தெரியாதவர் 187
கோள் சொல்லி நண்பரையும் பிரித்து விடுவர்.

8 பழகியவர் குற்றத்தையே தூற்றித் திரிபவர் 188
பழகாதவரிடம் எப்படி எப்படியோ?

9 போனது பார்த்துப் புறங்கூறுபவனை 189
உலகம் சுமக்கிறது. அதுவும் ஓர் அறமோ?

10 பிறர்குறை காண்பதுபோல் தங்குறை காணின் 190
வாழும் உயிர்க்குத் தீது உண்டோ?

# புறம் கூறாமை



1 அறம் கூறான், அல்ல செயினும், ஒருவன்
புறம் கூறான் என்றல் இனிது. 181

2 அறன் அழீஇ அல்லவை செய்தலின் தீதே-
புறன் அழீஇப் பொய்த்து நகை. 182

3 புறம் கூறி, பொய்த்து, உயிர் வாழ்தலின், சாதல்
அறம் கூறும் ஆக்கம் தரும். 183

4 கண் நின்று, கண் அறச் சொல்லினும், சொல்லற்க-
முன் இன்று பின் நோக்காச் சொல். 184

5 அறம் சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறம் சொல்லும்
புன்மையால் காணப்படும். 185

6 பிறன் பழி கூறுவான் தன் பழியுள்ளும்
திறன் தெரிந்து கூறப்படும். 186

7 பகச் சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர்-நகச் சொல்லி
நட்பு ஆடல் தேற்றாதவர். 187

8 துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்,
என்னைகொல், ஏதிலார்மாட்டு?. 188

9 அறன் நோக்கி ஆற்றும் கொல் வையம்-புறன் நோக்கிப்
புன் சொல் உரைப்பான் பொறை. 189

10 ஏதிலார் குற்றம்போல் தம் குற்றம் காண்கிற்பின்,
தீது உண்டோ, மன்னும் உயிரக்கு?. 190

# பயன் இல சொல்லாமை



1 கேட்டார் வெறுக்க வீணாகப் பேசுபவனை 191
எல்லாரும் இகழ்வர்.

2 பலர்முன் வீண்பேச்சுப் பேசுவது நண்பர்க்கு 192
வேண்டாதன் செய்தலினும் தீது.

3 பயனில்லாதவற்றை விரித்து உரைத்தால் 193
விளங்காதவன் என்று பேராகும்.

4 பயனில்லாத சிறுசொல்லைப் பலர்முன் கூறுவது 194
அறிவும் இல்லை; நன்மையும் இல்லை.

5 பண்புடையவர்கள் பயனில் சொன்னால் 195
தரமும் சிறப்பும் போய் விடும்.

6 பயனில் சொல்வானைப் புகழ்கின்றவனை 196
மனிதன் என்னாதே; மனிதப்பதா என்று சொல்.

7 சான்றோர் முறையல சொல்லினும் சொல்லலாம்; 197
பயனற்றவை சொல்லலாகாது.

8 அரிய பயனை அடைய முயலும் அறிஞர் 198
பெரியபயன் இல்லாதவற்றைச் சொல்லார்.

9 மயக்கம் இல்லாத நல்லறிஞர் மறந்தும் 199
பொருளற்ற சொற்களைச் சொல்லார்.

10 பயனுள்ள நல்ல சொற்களையே சொல்லுக; 200
பயனில்லா வீண் சொற்களைச் சொல்லாதே.

# பயன் இல சொல்லாமை



1 பல்லார் முனியப் பயன் இல சொல்லுவான்
எல்லாரும் எள்ளப்படும். 191

2 பயன் இல பல்லார்முன் சொல்லல், நயன் இல
நட்டார்கண் செய்தலின் தீது. 192

3 நயன் இலன் என்பது சொல்லும்-பயன் இல
பாரித்து உரைக்கும் உரை. 193

4 நயன் சாரா நன்மையின் நீக்கும்-பயன் சாராப்
பண்பு இல் சொல் பல்லாரகத்து. 194

5 சீர்மை சிறப்பொடு நீங்கும்-பயன் இல
நீர்மை உடையார் சொலின். 195

6 பயன் இல் சொல் பாராட்டுவானை மகன் எனல்!
மக்கட் பதடி எனல்!. 196

7 நயன் இல சொல்லினும் சொல்லுக! சான்றோர்
பயன் இல சொல்லாமை நன்று. 197

8 அரும் பயன் ஆயும் அறிவினார் சொல்லார்-
பெரும் பயன் இல்லாத சொல். 198

9 பொருள் தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார்-மருள் தீர்ந்த
மாசு அறு காட்சியவர். 199

10 சொல்லுக, சொல்லில் பயன் உடைய! சொல்லற்க,
சொல்லில் பயன் இலாச் சொல்!. 200

## தீவினை அச்சம்

### தெளிவுரை

1 கொடியவர் தீவினைகளை அஞ்சாது செய்வர்:
நல்லவர் செய்ய அஞ்சுவர். 201

2 யார்க்கும் கொடுமைகள் கொடுமை தரும்;
தீயைக் காட்டிலும் அவற்றை நெருங்காதே. 202

3 கொடுமைகளைப் பகைவர்க்கும் செய்யாது ஒழிக;
அதுவே அறிவிற் சிறந்த அறிவாகும். 203

4 மறந்தும் பிறனுக்குக் கேடு எண்ணாதே;
எண்ணின், அறம் உன்னை வாழவிடுமா? 204

5 இல்லை என்பதற்காகத் தீமைகள் செய்யாதே;
செய்யின் திரும்பவும் பெரிய ஏழையாவாய். 205

6 துன்பங்கள் தன்னைத் தொடவிரும்பாதவன்
பிறர்க்குத் தீமைகள் செய்யாது இருப்பானாக. 206

7 எனைப் பெரிய பகையிலிருந்தும் தப்பிக்கலாம்;
கொடுமைப் பகையோ விடாது கொல்லும். 207

8 கொடுமை செய்தார் கெடுவது உறுதி:
நிழல் ஒருவன் அடியைவிட்டு நீங்குமா? 208

9 தான் வாழ ஆசை இருக்குமானால்
சிறிதும் தீவினைப் பக்கம் செல்லாதே. 209

10 நெறிவிலகிக் கொடுமை இழையாதவன்
என்றும் கேடில்லாதவன் எனத் தெளிக. 210

# தீவினை அச்சம்



1 தீவினையார் அஞ்சார்; விழுமியார் அஞ்சுவர்- 201
தீவினை என்னும் செருக்கு.

2 தீயவை தீய பயத்தலான், தீயவை 202
தீயினும் அஞ்சப்படும்.

3 அறிவினுள் எல்லாம் தலை என்ப-தீய 203
செறுவார்க்கும் செய்யா விடல்.

4 மறந்தும் பிறன் கேடு சூழற்க! சூழின், 204
அறம் சூழும், சூழ்ந்தவன் கேடு.

5 'இலன்' என்று தீயவை செய்யற்க! செய்யின், 205
இலன் ஆகும், மற்றும் பெயர்த்து.

6 தீப் பால தான் பிறர்கண் செய்யற்க-நோய்ப் பால 206
தன்னை அடல் வேண்டாதான்!.

7 எனைப் பகை உற்றாரும் உய்வர்; வினைப் பகை 207
வீயாது, பின் சென்று, அடும்.

8 தீயவை செய்தார் கெடுதல் நிழல் தன்னை 208
வீயாது அடி உறைந்தற்று.

9 தன்னைத் தான் காதலன் ஆயின், எனைத்து ஒன்றும் 209
துன்னற்க, தீவினைப் பால்!.

10 அருங் கேடன் என்பது அறிக-மருங்கு ஓடித் 210
தீவினை செய்யான் எனின்?.

# ஒப்புரவு அறிதல்



## தெளிவுரை

| | | |
|---|---|---|
| 1 | கடமை கைம்மாறு எதிர்பார்ப்பதில்லை;<br>உலகம் மழைக்கு என்ன செய்ய முடியும்? | 211 |
| 2 | மிக முயன்று சேர்த்த பொருளெல்லாம்<br>உதவிபெறத் தக்கவர்க்கு உதவி செய்தற்கே. | 212 |
| 3 | தேவர் உலகத்திலும் நம் உலகத்திலும்<br>பொது நன்மையினும் சிறந்த செயல் இல்லை. | 213 |
| 4 | ஒத்த பொதுநலத்தை அறிந்தவனே வாழ்பவன்;<br>அறியாதவன் செத்தவரைச் சேர்ந்தவன். | 214 |
| 5 | உலக நலம் விரும்பும் பேரறிஞனது செல்வம்<br>ஊருணியில் நிறைந்த நீர் போலாகும். | 215 |
| 6 | உலக அன்பு உடையவனிடம் செல்வம் இருப்பது<br>பழமரம் ஊர்நடுவே பழுத்தது போன்றது. | 216 |
| 7 | பேரருளாளன் இடத்துச் செல்வம் இருப்பது<br>யார்க்கும் கிடைக்கும் மருந்து மரம் போலும். | 217 |
| 8 | ஊர்க்கடமையை அறிந்த அறிவுடையவர்<br>வறுமைக்காலத்தும் பொதுநலம் குறையார். | 218 |
| 9 | செய்யவேண்டியன செய்ய இயலாமையே<br>நல்ல அன்பனுக்கு வறுமையாகும். | 219 |
| 10 | பொது நன்மையினால் கேடு வருமென்றால்<br>அக்கேடு விலைபோகும் மதிப்புடையது. | 220 |

# ஒப்புரவு அறிதல்



| | | |
|---|---|---|
| 1 | கைம்மாறு வேண்டா கடப்பாடு; மாரிமாட்டு<br>என் ஆற்றும் கொல்லோ, உலகு?. | 211 |
| 2 | தாள் ஆற்றித் தந்த பொருள் எல்லாம் தக்கார்க்கு<br>வேளாண்மை செய்தற்பொருட்டு. | 212 |
| 3 | புத்தேள் உலகத்தும், ஈண்டும், பெறல் அரிதே-<br>ஒப்புரவின் நல்ல பிற. | 213 |
| 4 | ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான்; மற்றையான்<br>செத்தாருள் வைக்கப்படும். | 214 |
| 5 | ஊருணி நீர் நிறைந்தற்றே-உலகு அவாம்<br>பேர் அறிவாளன் திரு. | 215 |
| 6 | பயன் மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால்-செல்வம்<br>நயன் உடையான்கண் படின். | 216 |
| 7 | மருந்து ஆகித் தப்பா மரத்தற்றால்-செல்வம்<br>பெருந்தகையான்கண் படின். | 217 |
| 8 | இடன் இல் பருவத்தும், ஒப்புரவிற்கு ஒல்கார்-<br>கடன் அறி காட்சியவர். | 218 |
| 9 | நயன் உடையான் நல்கூர்ந்தான் ஆதல் செயும் நீர<br>செய்யாது அமைகலா ஆறு. | 219 |
| 10 | 'ஒப்புரவினால் வரும், கேடு' எனின், அஃது ஒருவன்<br>விற்றுக் கோள் தக்கது உடைத்து. | 220 |

## தெளிவுரை

1 ஈகை என்பது ஏழைகளுக்குக் கொடுப்பதே;
பிறர்க்குச் செய்வது எதிர்பார்த்துக் கொடுப்பது. 221

2 வீட்டுநெறி என்றாலும் வாங்குவது தீது;
வீடில்லை என்றாலும் கொடுப்பது நல்லது. 222

3 இல்லை என்ற துயரை எடுத்துரைக்கும் முன்பே
கொடுக்குங்குணம் குடிப்பிறந்தவனிடம் உண்டு. 223

4 கேட்பவரின் முகமலர்ச்சியைக் காணும் வரை
கேட்கவிடுதல் இனியது ஆகாது. 224

5 பசி பொறுப்பது பேராற்றல்; அதனினும்
பேராற்றல் பிறர் பசியை ஆற்றுவது. 225

6 ஏழைகளின் பெரும் பசியைத் தீர்ப்பாயாக;
அதுதான் செல்வனுக்குச் சேமிப்பிடம். 226

7 பகுத்துக் கொடுத்து உணவருந்தியவனைத்
தீய பசிநோய் என்றும் தீண்டாது. 227

8 பொருளைத்தேடி இழக்கும் கொடியவர்கள்
கொடுத்து மகிழும் இன்பத்தை அறியாரோ? 228

9 நிறைந்த உணவைத் தனித்து உண்பது
இரப்பதினும் பார்வைக்கு அருவருப்பானது. 229

10 ஓர் ஏழைக்கு உதவ முடியாத போது
விரும்பாச் சாவும் விரும்பத் தகும். 230

| | | |
|---|---|---|
| 1 | வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை; மற்று எல்லாம்<br>குறியெதிர்ப்பை நீரது உடைத்து. | 221 |
| 2 | 'நல்லாறு' எனினும், கொளல் தீது; 'மேல் உலகம்<br>இல்' எனினும், ஈதலே நன்று. | 222 |
| 3 | 'இலன்' என்னும் எவ்வம் உரையாமை ஈதல்<br>குலன் உடையான்கண்ணே உள. | 223 |
| 4 | இன்னாது, இரக்கப்படுதல்-இரந்தவர்<br>இன் முகம் காணும் அளவு. | 224 |
| 5 | ஆற்றுவார் ஆற்றல் பசி ஆற்றல்; அப் பசியை<br>மாற்றுவார் ஆற்றலின் பின். | 225 |
| 6 | அற்றார் அழி பசி தீர்த்தல்! அஃது ஒருவன்<br>பெற்றான் பொருள் வைப்பு உழி. | 226 |
| 7 | பாத்து ஊண் மரீஇயவனைப் பசி என்னும்<br>தீப் பிணி தீண்டல் அரிது. | 227 |
| 8 | ஈத்து உவக்கும் இன்பம் அறியார்கொல்-தாம் உடைமை<br>வைத்து இழக்கும் வன் கணவர்?. | 228 |
| 9 | இரத்தலின் இன்னாது மன்ற-நிரப்பிய<br>தாமே தமியர் உணல். | 229 |
| 10 | சாதலின் இன்னாதது இல்லை; இனிது, அதூஉம்<br>ஈதல் இயையாக்கடை. | 230 |

# புகழ்

## தெளிவுரை

1 வறியார்க்கு ஈக; புகழோடு வாழ்க; 231
அதுவே உயிர்க்குச் சிறந்த ஊதியம்.

2 உலகில் பாராட்டுவார் பாராட்டுவன எல்லாம் 232
வறியவர்க்கு ஈந்த வள்ளல்களின் புகழ்களே.

3 நிலையாத உலகத்து உயர்ந்த புகழ் தவிர 233
எதுவும் அழியாது நிலைப்பதில்லை.

4 உலகில் நெடும் புகழ் ஈட்டிய மக்களையே 234
வானுலகம் போற்றும்; தேவரைப் போற்றாது.

5 புகழின் பொருட்டு அழிதலும் சாதலும் 235
அறிவுடையவர்க்கே இயலும்.

6 அவைக்கண் புகழ் நோக்கொடு தோன்றுக; 236
அந்நோக்கம் இலாதார் தோன்றாமை நல்லது.

7 புகழில்லார் தம்மேல் வருத்தப்படாது தம்மை 237
இகழ்வார்மேல் வருத்தப்படுவதேன்?

8 பின் நிலைக்கும் புகழை ஒருவன் பெறாவிடின் 238
அவன்பிறப்பு உலகிற்கே ஒரு பழி.

9 புகழில்லா உடம்பைச் சுமப்பின் 239
நல்ல நிலங்கூட வளங் குறையும்.

10 வசையின்றி வாழ்பவரே வாழ்பவர்; 240
இசையின்றி இருப்பவரே இறந்தவர்.

# புகழ்



1 ஈதல்! இசைபட வாழ்தல்! அது அல்லது 231
ஊதியம் இல்லை, உயிர்க்கு.

2 உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கு ஒன்று 232
ஈவார்மேல் நிற்கும் புகழ்.

3 ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ் அல்லால், 233
பொன்றாது நிற்பது ஒன்று இல்.

4 நில வரை நீள் புகழ் ஆற்றின், புலவரைப் 234
போற்றாது, புத்தேள் உலகு.

5 நத்தம்போல் கேடும், உளதாகும் சாக்காடும், 235
வித்தகர்க்கு அல்லால் அரிது.

6 தோன்றின், புகழொடு தோன்றுக! அஃது இலார் 236
தோன்றலின் தோன்றாமை நன்று.

7 புகழ்பட வாழாதார் தம் நோவார், தம்மை 237
இகழ்வாரை நோவது எவன்?.

8 'வசை' என்ப, வையத்தார்க்கு எல்லாம்-'இசை' என்னும் 238
எச்சம் பெறாஅவிடின்.

9 வசை இலா வண் பயன் குன்றும்-இசை இலா 239
யாக்கை பொறுத்த நிலம்.

10 வசை ஒழிய வாழ்வாரே வாழ்வார்; இசை ஒழிய 240
வாழ்வாரே வாழாதவர்.

# அருள் உடைமை



## தெளிவுரை

1 அருளே செல்வத்துள் சிறந்த செல்வம்; 241
பொருளோ கயவரிடத்தும் உண்டு.

2 நல்லவழியை ஆராய்ந்து அருள் செய்க; 242
எவ்வகையால் பார்த்தாலும் அருளே துணை.

3 அறியாமையும் துன்பமும் உடைய உலகத்தை 243
அருள்நெஞ்சம் கொண்டவர் அடைய மாட்டார்.

4 எல்லா உயிர்களையும் பேணும் அருளாளனுக்குத் 244
தன்னுயிர் பற்றிய கவலை வினை இல்லை.

5 அருளாளர்க்குத் துன்பம் என்பதில்லை! 245
காற்றுடன் வளமுடைய இவ்வுலகமே சான்று.

6 அருள் இல்லாமல் கொடுமைகள் செய்பவர் 246
பொருளிழந்து வாழ்வும் வழுவினார் ஆவர்.

7 பொருளில்லார்க்கு இவ்வுலக வாழ்வு இல்லை; 247
அருளில்லார்க்கு அவ்வுலக வாழ்வு இல்லை.

8 பொருளில்லார் ஒருநாள் செல்வத்தால் செழிப்பர்; 248
அருளில்லார் தொலைந்தவரே; திரும்ப மீளார்.

9 அருளிலான் அறஞ்செய்தான் என்பது பேதை 249
இறைவனைக் கண்டான் என்பது போலாம்.

10 உன்னினும் எளியவனை நீவருத்தும்போது 250
உன்னினும் வலியவன் முன் உன்னை நினை.

# அருள் உடைமை

1 அருட் செல்வம், செல்வத்துள் செல்வம்; பொருட் செல்வம்
பூரியார்கண்ணும் உள. 241

2 நல் ஆற்றான் நாடி அருள் ஆள்க! பல் ஆற்றான்
தேரினும் அஃதே துணை. 242

3 அருள் சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை-இருள் சேர்ந்த
இன்னா உலகம் புகல். 243

4 'மன் உயிர் ஓம்பி, அருள் ஆள்வாற்கு இல்' என்ப-
'தன் உயிர் அஞ்சும் வினை'. 244

5 அல்லல், அருள் ஆள்வார்க்கு இல்லை; வளி வழங்கும்
மல்லல் மா ஞாலம் கரி. 245

6 'பொருள் நீங்கிப் பொச்சாந்தார்' என்பர்-'அருள் நீங்கி
அல்லவை செய்து ஒழுகுவார்'. 246

7 அருள் இல்லார்க்கு அவ் உலகம் இல்லை-பொருள் இல்லார்க்கு
இவ் உலகம் இல்லாகியாங்கு. 247

8 பொருள் அற்றார் பூப்பர் ஒருகால்; அருள் அற்றார்
அற்றார்; மற்று ஆதல் அரிது. 248

9 தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால்-தேரின்,
அருளாதான் செய்யும் அறம். 249

10 வலியார் முன் தன்னை நினைக்க-தான் தன்னின்
மெலியார்மேல் செல்லும் இடத்து. 250

# புலால் மறுத்தல்



## தெளிவுரை

1 தன்தசை பெருக்கப் பிறதசை தின்பவனுக்கு
எங்ஙனம் அருள் பிறக்கும்? 251

2 போற்றாதார்க்குப் பொருள்வரவு இல்லை
புலால் தின்பவர்க்கு அருள் வரவு இல்லை. 252

3 இறைச்சி சுவைத்தவனுக்கு அருள் தோன்றாது:
ஆயுதம் தாங்கியவனுக்கு இரக்கம் இருக்குமா? 253

4 கொல்லாமையே அருள்; கொல்லுதலே பாவம்;
புலால் உண்ணுதலே சிறுமை. 254

5 புலால் உண்ணாமையால் நீண்ட ஆயுள் உண்டு;
புலால் உண்டவனை நரகமும் உண்ணாது. 255

6 உலகத்தார் தின்னுதற்குப் புலால் வாங்காவிடின் விற்பதற்கென்று
விற்பார் யாரும் இரார். 256

7 ஒருடம்பின்புண் என்று அருவருப்புத் தோன்றின்
புலாலை யாரும் உண்ண விரும்பார். 257

8 உயிரை நீக்கிக் கொண்டுவந்த இறைச்சியைக்
குற்றத்தை நீக்கிய அறிஞர் உண்ணார். 258

9 ஆகுதி பெய்து ஆயிரவேள்வி செய்தலினும்
ஒருயிரைக் கொன்று தின்னாமை மேல். 259

10 கொல்லாதவனையும் புலால் உண்ணாதவனையும்
கைகூப்பி எல்லா உயிர்களும் வணங்கும். 260

# புலால் மறுத்தல்



1 தன் ஊன் பெருக்கற்குத் தான் பிறிது ஊன் உண்பான் 251
எங்ஙனம் ஆளும் அருள்?.

2 பொருள் ஆட்சி போற்றாதார்க்கு இல்லை; அருள் ஆட்சி 252
ஆங்கு இல்லை, ஊன் தின்பவர்க்கு.

3 படை கொண்டார் நெஞ்சம் போல் நன்று ஊக்காது-ஒன்றன் 253
உடல் சுவை உண்டார் மனம்.

4 'அருள்', அல்லது, யாது?' எனின்,-கொல்லாமை, கோறல்: 254
பொருள் அல்லது, அவ் ஊன் தினல்.

5 உண்ணாமை உள்ளது உயிர்நிலை; ஊன் உண்ண, 255
அண்ணாத்தல் செய்யாது, அளறு.

6 தினற்பொருட்டால் கொல்லாது உலகு எனின், யாரும் 256
விலைப் பொருட்டால் ஊன் தருவார் இல்.

7 உண்ணாமை வேண்டும், புலாஅல்-பிறிது ஒன்றன் 257
புண்; அது உணர்வார்ப் பெறின்.

8 செயிரின் தலைப் பிரிந்த காட்சியார் உண்ணார், 258
உயிரின் தலைப்பிரிந்த ஊன்.

9 அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின், ஒன்றன் 259
உயிர் செகுத்து உண்ணாமை நன்று.

10 கொல்லான், புலாலை மறுத்தானைக் கைகூப்பி, 260
எல்லா உயிரும் தொழும்.

## தெளிவுரை

1 தவத்தின் வடிவு தன் துன்பத்தைப் பொறுத்தல்;
எவ்வுயிர்க்கும் துன்பம் செய்யாமை. 261

2 தவக்கோலமும் தவமுடையவர்க்கே சிறப்பு:
அதனைத் தவமிலாதார் கொள்வது பழிப்பு. 262

3 இல்லறத்தார் ஏன் தவஞ்செய்ய மறந்தனா?
துறவிக்கு உதவ வேண்டும் என்பதற்காகவா? 263

4 பகைவரை அழிக்கலாம். நண்பரை ஆக்கலாம்;
இந்த ஆற்றல் நினைப்பின் தவத்தால் வரும். 264

5 வேண்டுவன வேண்டியபடி பெறலாம்; ஆதலின்
உரிய தவத்தை உடனே முயலுக. 265

6 தவஞ்செய்பவரே தங்காரியம் செய்பவர்;
பிறர் ஆசையால் வீண்காரியம் செய்பவர். 266

7 காய்ச்சக் காய்ச்சப் பொன் ஒளிமிகும்; துறவிக்குத்
துன்பம் தாக்கத் தாக்க மெய்யறிவு மிகும். 267

8 தன்னுயிர் தன்முனைப்பு இல்லாதவனை
உலகத்து உயிரெல்லாம் வணங்கும். 268

9 தவத்தின் ஆற்றல் கைகூடியவர்கட்கு
யமனைத் தாண்டுதலும் இயலும். 269

10 உலகில் வறியவர் பலர். ஏன்?
முயலாதார் பலர்; முயல்வார் சிலர். 270

1 உற்ற நோய் நோன்றல், உயிர்க்கு உறுகண் செய்யாமை, 261
அற்றே-தவத்திற்கு உரு.

2 தவமும் தவம் உடையார்க்கு ஆகும்; அவம், அதனை 262
அஃது இலார் மேற்கொள்வது.

3 துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி, மறந்தார்கொல்- 263
மற்றையவர்கள், தவம்!.

4 ஒன்னார்த் தெறலும், உவந்தாரை ஆக்கலும், 264
எண்ணின், தவத்தான் வரும்.

5 வேண்டிய வேண்டியாங்கு எய்தலான், செய் தவம் 265
ஈண்டு முயலப்படும்.

6 தவம் செய்வார் தம் கருமம் செய்வார்; மற்று அல்லார் 266
அவம் செய்வார், ஆசையுள் பட்டு.

7 சுடச் சுடரும் பொன்போல் ஒளிவிடும்-துன்பம் 267
சுடச்சுட நோற்கிற்பவர்க்கு.

8 தன் உயிர் தான் அறப் பெற்றானை ஏனைய 268
மன் உயிர் எல்லாம் தொழும்.

9 கூற்றம் குதித்தலும் கைகூடும்-நோற்றலின் 269
ஆற்றல் தலைப்பட்டவர்க்கு.

10 இலர் பலர் ஆகிய காரணம்-நோற்பார் 270
சிலர்; பலர் நோலாதவர்.

# கூடா ஒழுக்கம்

## தெளிவுரை

1 வஞ்சகனது மறைந்த நடத்தையைக் கண்டு
ஐம்பூதங்களும் உடம்பினுள்ளே சிரிக்கும். 271

2 தன் மனம் குற்றமென அறிந்தும் செய்தால்
பெரிய தவக்கோலத்தால் என்ன பயன். 272

3 அடக்கமிலான் கொண்ட கொடிய வேடம்
பசு புலித்தோலிட்டுப் பயிரமேய்வது போலாம். 273

4 வேடத்தில் மறைந்து வேண்டாதன செய்தல்
புதரில் மறைந்து பறவை பிடிப்பது போலாம். 274

5 ஆசையில்லை எனச்சொல்வாரது பொய் நடத்தை
சீசீ என்று இகழும் துன்பத்தைத் தரும். 275

6 மனத்தால் துறவாது துறந்தவர் போல
ஏய்ப்பவரே எல்லாரினும் கொடியவர். 276

7 குண்டுமணி போலப் புறத்தே காவியும்
அகத்தே கருமையும் உடையார் உண்டு. 277

8 மனத்தில் அழுக்கிருக்கவும் நீரெல்லாம் ஆடி
ஏய்த்து நடப்பவரே உலகில் ஏராளம். 278

9 பார்வைக்கு அம்புநேர்; யாழ்வளைவு; ஆயினும்
செயலைக் கண்டு உண்மை அறிக. 279

10 உலகம் தூற்றும் கெட்ட நடத்தையை விடின்
தலை மழித்தலும் சடை நீட்டலும் வேண்டாம். 280

# கூடா ஒழுக்கம்

| | | |
|---|---|---|
| 1 | வஞ்ச மனத்தான் படிற்று ஒழுக்கம் பூதங்கள்<br>ஐந்தும் அகத்தே நகும். | 271 |
| 2 | வான் உயர் தோற்றம் எவன் செய்யும்-தன் நெஞ்சம்<br>தான் அறி குற்றபடின்?. | 272 |
| 3 | வலி இல் நிலைமையான் வல் உருவம் பெற்றம்<br>புலியின் தோல் போர்த்து மேய்ந்தற்று. | 273 |
| 4 | தவம் மறைந்து, அல்லவை செய்தல்-புதல்மறைந்து<br>வேட்டுவன் புள் சிமிழ்த்தற்று. | 274 |
| 5 | 'பற்று அற்றேம்' என்பார் படிற்று ஒழுக்கம். 'எற்று! எற்று!' என்று<br>ஏதம் பலவும் தரும். | 275 |
| 6 | நெஞ்சின் துறவார், துறந்தார்போல் வஞ்சித்து,<br>வாழ்வாரின் வன்கணார் இல். | 276 |
| 7 | புறம் குன்றி கண்டனையரேனும், அகம் குன்றி<br>மூக்கில் கரியார் உடைத்து. | 277 |
| 8 | மனத்தது மாசு ஆக, மாண்டார் நீர் ஆடி,<br>மறைந்து ஒழுகும் மாந்தர் பலர். | 278 |
| 9 | கணை கொடிது; யாழ் கோடு செவ்விது; ஆங்கு அன்ன<br>வினைபடு பாலால் கொளல். | 279 |
| 10 | மழித்தலும் நீட்டலும் வேண்டா- உலகம்<br>பழித்தது ஒழித்துவிடின். | 280 |

# கள்ளாமை

## தெளிவுரை

1 வசைவேண்டாம் என்பவன் மிகச் சிறிதும்
கள்ளமின்றித் தன் நெஞ்சைக் காக்க. 281

2 பிறன் பொருளை மனத்தால் நினைப்பதும் தீது;
ஆதலின் திருடிப் பறிக்க எண்ணாதே. 282

3 களவினால் வந்த செல்வம் மிகவும்
பெருகுவது போலத் தோன்றிக் கெடும். 283

4 களவிலே மிகுந்த ஆசை இருப்பது
கடைசியில் நீங்காத துன்பம் தரும். 284

5 பிறர் ஏமாந்த நிலையைப் பார்த்திருப்பவனிடம்
அருளும் அன்பும் இரா. 285

6 களவிலே மிக்க சுவை கண்டவர்கள்
அளவிலே நின்று வாழ்க்கை நடத்தார். 286

7 நெறிபட வாழும் உறுதியுடையவர் இடத்துத்
திருடும் பெரும் பேதைமை இராது. 287

8 நெறியாளர் நெஞ்சு அறத்துக்கு இருப்பிடம்;
திருடர்கள் நெஞ்சு மறைவுக்கு இருப்பிடம். 288

9 களவுதவிர வேறொன்றும் அறியாதவர்கள்
தீமைகள் செய்து விரைவில் அழிவர். 289

10 திருடுபவருக்கு விரைவில் உயிர் போகும்;
திருடாதவர்க்கு வானுலகமும் போகாது. 290

# கள்ளாமை

1 எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்து ஒன்றும் 281
கள்ளாமை காக்க, தன் நெஞ்சு!.

2 உள்ளத்தால் உள்ளலும் தீதே; 'பிறன் பொருளைக் 282
கள்ளத்தால் கள்வேம்' எனல்!.

3 களவினால் ஆகிய ஆக்கம், அளவு இறந்து, 283
ஆவது போல, கெடும்.

4 களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண் 284
வீயா விழுமம் தரும்.

5 அருள் கருதி அன்புடையர் ஆதல் பொருள் கருதிப் 285
பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல்.

6 அளவின்கண் நின்று ஒழுகலாற்றார்-களவின்கண் 286
கன்றிய காதலவர்.

7 களவு என்னும் கார் அறிவு ஆண்மை அளவு என்னும் 287
ஆற்றல் புரிந்தார்கண் இல்.

8 அளவு அறிந்தார் நெஞ்சத்து அறம்போல, நிற்கும், 288
களவு அறிந்தார் நெஞ்சில் கரவு.

9 அளவு அல்ல செய்து, ஆங்கே வீவர்-களவு அல்ல 289
மற்றைய தேற்றாதவர்.

10 கள்வார்க்குத் தள்ளும், உயிர்நிலை; கள்ளார்க்குத் 290
தள்ளாது, புத்தேள் உலகு.

# வாய்மை

## தெளிவுரை

1 வாய்மை என்று போற்றப்படும் பண்பு எது? 291
சிறிதும் தீமை இல்லாத சொற்களைக் கூறுவது.

2 பொய்யினால் பிறர்க்குத் தூயநன்மை வரின் 292
அப்பொய்யையும் மெய்யாகக் கொள்ளலாம்.

3 உன் நெஞ்சறியப் பொய் கூறாதே; கூறின் 293
உன் நெஞ்சம் உன்னைச் சுடாதா?

4 மனமறியப் பொய் சொல்லாதவன் உலகத்தார் 294
மனத்தில் எல்லாம் இருப்பான்.

5 தவமும் தானமும் செய்வதினும் மேலானது 295
உள்ளத்தோடு உண்மை சொல்வது.

6 பொய்சொல்லாமை பெரும் புகழாம்; 296
பொய் சொல்லத் தெரியாமை பேரறமாம்.

7 உண்மையை உண்மையாகவே கடைப்பிடித்தால் 297
பிற அறங்கள் செய்யவும் வேண்டுமோ?

8 புறத்தூய்மை நீரால் உண்டாகும்; மனத்தூய்மை 298
பொய் சொல்லாமையால் விளங்கும்.

9 எல்லா ஒளியும் ஒளியல்ல; சான்றோர்க்கு 299
உண்மை ஒளியே ஒளி.

10 யாம் உண்மையாகக் கண்ட உண்மைகளுள் 300
வாய்மையினும் நல்லறம் வேறில்லை.

1 'வாய்மை எனப்படுவது யாது?' எனின், யாது ஒன்றும் 291
தீமை இலாத சொலல்.

2 பொய்ம்மையும் வாய்மை இடத்த-புரை தீர்ந்த 292
நன்மை பயக்கும் எனின்.

3 தன் நெஞ்சு அறிவது பொய்யற்க; பொய்த்தபின், 293
தன் நெஞ்சே தன்னைச் சுடும்.

4 உள்ளத்தால் பொய்யாது ஒழுகின், உலகத்தார் 294
உள்ளத்துள் எல்லாம் உளன்.

5 மனத்தொடு வாய்மை மொழியின், தவத்தொடு 295
தானம் செய்வாரின் தலை.

6 பொய்யாமை அன்ன புகழ் இல்லை; எய்யாமை, 296
எல்லா அறமும் தரும்.

7 பொய்யாமை பொய்யாமை ஆற்றின், அறம் பிற 297
செய்யாமை செய்யாமை நன்று.

8 புறம் தூய்மை நீரால் அமையும்;- அகம் தூய்மை 298
வாய்மையால் காணப்படும்.

9 எல்லா விளக்கும் விளக்கு அல்ல; சான்றோர்க்குப் 299
பொய்யா விளக்கே விளக்கு.

10 யாம் மெய்யாக் கண்டவற்றுள், இல்லை-எனைத்து 300
ஒன்றும் வாய்மையின் நல்ல பிற.

# வெகுளாமை

## தெளிவுரை

1 பலிக்குமிடத்துச் சினவாதவனே காப்பவன்;
பலியா இடத்து எப்படி நடந்தால் என்ன? 301

2 பலிக்காத இடத்துக் கோபிப்பது தீது;
பலிக்கும் இடத்தும் அதுபோல் தீயது இல்லை. 302

3 யார்மேலும் சினத்தை மறந்து விடுக;
மறவாவிடின் தீமைகள் பிறந்துவிடும். 303

4 முகமலர்ச்சியையும் அகமலர்ச்சியையும்
கொல்லும் சினத்தினும் பிற்பகை உண்டோ? 304

5 நீ வாழவேண்டின் சினத்தை ஒழிக்க;
ஒழிக்காவிடின் சினம் உன்னை ஒழிக்கும். 305

6 சினத்தீ சினங்கொண்டானையும் கொல்லும்;
இனமாகிய துணையையும் எரிக்கும். 306

7 சினத்தைப் போற்றிக்கொண்டவன் கெடுவான்;
தரையைக் குத்தியவனுக்குக் கைவலியாதா? 307

8 பூங்கொத்தை நெருப்பில் இட்டாற்போலக்
கொடுமைகள் செய்யினும் கோபம் கூடாது. 308

9 மனத்தாலும் வெகுளியை மறந்துவிடின்
நினைத்த எல்லாம் உடனே கிடைக்கும். 309

10 சினத்தில் மிக்கவர் செத்தவர்க்கு ஒப்பாவர்;
சினத்தை விட்டவர் துறவியர்க்கு ஒப்பாவர். 310

# வெகுளாமை

1 செல் இடத்துக் காப்பான் சினம் காப்பான்; அல் இடத்து, 301
காக்கின் என்? காவாக்கால் என்?.

2 செல்லா இடத்துச் சினம் தீது; செல் இடத்தும், 302
இல், அதனின் தீய பிற.

3 மறத்தல், வெகுளியை யார்மாட்டும்-தீய 303
பிறத்தல் அதனான் வரும்.

4 நகையும் உவகையும் கொல்லும் சினத்தின் 304
பகையும் உளவோ, பிற?.

5 தன்னைத் தான் காக்கின், சினம் காக்க! காவாக்கால், 305
தன்னையே கொல்லும், சினம்.

6 சினம் என்னும் சேர்ந்தாரைக்கொல்லி இனம் என்னும் 306
ஏமப் புணையைச் சுடும்.

7 சினத்தைப் பொருள் என்று கொண்டவன் கேடு 307
நிலத்து அறைந்தான் கை பிழையாதற்று.

8 இணர் எரி தோய்வன்ன இன்னா செயினும், 308
புணரின் வெகுளாமை நன்று.

9 உள்ளிய எல்லாம் உடன் எய்தும்-உள்ளத்தால் 309
உள்ளான் வெகுளி எனின்.

10 இறந்தார் இறந்தார் அனையர்; சினத்தைத் 310
துறந்தார் துறந்தார் துணை.

# இன்னா செய்யாமை



## தெளிவுரை

| | | |
|---|---|---|
| 1 | சிறப்புச் செல்வம் கிடைப்பினும் பிறர்க்குத்<br>துன்பம் செய்யாமையே தூயவர் கொள்கை. | 311 |
| 2 | கருவம் கொண்டு துன்புறுத்தினும் திரும்பத்<br>துன்பம் செய்யாமையே தூயவர் நோக்கம். | 312 |
| 3 | வலிய வந்து பகைத்தவர்க்குங்கூடத்<br>துன்பம் செய்யின் துயரம் நீங்காது. | 313 |
| 4 | கொடுமை செய்தாரைத் தண்டிப்பது எப்படி?<br>அவர் வெட்கப்படும்படி நன்மை செய்வது. | 314 |
| 5 | பிறர் துன்பத்தைத் தன் துன்பம்போலக்<br>கருதாத இடத்து அறிவினால் என்ன பயன்? | 315 |
| 6 | தனக்குக் கொடியது எனப் பட்டதைத்<br>தான் பிறர்க்குச் செய்ய விரும்பலாமா? | 316 |
| 7 | எவ்வகையாலும் என்றும் எவர்க்கும்<br>மனமறியக் கொடுமை செய்யாதே. | 317 |
| 8 | தன்னுயிர்க்குப் பிடிக்காது என்ற தீமையைப்<br>பிறவுயிர்க்கு ஏன் செய்கின்றான்? | 318 |
| 9 | காலையில் பிறர்க்குக் கொடுமை செய்யின்<br>மாலையில் உனக்குக் கொடுமை தானே வரும். | 319 |
| 10 | கேடுகள் கேடுசெய்தார்க்கே வந்து சேரும்;<br>துன்பம் வேண்டாதார் துன்பம் செய்யார். | 320 |

# இன்னா செய்யாமை

1 சிறப்பு ஈனும் செல்வம் பெறினும், பிறர்க்கு இன்னா
செய்யாமை மாசு அற்றார் கோள். 311

2 கறுத்து இன்னா செய்த அக்கண்ணும், மறுத்து இன்னா
செய்யாமை மாசு அற்றார் கோள். 312

3 செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்,
உய்யா விழுமம் தரும். 313

4 இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நல் நயம் செய்து, விடல். 314

5 அறிவினான் ஆகுவது உண்டோ-பிறிதின் நோய்
தம் நோய்போல் போற்றாக்கடை?. 315

6 இன்னா எனத் தான் உணர்ந்தவை, துன்னாமை
வேண்டும், பிறன்கண் செயல். 316

7 எனைத்தானும், எஞ்ஞான்றும், யார்க்கும், மனத்தான் ஆம்
மாணா செய்யாமை தலை. 317

8 தன் உயிர்க்கு இன்னாமை தான் அறிவான், என்கொலோ,
மன் உயிர்க்கு இன்னா செயல்?. 318

9 பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின், தமக்கு இன்னா
பிற்பகல் தாமே வரும். 319

10 நோய் எல்லாம் நோய் செய்தார் மேலவாம்; நோய் செய்யார்,
நோய் இன்மை வேண்டுபவர். 320

# கொல்லாமை



## தெளிவுரை

1 எவ்வுயிரையும் கொல்லாமையே அறமாம்; 321
கொல்லுதல் எல்லாத் தீமையும் தரும்.

2 ஆசிரியர்கள் கூறிய அறத்துள் மேலானது 322
பகுத்துண்டு பல்லுயிரையும் காப்பதுவே.

3 நிகரற்ற அறம் கொல்லாமை; அதற்குத் 323
துணையாகும் வாய்மையும் நல்ல அறம்.

4 நன்னெறி என்பது யாது? ஓருயிரும் 324
கொலைப் படாதபடி எண்ணும் நெறி.

5 பிறந்த உயிரைக் கொல்ல அஞ்சுபவனே 325
பிறவிக்கு அஞ்சும் துறவியினும் மேலானவன்.

6 கொல்லா அறத்தைக் கொண்டவன் ஆயுளை 326
உயிருண்ணும் யமன் நெருங்கமாட்டான்.

7 இன்னொருவன் உன்னுயிரை எடுக்கும் போதும் 327
அவனது இன்னுயிரை எடுக்காதே.

8 வீரர்க்குப் போரில் படை விளைவு சிறந்தது; 328
தனிக்கொலை விளைவு இழிந்தது.

9 எல்லா இழிவுகளையும் ஆராய்ந்த பெரியவர் 329
கொலைஞனை மிக இழிந்தவனாகக் கருதுவர்.

10 நோயுடலும் தீயவாழ்வும் உடையார் யார்? 330
ஓருயிரை உடம்பிலிருந்து பிரித்தவர்.

# கொல்லாமை

1 'அறவினை யாது?' எனின், கொல்லாமை; கோறல் 321
பிற வினை எல்லாம் தரும்.

2 பகுத்து உண்டு, பல் உயிர் ஓம்புதல் நூலோர் 322
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

3 ஒன்றாக நல்லது கொல்லாமை; மற்று அதன் 323
பின்சாரப் பொய்யாமை நன்று.

4 'நல்லாறு எனப்படுவது யாது?' எனின், யாது ஒன்றும் 324
கொல்லாமை சூழும் நெறி.

5 நிலை அஞ்சி நீத்தாருள் எல்லாம், கொலை அஞ்சிக் 325
கொல்லாமை சூழ்வான், தலை.

6 கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான் வாழ்நாள்மேல் 326
செல்லாது, உயிர் உண்ணும் கூற்று.

7 தன் உயிர் நீப்பினும் செய்யற்க-தான் பிறிது 327
இன் உயிர் நீக்கும் வினை.

8 நன்று ஆகும் ஆக்கம் பெரிது எனினும், சான்றோர்க்குக் 328
கொன்று ஆகும் ஆக்கம் கடை.

9 கொலை வினையர் ஆகிய மாக்கள் புலை வினையர், 329
புன்மை தெரிவார் அகத்து.

10 'உயிர் உடம்பின் நீக்கியார்' என்ப-'செயிர் உடம்பின் 330
செல்லாத் தீ வாழ்க்கையவர்'.

# நிலையாமை

## தெளிவுரை

| | | |
|---|---|---|
| 1 | நிலையாத பொருள்களை நிலைக்கும் என்று<br>கருதும் அறிவு மிகவும் கடையானது. | 331 |
| 2 | பெருஞ் செல்வம் வந்துபோவது நாடகத்துக்கு<br>மக்கள் வருவது போவது போன்றது. | 332 |
| 3 | செல்வம் நிலைப்படாதது: அது கிடைத்தால்<br>நிலைத்தவற்றை உடனே செய்து கொள்க. | 333 |
| 4 | காலம் உயிரறுக்கும் வாள்: நாளன்று<br>உணர்வார்க்கு உண்மை விளங்கும். | 334 |
| 5 | நாச்சுருண்டு விக்கல் வருமுன்னே அறத்தைத்<br>தானே முற்பட்டுச் செய்க. | 335 |
| 6 | நேற்று இருந்தான் இன்று இறந்தான்<br>என்பதே இவ்வுலகத்தின் பேரியல்பு. | 336 |
| 7 | மறுகணம் இருப்பதை அறிய மாட்டாதவர்<br>கட்டுகின்ற கோட்டைகள் எவ்வளவோ கோடி. | 337 |
| 8 | உடம்புக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு<br>கூடுவிட்டுப் பறவை ஓடுவது போன்றது. | 338 |
| 9 | தூங்குவது போன்றது சாவு;<br>தூங்கி விழிப்பது போன்றது பிறப்பு. | 339 |
| 10 | உடலில் ஒட்டுக் குடியிருக்கும் உயிர்க்கு<br>நிலையான ஒரு வீடு கிடைக்க வில்லையோ? | 340 |

# நிலையாமை



1 நில்லாதவற்றை நிலையின என்று உணரும் 331
புல்லறிவு ஆண்மை கடை.

2 கூத்தாட்டு அவைக்குழாத்தற்றே, பெருஞ் செல்வம்; 332
போக்கும், அது விளிந்தற்று.

3 அற்கா இயல்பிற்றுச் செல்வம்; அது பெற்றால், 333
அற்குப ஆங்கே செயல்.

4 நாள் என ஒன்றுபோல் காட்டி, உயிர், ஈரும் 334
வாளது-உணர்வார்ப் பெறின்.

5 நாச் செற்று, விக்குள் மேல்வாராமுன், நல் வினை 335
மேற்சென்று செய்யப்படும்.

6 'நெருநல் உளன், ஒருவன்; இன்று இல்லை!' என்னும் 336
பெருமை உடைத்து, இவ் உலகு.

7 ஒரு பொழுதும் வாழ்வது அறியார், கருதுப- 337
கோடியும் அல்ல, பல.

8 குடம்பை தனித்து ஒழியப் புள் பறந்தற்றே- 338
உடம்பொடு உயிரிடை நட்பு.

9 உறங்குவது போலும், சாக்காடு; உறங்கி 339
விழிப்பது போலும், பிறப்பு.

10 புக்கில் அமைந்தின்றுகொல்லோ-உடம்பினுள் 340
துச்சில் இருந்த உயிர்க்கு!.

## தெளிவுரை

| | | |
|---|---|---|
| 1 | எந்தெந்தப் பொருளைத் துறந்தோமோ<br>அந்தந்தப் பொருளால் துன்பம் இல்லை. | 341 |
| 2 | பொருள் உள்ளபோதே துறக்க; துறந்தால்<br>இப்பிறப்பில் வரும் நலன்கள் பல. | 342 |
| 3 | ஐம்புல உணர்ச்சிகளை அடக்க வேண்டும்;<br>எல்லாத் தேவையையும் விடுக்க வேண்டும். | 343 |
| 4 | யாதும் இல்லாமையே தவத்தின் இயல்பு;<br>ஏதும் இருப்பது ஆசையாகி விடும். | 344 |
| 5 | பிறப்பற முயல்வார்க்கு உடலும் கூடாதெனின்<br>பிறதொடர்பு பற்றி என்ன சொல்வது? | 345 |
| 6 | யான் எனது என்னும் கருவமற்றவன்<br>தேவர்க்கும் எட்டா உயர்நிலையை அடைவான். | 346 |
| 7 | பற்றுக்களை விடாது பிடித்துக் கொள்பவரைத்<br>துன்பங்களும் விடாது பிடித்துக் கொள்ளும். | 347 |
| 8 | முற்றத் துறந்தவரே வீடடைவார்; அங்ஙனம்<br>துறவாதவர் பிறப்புவலையில் மயங்கி வீழ்வார். | 348 |
| 9 | பற்று விட்டபோதுதான் பிறப்பு விடும்;<br>விடாதபோது இறப்பும் பிறப்பும் வரும். | 349 |
| 10 | பற்றில்லாத இறைவனைப் பிடித்துக் கொள்க;<br>அப்பிடிப்பே உலகப்பற்றை விடுதற்கு வழி. | 350 |

# துறவு



1 யாதனின் யாதனின் நீங்கியான், நோதல் 341
அதனின் அதனின் இலன்.

2 வேண்டின், உண்டாகத் துறக்க; துறந்தபின், 342
ஈண்டு இயற்பால பல.

3 அடல் வேண்டும், ஐந்தன் புலத்தை; விடல் வேண்டும், 343
வேண்டிய எல்லாம் ஒருங்கு.

4 இயல்பு ஆகும், நோன்பிற்கு ஒன்று இன்மை; உடைமை 344
மயல் ஆகும், மற்றும் பெயர்த்து.

5 மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல்? பிறப்பு அறுக்கல் 345
உற்றார்க்கு உடம்பும் மிகை.

6 'யான்', 'எனது', என்னும் செருக்கு அறுப்பான் வானோர்க்கு 346
உயர்ந்த உலகம் புகும்.

7 பற்றி விடாஅ, இடும்பைகள்-பற்றினைப் 347
பற்றி, விடாஅதவர்க்கு.

8 தலைப்பட்டார், தீரத் துறந்தார்; மயங்கி 348
வலைப்பட்டார், மற்றையவர்.

9 பற்று அற்றகண்ணே பிறப்பு அறுக்கும்; மற்றும் 349
நிலையாமை காணப்படும்.

10 பற்றுக, பற்று அற்றான் பற்றினை! அப் பற்றைப் 350
பற்றுக, பற்று விடற்கு!.

# மெய் உணர்தல்



1 பொய்ப்பொருள்களை மெய்ப்பொருள் என்று
மயங்குவதால் பிறப்புத் தோன்றும். 351

2 மயக்கம் விட்டுத் தெளிந்த அறிஞர்களுக்குப்
பேதைமை இராது; பேரின்பம் உண்டாம். 352

3 ஐயம் இன்றி உண்மை கண்டவர்களுக்கு
வீட்டுலகம் கிட்ட உள்ளது. 353

4 உண்மை யுணர்ச்சி இல்லாதவர்களுக்கு
ஐம்புல அடக்கம் இருந்தும் பயனில்லை. 354

5 ஒரு பொருள் எத்தன்மையதாக இருப்பினும்
அதன் உண்மையைக் காண்பதே அறிவு. 355

6 இப்பிறப்பில் கற்று உண்மை கண்டவரே
திரும்பப் பிறவா வீட்டினை அடைவர். 356

7 உள்ளம் உண்மையை உணர்ந்துகொண்டால்
பின்னும் பிறப்புண்டோ என்று அஞ்சாதே. 357

8 பிறப்பாகிய பேதைமை நீங்குமாறு
சிறப்பாகிய பொருளைக் காண்பதே அறிவு. 358

9 மெய்ப்பற்றை உணர்ந்து பொய்ப்பற்றை விடின்
வருகின்ற நோய்கள் மீறி வாரா. 359

10 காமம் சினம் அறியாமை மூன்றும்
அடியோடு கெடவே நோயும் கெடும். 360

# மெய் உணர்தல்



1 பொருள் அல்லவற்றைப் பொருள் என்று உணரும்
மருளான் ஆம், மாணாப் பிறப்பு. 351

2 இருள் நீங்கி இன்பம் பயக்கும்-மருள் நீங்கி
மாசு அறு காட்சியவர்க்கு. 352

3 ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணியது உடைத்து. 353

4 ஐஉணர்வு எய்தியக் கண்ணும் பயம் இன்றே-
மெய் உணர்வு இல்லாதவர்க்கு. 354

5 எப் பொருள் எத் தன்மைத்துஆயினும், அப் பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. 355

6 கற்று ஈண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்,
மற்று ஈண்டு வாரா நெறி. 356

7 ஓர்த்து உள்ளம் உள்ளது உணரின் ஒரு தலையா,
பேர்த்து உள்ளவேண்டா பிறப்பு. 357

8 பிறப்பு என்னும் பேதைமை நீங்க, சிறப்பு என்னும்
செம்பொருள் காண்பது அறிவு. 358

9 சார்பு உணர்ந்து, சார்பு கெட ஒழுகின், மற்று அழித்துச்
சார்தரா, சார்தரும் நோய். 359

10 காமம், வெகுளி, மயக்கம், இவை மூன்றன்
நாமம் கெட, கெடும் நோய். 360

# அவா அறுத்தல்



## தெளிவுரை

1 ஆசைதான் எவ்வுயிர்க்கும் என்றும்
நெடும் பிறவி தரும் வித்து என்பர். 361

2 ஒன்று விரும்பின் பிறவாமையை விரும்புக;
விரும்பாமையை விரும்பின் அது கைகூடும். 362

3 ஆசையின்மையே சிறந்த செல்வம்;
அது போன்ற செல்வம் எங்கும் இல்லை. 363

4 மனத்தூய்மை என்பது ஆசையின்மையே;
அத்தன்மை வாய்மையினால் வரும். 364

5 ஆசைவிட்டவரே பற்று விட்டவர் ஆவார்;
மற்றவர்கள் முடிவாகப் பற்று விட்டதில்லை. 365

6 ஆசை யாரையும் ஏய்த்து விடும் ஆதலின்
அதற்கு அஞ்சி நடப்பதே அறம். 366

7 ஆசையை முழுதும் அறுத்து விட்டால்
நல்வினை நாம் விரும்பியபடி வரும். 367

8 ஆசையில்லார்க்குத் துன்பம் இல்லை;
அது உடையார்க்குத் துன்பம் வளரும். 368

9 ஆசையாகிய பெருந்துன்பம் அகன்று விட்டால்
இன்பம் வந்துகொண்டே இருக்கும். 369

10 என்றும் நிரம்பாத ஆசையை நீக்கிவிடின்
நீங்காத இன்பம் உடனே கிடைக்கும். 370

# அவா அறுத்தல்

1 'அவா' என்ப-'எல்லா உயிர்க்கும், எஞ் ஞான்றும், 361
தவாஅப் பிறப்பு ஈனும் வித்து'.

2 வேண்டுங்கால், வேண்டும் பிறவாமை; மற்று அது 362
வேண்டாமை வேண்ட, வரும்.

3 வேண்டாமை அன்ன விழுச் செல்வம் ஈண்டு இல்லை; 363
யாண்டும் அஃது ஒப்பது இல்.

4 தூஉய்மை என்பது அவா இன்மை; மற்று அது 364
வா அய்மை வேண்ட, வரும்.

5 அற்றவர் என்பார் அவா அற்றார்; மற்றையார் 365
அற்று ஆக அற்றது இலர்.

6 அஞ்சுவது ஓரும் அறனே; ஒருவனை 366
வஞ்சிப்பது ஓரும் அவா.

7 அவாவினை ஆற்ற அறுப்பின், தவா வினை 367
தான்வேண்டும் ஆற்றான் வரும்.

8 அவா இல்லார்க்கு இல்லாகும் துன்பம்; அஃது உண்டேல், 368
தவாஅது மேன்மேல் வரும்.

9 இன்பம் இடையறாது, ஈண்டும்-அவா என்னும் 369
துன்பத்துள் துன்பம் கெடின்.

10 ஆரா இயற்கை அவா நீப்பின், அந் நிலையே 370
பேரா இயற்கை தரும்.

# ஊழ்



## தெளிவுரை

1 பொருள் வளருங்கால் ஊக்கம் பிறக்கும்; 371
பொருள் போகுங்கால் சோம்பல் வந்து விடும்.

2 அழிவு காலம் அறியாமையைத் தரும்; 372
ஆகுங்காலம் அறிவைப் பெருக்கும்.

3 நுண்ணிய நூல் பல கற்றாலும் ஒருவர்க்குத் 373
தன் போக்கிலேதான் அறிவு வளரும்.

4 உலகத்தின் இயல்பு இருவேறு பட்டது; 374
செல்வமுறை வேறு, அறிவு முறை வேறு.

5 நேர்வழி செல்வம் ஈட்டுதலைக் கெடுக்கலாம்; 375
தீவழி அதற்குத் துணையாகலாம்.

6 வருந்தினும் உனக்கு இல்லாதவை வாரா; 376
வாரி எறியினும் உரியவை போகா.

7 அமைத்தவன் அமைத்த நெறிப்படி யல்லது 377
கோடி தொகுப்பினும் நுகருதல் இயலாது.

8 அடைய வேண்டுவன அடையா என்றால் 378
வறியோரும் துறவியாகி இருப்பார்களே?

9 நன்மை தரும்போது நல்லதாக மதிப்பவர் 379
தீமை தரும்போது துன்பம் கொள்வதேன்?

10 ஊழைக் காட்டிலும் வலியது உண்டோ? 380
எது தொடர்ந்தாலும் அது முந்தி விடும்.

# ஊழ்

1 ஆகு ஊழால் தோன்றும், அசைவு இன்மை; கைப்பொருள் 371
போகு ஊழால் தோன்றும், மடி.

2 பேதைப் படுக்கும், இழவு ஊழ்; அறிவு அகற்றும், 372
ஆகல் ஊழ் உற்றக்கடை.

3 நுண்ணிய நூல் பல கற்பினும், மற்றும் தன் 373
உண்மை அறிவே மிகும்.

4 இரு வேறு, உலகத்து இயற்கை; திரு வேறு; 374
தெள்ளியர் ஆதலும் வேறு.

5 நல்லவை எல்லாஅம் தீய ஆம்; தீயவும் 375
நல்ல ஆம்;-செல்வம் செயற்கு.

6 பரியினும் ஆகாவாம், பால் அல்ல; உய்த்துச் 376
சொரியினும் போகா, தம.

7 வகுத்தான் வகுத்த வகை அல்லால், கோடி 377
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது.

8 துறப்பார்மன், துப்புரவு இல்லார்-உறற்பால 378
ஊட்டா கழியும் எனின்.


9 நன்று ஆம் கால் நல்லவாக் காண்பவர், அன்று ஆம் கால் 379
அல்லற்படுவது எவன்.

10 ஊழின் பெருவலி யா உள-மற்று ஒன்று 380
சூழினும், தான் முந்துறும்.



# 2. பொருட்பால்

பொருட்பால் என்பது அறத்தின் வழி நின்று செல்வங்களை ஈட்டுவதும், ஈட்டிய அச்செல்வங்களைப் பேணிக்காப்பது மற்றும் பகிர்ந்தளிப்பது குறித்தும், நடுவுநிலை, ஆளுமை, கல்வி, கொடை, நட்பு, உழவு போன்றவற்றின் சிறப்புகளை உரைப்பதுவும் ஆகும்.



# இறைமாட்சி

## தெளிவுரை

1 படைகுடி உணவு அமைச்சு நட்பு அரண்
ஆறும் உடையவன் அரசரிற் சிறந்தவன். 381

2 அஞ்சாமை ஈகை அறிவு ஊக்கம்
நான்கும் வேந்தனுக்கு நன்கு வேண்டும். 382

3 காலந்தாழாமை கல்வி துணிவு மூன்றும்
நிலன் ஆள்பவனுக்கு நீங்காது வேண்டியவை. 383

4 அறம் வழுவாது தீமைகளை நீக்கி
மறம் வழுவாது மானம் காப்பது அரசு. 384

5 பொருளை ஆக்கி ஈட்டிக் காத்து வகை செய்யும்
ஆற்றல் உடையதே அரசு. 385

6 பார்வைக்கு எளிமை சொல்லுக்கு இனிமை
உடைய மன்னனது நாடு புகழப்படும். 386

7 இனிது சொல்லி அளிசெய்யும் அரசன்
தன் சொற்படி உலகத்தைக் காண்பான். 387

8 முறையோடு காக்கும் மன்னன் குடிகட்குக்
காணும் கடவுள் ஆவான். 388

9 கசப்பான சொல்லையும் கேட்கும் பண்புள்ள
வேந்தனது குடைக்கீழ் உலகம் தங்கும். 389

10 கொடை அன்பு நேர்மை குடிபோற்றல்
உடையவனே மன்னர்க்கு ஒளியாவான். 390

# இறைமாட்சி

1 படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் ஆறும் 381
உடையான் அரசருள் ஏறு.

2 அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் இந் நான்கும் 382
எஞ்சாமை-வேந்தற்கு இயல்பு.

3 தூங்காமை, கல்வி, துணிவுடைமை இம் மூன்றும் 383
நீங்கா-நிலன் ஆள்பவற்கு.

4 அறன் இழுக்காது, அல்லவை நீக்கி, மறன் இழுக்கா 384
மானம் உடையது-அரசு.

5 இயற்றலும், ஈட்டலும், காத்தலும், காத்த 385
வகுத்தலும், வல்லது-அரசு.

6 காட்சிக்கு எளியன், கடுஞ் சொல்லன் அல்லனேல், 386
மீக்கூறும், மன்னன் நிலம்.

7 இன் சொலால் ஈத்து, அளிக்க வல்லாற்குத் தன் சொலால் 387
தான் கண்டனைத்து, இவ் உலகு.

8 முறை செய்து காப்பாற்றும் மன்னவன், 'மக்கட்கு 388
இறை' என்று வைக்கப்படும்.

9 செவி கைப்பச் சொற் பொறுக்கும் பண்புடை வேந்தன் 389
கவிகைக்கீழ்த் தங்கும், உலகு.

10 கொடை, அளி, செங்கோல், குடி-ஓம்பல், நான்கும் 390
உடையான் ஆம், வேந்தர்க்கு ஒளி.

# கல்வி

## தெளிவுரை

1 கற்கத் தக்க நூல்களைத் தெளிவாகக் கற்க; கற்றபின் தக்கபடி வாழ்வில் நிற்க. 391

2 எண்ணும் எழுத்தும் ஆகிய இரண்டும் வாழ்வார்க்குக் கண்கள் என்பர். 392

3 கற்றோர்க்கே கண் உண்டு; கல்லாதவர்க்கோ முகத்தில் இரண்டு புண் உண்டு. 393

4 மகிழுமாறு பழகுவர்; நினைக்குமாறு பிரிவர்; இதுவே புலவரின் பண்பு. 394

5 செல்வர் முன் வறியர்போல ஏக்கத்தோடு படித்தவரே மேல்; படியாதவர் கீழ். 395

6 மணற்கேணி தோண்டத் தோண்ட நீர் ஊறும்; நூல்கள் கற்கக்கற்க அறிவூறும். 396

7 எந்நாடும் தன்னாடாம்; எவ்வூரும் தன்னூராம்; ஏன் ஒருவன் சாகும் வரை படிப்பதில்லை? 397

8 ஒரு பிறப்பில் படித்த படிப்பு ஒருவர்க்கு எழுபிறப்பிலும் வந்து உதவும். 398

9 தன்னின்பம் உலக இன்பம் ஆதலின் கற்றவர் கல்வியை மேன்மேலும் காதலிப்பர். 399

10 அழியாத சிறந்த செல்வம் கல்வியே; பிறபொருள்கள் செல்வம் அல்ல. 400

# கல்வி

1 கற்க, கசடு அற, கற்பவை! கற்றபின், 391
நிற்க, அதற்குத் தக!.

2 'எண்' என்ப, ஏனை 'எழுத்து' என்ப, இவ் இரண்டும் 392
கண்' என்ப, வாழும் உயிர்க்கு.

3 கண் உடையர் என்பவர் கற்றோர்; முகத்து இரண்டு 393
புண் உடையர், கல்லாதவர்.

4 உவப்பத் தலைக்கூடி, உள்ளப் பிரிதல் 394
அனைத்தே-புலவர் தொழில்.

5 உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்; 395
கடையரே, கல்லாதவர்.

6 தொட்டனைத்து ஊறும், மணற் கேணி;-மாந்தர்க்குக் 396
கற்றனைத்து ஊறும், அறிவு.

7 யாதானும் நாடு ஆமால்; ஊர் ஆமால்; என், ஒருவன் 397
சாம் துணையும் கல்லாதவாறு?.

8 ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு 398
எழுமையும் ஏமாப்பு உடைத்து.

9 தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு, 399
காமுறுவர், கற்று அறிந்தார்.

10 கேடு இல் விழுச் செல்வம் கல்வி; ஒருவற்கு 400
மாடு அல்ல, மற்றையவை.

## தெளிவுரை

1 பலநூல் அறிவின்றி அவை யேறுதல் 401
அரங்கின்றிக் காய் உருட்டுவது போலும்.

2 படிப்பு இல்லாதவன் பேச விரும்புதல் 402
முலையில்லாதவள் இன்பம் விழைவது போலும்.

3 கற்றவர்முன் பேசாது அடங்கி இருப்பரேல் 403
கல்லாதவரும் மிக நல்லவர் ஆவர்.

4 கல்லாதவன் உடைய இயற்கையறிவு 404
கூர்மை யாயினும் அறிஞர் கொள்ளார்.

5 கற்றவரோடு கலந்து உரையாடிய அளவில் 405
கல்லாதவன் மதிப்புக் கரைந்து போகும்.

6 உயிரோடு இருக்கிறார் எனலாமே யன்றிக் 406
கல்லாதவர் களர்நிலம் போன்றவர்.

7 நுண்மை மாட்சி கூர்மை பொருந்திய அறிவு 407
இல்லாதவன் அழகு நிறப்பொம்மை போலும்.

8 படித்தவர் எய்திய வறுமையைக் காட்டிலும் 408
படியாதவர் எய்திய செல்வம் கேடாகும்.

9 கல்லாதவர் உயர் குடியிற் பிறந்திருப்பினும் 409
தாழ்குடியிற் பிறந்த அறிஞர்க்கு ஒவ்வார்.

10 விலங்கும் மக்களும் வேற்றுமை எவ்வளவு 410
அவ்வளவு கற்றாரும் கல்லாரும்.

# கல்லாமை

1 அரங்கு இன்றி வட்டு ஆடியற்றே-நிரம்பிய 401
நூல் இன்றிக் கோட்டி கொளல்.

2 கல்லாதான் சொல் காமுறுதல், முலை இரண்டும் 402
இல்லாதாள் பெண் காமுற்றற்று.

3 கல்லாதவரும் நனி நல்லர்-கற்றார்முன் 403
சொல்லாது இருக்கப்பெறின்.

4 கல்லாதான் ஒட்பம் கழிய நன்று ஆயினும், 404
கொள்ளார், அறிவு உடையார்.

5 கல்லா ஒருவன் தகைமை, தலைப்பெய்து 405
சொல்லாட, சோர்வுபடும்.

6 உளர் என்னும் மாத்திரையர் அல்லால், பயவாக் 406
களர் அனையர்-கல்லாதவர்.

7 நுண் மாண் நுழை புலம் இல்லான் எழில் நலம் 407
மண் மாண் புனை பாவை அற்று.

8 நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே- 408
கல்லார்கண் பட்ட திரு.

9 மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார், கீழ்ப்பிறந்தும் 409
கற்றார் அனைத்து இலர் பாடு.

10 விலங்கொடு மக்கள் அனையர்-இலங்கு நூல் 410
கற்றாரொடு ஏனையவர்.

# கேள்வி

## தெளிவுரை

1 செல்வத்திற் சிறந்தது கேள்விச் செல்வம்;
அச்செல்வம் எச்செல்வத்தினும் மேலானது. 411

2 செவிக்கு உணவு கிடைக்காதபோது
வயிற்றுக்குக் கொஞ்சம் உணவு அளிக்கலாம். 412

3 செவியுணவு உண்டவர் அவியுணவு உண்ட
தேவர்க்கு ஒப்பாவர் இவ்வுலகில். 413

4 கல்லாவிடினும் கற்றார் சொல்லைக் கேட்க;
சோர்வுக் காலத்துத் தாங்கும் துணையாகும். 414

5 ஒழுக்கம் உடையவர் சொல்லைக் கேட்பது
வாழ்வில் வழுக்கும்போது ஊன்று கோலாம். 415

6 எவ்வளவாயினும் நல்லவற்றைக் கேட்க;
அவ்வளவிற்குச் சிறந்த பெருமை உண்டு. 416

7 ஆராய்ந்து உணர்ந்து நிரம்பிய கேள்வியாளர்
தவறியும் அறிவில்லன சொல்லார். 417

8 கேள்வியறிவு நுழையாத செவிகள்
ஓசை கேட்டாலும் முழுச் செவிடுகளே. 418

9 நுட்பமான கேள்வியறிவு இல்லாதவர்க்கு
வணக்க ஒடுக்கமான வாய் இராது. 419

10 செவிச்சுவை தெரியா வாய்ச்சுவை மக்கள்
வெந்தால் என்ன? இருந்தால் என்ன? 420

# கேள்வி

1 செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்; அச் செல்வம் 411
செல்வத்துள் எல்லாம் தலை.

2 செவிக்கு உணவு இல்லாத போழ்து, சிறிது, 412
வயிற்றுக்கும் ஈயப்படும்.

3 செவியுணவின் கேள்வி உடையார், அவியுணவின் 413
ஆன்றாரொடு ஒப்பர், நிலத்து.

4 கற்றிலன் ஆயினும் கேட்க; அஃது ஒருவற்கு 414
ஒற்கத்தின் ஊற்று ஆம் துணை.

5 இழுக்கல் உடை உழி ஊற்றுக்கோல் அற்றே- 415
ஒழுக்கம் உடையார் வாய்ச் சொல்.

6 எனைத்தானும் நல்லவை கேட்க! அனைத்தானும் 416
ஆன்ற பெருமை தரும்.

7 பிழைத்து உணர்ந்தும் பேதைமை சொல்லார்-இழைத்து உணர்ந்து 417
ஈண்டிய கேள்வியவர்.

8 கேட்பினும் கேளாத் தகையவே-கேள்வியால் 418
தோட்கப் படாத செவி.

9 நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய 419
வாயினர் ஆதல் அரிது.

10 செவியின் சுவை உணரா, வாய் உணர்வின், மாக்கள் 420
அவியினும் வாழினும் என்.

# அறிவுடைமை

## தெளிவுரை

1 அறிவு குற்றம் தடுக்கும் படை; பகைவரும் 421
ஊக்கம் அழிக்க முடியாத அரண்.

2 சென்ற மனத்தைச் சென்றபடி விடாது 422
தீது நீக்கி வழிப்படுத்துவதே அறிவு.

3 எச்செய்தியை யார் யாரிடம் கேட்டாலும் 423
அதன் உண்மையைக் காண்பதே அறிவு.

4 அருமையை எளிமையாக நீ சொல்லுக; 424
பிறர்கூறும் நுண்மையை விளங்கிக் கொள்ளுக.

5 உலகத்தைத் தழுவிப் போவது சாதுரியம்; 425
மகிழ்தலும் வருந்தலும் இல்லாதது அறிவு.

6 எங்ஙனம் போகின்றது உலகம் அங்ஙனம் 426
ஒட்டி வாழ்வதே அறிவுடைமை.

7 மேல்வருவதை அறிபவர் அறிவுடையவர்; 427
அத்திறமை இல்லாதவர் அறிவில்லாதவர்.

8 அஞ்சுவதற்கு அஞ்சாமை பேதைத்தன்மை; 428
அதற்கு அஞ்சுதல் அறிவுத்தன்மை.

9 வருமுன்னர்க் காக்க வல்ல அறிஞர்க்கு 429
அதிர்ச்சி தரும் துன்பம் வராது.

10 அறிவுடையவர் அறிவால் எல்லாம் உடையர்; 430
அறிவிலார் என்ன இருந்தும் இலர்.

# அறிவுடைமை

1 அறிவு, அற்றம் காக்கும் கருவி; செறுவார்க்கும் 421
உள் அழிக்கல் ஆகா அரண்.

2 சென்ற இடத்தால் செலவிடா, தீது ஒரீஇ, 422
நன்றின் பால் உய்ப்பது-அறிவு.

3 எப் பொருள் யார் யார் வாய்க் கேட்பினும், அப் பொருள் 423
மெய்ப் பொருள் காண்பது-அறிவு.

4 எண் பொருளவாகச் செலச் சொல்லி, தான் பிறர்வாய் 424
நுண் பொருள் காண்பது-அறிவு.

5 உலகம் தழீஇயது ஒட்பம்; மலர்தலும் 425
கூம்பலும் இல்லது-அறிவு.

6 எவ்வது உறைவது உலகம், உலகத்தொடு 426
அவ்வது உறைவது-அறிவு.

7 அறிவு உடையார் ஆவது அறிவார்; அறிவு இலார் 427
அஃது அறிகல்லாதவர்.

8 அஞ்சுவது அஞ்சாமை பேதைமை; அஞ்சுவது 428
அஞ்சல், அறிவார் தொழில்.

9 எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை- 429
அதிர வருவதோர் நோய்.

10 அறிவு உடையார் எல்லாம் உடையார்; அறிவு இலார் 430
என் உடையரேனும் இலர்.

# குற்றம் கடிதல்

## தெளிவுரை

1 கருவமும் சினமும் இழிவும் இல்லாதவர்
முன்னேற்றம் மேலானது. 431

2 கஞ்சத் தன்மையும் பொய்யான மானமும்
வேண்டாத மகிழ்ச்சியும் வேந்தன் கேடுகள். 432

3 சிறுகுற்றம் செய்யினும் பெரிதாக எண்ணுவர்
பழிக்கு நாணும் பெரியவர். 433

4 குற்றமே குழிதோண்டும் உட்பகை ஆதலின்
குற்றத்தை விழிப்போடு தடுப்பாயாக. 434

5 குற்றம் வருமுன்னே தடுக்காதவன் வாழ்வு
தீ முன் வைக்கோற் போர்போல அழியும். 435

6 தன் குறையை நீக்கிப் பிறர்குறை கூறின்
அரசனை யாரும் குறை சொல்லார். 436

7 செய்வன செய்யாது சிக்கெனப் பிடித்தவனது
செல்வம் தப்பும் வழியன்றிக் கெடும். 437

8 பொருட் பற்றாகிய கஞ்சத் தன்மை
எத்தன்மையிலும் மிக இழிந்தது. 438

9 எக்காலத்தும் தன்னைப் புகழாதே;
கெடுதல் வினையை என்றும் விரும்பாதே. 439

10 தன்விருப்பம் வெளிப்படாதபடி நடப்பின்
பகைவர் சூழ்ச்சிகள் பயன்படா. 440

# குற்றம் கடிதல்



1 செருக்கும், சினமும், சிறுமையும், இல்லார் 431
பெருக்கம் பெருமித நீர்த்து.

2 இவறலும், மாண்பு இறந்த மானமும், மாணா 432
உவகையும்,- ஏதம், இறைக்கு.

3 தினைத் துணையாம் குற்றம் வரினும், பனைத் துணையாக் 433
கொள்வர், பழி நாணுவார்.

4 குற்றமே காக்க, பொருளாக-குற்றமே, 434
அற்றம் தரூஉம் பகை.

5 வரும் முன்னர்க் காவாதான் வாழ்க்கை, எரி முன்னர் 435
வைத்தூறு போல, கெடும்.

6 தன் குற்றம் நீக்கி, பிறர் குற்றம் காண்கிற்பின், 436
என் குற்றம் ஆகும் இறைக்கு.

7 செயற்பால செய்யாது இவறியான் செல்வம் 437
உயற்பாலது அன்றிக் கெடும்.

8 பற்று உள்ளம் என்னும் இவறன்மை, எற்றுள்ளும் 438
எண்ணப்படுவது ஒன்று அன்று.

9 வியவற்க, எஞ்ஞான்றும் தன்னை! நயவற்க, 439
நன்றி பயவா வினை!.

10 காதல காதல் அறியாமை உய்க்கிற்பின், 440
ஏதில, ஏதிலார் நூல்.

# பெரியாரைத் துணைக்கோடல்

## தெளிவுரை

1 அறமும் முதிர்ந்த அறிவும் உடையவரது
நட்பைத் தெரிந்து பெற்றுக் கொள்க. 441

2 வந்த துயரைப் போக்கி வருமுன் காக்கும்
திறமுடையவரைத் தழுவிக் கொள்க. 442

3 பெரியவர்களைப் போற்றி உறவு கொள்வதே
அரிய செயல்களுள் எல்லாம் அரியது. 443

4 நம்மினும் பெரியவர் நம்மவராக நடப்பது
எல்லா வன்மையினும் ஏற்றமானது. 444

5 அறிஞர்களே அரசன் கண்கள் ஆதலின்
அவர்களை ஆராய்ந்து அணைத்துக் கொள்க. 445

6 பெரியவர்கள் துணையாக ஒழுகுபவனைப்
பகைவர்கள் என்ன செய்ய முடியும்? 446

7 கடிந்துரைக்கும் நண்பர் உடையவரை
யாரும் கெடுக்க முடியுமா? 447

8 கடிந்துரைப்பார் இல்லாத தனி மன்னன்
பகைவர் இன்றியும் கெடுவான். 448

9 முதல் இல்லாதவர்க்கு ஊதியம் உண்டோ?
துணை இல்லாதவர்க்கு ஒரு நிலை உண்டோ? 449

10 நல்லவர் ஒருவர் நட்பை விடுவது
பலரைப் பகைப்பதினும் பெருந் தீமை. 450

# பெரியாரைத் துணைக்கோடல்



| | | |
|---|---|---|
| 1 | அறன் அறிந்து மூத்த அறிவு உடையார் கேண்மை<br>திறன் அறிந்து, தேர்ந்து, கொளல். | 441 |
| 2 | உற்ற நோய் நீக்கி, உறாஅமை முன் காக்கும்<br>பெற்றியார்ப் பேணிக் கொளல். | 442 |
| 3 | அரியவற்றுள் எல்லாம் அரிதே-பெரியாரைப்<br>பேணித் தமராக் கொளல். | 443 |
| 4 | தம்மின் பெரியார் தமரா ஒழுகுதல்,<br>வன்மையுள் எல்லாம் தலை. | 444 |
| 5 | சூழ்வார் கண் ஆக ஒழுகலான், மன்னவன்<br>சூழ்வாரைச் சூழ்ந்து கொளல். | 445 |
| 6 | தக்கார் இனத்தனாய், தான் ஒழுக வல்லானைச்<br>செற்றார் செயக்கிடந்தது இல். | 446 |
| 7 | இடிக்கும் துணையாரை ஆள்வாரை, யாரே,<br>கெடுக்கும் தகைமையவர். | 447 |
| 8 | இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்<br>கெடுப்பார் இலானும், கெடும். | 448 |
| 9 | முதல் இலார்க்கு ஊதியம் இல்லை;-மதலை ஆம்<br>சார்பு இலார்க்கு இல்லை, நிலை. | 449 |
| 10 | பல்லார் பகை கொளலின் பத்து அடுத்த தீமைத்தே-<br>நல்லார் தொடர் கைவிடல். | 450 |

# சிற்றினம் சேராமை

## தெளிவுரை

1 பெரியவர் சிறியவரோடு பழக அஞ்சுவர்;
சிறியார் சிறியாரையே உறவு கொள்வர். 451

2 மழை தான் விழுந்த மண்தன்மையைப் பெறும்;
அறிவு சேர்ந்த குழுத்தன்மையைப் பெறும். 452

3 மக்கட்கு மனத்தால் உணர்ச்சி உண்டாம்;
சேர்க்கையால் உரிய மதிப்பு உண்டாம். 453

4 அறிவு மனத்தை ஒட்டியது போல் தோன்றும்;
உண்மையில் பழகும் இனத்தை ஒட்டியது. 454

5 மனத் தூய்மை செயல் தூய்மை இரண்டும்
நல்ல கூட்டுறவால் வரும். 455

6 நன்மனத்தார்க்குப் பின் வழி நன்றாகும்;
நல்லினத்தார்க்கு எல்லாமே நன்றாகும். 456

7 நன்மனம் உயிர்க்கு ஆக்கம் தரும்;
நற்கூட்டு எல்லாப் புகழும் தரும். 457

8 சான்றோர்க்கு மனம் நல்லதாக இருப்பினும்
இனமும் நல்லதாக இருப்பது சிறப்பு. 458

9 நன்மனத்தால் மறுமை யின்பம் கிடைக்கும்;
அதற்கும் நற்கூட்டு நல்லது. 459

10 நல்ல சேர்க்கையினும் சிறந்த துணையில்லை;
கெட்ட சேர்க்கையினும் வேறு கேடில்லை. 460

# சிற்றினம் சேராமை



1 சிற்றினம் அஞ்சும், பெருமை; சிறுமைதான் 451
சுற்றமாச் சூழ்ந்துவிடும்.

2 நிலத்து இயல்பான் நீர் திரிந்து, அற்று ஆகும்;- மாந்தர்க்கு 452
'இனத்து' இயல்பது ஆகும், அறிவு.

3 மனத்தான் ஆம், மாந்தர்க்கு உணர்ச்சி; இனத்தான் ஆம், 453
'இன்னான்' எனப்படும் சொல்.

4 மனத்து உளது போலக் காட்டி, ஒருவற்கு 454
இனத்து உளது ஆகும்-அறிவு.

5 மனம் தூய்மை, செய்வினை தூய்மை, இரண்டும் 455
இனம் தூய்மை தூவா வரும்.

6 மனம் தூயார்க்கு எச்சம் நன்று ஆகும்; இனம் தூயார்க்கு 456
இல்லை, நன்று ஆகா வினை.

7 மன நலம் மன் உயிர்க்கு ஆக்கம்; இன நலம் 457
எல்லாப் புகழும் தரும்.

8 மன நலம் நன்கு உடையர் ஆயினும், சான்றோர்க்கு 458
இன நலம் ஏமாப்பு உடைத்து.

9 மன நலத்தின் ஆகும், மறுமை; மற்று அஃதும் 459
இன நலத்தின் ஏமாப்பு உடைத்து.

10 நல் இனத்தின் ஊங்கும் துணை இல்லை; தீ இனத்தின் 460
அல்லற்படுப்பதூஉம் இல்.

# தெரிந்து செயல் வகை

## தெளிவுரை

1 அழிவதும் ஆவதும் பின் வரும் ஊதியமும்
எல்லாவற்றையும் எண்ணிச் செய்க. 461

2 சேர்ந்தவர்களைக் கலந்து செய்பவர்க்குச்
செய்ய இயலாதது ஒன்றுமே இல்லை. 462

3 வருவதை நம்பி உள்ளதை இழக்கும்
காரியத்தில் ஈடுபடார் அறிவு இருப்பவர். 463

4 வெட்க உணர்ச்சிக்கு அஞ்சுகின்றவர்
விளங்காத காரியத்தை மேற்கொள்ளார். 464

5 உட்கூறுகள் தெரியாது செய்யப் புறப்படுதல்
பகைவர் வெற்றிக்குப் பாத்தி பிடிப்பதாகும். 465

6 செய்ய வேண்டாதன் செய்தாற் கெடுவான;
வேண்டியன செய்யாவிட்டாலும் கெடுவான். 466

7 நன்றாக நினைத்துக் காரியத்தில் இறங்குக;
இறங்கியபின் பார்க்கலாம் என்பது தவறு. 467

8 முறைப்படி உழையாத உழைப்பு
பலர்துணை இருப்பினும் ஓட்டைபடும். 468

9 அவரவர் இயல்பு அறிந்து செய்யாவிடின்
நன்மை செய்வதும் தவறாகி விடும். 469

10 உன் நிலைக்கு ஏற்காததை உலகம் ஏற்காது;
உலகம் இகழாதவற்றை எண்ணிச் செய்க. 470

# தெரிந்து செயல் வகை



1 அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி, வழிபயக்கும் 461
ஊதியமும் சூழ்ந்து, செயல்!.

2 தெரிந்த இனத்தொடு தேர்ந்து எண்ணிச் செய்வார்க்கு 462
அரும் பொருள் யாது ஒன்றும் இல்.

3 ஆக்கம் கருதி, முதல் இழக்கும் செய்வினை 463
ஊக்கார், அறிவு உடையார்.

4 தெளிவு இலதனைத் தொடங்கார்-இளிவு என்னும் 464
ஏதப்பாடு அஞ்சுபவர்.

5 வகை அறச் சூழாது எழுதல், பகைவரைப் 465
பாத்திப் படுப்பது ஓர் ஆறு.

6 செய்தக்க அல்ல செயக் கெடும்; செய்தக்க 466
செய்யாமையானும் கெடும்.

7 எண்ணித் துணிக, கருமம்; துணிந்தபின், 467
எண்ணுவம் என்பது இழுக்கு.

8 ஆற்றின் வருந்தா வருத்தம், பலர் நின்று 468
போற்றினும், பொத்துப்படும்.

9 நன்று ஆற்றலுள்ளும் தவறு உண்டு-அவரவர் 469
பண்பு அறிந்து ஆற்றாக்கடை.

10 எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும்-தம்மொடு 470
கொள்ளாத கொள்ளாது உலகு.

# வலி அறிதல்

## தெளிவுரை

1 செயல், தான், பகைவன் , துணைவன் என்ற எல்லா வன்மைகளையும் சீர்தூக்கிச் செய்க. 471

2 இயலும் செயலையும் அறிவையும் தெரிந்து நடப்பார்க்கு நடவாதது இல்லை. 472

3 ஆற்றல் அறியாது ஆர்வத்தால் செய்து இடையிலே நொடித்தவர் மிகப் பலர். 473

4 அமைத்தபடி நடவாதவன் அளவறியாதவன் தன்னைப் புகழ்ந்தவன் சடுதியிற் கெடுவான். 474

5 மயிலிறகையும் அளவுக்கு மிஞ்சி ஏற்றினால் பாரவண்டியும் அச்சு முறிந்து விடும். 475

6 நுனிக்கொம்பில் ஏறியவர் மேலும் ஏறின் உயிர்க்கு முடிவுகாலம் வந்துவிடும். 476

7 முறைப்படி பொருள் நிலை அறிந்து கொடுக்க; அதுவே மேன்மேலும் கொடுக்கும் நெறியாம். 477

8 வருவாய் அளவாக இருப்பினும் கேடில்லை; செலவு மட்டும் விரிதல் கூடாது. 478

9 பொருள் நிலை அறிந்து வாழாதவன் வாழ்க்கை இருப்பதுபோல் ஒன்றும் இராது. 479

10 உள்ள நிலை பாராது கர் நன்மை செய்தாலும் செல்வநிலை விரைவில் சீரழியும். 480

# வலி அறிதல்



1 வினை வலியும், தன் வலியும், மாற்றான் வலியும், 471
துணை வலியும், தூக்கிச் செயல்.

2 ஒல்வது அறிவது அறிந்து, அதன்கண் தங்கிச் 472
செல்வார்க்குச் செல்லாதது இல்.

3 உடைத் தம் வலி அறியார், ஊக்கத்தின் ஊக்கி, 473
இடைக்கண் முரிந்தார் பலர்.

4 அமைந்து ஆங்கு ஒழுகான், அளவு அறியான், தன்னை 474
வியந்தான், விரைந்து கெடும்.

5 பீலி பெய் சாகாடும் அச்சு இறும்-அப் பண்டம் 475
சால மிகுத்துப் பெயின்.

6 நுனிக் கொம்பர் ஏறினார் அஃது இறந்து ஊக்கின் 476
உயிர்க்கு இறுதி ஆகிவிடும்.

7 ஆற்றின் அளவு அறிந்து ஈக; அது பொருள் 477
போற்றி வழங்கும் நெறி.

8 ஆகு ஆறு அளவு இட்டிது ஆயினும், கேடு இல்லை- 478
போகு ஆறு அகலாக்கடை.

9 அளவு அறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல 479
இல்லாகி, தோன்றாக் கெடும்.

10 உள வரை தூக்காத ஒப்புரவு ஆண்மை, 480
வள வரை வல்லைக் கெடும்.

# காலம் அறிதல்

## தெளிவுரை

1 காக்கை கோட்டானைப் பகலில் வென்றுவிடும்;
வேந்தர் வெல்லும் காலம் பார்க்க வேண்டும். 481

2 காலம் பார்த்து ஏற்ப நடப்பது நிலையாகச்
செல்வத்தைக் கட்டும் கயிறாகும். 482

3 ஆற்றலோடு காலமும் அறிந்து செய்யின்
செய்தற்கு அரியதென ஏதும் உண்டோ? 483

4 காலமும் இடமும் கணித்துச் செய்யின்
உலகமே வேண்டினும் கிடைக்கும். 484

5 ஞாலம் முழுதும் ஆளக் கருதுபவர்
காலம் பார்த்துக் கலங்காது இருப்பர். 485

6 ஊக்கம் உடையவன் ஒடுங்கி இருப்பது
சண்டைக்கடா பின்வாங்கும் குறிப்பாகும். 486

7 அறிவுடையார் வெளிப்படக் கொதிப்படையார்;
காலம் பார்த்து உட்கொதிப்பு அடைவர். 487

8 பகைவரைக் காணும்போது பணிக;
காலம் வந்தபோது அவர் கவிழ்வர். 488

9 கிடைத்தற்கு அரியது கிடைத்தால் உடனே
செய்தற்கு அரியதைச் செய்து கொள்க. 489

10 ஒடுங்கிய காலத்துக் கொக்குப் போல்க;
சிறந்த காலத்து அதன் குத்துப் போல்க. 490

# காலம் அறிதல்

1 பகல் வெல்லும், கூகையைக் காக்கை;- இகல் வெல்லும் 481
வேந்தர்க்கு வேண்டும், பொழுது.

2 பருவத்தொடு ஒட்ட ஒழுகல்-திருவினைத் 482
தீராமை ஆர்க்கும் கயிறு.

3 அரு வினை என்ப உளவோ-கருவியான் 483
காலம் அறிந்து செயின்.

4 ஞாலம் கருதினும், கைகூடும்-காலம் 484
கருதி, இடத்தான் செயின்.

5 காலம் கருதி இருப்பர்-கலங்காது 485
ஞாலம் கருதுபவர்.

6 ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொரு தகர் 486
தாக்கற்குப் பேரும் தகைத்து.

7 பொள்ளென ஆங்கே புறம் வேரார்; காலம் பார்த்து, 487
உள் வேர்ப்பர், ஒள்ளியவர்.

8 செறுநரைக் காணின் சுமக்க; இறுவரை 488
காணின் கிழக்காம் தலை.

9 எய்தற்கு அரியது இயைந்தக்கால், அந் நிலையே 489
செய்தற்கு அரிய செயல்.

10 கொக்கு ஒக்க, கூம்பும் பருவத்து; மற்று அதன் 490
குத்து ஒக்க, சீர்த்த இடத்து.

# இடன் அறிதல்

## தெளிவுரை

1 முழுதும் வாய்ப்பான இடம் பெறும் வரை
எச்செயலையும் தொடங்காதே புறக்கணியாதே. 491

2 வேறுபட்ட ஆற்றல் உடைய அரசர்க்கும்
அரண்துணை பல நன்மை அளிக்கும். 492

3 இடம் பார்த்து விழிப்போடு பகைவரிடம் நடப்பின்
வலியிலாரும் வலி பெற்றுப் போரிடுவர். 493

4 இடம் பார்த்துப் பிடியை விடாது செய்யின்
பகைவர் தம் சூழ்ச்சியைக் கைவிடுவர். 494

5 தண்ணீரில் முதலை எதனையும் வெல்லும்;
தரையில் முதலையை எதுவும் வெல்லும். 495

6 நல்ல பெரியவண்டியும் கடலில் ஓடாது.
நீரோடும் கப்பலும் நிலத்தில் ஓடாது. 496

7 முழுதும் எண்ணி இடமறிந்து செய்யின்
துணிச்சல் தவிரப் பிறதுணை வேண்டாம். 497

8 படை குறைந்தவனுக்கு ஏற்ற இடம் சென்றால்
படை நிறைந்தவன் உள்ளம் சோர்வடைவான். 498

9 நல்லரணும் சிறப்பும் இல்லை யெனினும்
எதிரியை வாழுமிடத்தில் தாக்க இயலாது. 499

10 வேல்வீரர்களைக் குத்தி எடுத்த யானையையும்
சேற்று நிலத்தில் நரி கொன்று விடும். 500

# இடன் அறிதல்

1 தொடங்கற்க எவ் வினையும்; எள்ளற்க-முற்றும் 491
இடம் கண்டபின் அல்லது!.

2 முரண் சேர்ந்த மொய்ம்பினவர்க்கும் அரண் சேர்ந்து ஆம் 492
ஆக்கம் பலவும் தரும்.

3 ஆற்றாரும் ஆற்றி அடுப-இடன் அறிந்து 493
போற்றார்கண் போற்றிச் செயின்.

4 எண்ணியார் எண்ணம் இழப்பர்-இடன் அறிந்து 494
துன்னியார் துன்னிச் செயின்.

5 நெடும் புனலுள் வெல்லும் முதலை; அடும், புனலின் 495
நீங்கின், அதனைப் பிற.

6 கடல் ஓடா, கால் வல் நெடுந் தேர்; கடல் ஓடும் 496
நாவாயும் ஓடா, நிலத்து.

7 அஞ்சாமை அல்லால், துணை வேண்டா-எஞ்சாமை 497
எண்ணி இடத்தான் செயின்.

8 சிறு படையான் செல் இடம் சேரின், உறு படையான் 498
ஊக்கம் அழிந்து விடும்.

9 சிறை நலனும் சீரும் இலர் எனினும், மாந்தர் 499
உறை நிலத்தொடு ஒட்டல் அரிது.

10 கால் ஆழ் களரில் நரி அடும், கண் அஞ்சா 500
வேல் ஆள் முகத்த களிறு.

# தெரிந்து தெளிதல்



## தெளிவுரை

1 அறம்பொருள் இன்பம் உயிர்க்கு அஞ்சுதல் 501
இவ்வகையால் ஒருவனை ஆராய்ந்து தெளிக.

2 நற்குடியிற் பிறந்து குற்றம் இல்லாமல் 502
பழிக்கு நாணுபவனே நம்பத் தக்கவன்.

3 சிறந்தவை கற்றுத் தெளிந்தவர் இடத்தும் 503
பார்த்தால் ஓரளவு அறியாமை இருக்கும்.

4 ஒருவர் குணங்களையும் குற்றங்களையும் பார்த்து 504
அவற்றுள் மிகுதியைக் கொண்டு தெளிக.

5 இவர் பெரியவர் இவர் சிறியவர் என்று அறிய 505
அவரவர் செயலே உரைகல்லாகும்.

6 மிக வறியவரை நம்பாதே; ஏன்? அவர் 506
எப்பிடிப்பும் இல்லார் பழிக்கும் அஞ்சார்.

7 அன்பு காரணமாக அறிவிலாதவரை நம்புதல் 507
எல்லா மடமையும் தரும்.

8 ஆராயாது எவனோ ஒருவனை நம்பினால் 508
வழிவழித் தீராத துன்பம் வரும்.

9 ஆராயாது யாரையும் எளிதில் நம்பாதே; 509
ஆய்ந்த பின்னும் நம்பும் பொருளை நம்புக.

10 ஆராயாது நம்புதலும் பெருந்துன்பமே; 510
நம்பியவனை ஐயப்படுத்தலும் பெருந்துன்பமே.

# தெரிந்து தெளிதல்

1 அறம், பொருள், இன்பம், உயிர் அச்சம், நான்கின் 501
திறம் தெரிந்து தேறப்படும்.

2 குடிப் பிறந்து, குற்றத்தின் நீங்கி, வடுப் பரியும் 502
நாண் உடையான்கட்டே தெளிவு.

3 அரிய கற்று, ஆசு அற்றார்கண்ணும், தெரியுங்கால் 503
இன்மை அரிதே, வெளிறு.

4 குணம் நாடி, குற்றமும் நாடி, அவற்றுள் 504
மிகை நாடி, மிக்க கொளல்!.

5 பெருமைக்கும், ஏனைச் சிறுமைக்கும், தத்தம் 505
கருமமே கட்டளைக் கல்.

6 அற்றாரைத் தேறுதல் ஓம்புக; மற்று அவர் 506
பற்று இலர்; நாணார் பழி.

7 காதன்மை கந்தா, அறிவு அறியார்த் தேறுதல் 507
பேதைமை எல்லாம் தரும்.

8 தேரான், பிறனைத் தெளிந்தான் வழிமுறை 508
தீரா இடும்பை தரும்.

9 தேறற்க யாரையும், தேராது; தேர்ந்த பின், 509
தேறுக, தேறும் பொருள்.

10 தேரான் தெளிவும், தெளிந்தான்கண் ஐயுறவும், 510
தீரா இடும்பை தரும்.

# தெரிந்து வினையாடல்

## தெளிவுரை

1 ஒரு செயலின் நன்மையும் தீமையும் பார்த்து
நலஞ்செய்வானை வேலைக்குக் கொள்க. 511

2 வருவாய் பெருக்கி வளஞ் செய்து மேலும்
ஆராய்பவனே காரியம் செய்யத் தக்கவன். 512

3 அன்பு அறிவு தெளிவு ஆசையின்மை
நான்கும் உடையவனே நம்பத் தக்கவன். 513

4 எவ்வாறு தெளிந்தாலும் காரியத்தின்போது
வேறாக நடப்பவரே மிகப் பலர். 514

5 ஒருவினையை அறிந்து முடிப்பவனிடமே ஏவுக;
பெயர்பெற்றவன் என்பதற்காக ஏவற்க. 515

6 செய்பவன் தன்மையையும் செய்யும் செயலையும்
ஏற்றக் காலத்தையும் உணர்ந்து செய்க. 516

7 இச்செயலை இம்முறையால் இவன் முடிப்பான்
என்று தெளிந்து வினையை ஒப்படைக்க. 517

8 வினைக்குத் தக்கவன் என்று தெளிந்தபின்பு
அவனை முழுப் பொறுப்பு உடையவன் ஆக்குக. 518

9 காரியத்தில் கருத்தாக இருப்பவன் பண்பைத்
தவறாக நினைத்தால் செல்வம் தவறும். 519

10 அரசன் நாள்தோறும் அலுவலரை ஆராய்க;
அவர் பிசகாவிடின் நாடு பிசகாது. 520

# தெரிந்து வினையாடல்



1 நன்மையும் தீமையும் நாடி, நலம் புரிந்த
தன்மையான் ஆளப்படும். 511

2 வாரி பெருக்கி, வளம் படுத்து, உற்றவை
ஆராய்வான் செய்க வினை!. 512

3 அன்பு, அறிவு, தேற்றம், அவா இன்மை, இந் நான்கும்
நன்கு உடையான்கட்டே தெளிவு. 513

4 எனை வகையான் தேறியக்கண்ணும், வினை வகையான்
வேறாகும் மாந்தர் பலர். 514

5 அறிந்து, ஆற்றி, செய்கிற்பாற்கு அல்லால், வினைதான்
சிறந்தான் என்று ஏவற்பாற்று அன்று. 515

6 செய்வானை நாடி, வினை நாடி, காலத்தோடு
எய்த உணர்ந்து, செயல்!. 516

7 'இதனை, இதனால், இவன் முடிக்கும்' என்று ஆய்ந்து,
அதனை அவன்கண் விடல்!. 517

8 வினைக்கு உரிமை நாடிய பின்றை, அவனை
அதற்கு உரியன் ஆகச் செயல். 518

9 வினைக்கண் வினையுடையான் கேண்மை வேறாக
நினைப்பானை நீங்கும், திரு. 519

10 நாள்தோறும் நாடுக, மன்னன்-வினைசெய்வான்
கோடாமைக் கோடாது உலகு. 520

# சுற்றம் தழால்



## தெளிவுரை

1 பற்றில்லாத போதும் பழைய உறவைப்
போற்றுதல் சுற்றத்தாரிடமே உண்டு. 521

2 அன்பு குறையாத சுற்றம் இருப்பின்
வளர்ச்சி குறையாத முன்னேற்றம் வரும். 522

3 கலந்து பழகாதவன் வாழ்க்கை பெருகாது;
குளம் கரையின்றி நீர் நிரம்புமா? 523

4 சுற்றத்தார் சுற்றி இருக்குமாறு உதவுவதே
செல்வம் பெற்றால் பெற வேண்டும் பயன். 524

5 கொடுத்தல் இன்சொல் இரண்டும் இருந்தால்
சுற்றப்படை சூழ்ந்து விடும். 525

6 கொடுப்பான் கடுகடுக்க மாட்டான் என்றால்
அவன்போல் சுற்றமுடையார் உலகத்தில்லை. 526

7 காக்கை தன் சுற்றத்தை அழைத்து உண்ணும்;
அப்பண்பினர்க்கே முன்னேற்றம் உண்டு. 527

8 அரசன் பொதுமையின்றிச் சிறப்பாக நோக்கின்
அதனால் வாழும் சுற்றத்தார் பலர். 528

9 கிளையாகிப் பிரிந்தவரும் அவர் உறவினரும்
வெறுப்பு நீங்கியபின் விரும்பி வந்து கூடுவர். 529

10 இருந்து பிரிந்து ஒரு நோக்கத்தோடு வந்தவனை
அரசன் பொறுத்துப்பார்த்து ஏற்றுக் கொள்க. 530

# சுற்றம் தழால்

1 பற்று அற்றகண்ணும் பழமை பாராட்டுதல்
சுற்றத்தார்கண்ணே உள. 521

2 விருப்பு அறாச் சுற்றம் இயையின், அறுப்பு அறா
ஆக்கம் பலவும் தரும். 522

3 அளவளாவு இல்லாதான் வாழ்க்கை-குளவளாக்
கோடு இன்றி நீர் நிறைந்தற்று. 523

4 சுற்றத்தால் சுற்றப்பட ஒழுகல், செல்வம்தான்
பெற்றத்தால் பெற்ற பயன். 524

5 கொடுத்தலும் இன் சொலும் ஆற்றின், அடுக்கிய
சுற்றத்தால் சுற்றப்படும். 525

6 பெருங் கொடையான், பேணான் வெகுளி, அவனின்
மருங்கு உடையார் மா நிலத்து இல். 526

7 காக்கை கரவா கரைந்து உண்ணும்; ஆக்கமும்
அன்ன நீரார்க்கே உள. 527

8 பொது நோக்கான், வேந்தன் வரிசையா நோக்கின்,
அது நோக்கி வாழ்வார் பலர். 528

9 தமர் ஆகி, தன்-துறந்தார் சுற்றம் அமராமைக்
காரணம் இன்றி வரும். 529

10 உழைப் பிரிந்து காரணத்தின் வந்தானை, வேந்தன்
இழைத்து இருந்து, எண்ணிக் கொளல். 530

# பொச்சாவாமை



## தெளிவுரை

1 பெரிய மகிழ்ச்சிக்கிடையே காரியத்தை மறத்தல் 531
மிகுந்த சினத்தைக் காட்டிலும் தீது.

2 நாளும் வறுமை அறிவை அழிக்கும்; 532
நாளும் மறதி புகழை அழிக்கும்.

3 மறதி உடையார்க்குப் புகழ்வாழ்வு இல்லை; 533
இது எல்லா ஆசிரியர்க்கும் முடிந்த முடிவு.

4 மறதிவாய்ப் பட்டார்க்கு எந்நலமும் இல்லை; 534
அஞ்சிக் கிடப்பார்க்கு அரண் உண்டோ?

5 நினைவோடு முன்னே தடுக்காது மறந்தவன் 535
தன் பிழைக்குப் பின்னே வருந்தி இரங்குவான்.

6 மறவாத தன்மையைத் தவறாது பெற்றால் 536
அது போன்ற ஆற்றல் வேறில்லை.

7 மறவாத கருவி கொண்டு விழிப்போடு செய்தால் 537
முடியாத காரியம் என்பது யாதும் இல்லை.

8 புகழ்தரும் வினைகளை மதித்துச் செய்க; 538
செய்யாது விட்டவர்க்கு என்றும் வாழ்வில்லை.

9 நீ மகிழ்ச்சியிலே திளைத்திருக்கும்போது 539
அங்ஙனம் இருந்து கெட்டாரை எண்ணிப்பார்.

10 எண்ணியதை மறவாதே எண்ண முடிந்தால் 540
எண்ணியதை எளிதில் எய்திவிடலாம்.

# பொச்சாவாமை

1 இறந்த வெகுளியின் தீதே-சிறந்த
உவகை மகிழ்ச்சியின் சோர்வு. 531

2 பொச்சாப்புக் கொல்லும் புகழை-அறிவினை
நிச்சம் நிரப்புக் கொன்றாங்கு. 532

3 பொச்சாப்பார்க்கு இல்லை புகழ்மை; அது உலகத்து
எப் பால் நூலோர்க்கும் துணிவு. 533

4 அச்சம் உடையார்க்கு அரண் இல்லை; ஆங்கு இல்லை,
பொச்சாப்பு உடையார்க்கு நன்கு. 534

5 முன்னுறக் காவாது இழுக்கியான், தன் பிழை,
பின் ஊறு, இரங்கிவிடும். 535

6 இழுக்காமை யார்மாட்டும், என்றும், வழுக்காமை
வாயின், அஃது ஒப்பது இல். 536

7 அரிய என்று ஆகாத இல்லை-பொச்சாவாக்
கருவியான் போற்றிச் செயின். 537

8 புகழ்ந்தவை போற்றிச் செயல் வேண்டும்; செய்யாது
இகழ்ந்தார்க்கு எழுமையும் இல். 538

9 இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக-தாம் தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து!. 539

10 உள்ளியது எய்தல் எளிதுமன்-மற்றும் தான்
உள்ளியது உள்ளப்பெறின். 540

# செங்கோன்மை



## தெளிவுரை

1 கேட்டு ஒருபக்கம் சாயாது தண்டித்து
யாரையும் ஆராய்ந்து செய்வதே நீதி. 541

2 உயிரெல்லாம் மழையை எதிர்பார்த்து வாழும்;
குடியெல்லாம் நல்லாட்சியை நோக்கி வாழும். 542

3 அருளாளர்தம் நூலுக்கும் அறத்துக்கும்
அடிப்படை அரசனது ஆட்சியே. 543

4 குடிகளை அணைத்து ஆளும் பெருவேந்தனது
அடிகளைப் பற்றி உலகம் நிற்கும். 544

5 முறையாக அரசாளும் மன்னவன் நாட்டில் மழையும்
விளைச்சலும் இரண்டும் இருக்கும். 545

6 அரசனுக்கு வெற்றி தருவது வேலில்லை;
அவனது நேரான செங்கோல் ஆட்சியே. 546

7 நாட்டை யெல்லாம் அரசன் காப்பான்;
குறையற்ற நீதி அவனைக் காக்கும். 547

8 இரக்கமாகப் பார்த்து முறைவழங்கா அரசன்
தன் குற்றத்தால் தானே கெடுவான். 548

9 நற்குடியைக் காத்துத் தீயகுடியைத் தண்டித்தல்
பழியில்லை; வேந்தனது கடமை. 549

10 கொடியவர்க்கு அரசு கொலைத்தண்டனை செய்தல்
பயிர்வளரக் களை பறிப்பது போலும். 550

# செங்கோன்மை



1 ஓர்ந்து, கண்ணோடாது, இறை புரிந்து, யார்மாட்டும் 541
தேர்ந்து, செய்வஃதே முறை.

2 வான் நோக்கி வாழும் உலகு எல்லாம்;-மன்னவன் 542
கோல் நோக்கி வாழும் குடி.

3 அந்தணர் நூற்கும், அறத்திற்கும், ஆதியாய் 543
நின்றது-மன்னவன் கோல்.

4 குடி தழீஇக் கோல் ஓச்சும் மா நில மன்னன் 544
அடி தழீஇ நிற்கும், உலகு.

5 இயல்புளிக் கோல் ஓச்சும் மன்னவன் நாட்ட- 545
பெயலும் விளையுளும் தொக்கு.

6 வேல் அன்று, வென்றி தருவது; மன்னவன் 546
கோல்; அதூஉம், கோடாது எனின்.

7 இறை காக்கும், வையகம் எல்லாம்; அவனை 547
முறை காக்கும், முட்டாச் செயின்.

8 எண் பதத்தான் ஓரா, முறை செய்யா, மன்னவன் 548
தண் பதத்தான் தானே கெடும்.

9 குடி புறங்காத்து, ஓம்பி, குற்றம் கடிதல் 549
வடு அன்று; வேந்தன் தொழில்.

10 கொலையில், கொடியாரை, வேந்து ஒறுத்தல் பைங்கூழ் 550
களை கட்டதனொடு நேர்.

# கொடுங்கோன்மை



## தெளிவுரை

| | | |
|---|---|---|
| 1 | குடிகளை வருத்தித் தீமை புரியும் வேந்தன்<br>கொலையாளியினும் கொடியவன். | 551 |
| 2 | கோலுடைய அரசன் குடிகளிடம் பொருள் கேட்டல்<br>வேலுடைய திருடன் கெஞ்சுவதை ஒக்கும். | 552 |
| 3 | நாள்தோறும் ஆராய்ந்து ஆளாத அரசனது<br>நாடு நாளும் கெட்டுக்கொண்டே போகும். | 553 |
| 4 | நீதிதவறி ஆராயாது செய்யும் அரசன்<br>பொருளும் குடியும் ஒரு சேர இழப்பான். | 554 |
| 5 | கொடுமை தாங்காது குடிகள் அழுத கண்ணீர்<br>அரசை அடியோடு அழிக்கும் படையாகும். | 555 |
| 6 | மன்னனுக்கு நிலை நல்லாட்சியால் உண்டாகும்;<br>அது இன்றேல் அவன் அதிகாரம் நிலையாது. | 556 |
| 7 | மழையின்றேல் உலகம் என்னாகும்?<br>அரசனது அன்பின்றேல் குடிகள் வாழுமா? | 557 |
| 8 | நீதியில்லா மன்னனது ஆட்சிக்கு உட்படின்<br>பொருளின்மையினும் உடைமை கேடுதரும். | 558 |
| 9 | மன்னவன் நீதிமுறையோடு ஆளாவிட்டால்<br>மழை பருவமுறையோடு பெய்யாது போம். | 559 |
| 10 | காத்தற்கு உரிய அரசன் காவாவிடின்<br>பசு பயன்தாராது; எத்தொழில்களும் இரா. | 560 |

# கொடுங்கோன்மை



1 கொலை மேற்கொண்டாரின் கொடிதே-அலை மேற்கொண்டு 551
அல்லவை செய்து ஒழுகும் வேந்து.

2 வேலொடு நின்றான், 'இடு' என்றது போலும்- 552
கோலொடு நின்றான் இரவு.

3 நாள்தொறும் நாடி, முறைசெய்யா மன்னவன் 553
நாள்தொறும் நாடு கெடும்.

4 கூழும் குடியும் ஒருங்கு இழக்கும்-கோல் கோடி, 554
சூழாது, செய்யும் அரசு.

5 அல்லற்பட்டு, ஆற்றாது, அழுத கண்ணீர் அன்றே- 555
செல்வத்தைத் தேய்க்கும் படை.

6 மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை; அஃது இன்றேல், 556
மன்னாவாம், மன்னர்க்கு ஒளி.

7 துளி இன்மை ஞாலத்திற்கு எற்று? அற்றே, வேந்தன் 557
அளி இன்மை வாழும் உயிர்க்கு.

8 இன்மையின் இன்னாது, உடைமை-முறை செய்யா 558
மன்னவன் கோற்கீழ்ப் படின்.

9 முறை கோடி மன்னவன் செய்யின், உறை கோடி 559
ஒல்லாது, வானம் பெயல்.

10 ஆ பயன் குன்றும்; அறுதொழிலோர் நூல் மறப்பர்;- 560
காவலன் காவான் எனின்.

# வெருவந்த செய்யாமை



## தெளிவுரை

1 தக்கபடி ஆய்ந்து மேலும் குற்றம் செய்யாவாறு
பொருந்தத் தண்டிப்பவனே வேந்தன். 561

2 நெடுநாள் ஆக்கம் நிலைக்க விரும்புபவர்
வன்மையாக ஓங்கி மெல்ல அடிப்பாராக. 562

3 குடிகளை மிரட்டும் கொடிய வேந்தன்
கட்டாயம் விரைந்து அழிவான். 563

4 அரசன் கடுமையன் என்று குடிகள் கூறின்
இடஞ்சுருங்கி விரைந்து அழிவான். 564

5 பார்க்க அருமையும் முகங்காடுமையும் உடையவன்
பெருஞ்செல்வம் பேய்காத்தது போலும். 565

6 கண்ணிலும் சொல்லிலும் கடுமையன் ஆயின்
அவன் நெடுஞ்செல்வம் நாளாகாமல் கெடும். 566

7 கடுஞ்சொல்லும் அளவுகடந்த தண்டனையும்
அரசனது படைவலியை அறுக்கும் அரம். 567

8 அரசன் அமைச்சரைக் கலந்து செய்யாது
சினங்கொண்டு செய்யின் செல்வம் சுருங்கும். 568

9 போர்க்காலத்துத் தீயகுடியைச் சிறையிடாத
அரசன் கலங்கி வெதும்பி அழிவான். 569

10 கடும் ஆட்சி அரசியல் கல்லாதவரையே கவரும்;
நாட்டுக்குப் பாரம் அவ்வாட்சியே, பிறிதில்லை. 570

# வெருவந்த செய்யாமை

1 தக்காங்கு நாடி, தலைச்செல்லா வண்ணத்தால் 561
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து.

2 கடிது ஓச்சி, மெல்ல எறிக-நெடிது ஆக்கம் 562
நீங்காமை வேண்டுபவர்.

3 வெருவந்த செய்து ஒழுகும் வெங்கோலன் ஆயின், 563
ஒருவந்தம் ஒல்லைக் கெடும்.

4 'இறை கடியன்' என்று உரைக்கும் இன்னாச் சொல் வேந்தன் 564
உறை கடுகி ஒல்லைக் கெடும்.

5 அருஞ் செவ்வி, இன்னா முகத்தான் பெருஞ் செல்வம் 565
பேஎய் கண்டன்னது உடைத்து.

6 கடுஞ் சொல்லன், கண் இலன் ஆயின், நெடுஞ் செல்வம் 566
நீடு இன்றி, ஆங்கே கெடும்.

7 கடு மொழியும், கையிகந்த தண்டமும், வேந்தன் 567
அடு முரண் தேய்க்கும் அரம்.

8 இனத்து ஆற்றி, எண்ணாத வேந்தன் சினத்து ஆற்றிச் 568
சீறின், சிறுகும் திரு.

9 செரு வந்த போழ்தில், சிறை செய்யா வேந்தன், 569
வெருவந்து, வெய்து கெடும்.

10 கல்லார்ப் பிணிக்கும், கடுங்கோல்; அது அல்லது 570
இல்லை, நிலக்குப் பொறை.

## தெளிவுரை

1 இரக்கம் என்னும் அழகிய பெரும்பண்பு
இருத்தலால் இவ்வுலகம் இருக்கின்றது. 571

2 உலகியல் என்பது இரக்கப்பண்பில் உள்ளது;
இரக்கமில்லார் இருப்பது பூமிக்குப் பாரம். 572

3 பாட்டுக்குப் பொருந்தாத இசையாற் பயனென்?
இரக்கம் காட்டாத கண்ணால் என்ன பயன்? 573

4 வேண்டும் அளவு இரக்கம் ஓடாத கண்
முகத்தில் இருப்பதுபோல் காட்டுவது எதற்கு? 574

5 கண்ணிற்கு நகையாவது இரக்க உணர்வே;
இரக்கமிலாக் கண்ணைப் புண்ணென்று கொள்க. 575

6 கண்ணோடிருந்தும் இரக்கம் இல்லாதவர்
மண்ணோ டிருந்தும் வளராத மரம் போல்வர். 576

7 இரக்கம் இல்லாதவர் கண்ணில்லாதவர்
கண்ணுடையவர் இரக்கம் உடையவர். 577

8 காரியம் கெடாமல் இரக்கம் காட்டுவார்க்கு
வயப்பட்டது இவ்வுலகம். 578

9 தண்டிக்கும் ஆற்றல் இருப்பினும் மனமிரங்கிப்
பொறுத்துக் கொள்ளும் பண்பே சிறந்தது. 579

10 யாவரும் விரும்பும் நாகரிகம் உடையவர்
நேரே நஞ்சிடினும் உண்டு அடங்குவர். 580

# கண்ணோட்டம்

1 கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையான், உண்டு இவ் உலகு. 571

2 கண்ணோட்டத்து உள்ளது உலகியல்; அஃது இலார்
உண்மை நிலக்குப் பொறை. 572

3 பண் என் ஆம், பாடற்கு இயைபு இன்றேல்?-கண் என் ஆம்,
கண்ணோட்டம் இல்லாத கண்?. 573

4 உளபோல் முகத்து எவன் செய்யும்-அளவினால்
கண்ணோட்டம் இல்லாத கண். 574

5 கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம்; அஃது இன்றேல்,
புண் என்று உணரப்படும். 575

6 மண்ணொடு இயைந்த மரத்து அனையர்-கண்ணொடு
இயைந்து, கண்ணோடாதவர். 576

7 கண்ணோட்டம் இல்லவர் கண் இலர்; கண் உடையார்
கண்ணோட்டம் இன்மையும் இல். 577

8 கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்து, இவ் உலகு. 578

9 ஒறுத்தாற்றும் பண்பினார்கண்ணும், கண்ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை. 579

10 பெயக் கண்டும், நஞ்சு உண்டு அமைவர்-நயத்தக்க
நாகரிகம் வேண்டுபவர். 580

# ஒற்று ஆடல்



## தெளிவுரை

1 உளவும் புகழ்பெற்ற நீதிநூலும் இரண்டும்
மன்னவனுக்குக் கண்கள் என்று தெளிக. 581

2 யாரிடத்தும் எதனையும் என்றும் உளவால் விரைந்து அறிதல்
வேந்தன் கடமை. 582

3 உளவால் செய்தி அறிந்து கொள்ளாத அரசன்
கொள்ளும் வெற்றி எதுவும் இல்லை. 583

4 வினையார் சுற்றத்தார் பகைவர் என்ற
எத்திறத்தாரையும் ஆராய்வது உளவு. 584

5 ஐயப்படாத வடிவோடு அஞ்சாது பார்த்து
எவ்விடத்தும் வெளியிடாதவனே ஒற்றன். 585

6 துறவு வேடங்கொண்டு எவ்விடமும் புகுந்து
என்ன நேரினும் வாய்விடாதவனே ஒற்றன். 586

7 மறைவான செய்திகளை ஒட்டுக் கேட்டு
அறிந்தவற்றில் தெளிவுடையவனே ஒற்றன். 587

8 ஓர் உளவாளி கொண்டுவந்த செய்தியையும்
பின்னும் ஓர் உளவாளியால் தெளிக. 588

9 உளவாளிகளைத் தம்முள் தெரியாவாறு ஆள்க;
மூவர்க்கும் ஒத்த செய்தி நம்பத்தகும். 589

10 பலரறிய ஒற்றனுக்குச் சிறப்புச் செய்யாதே;
செய்யின் மறைவு வெளிப்படுத்தியதாகும். 590

# ஒற்று ஆடல்

1 ஒற்றும், உரை சான்ற நூலும், இவை இரண்டும்
தெற்றென்க, மன்னவன் கண். 581

2 எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்லறிதல், வேந்தன் தொழில். 582

3 ஒற்றினான் ஒற்றி, பொருள் தெரியா மன்னவன்
கொற்றம் கொளக் கிடந்தது இல். 583

4 வினைசெய்வார், தம் சுற்றம், வேண்டாதார், என்று ஆங்கு
அனைவரையும் ஆராய்வது-ஒற்று. 584

5 கடாஅ உருவொடு கண் அஞ்சாது, யாண்டும்
உகா அமை வல்லதே-ஒற்று. 585

6 துறந்தார் படிவத்தர் ஆகி இறந்து, ஆராய்ந்து,
என் செயினும் சோர்வு இலது-ஒற்று. 586

7 மறைந்தவை கேட்க வற்று ஆகி, அறிந்தவை
ஐயப்பாடு இல்லதே-ஒற்று. 587

8 ஒற்று ஒற்றித் தந்த பொருளையும், மற்றும் ஓர்
ஒற்றினால் ஒற்றி, கொளல். 588

9 ஒற்று ஒற்று உணராமை ஆள்க; உடன் மூவர்
சொல் தொக்க தேறப்படும். 589

10 சிறப்பு அறிய ஒற்றின்கண் செய்யற்க; செய்யின்,
புறப்படுத்தான் ஆகும், மறை. 590

# ஊக்கம் உடைமை

## தெளிவுரை

1 ஊக்கமே சொத்தாகும்; அது இல்லாதவர் 591
பிற இருப்பினும் சொத்துடையர் ஆகார்.

2 ஊக்கச் சொத்தே சொத்து; பொருட்சொத்து 592
நில்லாது போய்விடும்.

3 ஊக்கத்தைத் திண்ணமாகக் கையில் கொண்டவர் 593
செல்வம் போயிற்றென்று வருந்தார்.

4 சோர்வில்லா ஊக்கம் உடையவனது 594
வீட்டுவழி கேட்டுச் செல்வம் சேரும்.

5 மலரின் நீளம் நீரின் அளவு; மாந்தர்தம் 595
வாழ்வின் உயர்ச்சி ஊக்கத்தின் அளவு.

6 நினைப்பதெல்லாம் உயர்வையே நினைக்க; 596
உயர்வு வராவிடினும் அந்நினைவை விடாதே.

7 உறுதியாளர் அழிவிலும் ஊக்கம் தளரார்; 597
அம்புகள் தைத்தாலும் யானை வலிபொறுக்கும்.

8 உலகத்தில் பெருஞ்செல்வன் என்னும் சிறப்பை 598
ஊக்கம் இல்லாதவர் அடையார்.

9 பருமனும் கூரிய கொம்பும் இருந்தும் 599
புலி தாக்கினால் யானையும் அஞ்சுமே.

10 ஊக்க மிகுதியே வலிமை; அது இல்லாதவர் 600
நிலையால் மரம்: வடிவால் மானிடர்.

1 உடையர் எனப்படுவது ஊக்கம்; அஃது இல்லார் 591
உடையது உடையரோ, மற்று?.

2 உள்ளம் உடைமை உடைமை; பொருள் உடைமை 592
நில்லாது நீங்கிவிடும்.

3 'ஆக்கம் இழந்தேம்!' என்று அல்லாவார்-ஊக்கம் 593
ஒருவந்தம் கைத்து உடையார்.

4 ஆக்கம் அதர் வினாய்ச் செல்லும்-அசைவு இலா 594
ஊக்கம் உடையானுழை.

5 வெள்ளத்து அனைய, மலர் நீட்டம்;-மாந்தர்தம் 595
உள்ளத்து அனையது, உயர்வு.

6 உள்ளுவது எல்லாம் உயர்வு உள்ளல்! மற்று அது 596
தள்ளினும், தள்ளாமை நீர்த்து.

7 சிதைவிடத்து ஒல்கார், உரவோர்;-புதை அம்பின் 597
பட்டுப் பாடு ஊன்றும் களிறு.

8 உள்ளம் இலாதவர் எய்தார்-'உலகத்து 598
வள்ளியம்' என்னும் செருக்கு.

9 பரியது கூர்ங் கோட்டது ஆயினும், யானை 599
வெரூஉம், புலி தாக்குறின்.

10 உரம் ஒருவற்கு உள்ள வெறுக்கை; அஃது இல்லார் 600
மரம்; மக்கள் ஆதலே வேறு.

# மடி இன்மை

## தெளிவுரை

1 குடும்பம் என்னும் அணையாத விளக்கு 601
சோம்பல் என்னும் இருளால் அணைந்துவிடும்.

2 குடும்பம் சிறந்த குடும்பமாக விரும்புபவர் 602
சோம்பலை அழித்து முயற்சியாக நடக்க.

3 சோம்பலை மடியிற் கொண்டிருக்கும் மடவன் 603
பிறந்தகுடி அவனுக்கு முன் விரைந்தழியும்.

4 சோம்பலிற் பட்டுச் சுறுசுறுப்பு இல்லாதவர்க்குக் 604
குடும்பமும் அழியும், குற்றமும் பெருகும்.

5 காலத்தாழ்வு மறதி சோம்பல் உறக்கம் 605
இவை கெடுவார் ஆசைப்படும் நகைகள்.

6 நாடு ஆள்பவரின் நல்லுறவு இருப்பினும் 606
சோம்பேறி பெரும்பயன் அடையான்.

7 சோம்பலில் ஆழ்ந்து நல்லுழைப்பை விட்டவர் 607
பலரால் இடிபட்டு இகழப்படுவார்.

8 குடும்பத்தில் சோம்பல் குடிபுகுந்து விட்டால் 608
பகைவர்க்கு அடிமையாகி விடுவோம்.

9 குடும்பம் நடத்துகையில் வந்த குறைபாடுகள் 609
சோம்பலை ஒழிக்கவே நீங்கிப்போம்.

10 திருமால் தாண்டிய உலகம் முழுதும் 610
சோம்பல் இல்லா மன்னவன் அடைவான்.

# மடி இன்மை

1 குடி என்னும் குன்றா விளக்கம், மடி என்னும்
மாசு ஊர, மாய்ந்து கெடும். 601

2 மடியை மடியா ஒழுகல்-குடியைக்
குடியாக வேண்டுபவர்!. 602

3 மடி மடிக் கொண்டு ஒழுகும் பேதை பிறந்த
குடி மடியும், தன்னினும் முந்து. 603

4 குடி மடிந்து, குற்றம் பெருகும்-மடி மடிந்து,
மாண்ட உஞற்று இலவர்க்கு. 604

5 நெடு நீர், மறவி, மடி, துயில், நான்கும்
கெடும் நீரார் காமக் கலன். 605

6 படி உடையார் பற்று அமைந்தக்கண்ணும், மடி உடையார்
மாண் பயன் எய்தல் அரிது. 606

7 இடிபுரிந்து, எள்ளும் சொல் கேட்பர்-மடிபுரிந்து
மாண்ட உஞற்று இலவர். 607

8 மடிமை குடிமைக்கண் தங்கின், தன் ஒன்னார்க்கு
அடிமை புகுத்திவிடும். 608

9 குடி, ஆண்மையுள் வந்த குற்றம், ஒருவன்
மடி ஆண்மை மாற்ற, கெடும். 609

10 மடி இலா மன்னவன் எய்தும்-அடி அளந்தான்
தாஅயது எல்லாம் ஒருங்கு. 610

# ஆள்வினை உடைமை

## தெளிவுரை

1 அரிய காரியம் என்று மலைக்க வேண்டாம்;
முயற்சி எல்லாப் பெருமையும் தரும். 611

2 எடுத்த வினையை அரைகுறையின்றிச் செய்க;
கடமையை விட்டாரை உலகம் விட்டு விடும். 612

3 பிறர்க்கு உதவும் பெருமித எண்ணம்
உழைக்கின்ற பெரும்பண்பால் உண்டாகும். 613

4 உழைப்பில்லாதவன் யார்க்கும் உதவ முடியுமா?
பேடி பகைவர்முன் வாள் வீச முடியுமா? 614

5 இன்பம் நாடாது காரிய முடிவை நாடுபவன்
சுற்றத்தின் துன்பம் தாங்கும் தூணாவான். 615

6 உழைப்பு செல்வ நிலையை உண்டாக்கும்;
உழையாமை வறுமையைத் தந்துவிடும். 616

7 சோம்பேறியின் மடியில் இருப்பாள் மூதேவி;
உழைப்பவன் அடியில் இருப்பாள் சீதேவி. 617

8 உடல் ஊனம் யார்க்கும் பழியில்லை;
அறிவை வளர்த்து முயலாமையே பழி. 618

9 தெய்வத்தால் ஒரு செயல் முடியாது போகினும்
முயன்றால் அதற்குரிய கூலி உண்டு. 619

10 சோர்வின்றிக் காலம் தாழ்க்காது உழைப்பவர்
மாறான விதியும் ஓடக் காண்பர். 620

# ஆள்வினை உடைமை



1 அருமை உடைத்து என்று அசாவாமை வேண்டும்;
பெருமை முயற்சி தரும். 611

2 வினைக்கண் வினைகெடல் ஓம்பல்-வினைக் குறை
தீர்ந்தாரின் தீர்ந்தன்று, உலகு!. 612

3 தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே-
வேளாண்மை என்னும் செருக்கு. 613

4 தாளாண்மை இல்லாதான் வேளாண்மை, பேடி கை
வாள் ஆண்மை போல, கெடும். 614

5 இன்பம் விழையான், வினை விழைவான் தன் கேளிர்
துன்பம் துடைத்து ஊன்றும் தூண். 615

6 முயற்சி-திருவினை ஆக்கும்; முயற்று இன்மை
இன்மை புகுத்திவிடும். 616

7 'மடி உளாள், மா முகடி' என்ப; மடி இலான்
தாள் உளாள், தாமரையினாள். 617

8 பொறி இன்மை யார்க்கும் பழி அன்று; அறிவு அறிந்து,
ஆள்வினை இன்மை பழி. 618

9 தெய்வத்தான் ஆகாதுஎனினும், முயற்சி தன்
மெய் வருத்தக் கூலி தரும். 619

10 ஊழையும் உப்பக்கம் காண்பர்-உலைவு இன்றித்
தாழாது உஞற்றுபவர். 620

# இடுக்கண் அழியாமை

## தெளிவுரை

1 துன்பம் வரும்போது கேலி செய்க; அதுவே 621
துன்பத்தைக் கடக்க வழி.

2 வெள்ளம் போன்ற நெருக்கடியும் அறிஞன் 622
ஊக்கத்தினால் நினைக்கவே ஓடிப்போம்.

3 துன்பங் கண்டு துன்பப் படாதவர்
துன்பத்தைத் துன்பப் படுத்துவர். 623

4 கடினப்பாதை செல்லும் காளைபோன்றவனுக்கு 624
வந்த துன்பமன்றோ துன்பப்படும்.

5 அடுக்கடுக்காக வரினும் அசையாதவனுக்கு 625
வந்த துயரமன்றோ துயரப்படும்!

6 செல்வம் வந்தபோது பற்றற்று இருப்பவர் 626
போனபோது துயரப் படுவாரோ?

7 இவ்வுடம்பு நோய்களுக்கு இலக்கு என்று 627
இயல்பறிந்த மேலோர் கலக்கம் கொள்ளார்.

8 இன்பத்தை விரும்பாது இடையூற்றை இயல்பு 628
என்று கருதுபவன் வருத்தம் அடையான்.

9 மகிழ்ச்சியில் மகிழ்ச்சி அடையாதவன் 629
கவலையில் கவலை அடையான்.

10 துன்பத்தை இன்பமாகக் கருதுபவனுக்கு 630
எதிரியின் மதிப்பும் கிடைக்கும்.

# இடுக்கண் அழியாமை

1 இடுக்கண் வருங்கால் நகுக! அதனை
அடுத்து ஊர்வது அஃது ஒப்பது இல். 621

2 வெள்ளத்து அனைய இடும்பை, அறிவு உடையான்
உள்ளத்தின் உள்ள, கெடும். 622

3 இடும்பைக்கு இடும்பை படுப்பர்-இடும்பைக்கு
இடும்பை படாஅதவர். 623

4 மடுத்த வாய் எல்லாம் பகடு அன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து. 624

5 அடுக்கி வரினும், அழிவு இலான் உற்ற
இடுக்கண் இடுக்கண் படும். 625

6 'அற்றேம்!' என்று அல்லற்படுபவோ-'பெற்றேம்!' என்று
ஓம்புதல் தேற்றாதவர். 626

7 'இலக்கம், உடம்பு இடும்பைக்கு' என்று, கலக்கத்தைக்
கையாறாக் கொள்ளாதாம், மேல். 627

8 இன்பம் விழையான், 'இடும்பை இயல்பு' என்பான்,
துன்பம் உறுதல் இலன். 628

9 இன்பத்துள் இன்பம் விழையாதான், துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன். 629

10 இன்னாமை இன்பம் எனக் கொளின், ஆகும், தன்
ஒன்னார் விழையும் சிறப்பு. 630

## தெளிவுரை

| | | |
|---|---|---|
| 1 | கருவி காலம் செய்யுந்தன்மை காரியம்<br>இவற்றில் நன்கு சிறந்தவனே அமைச்சன். | 631 |
| 2 | துணிவு குடிபேணல் கல்வி அறிவு முயற்சி<br>இவ்வைந்திலும் சிறந்தவனே அமைச்சன். | 632 |
| 3 | பகைவரைப் பிரித்தல் நண்பரை அணைத்தல்<br>பிரிந்தவரைக் கூட்டல் வல்லன் அமைச்சன். | 633 |
| 4 | ஆராய்தல் தெளிந்து செய்தல் உறுதியாகச்<br>சொல்லுதல் வல்லவனே அமைச்சன். | 634 |
| 5 | அறமும் அமைந்த சொல்லும் திறமும்<br>உடையவனே தெளிவுக்குத் துணையாவான். | 635 |
| 6 | கூரிய அறிவும் நூலறிவும் உடையவர்க்குத்<br>தீர்க்க முடியாத சிக்கல்கள் உளவோ? | 636 |
| 7 | நூல் சொல்லும் முறைகளை அறிந்திருந்தாலும்<br>உலக நடைமுறைகளை அறிந்து செய்க. | 637 |
| 8 | சொன்னாலும் தன்னாலும் அறியான் எனினும்<br>அரசனுக்கு உறுதி கூறல் அமைச்சன் கடன். | 638 |
| 9 | கேடு சூழும் ஒரு மந்திரியினும் அருகே<br>எழுபது கோடி பகைவர் நல்லவர். | 639 |
| 10 | முறையாக எண்ணினும் முடியாதபடி செய்வர்<br>செய்யும் திறமை இல்லாதவர். | 640 |

1 கருவியும், காலமும், செய்கையும், செய்யும் 631
அருவினையும், மாண்டது-அமைச்சு.

2 வன்கண், குடிகாத்தல், கற்று அறிதல், ஆள்வினையோடு 632
ஐந்துடன் மாண்டது-அமைச்சு.

3 பிரித்தலும், பேணிக்கொளலும், பிரிந்தார்ப் 633
பொருத்தலும், வல்லது-அமைச்சு.

4 தெரிதலும், தேர்ந்து செயலும், ஒருதலையாச் 634
சொல்லலும் வல்லது-அமைச்சு.

5 அறன் அறிந்து, ஆன்று அமைந்த சொல்லான், எஞ்ஞான்றும் 635
திறன் அறிந்தான், தேர்ச்சித் துணை.

6 மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதி நுட்பம் 636
யா உள, முன் நிற்பவை?.

7 செயற்கை அறிந்தக்கடைத்தும், உலகத்து 637
இயற்கை அறிந்து, செயல்!.

8 அறி கொன்று, அறியான் எனினும், உறுதி 638
உழையிருந்தான் கூறல் கடன்.

9 பழுது எண்ணும் மந்திரியின், பக்கத்துள் தெவ் ஓர் 639
எழுபது கோடி உறும்.

10 முறைப்படச் சூழ்ந்தும், முடிவிலவே செய்வர்- 640
திறப்பாடு இலாஅதவர்.

# சொல் வன்மை



## தெளிவுரை

1 நாவன்மை ஒருவர்க்கு நல்ல சொத்து:
அது எல்லா நன்மையினும் சிறந்தது. 641

2 சொல்லால் ஆக்கமும் வரும், கேடும் வரும்.
ஆதலின் சொல்லை விழிப்போடு சொல்லுக. 642

3 கேட்டாரைக் கவர்ந்து கேளாதாரையும்
கேட்கத் தூண்டுவதே சொல்வன்மை. 643

4 சொல்லின் ஆற்றலை அறிந்து சொல்லுக;
அதுவே அறமாம்; பொருளாம். 644

5 வேறு சொல்லும் சொல்லலாமென இடமின்றி
முதலிலேயே பலிக்கும் சொல்லைச் சொல்லுக. 645

6 கேட்குமாறு சொல்லல் பிறர் சொல்லக் கேட்டல்
இவை நல்லறிஞரின் கொள்கை. 646

7 சொல்வன்மை சோர்வின்மை அச்சமின்மை
உடையவனை யாரும் வெல்ல முடியாது. 647

8 முறையாக இனிது சொல்லுவோமாயின்
நம் சொற்படி உலகம் விரைந்து நடக்கும். 648

9 நல்லவற்றைச் சுருக்கமாகச் சொல்லத் தெரியாதவரே
பலபடப் பேச ஆசைப்படுவர். 649

10 கற்றதை எடுத்துச் சொல்ல முடியாதவர்
மணமில்லாத கொத்துமலர் போன்றவர். 650

# சொல் வன்மை

1 'நா நலம்' என்னும் நலன் உடைமை; அந் நலம் 641
யா நலத்து உள்ளதூஉம் அன்று.

2 ஆக்கமும், கேடும், அதனால் வருதலால், 642
காத்து ஓம்பல், சொல்லின்கண் சோர்வு.

3 கேட்டார்ப் பிணிக்கும் தகை அவாய், கேளாரும் 643
வேட்ப, மொழிவது ஆம்-சொல்.

4 திறன் அறிந்து சொல்லுக, சொல்லை; அறனும் 644
பொருளும் அதனின் ஊங்கு இல்.

5 சொல்லுக சொல்லை-பிறிது ஓர் சொல் அச் சொல்லை 645
வெல்லும் சொல் இன்மை அறிந்து.

6 வேட்பத் தாம் சொல்லி, பிறர் சொல் பயன் கோடல் 646
மாட்சியின் மாசு அற்றார் கோள்.

7 சொலல் வல்லன், சோர்வு இலன், அஞ்சான், அவனை 647
இகல் வெல்லல் யார்க்கும் அரிது.

8 விரைந்து தொழில் கேட்கும் ஞாலம்-நிரந்து இனிது 648
சொல்லுதல் வல்லார்ப் பெறின்.

9 பல சொல்லக் காமுறுவர் மன்ற- மாசு அற்ற 649
சில சொல்லல் தேற்றாதவர்.

10 இணர் ஊழ்த்தும் நாறா மலர் அனையர்-கற்றது 650
உணர விரித்து உரையாதார்.

# வினைத் தூய்மை

## தெளிவுரை

1 நல்ல துணை முன்னேற்றத்தைத் தரும்; 651
நல்ல செயல் வேண்டியன எல்லாம் தரும்.

2 புகழும் நன்மையும் தராத காரியத்தை 652
என்றும் ஒழித்துவிட வேண்டும்.

3 முன்னேற வேண்டும் என்பவர் மதிப்புக் 653
குறையும் காரியங்களைக் கொள்ளாது விடுக.

4 அதிராத அறிஞர் நெருக்கடிபட்டாலும் 654
இழிந்த செயல்களைச் செய்யார்.

5 என்செய்தேன் என்று பின் வருந்தும் செயலைச் 655
செய்யாதே; செய்தால் திரும்பவும் செய்யாதே.

6 பெரியவர் பழிக்கும் தீய வினைகளை 656
நின்தாய் பசித்துக் கிடந்தாலும் செய்யாதே.

7 நல்லவர் பழிசூடி எய்தும் செல்வத்தினும் 657
அவர்தம் வறுமையே பெருமையுடையது.

8 விலக்கியவற்றை விலக்காது செய்தவர்க்குக் 658
காரியம் முடிந்தாலும் துன்பம் உண்டாகும்.

9 பிறர் அழக்கொண்டவை நாம் அழப்போகும்; 659
நல்லவை முன் தொலையினும் பின் பயன்தரும்.

10 ஏமாற்றிக் கொண்ட பொருள் நிலைக்காது; 660
சுடாத மண்பானையில் நீர் தங்குமா?

# வினைத் தூய்மை

1 துணை நலம் ஆக்கம் தரூஉம்; வினை நலம் 651
வேண்டிய எல்லாம் தரும்.

2 என்றும் ஒருவுதல் வேண்டும்-புகழொடு 652
நன்றி பயவா வினை.

3 ஓஒதல் வேண்டும், ஒளி மாழ்கும் செய்வினை- 653
‘ஆஅதும்!’ என்னுமவர்.

4 இடுக்கண் படினும், இளிவந்த செய்யார்- 654
நடுக்கு அற்ற காட்சியவர்.

5 'எற்று!' என்று இரங்குவ செய்யற்க; செய்வானேல், 655
மற்று அன்ன செய்யாமை நன்று.

6 ஈன்றாள் பசி காண்பான் ஆயினும், செய்யற்க 656
சான்றோர் பழிக்கும் வினை.

7 பழி மலைந்து எய்திய ஆக்கத்தின், சான்றோர் 657
கழி நல்குரவே தலை.

8 கடிந்த கடிந்து ஒரார் செய்தார்க்கு அவைதாம் 658
முடிந்தாலும், பீழை தரும்.

9 அழக் கொண்ட எல்லாம் அழப் போம்; இழப்பினும், 659
பிற்பயக்கும், நற்பாலவை.

10 சலத்தால் பொருள் செய்து ஏமாக்கல்-பசு மண்- 660
கலத்துள் நீர் பெய்து, இரீஇயற்று.

# வினைத் திட்பம்

## தெளிவுரை

1 வினையுறுதி என்பது நம் நெஞ்சுறுதி;
மற்றையவை உறுதியாகா. 661

2 வருமுன் காத்தல், வந்தால் தளராமை
இவ்விரண்டே அறிஞர் கண்ட வழிகள். 662

3 முடிந்த பின் வெளியாம்படி செய்வதே திறமை;
இடையே வெளிப்படின் பெருந்துன்பம் வரும். 663

4 அழகாகச் சொல்லுதல் யார்க்கும் முடியும்;
சொன்னபடி செய்தலே முடியாது. 664

5 பெருமிதம் மிக்கவரின் வினைத்திறத்தை
வேந்தன் கேள்விப்பட்டு மதிப்பான். 665

6 எண்ணியவற்றை எண்ணியபடியே எய்தலாம்
எண்ணியவர் உறுதியாக எண்ணினால். 666

7 ஆளின் தோற்றம் பார்த்து இகழ வேண்டாம்;
ஓடும் வண்டி பெரிது; அச்சாணி சிறிது. 667

8 கலங்காது கண்ட காரியத்தைத் தளராது
காலம் தாழ்த்தாது செய்க. 668

9 துன்பம் மேன்மேலும் வந்தாலும் துணிவோடு
இன்பந்தரும் காரியத்தைச் செய்க. 669

10 என்ன உறுதியிருந்தாலும் எடுத்துக்கொண்ட
வினையில் உறுதியிலாரை உலகம் விட்டுவிடும். 670

# வினைத் திட்பம்



1 வினைத் திட்பம் என்பது ஒருவன் மனத் திட்பம்;
மற்றைய எல்லாம் பிற. 661

2 ஊறு ஒரால், உற்றபின் ஒல்காமை, இவ் இரண்டின்
ஆறு என்பர்-ஆய்ந்தவர் கோள். 662

3 கடைக் கொட்கச் செய்தக்கது ஆண்மை; இடைக் கொட்கின்,
எற்றா விழுமம் தரும். 663

4 சொல்லுதல் யார்க்கும் எளிய; அரிய ஆம்,
சொல்லிய வண்ணம் செயல். 664

5 வீறு எய்தி மாண்டார் வினைத் திட்பம், வேந்தன்கண்
ஊறு எய்தி, உள்ளப்படும். 665

6 எண்ணிய எண்ணியாங்கு எய்துப-எண்ணியார்
திண்ணியர் ஆகப்பெறின். 666

7 உருவு கண்டு எள்ளாமை வேண்டும்-உருள் பெருந் தேர்க்கு
அச்சு ஆணி அன்னார் உடைத்து. 667

8 கலங்காது கண்ட வினைக்கண், துளங்காது
தூக்கம் கடிந்து செயல். 668

9 துன்பம் உறவரினும் செய்க, துணிவு ஆற்றி-
இன்பம் பயக்கும் வினை. 669

10 எனைத் திட்பம் எய்தியக்கண்ணும், வினைத் திட்பம்
வேண்டாரை வேண்டாது, உலகு. 670

# வினை செயல் வகை

## தெளிவுரை

1 ஆராய்ந்து ஒரு துணிவுக்கு வர வேண்டும்; 671
அத்துணிவைச் செய்யாது தாழ்த்தல் தீதாகும்.

2 தாழ்த்துச் செய்யும் வினையைத் தாழ்த்துச்செய்க; 672
உடனே செய்ய வேண்டியதைக் கடத்தாதே.

3 முடிந்தவரை தூதால் முடித்துக்கொள்ளல் நன்று; 673
முடியாக்கால் பலிக்கு முறை பார்த்துச் செய்க.

4 காரியக்குறை பகைக்குறை என்ற இரண்டும் 674
நெருப்புக்குறை போல வளர்ந்து அழிக்கும்.

5 பொருள் கருவி காலம் செயல் இடம் என்ற 675
ஐந்தினையும் மயக்கமற ஆராய்ந்து செய்க.

6 முடிவும் இடையூறுகளும் முடிந்த பின்னர் 676
வரும் பயனும் பார்த்துச் செய்க.

7 ஒரு செயலைச் செய்பவன் செய்யும் முறை அதனை 677
நன்கறிந்தவனது உறுதியைப் பெறுதல்.

8 யானையைக் கொண்டு யானை பிடிப்பதுபோல 678
ஒரு செயலால் இன்னொன்றையும் செய்துகொள்.

9 நண்பர்க்கு நல்லன செய்தலைக் காட்டினும் 679
விரைவாகப் பகைவரை அணைத்தல் வேண்டும்.

10 சிற்றரசர் குடிமக்கள் நடுங்குவது கண்டு 680
தூதுவரின் பேரரசரைப் பணிந்து கொள்வர்.

# வினை செயல் வகை



1 சூழ்ச்சி முடிவு துணிவு எய்தல்; அத் துணிவு 671
தாழ்ச்சியுள் தங்குதல் தீது.

2 தூங்குக, தூங்கிச் செயற்பால; தூங்கற்க, 672
தூங்காது செய்யும் வினை.

3 ஒல்லும் வாய் எல்லாம் வினை நன்றே; ஒல்லாக்கால், 673
செல்லும் வாய் நோக்கிச் செயல்.

4 வினை, பகை என்று இரண்டின் எச்சம், நினையுங்கால், 674
தீ எச்சம் போலத் தெறும்.

5 பொருள், கருவி, காலம், வினை, இடனொடு ஐந்தும் 675
இருள் தீர எண்ணிச் செயல்!.

6 முடிவும், இடையூறும், முற்றியாங்கு எய்தும் 676
படுபயனும், பார்த்துச் செயல்!.

7 செய்வினை செய்வான் செயல்முறை, அவ் வினை 677
உள் அறிவான் உள்ளம் கொளல்.

8 வினையான் வினை ஆக்கிக்கோடல்-நனை கவுள் 678
யானையால் யானை யாத்தற்று.

9 நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே- 679
ஒட்டாரை ஒட்டிக்கொளல்.

10 உறை சிறியார் உள் நடுங்கல் அஞ்சி, குறை பெறின், 680
கொள்வர் பெரியார்ப் பணிந்து.

## தெளிவுரை

1 அன்பும் குடிப்பிறப்பும் அரசர்கள் விரும்பும்
பண்பும் தூதுவனுக்கு உரிய தகுதிகள். 681

2 அன்பு அறிவு தெளிந்த பேச்சுவன்மை
மூன்றும் தூதுவனுக்கு இன்றியமையாதவை. 682

3 பகைவர்முன் வெற்றித்தூது சொல்பவன்
கற்றவருள் கற்றவனாக விளங்க வேண்டும். 683

4 அறிவு தோற்றம் தெளிந்த கல்வி இவற்றில்
நிறைந்தவன் தூது செல்வானாக. 684

5 விடாது சொல்லி விடுவனவற்றை விட்டுச்
சிரிக்கப்பேசி நலம் செய்பவனே தூதன். 685

6 கற்று அஞ்சாது எடுத்துச் சொல்லிச்
சமயத்துக்கு ஏற்றது அறிந்தவனே தூதன். 686

7 கடமை காலம் இடம் இவற்றைப் பார்த்துச்
சிந்தித்து உரைப்பவனே சிறந்த தூதன். 687

8 தூய்மை துணை துணிவு இம்மூன்றும்
நன்கு வாய்த்தல் தூதுவன் தகுதியாம். 688

9 பழிச் செய்தியை வாய்விடா உறுதியாளனே
பகைவர்முன்சென்று செய்திகூறத் தக்கவன். 689

10 தனக்குச் சாவு வரினும் தன் அரசனுக்குக்
குறையாத நலம் செய்பவனே தூதன். 690

1 அன்பு உடைமை, ஆன்ற குடிப்பிறத்தல், வேந்து அவாம்
பண்பு உடைமை,- தூது உரைப்பான் பண்பு. 681

2 அன்பு, அறிவு, ஆராய்ந்த சொல்வன்மை-தூது உரைப்பார்க்கு
இன்றியமையாத மூன்று. 682

3 நூலாருள் நூல் வல்லன் ஆகுதல்-வேலாருள்
வென்றி வினை உரைப்பான் பண்பு. 683

4 அறிவு, உரு, ஆராய்ந்த கல்வி, இம் மூன்றன்
செறிவு உடையான் செல்க, வினைக்கு. 684

5 தொகச் சொல்லி, தூவாத நீக்கி, நகச் சொல்லி,
நன்றி பயப்பது ஆம்-தூது. 685

6 கற்று, கண் அஞ்சான், செலச் சொல்லி, காலத்தால்
தக்கது அறிவது ஆம்-தூது. 686

7 கடன் அறிந்து, காலம் கருதி, இடன் அறிந்து,
எண்ணி, உரைப்பான் தலை. 687

8 தூய்மை, துணைமை, துணிவு உடைமை, இம் மூன்றின்
வாய்மை-வழி உரைப்பான் பண்பு. 688

9 விடு மாற்றம் வேந்தர்க்கு உரைப்பான்-வடு மாற்றம்
வாய் சோரா வன்கணவன். 689

10 இறுதி பயப்பினும், எஞ்சாது, இறைவற்கு
உறுதி பயப்பது ஆம்-தூது. 690

# மன்னரைச் சேர்ந்து ஒழுகல்



## தெளிவுரை

1 மன்னரொடு பழகுபவர் குளிர்காய்வார் போல்
மிக நீங்காமலும் மிக நெருங்காமலும் பழகுக. 691

2 அரசர் விரும்புவனவற்றை விரும்பாவிடின்
அவரால் நிலையான முன்னேற்றம் கிடைக்கும். 692

3 பெருங்குற்றம் வாராதபடி காத்துக் கொள்க;
அரசர் ஐயப்படின் தெளிவித்தல் முடியாது. 693

4 காதோடு ஓதுதலையும் பார்த்துச் சிரித்தலையும்
பெரியவர்முன் வைத்துக் கொள்ளாதே. 694

5 எந்தச் செய்தியையும் ஓட்டுக் கேளாதே:
சொல்லும்படி கேளாதே. சொன்னாற் கேள். 695

6 மன்னனின் குறிப்பறிந்து காலம் பார்த்து
வேண்டியவற்றை விரும்புமாறு சொல்லுக. 696

7 வேண்டியதைக் கேளாவிடினும் சொல்லுக;
வேண்டாததைக் கேட்டாலும் சொல்லற்க. 697

8 இளையவன் உறவினன் என் அவமதியாமல்
அரசனது அதிகாரத்தை மதித்து ஒழுகுக. 698

9 மதிக்கப்பட்டேன் என்று மதியாதன செய்யார்
பிறழாத அறிவினை யுடையவர். 699

10 பழக்கம் என்று பண்பில்லாதபடி நடந்தால்
அந்த நட்புரிமை கேடு விளைக்கும். 700

# மன்னரைச் சேர்ந்து ஒழுகல்



1 அகலாது, அணுகாது, தீக் காய்வார் போல்க- 691
இகல் வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார்.

2 மன்னர் விழைப விழையாமை, மன்னரான் 692
மன்னிய ஆக்கம் தரும்.

3 போற்றின் அரியவை போற்றல்-கடுத்தபின், 693
தேற்றுதல் யார்க்கும் அரிது.

4 செவிச் சொல்லும், சேர்ந்த நகையும், அவித்து ஒழுகல்- 694
ஆன்ற பெரியார் அகத்து!.

5 எப் பொருளும் ஓரார், தொடரார், மற்று அப் பொருளை 695
விட்டக்கால் கேட்க, மறை!.

6 குறிப்பு அறிந்து, காலம் கருதி, வெறுப்பு இல 696
வேண்டுப, வேட்பச் சொலல்!.

7 வேட்பன சொல்லி, வினை இல எஞ்ஞான்றும் 697
கேட்பினும், சொல்லா விடல்!.

8 'இளையர், இன முறையர்' என்று இகழார், நின்ற 698
ஒளியொடு ஒழுகப்படும்.

9 'கொளப்பட்டேம்' என்று எண்ணி, கொள்ளாத செய்யார்- 699
துளக்கு அற்ற காட்சியவர்.

10 பழையம் எனக் கருதி, பண்பு அல்ல செய்யும் 700
கெழுதகைமை கேடு தரும்.

# குறிப்பு அறிதல்



## தெளிவுரை

1 கூறாமலே முகம்பார்த்துக் குறிப்பு அறிபவன் 701
உலகத்துக்கு என்றும் ஓர் அணியாவான்.

2 தெளிவாக உள்ளோட்டத்தை உணர்பவனைத் 702
தெய்வத்துக்கு நிகராக மதிக்க.

3 முகச்சாடையினால் உள்ளத்தை உணர்பவரை 703
எது கொடுத்தும் அவையில் அமர்த்திக்கொள்க.

4 குறிப்பைக் கூறாமலே அறிய வல்லவர்க்கும் 704
அறியாதவர்க்கும் உடம்பளவில் ஒற்றுமை.

5 முகங்கண்டு உள்ளம் காணவில்லை யாயின் 705
கண் என்ற உறுப்பின் பயன் என்ன?

6 முன்னுள்ள பொருளைக் கண்ணாடி காட்டும்; 706
உள் மிக்க உணர்ச்சியை முகம் காட்டும்.

7 மகிழ்வையும் வெறுப்பையும் முகம் முந்திக்காட்டும்; 707
முகம்போல் அறியுந்திறம் பிறிதிற்கு இல்லை.

8 நிகழ்வதை உள்ளத்தால் உணர்வார்க்கு முன்னே 708
முகம் பார்த்து நின்றால் போதுமே.

9 பகையா நட்பா என்பதைக் கண் சொல்லும்; 709
கண்ணின் கூறு தெரிந்தவர்கட்கு.

10 கூரிய அறிவுடையோம் என்பவர்க்கு 710
அளவுகோலாவது பிறர்கண்ணே; வேறில்லை.

1 கூறாமை நோக்கி, குறிப்பு அறிவான், எஞ்ஞான்றும் 701
மாறா நீர் வையக்கு அணி.

2 ஐயப்படாஅது அகத்தது உணர்வானைத் 702
தெய்வத்தொடு ஒப்பக் கொளல்!.

3 குறிப்பின் குறிப்பு உணர்வாரை, உறுப்பினுள் 703
யாது கொடுத்தும், கொளல்!.

4 குறித்தது கூறாமைக் கொள்வாரொடு, ஏனை 704
உறுப்பு ஓரனையரால், வேறு.

5 குறிப்பின் குறிப்பு உணராஆயின், உறுப்பினுள் 705
என்ன பயத்தவோ, கண்?.

6 அடுத்தது காட்டும் பளிங்குபோல், நெஞ்சம் 706
கடுத்தது காட்டும், முகம்.

7 முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ-உவப்பினும் 707
காயினும், தான் முந்துறும்?

8 முகம் நோக்கி நிற்க அமையும்-அகம் நோக்கி, 708
உற்றது உணர்வார்ப் பெறின்.

9 பகைமையும் கேண்மையும் கண் உரைக்கும்-கண்ணின் 709
வகைமை உணர்வார்ப் பெறின்.

10 'நுண்ணியம்' என்பார் அளக்கும் கோல், காணுங்கால், 710
கண் அல்லது, இல்லை பிற.

# அவை அறிதல்

## தெளிவுரை

1 சொற்பொழிவின் வினையை அறிந்த நல்லவர் 711
கூட்டத்தின் நிலையறிந்து ஆராய்ந்து பேசுக.

2 சொல்லின் நடையறிந்தவர் இடையிடையே 712
கூட்டத்தின் போக்கை விளங்கிச் செய்க.

3 கூட்டம் அறியாது பேச முற்படுபவர் 713
பேச்சு வகையறியார் ; வல்லமையும் இல்லார்.

4 அறிவுக் குழுவில் நல்லறிஞனாய் விளங்குக; 714
பேதைக்குழுவில் வெள்ளைபோல் நடக்க.

5 அறிஞர் குழுவில் முந்திக்கொண்டு எதனையும் 715
சொல்லாத குணம் நல்ல அடக்கம்.

6 நிரம்பக் கற்றார் முன்னே குற்றப்படுதல் 716
வழியிடை வழுக்கி விழுந்தது போலும்.

7 தெளிவாகச் சொற்பொருள் அறிவார் அவையில் 717
கற்றவர் தம் கல்வி மேன்மை அடையும்.

8 உணரும் தன்மை உடையார்முன் கூறுவது 718
வளரும் பாத்தியிள் நீர் பாய்ச்சுவது போலும்.

9 நற்கூட்டதில் நன்கு பேச வல்லவர் 719
இழிகூட்டத்தில் மறந்தும் போய்ப் பேசற்க.

10 தன்னிலைக்குத் தகாதவர் கூட்டத்தில் பேசுவது 720
சாக்கடையிற் கொட்டிய அமிழ்தம் போலும்.

# அவை அறிதல்



1 அவை அறிந்து, ஆராய்ந்து, சொல்லுக-சொல்லின் 711
தொகை அறிந்த தூய்மையவர்!.

2 இடை தெரிந்து, நன்கு உணர்ந்து, சொல்லுக- சொல்லின் 712
நடை தெரிந்த நன்மையவர்!.

3 அவை அறியார், சொல்லல் மேற்கொள்பவர் சொல்லின் 713
வகை அறியார்; வல்லதூஉம் இல்.

4 ஒளியார்முன் ஒள்ளியர் ஆதல்! வெளியார்முன் 714
வான் சுதை வண்ணம் கொளல்!.

5 'நன்று' என்றவற்றுள்ளும் நன்றே-முதுவருள் 715
முந்து கிளவாச் செறிவு.

6 ஆற்றின் நிலைதளர்ந்தற்றே-வியன் புலம் 716
ஏற்று, உணர்வார்முன்னர் இழுக்கு.

7 கற்று அறிந்தார் கல்வி விளங்கும்-கசடு அறச் 717
சொல் தெரிதல் வல்லார் அகத்து.

8 உணர்வது உடையார்முன் சொல்லல்-வளர்வதன் 718
பாத்தியுள் நீர் சொரிந்தற்று.

9 புல் அவையுள் பொச்சாந்தும் சொல்லற்க-நல் அவையுள் 719
நன்கு செலச் சொல்லுவார்!.

10 அங்கணத்துள் உக்க அமிழ்து அற்றால்-தம் கணத்தர் 720
அல்லார்முன் கோட்டி கொளல்!.

# அவை அஞ்சாமை



## தெளிவுரை

1 சொற்பொழிவை அறிந்தவர் பாகுபாடு தெரிந்து 721
இன்னாதவற்றைத் தவறியும் சொல்லார்.

2 கற்றவருள் கற்றார் எனப்படுவார் யார்? 722
கற்றவர் முன் எடுத்துச் சொல்ல வல்லவரே.

3 போரில் சாக அஞ்சாதவர் மிகப்பலர்; 723
அவையில் பேச அஞ்சாதவரோ மிகச் சிலர்.

4 கற்றவர்முன் கற்றதை எடுத்துச் சொல்லுக; 724
மிகக் கற்றவரிடம் மிகுதியைத் தெரிந்துகொள்க.

5 அவைக்கண் அஞ்சாது மறுமொழி சொல்ல 725
முறையாகத் தருக்க நூல் அறிந்து கற்க.

6 வீரர் அல்லார்க்கு வாளோடு என்ன உறவு? 726
மேடைஅஞ்சுவார்க்கு நூலோடு என்ன உறவு?

7 மேடையில் அஞ்சுபவன் கற்ற நூற்படிப்பு 727
போரில் பேடி பிடித்த கூரியவாள் போலும்.

8 நல்லவையில் எடுத்துச் சொல்ல இயலாதவர் 728
பல படித்தும் பயனில்லை.

9 படித்தறிந்தும் நல்லவையில் பேச அஞ்சுபவர் 729
படியாதவரினும் கீழ் என்பார்கள்.

10 மேடைக்கு அஞ்சிச் சொல்லமாட்டாதவர் 730
வாழ்ந்தாலும் மாண்டவருக்கு ஒப்பாவர்.

# அவை அஞ்சாமை

1 வகை அறிந்து, வல் அவை, வாய்சோரார்-சொல்லின் 721
தொகை அறிந்த தூய்மையவர்.

2 கற்றாருள் கற்றார் எனப்படுவர்-கற்றார்முன் 722
கற்ற செலச் சொல்லுவார்.

3 பகையகத்துச் சாவார் எளியர்; அரியர் 723
அவையகத்து அஞ்சாதவர்.

4 கற்றார்முன் கற்ற செலச் சொல்லி, தாம் கற்ற, 724
மிக்காருள், மிக்க கொளல்.

5 ஆற்றின், அளவு அறிந்து கற்க-அவை அஞ்சா 725
மாற்றம் கொடுத்தற்பொருட்டு.

6 வாளொடு என், வன்கண்ணர் அல்லார்க்கு?-நூலொடு என், 726
நுண் அவை அஞ்சுபவர்க்கு?.

7 பகையகத்துப் பேடி கை ஒள் வாள்-அவையகத்து 727
அஞ்சுமவன் கற்ற நூல்.

8 பல்லவை கற்றும், பயம் இலரே-நல் அவையுள் 728
நன்கு செலச் சொல்லாதார்.

9 'கல்லாதவரின் கடை' என்ப- 'கற்று அறிந்தும், 729
நல்லார் அவை அஞ்சுவார்'.

10 உளர் எனினும், இல்லாரொடு ஒப்பர்-களன் அஞ்சி, 730
கற்ற செலச் சொல்லாதார்.

## தெளிவுரை

1 குறையாத விளைச்சலும் நடுநிலைமை யாளரும்
சோர்விலாத வணிகரும் உடையது நாடு. 731

2 பொருட் பெருக்கத்தால் விரும்பத் தக்கதும்
கேடின்றி மிக விளைவதும் நாடு. 732

3 வரும் சுமையெல்லாம் தாங்கி அரசனுக்கு
வரியெல்லாம் கொடுப்பதுவே நாடு. 733

4 தீராப்பசியும் தீராநோயும் தீராப்பகையும்
இல்லாது நடப்பதுவே நாடு. 734

5 பலகட்சி, உட்பகை, அரசினை ஆட்டும்
காலிக் கூட்டம் இல்லாததே நாடு. 735

6 கேடறியாது கெட்டாலும் வளங்குறையாது
என்ற நாடே தலையான நாடு. 736

7 அகழியும் வாய்ப்பான மலையும் அருவியும்
வன்மதிலும் நாட்டின் உறுப்புக்கள். 737

8 நோயின்மை செல்வம் விளைச்சல் இன்பம் காவல்
ஐந்தும் நாட்டிற்கு அணி என்பர். 738

9 தன்னிறைவுடைய வளநாடே உரிமை நாடு;
பிறநாட்டை எதிர் நோக்கும் நாடு நாடன்று 739

10 மேலைச் சிறப்பெல்லாம் இருந்தும் பயனில்லை.
நல்லாட்சி இல்லாத நாடு. 740

1 தள்ளா விளையுளும், தக்காரும், தாழ்வு இலாச்
செல்வரும், சேர்வது- நாடு. 731

2 பெரும் பொருளான் பெட்டக்கது ஆகி, அருங் கேட்டால்,
ஆற்ற விளைவது-நாடு. 732

3 பொறை ஒருங்கு மேல்வருங்கால் தாங்கி, இறைவற்கு
இறை ஒருங்கு நேர்வது-நாடு. 733

4 உறு பசியும், ஓவாப் பிணியும், செறு பகையும்,
சேராது இயல்வது-நாடு. 734

5 பல் குழுவும், பாழ்செய்யும் உட்பகையும், வேந்து அலைக்கும்
கொல் குறும்பும் இல்லது-நாடு. 735

6 கேடு அறியா, கெட்ட இடத்தும் வளம் குன்றா
நாடு, என்ப, நாட்டின் தலை. 736

7 இரு புனலும், வாய்ந்த மலையும், வரு புனலும்,
வல் அரணும்-நாட்டிற்கு உறுப்பு. 737

8 பிணி இன்மை, செல்வம், விளைவு, இன்பம், ஏமம்-
அணி என்ப, நாட்டிற்கு-இவ் ஐந்து. 738

9 நாடு என்ப, நாடா வளத்தன; நாடு அல்ல,
நாட, வளம் தரும் நாடு. 739

10 ஆங்கு அமைவு எய்தியக்கண்ணும் பயம் இன்றே-
வேந்து அமைவு இல்லாத நாடு. 740

## தெளிவுரை

1 போர்மேற் செல்வார்க்கும் மதில் வேண்டும்;
அஞ்சித் தற்காப்பவர்க்கும் அது வேண்டும். 741

2 அகழியும் வெட்டவெளியும் மலையும்
செறிந்த காடும் சேர்ந்தது அரணாகும். 742

3 உயரம் அகலம் உறுதி அருமை நான்கும்
அமைந்ததே அரண் என்று நூல் கூறும். 743

4 காக்கும் அளவு சிறிதாய் இடம் பெரிதாய்ப்
பகைவரின் எழுச்சியை மழுக்குவதே அரண். 744

5 பிடிப்பதற்கு அரியதாய் உணவு நிறைந்ததாய்
உள்ளிருப்பவர் செயலுக்கு எளியதே அரண். 745

6 எல்லாப்பொருளும், இடத்துக்குக் கொண்டுபோய்
உதவும் நல்லாளும் உடையதே அரண். 746

7 வளைந்தோ திமரெனத் தாக்கியோ வஞ்சித்தோ
பிடிக்க முடியாதது அரண். 747

8 வலுவாகச் சூழ்ந்து வளைத்தவரையும்
நிலைதளராது நின்று வெல்வதே அரண். 748

9 போர்முனையில் பகைவர் ஓடுமாறு போர்வினையில்
பெருமிதச் சிறப்புடையதே அரண். 749

10 அரண் எவ்வாற்றல் உடையதாக இருந்தாலும்
பேராற்றல் இல்லாதார்க்குப் பயன் இல்லை. 750

| | | |
|---|---|---|
| 1 | ஆற்றுபவர்க்கும் அரண் பொருள்; அஞ்சித் தற்<br>போற்றுபவர்க்கும் பொருள். | 741 |
| 2 | மணி நீரும், மண்ணும், மலையும், அணி நிழல்<br>காடும், உடையது-அரண். | 742 |
| 3 | 'உயர்வு, அகலம், திண்மை, அருமை, இந் நான்கின்<br>அமைவு அரண்'.என்று உரைக்கும் நூல். | 743 |
| 4 | சிறு காப்பின் பேர் இடத்தது ஆகி, உறு பகை<br>ஊக்கம் அழிப்பது-அரண். | 744 |
| 5 | கொளற்கு அரிதாய், கொண்ட கூழ்த்து ஆகி, அகத்தார்<br>நிலைக்கு எளிது ஆம் நீரது-அரண். | 745 |
| 6 | எல்லாப் பொருளும் உடைத்தாய், இடத்து உதவும்<br>நல் ஆள் உடையது-அரண். | 746 |
| 7 | முற்றியும், முற்றாது எறிந்தும், அறைப்படுத்தும்,<br>பற்றற்கு அரியது-அரண். | 747 |
| 8 | முற்று ஆற்றி முற்றியவரையும், பற்று ஆற்றி,<br>பற்றியார் வெல்வது-அரண். | 748 |
| 9 | முனை முகத்து மாற்றலர் சாய, வினைமுகத்து<br>வீறு எய்தி மாண்டது-அரண். | 749 |
| 10 | எனை மாட்சித்து ஆகியக்கண்ணும், வினை மாட்சி<br>இல்லார்கண் இல்லது-அரண். | 750 |

# பொருள் செயல் வகை



## தெளிவுரை

| | | |
|---|---|---|
| 1 | மதிப்பு இல்லாதவரையும் மதிப்பு உடையராகச்<br>செய்யும் செல்வமே சிறந்த செல்வம். | 751 |
| 2 | செல்வம் இல்லாதவரை எல்லோரும் இகழ்வர்;<br>உடையவரை எல்லோரும் சிறப்புச் செய்வர். | 752 |
| 3 | செல்வம் என்னும் அழியா ஒளி<br>எவ்விடமும் சென்று இருளை ஓட்டும். | 753 |
| 4 | நெறியோடு குற்றமின்றி ஈட்டிய பொருள்<br>அறமும் தரும்; இன்பமும் தரும். | 754 |
| 5 | அருளும் அன்பும் பொருந்தாத செல்வத்தைத்<br>தொடாது போகவிடுக. | 755 |
| 6 | வரியும் சுங்கமும் பகைவரின் திறையும்<br>அரசனுக்கு வருவாய்ப் பொருளாம். | 756 |
| 7 | அன்புத் தாய் பெற்ற அருட்குழந்தை<br>செல்வத் தாதியால் வளரும். | 757 |
| 8 | கையிற் பொருள் வைத்துக் காரியம் செய்தல் மலையேறி<br>யானைப்போரைப் பார்ப்பது போலாம். | 758 |
| 9 | ஈட்டுக பொருளை; எதிரியின் இறுமாப்பை<br>அறுக்கும் கருவி அதுபோல் வேறில்லை. | 759 |
| 10 | சிறந்த பொருளைத் திரளாக ஈட்டியவர்க்கு<br>அறமும் இன்பமும் எளிதிற் கிடைக்கும். | 760 |

# பொருள் செயல் வகை



1 பொருள் அல்லவரைப் பொருளாகச் செய்யும்
பொருள் அல்லது, இல்லை பொருள். 751

2 இல்லாரை எல்லாரும் எள்ளுவர்; செல்வரை
எல்லாரும் செய்வர், சிறப்பு. 752

3 பொருள் என்னும் பொய்யா விளக்கம், இருள் அறுக்கும்-
எண்ணிய தேயத்துச் சென்று. 753

4 அறன் ஈனும்; இன்பமும் ஈனும்;-திறன் அறிந்து,
தீது இன்றி வந்த பொருள். 754

5 அருளொடும், அன்பொடும் வாராப் பொருள் ஆக்கம்
புல்லார், புரள விடல்!. 755

6 உறு பொருளும், உல்கு பொருளும், தன் ஒன்னார்த்
தெறு பொருளும்,-வேந்தன் பொருள். 756

7 அருள் என்னும் அன்பு ஈன் குழவி, பொருள் என்னும்
செல்வச் செவிலியால், உண்டு. 757

8 குன்று ஏறி, யானைப் போர் கண்டற்றால்-தன் கைத்து ஒன்று
உண்டாகச் செய்வான் வினை. 758

9 செய்க பொருளை! செறுநர் செருக்கு அறுக்கும்
எஃகு அதனின் கூரியது இல். 759

10 ஒண் பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு, எண் பொருள்-
ஏனை இரண்டும் ஒருங்கு. 760

# படை மாட்சி

## தெளிவுரை

1 போருடல் பெற்றுப் புண்ணுக்கு அஞ்சாத 761
வெற்றிப்படை வேந்தன் செல்வத்திற் சிறந்தது.

2 கெடுதலான இடத்து அஞ்சாத உறுதி 762
தூரத்தில் பழம் படைக்கே உண்டு.

3 எலிக்கூட்டம் கடல் போல் கத்தினால் என்ன? 763
ஒருபாம்பு சீறிய அளவில் ஓடிப்போமே.

4 அழியாதும் வஞ்சனைக்கு ஆளாகாதும் 764
வழிவழி வீரமுடையதுவே படை.

5 எமனே சினந்து வந்தாலும் ஒன்றுகூடி 765
எதிர்க்கும் வீரமுடையதுவே படை.

6 வீரம் மானம் சிறந்த நடை தெளிவு 766
என்ற நான்கும் படைப்புக்கு வேண்டியவை.

7 வந்த போரைத் தடுக்கும் முறையறிந்து 767
முற்படையைச் செலுத்துவதே சேனையாம்.

8 அழித்தலும் பொறுத்தலும் இல்லை எனினும் 768
சேனை தோற்றத்தால் சிறப்பு அடையும்.

9 இழிவும் நீங்காத மனக்கசப்பும் வறுமையும் 769
இல்லை யென்றால் படை வெல்லும்.

10 படையில் வீரர் பலர் இருந்தாலும் 770
நல்ல தலைவர் இல்லையெனின் பயனில்லை.

# படை மாட்சி

1 உறுப்பு அமைந்து, ஊறு அஞ்சா, வெல் படை-வேந்தன் 761
வெறுக்கையுள் எல்லாம் தலை.

2 உலைவு இடத்து ஊறு அஞ்சா வன்கண், தொலைவு இடத்து, 762
தொல் படைக்கு அல்லால், அரிது.

3 ஒலித்தக்கால் என் ஆம், உவரி எலிப்பகை? 763
நாகம் உயிர்ப்ப, கெடும்.

4 அழிவு இன்று, அறைபோகாது ஆகி, வழிவந்த 764
வன்கணதுவே-படை.

5 கூற்று உடன்று மேல்வரினும், கூடி, எதிர் நிற்கும் 765
ஆற்றலதுவே-படை.

6 மறம், மானம், மாண்ட வழிச் செலவு, தேற்றம், 766
என நான்கே ஏமம், படைக்கு.

7 தார் தாங்கிச் செல்வது தானை-தலைவந்த 767
போர் தாங்கும் தன்மை அறிந்து.

8 அடல்தகையும், ஆற்றலும், இல் எனினும், தானை 768
படைத் தகையான் பாடு பெறும்.

9 சிறுமையும், செல்லாத் துனியும், வறுமையும், 769
இல்லாயின் வெல்லும், படை.

10 நிலை மக்கள் சால உடைத்துஎனினும், தானை 770
தலைமக்கள் இல்வழி இல்.

## தெளிவுரை

1 எதிரிகளே! என் தலைவன் முன் நில்லாதீர்! 771
அவன் முன் நின்று கல்லானவர் பலர்.

2 காட்டு முயலைக் கொன்ற அம்பைக் காட்டினும் 772
யானைக்குறி தவறியவேலை ஏந்தல் சிறப்பு.

3 பகைவரைக் கொல்லுதல் வீரம்; அவர்க்குத் 773
துன்பம் வரின் உதவுதல் வீரத்தின் சிகரம்.

4 கைவேலை யானைமேல் வீசிவரும் வீரன் 774
நெஞ்சில் தைத்த வேலைப் பறித்துச் சிரிப்பான்.

5 பார்த்த கண் பகை வேலுக்கு மூடி இமைப்பினும் 775
வீரர் புறங்காட்டியதற்குச் சமமாம்.

6 வீரப்புண் படாத நாட்களை யெல்லாம் 776
குற்ற நாட்களாகக் கொள்வான் வீரன்.

7 புகழை மதித்து உயிரை மதியாத வீரர் 777
கட்டிய வீரக்கழலே கண்ணுக்கு அழகியது.

8 போர்வரின் உயிருக்கு அஞ்சாத வீரர் 778
அரசன் அடக்கினும் வீரவுணர்ச்சி குறையார்.

9 வஞ்சினம் தவறாமல் உயிர் கொடுத்தவரை வெற்றி 779
தவறினார் என்று தண்டிப்பார் உண்டோ?

10 காத்தவர் கண்கலங்கும்படி சாகப் பெற்றால் 780
அச்சாவு வேண்டியாயினும் பெறும் சிறப்பினது.

# படைச் செருக்கு

1 என்னை முன் நில்லன்மின்-தெவ்விர்! பலர், என்னை
முன் நின்று கல் நின்றவர். 771

2 கான முயல் எய்த அம்பினில், யானை
பிழைத்த வேல் ஏந்தல் இனிது. 772

3 பேர் ஆண்மை என்ப, தறுகண்; ஒன்று உற்றக்கால்,
ஊராண்மை மற்று அதன் எஃகு. 773

4 கை வேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய் வேல் பறியா, நகும். 774

5 விழித்த கண் வேல் கொண்டு எறிய, அழித்து இமைப்பின்,
ஓட்டு அன்றோ, வன்கணவர்க்கு?. 775

6 விழுப்புண் படாத நாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்கும், தன் நாளை எடுத்து. 776

7 சுழலும் இசை வேண்டி, வேண்டா உயிரார்
கழல் யாப்புக் காரிகை நீர்த்து. 777

8 உறின், உயிர் அஞ்சா மறவர், இறைவன்
செறினும், சீர் குன்றல் இலர். 778

9 இழைத்தது இகவாமைச் சாவாரை, யாரே,
பிழைத்தது ஒறுக்கிற்பவர்?. 779

10 புரந்தார் கண் நீர் மல்கச் சாகிற்பின், சாக்காடு
இரந்து கோள்-தக்கது உடைத்து. 780

# நட்பு

## தெளிவுரை

| | | |
|---|---|---|
| 1 | நட்புப்போல் செய்தற்கு அரியதும் இல்லை;<br>அதுபோல் காரியத்துக்குத் துணையும் வேறில்லை. | 781 |
| 2 | நல்லவர் நட்பு வளர்பிறை போன்றது;<br>பேதையர் நட்புத் தேய்பிறை போன்றது. | 782 |
| 3 | பழகப் பழகப் பண்புடையவர் நட்பு<br>படிக்கப் படிக்க நூலின்பம் போலும். | 783 |
| 4 | நட்புச் செய்தல் அரட்டை அடித்தற்கன்று;<br>பிழை செய்யும் போது முன்வந்து இடித்தற்காம். | 784 |
| 5 | நட்புக்குப் பலநாட் பழக்கம் வேண்டாம்;<br>ஒத்த மனப்பான்மையே உறவு தரும். | 785 |
| 6 | முகம் இனிக்கப் பழகுவது நட்பாகாது;<br>மனம் இனிக்கப் பழகுவதே நட்பு. | 786 |
| 7 | தீமைகளை நீக்கி நல்வழிப் படுத்தித்<br>துன்பத்தில் தொடர்பு கொள்வதே நட்பு. | 787 |
| 8 | உடை நெகிழின் உடனே உதவும் கைபோல<br>நண்பன் துயரை முந்திக்களைவதே நட்பு. | 788 |
| 9 | நட்பின் உயர் நிலையாது? வேறு படாமல்<br>முடிந்தவரை நண்பனைத் தாங்கி நிற்றல். | 789 |
| 10 | இவர் இன்னார், யான் இன்னவன் என்று<br>பிரித்துக் கூறினும் நட்பு பெருமை இழக்கும். | 790 |

1 செயற்கு அரிய யா உள, நட்பின்?-அதுபோல்
வினைக்கு அரிய யா உள, காப்பு?. 781

2 நிறை நீர, நீரவர் கேண்மை, பிறை; மதிப்
பின் நீர, பேதையார் நட்பு. 782

3 நவில்தொறும் நூல் நயம் போலும்-பயில்தொறும்,
பண்பு உடையாளர் தொடர்பு. 783

4 நகுதற்பொருட்டு அன்று, நட்டல்; மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற்பொருட்டு. 784

5 புணர்ச்சி, பழகுதல் வேண்டா; உணர்ச்சிதான்
நட்பு ஆம் கிழமை தரும். 785

6 முகம் நக, நட்பது நட்பு அன்று; நெஞ்சத்து
அகம் நக, நட்பது-நட்பு. 786

7 அழிவினவை நீக்கி, ஆறு உய்த்து, அழிவின்கண்
அல்லல் உழப்பது ஆம்-நட்பு. 787

8 உடுக்கை இழந்தவன் கை போல, ஆங்கே
இடுக்கண் களைவது ஆம்-நட்பு. 788

9 'நட்பிற்கு வீற்றிருக்கை யாது?' எனின், கொட்பு இன்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை. 789

10 'இனையர், இவர் எமக்கு; இன்னம் யாம்' என்று
புனையினும், புல்லென்னும்-நட்பு. 790

# நட்பு ஆராய்தல்

## தெளிவுரை

1 ஆராயாது நட்பதுபோல் கேடில்லை; ஏன்? 791
நட்புச் செய்தபின் என்றும் விடுதலை இல்லை.

2 பலமுறை ஆராய்ந்து கொள்ளாத நட்பு 792
இறுதியில் சாகும் துயரத்தைத் தரும்.

3 குணம் குடிப்பிறப்பு குற்றம் கூட்டாளி 793
எல்லாம் அறிந்து நட்புக் கொள்க.

4 நற்குடியிற் பிறந்து பழிக்கு அஞ்சுபவனை 794
எது கொடுத்தும் நட்புக் கொள்வாயாக.

5 அழும்படி சொல்லி இடித்துரைக்கும் ஆற்றல் 795
உடையவர் நட்பை உணர்ந்து கொள்க.

6 கேடுகாலத்தும் ஒரு நன்மை உண்டு; அன்று 796
நண்பர் யார் என்று அளந்து கொள்ளலாம்.

7 ஒருவர்க்கு வருவாய் என்பது யாது? 797
அறிவிலார் நட்பை அகற்றிக் கொள்ளுதல்.

8 மனம் சுருங்கும் எண்ணங்களை எண்ணாதே; 798
துன்பத்தில் கைவிடுவார் நட்பைக் கொள்ளாதே.

9 துன்பக் காலத்துக் கைவிட்டவர் நட்பினை 799
ஈமத்தீயில் நினைப்பினும் நெஞ்சம் எரியும்.

10 குற்றமிலார் நட்பைக் கொள்ளுக; எது கொடுத்தாலும் 800
ஒவ்வாதார் நட்பை உதறித் தள்ளுக.

# நட்பு ஆராய்தல்



1 நாடாது நட்டலின் கேடு இல்லை; நட்டபின், 791
வீடு இல்லை, நட்பு ஆள்பவர்க்கு.

2 ஆய்ந்து ஆய்ந்து கொள்ளாதான் கேண்மை, கடைமுறை, 792
தான் சாம் துயரம் தரும்.

3 குணனும், குடிமையும், குற்றமும், குன்றா 793
இனனும், அறிந்து யாக்க நட்பு.

4 குடிப் பிறந்து, தன்கண் பழி நாணுவானைக் 794
கொடுத்தும் கொளல் வேண்டும், நட்பு.

5 அழச் சொல்லி, அல்லது இடித்து, வழக்கு அறிய 795
வல்லார் நட்பு ஆய்ந்து கொளல்!.

6 கேட்டினும் உண்டு, ஓர் உறுதி-கிளைஞரை 796
நீட்டி அளப்பது ஓர் கோல்.

7 ஊதியம் என்பது ஒருவற்குப் பேதையார் 797
கேண்மை ஒரீஇ விடல்.

8 உள்ளற்க, உள்ளம் சிறுகுவ! கொள்ளற்க, 798
அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு!.

9 கெடும் காலைக் கைவிடுவார் கேண்மை, அடும் காலை 799
உள்ளினும், உள்ளம் சுடும்.

10 மருவுக, மாசு அற்றார் கேண்மை! ஒன்று ஈத்தும் 800
ஒருவுக, ஒப்பு இலார் நட்பு!.

## பழைமை

### தெளிவுரை

1 நல்ல நட்பு என்பது யாது? எவ்வகையாலும்
உறவை முரித்துக் கொள்ளாத நட்பு. 801

2 நட்புக்கு இலக்கணம் உரிமையோடு செய்தல்;
அச்செயலுக்கு மகிழ்தல் உயர்ந்தோர் கடமை. 802

3 உரிமையோடு செய்ததை உடன்படா விட்டால்
பழகிய பழக்கத்தின் பயன் என்னவோ? 803

4 உரிமையோடு நண்பர் கேளாது செய்தால்
அங்ஙனம் செய்வதை ஆவலோடு எதிர்பார்ப்பர். 804

5 வருந்தும் செயல்களை நண்பர் செய்தால்
அறியாமையோடு உரிமையும் என உணர்க. 805

6 துன்பத்தும் நெடுநாள் நண்பர் தொடர்பினைப்
பண்பில் உயர்ந்தவர் விட்டுவிடார். 806

7 அன்பு நெறியிலே பழகியவர் நண்பன்
தீமை செய்தாலும் அன்பை விடார். 807

8 நண்பரின் பிழைக்குக் காது கொடாதவர்க்கு
நண்பர் பிழை செய்யும் நாள் நன்னாளாகும். 808

9 கெடாமல் வந்த நட்பின் தொடர்பை
விடாமல் போற்றுவாரை உலகம் விரும்பும். 809

10 பழகியவர்பால் பண்பு மாறாதவரைப்
பகைவரும் விரும்புவர். 810

# பழைமை

1 'பழைமை எனப்படுவது யாது?' எனின், யாதும் 801
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு.

2 நட்பிற்கு உறுப்புக் கெழுதகைமை; மற்று அதற்கு 802
உப்பு ஆதல் சான்றோர் கடன்.

3 பழகிய நட்பு எவன் செய்யும்-கெழுதகைமை 803
செய்தாங்கு அமையாக்கடை?.

4 விழைதகையான் வேண்டியிருப்பர்-கெழுதகையான் 804
கேளாது நட்டார் செயின்.

5 பேதைமை ஒன்றோ, பெருங்கிழமை என்று உணர்க- 805
நோ தக்க நட்டார் செயின்!.

6 எல்லைக்கண் நின்றார் துறவார்-தொலைவிடத்தும், 806
தொல்லைக்கண் நின்றார் தொடர்பு.

7 அழிவந்த செய்யினும், அன்பு அறார்-அன்பின் 807
வழிவந்த கேண்மையவர்.

8 கேள் இழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு 808
நாள், இழுக்கம் நட்டார் செயின்.

9 கெடாஅர், வழிவந்த கேண்மையார் கேண்மை 809
விடாஅர் விழையும், உலகு.

10 விழையார் விழையப்படுப-பழையார்கண் 810
பண்பின் தலைப்பிரியாதார்.

# தீ நட்பு

## தெளிவுரை

1 தீயவர் ஆர்வம் காட்டினாலும் அவர் நட்பு வளர்வதைவிடக் குறைவது நல்லது. 811

2 விடைக்குமானால் பழகி இல்லையானால் கைவிடும் தீயவர் நட்பு இருந்தாலென்? போனால் ஏன்? 812

3 வரும்படி பார்க்கும் நண்பரும் பரத்தையரும் திருடரும் தம்முள் சமம். 813

4 போரில் கால்வாங்கும் குதிரை போன்றவரின் உறவைக் காட்டிலும் தனிமை நல்லது. 814

5 உதவி செய்தும் பயனில்லாச் சின்னவர் நட்பு இருப்பதினும் இல்லாமை நல்லது. 815

6 பேதையின் பெருநட்பைவிட அறிஞரின் பகை கோடி மடங்கு நல்லது. 816

7 முகத்தளவில் மலரும் நட்பைக் காட்டிலும் பகை பத்துக்கோடி நல்லது. 817

8 முடிக்கக் கூடிய காரியத்தைச் செய்யாதவரின் நட்பினைச் சொல்லாதே நழுவ விடுக. 818

9 செயல் வேறு சொல் வேறு என்பவரின் நட்பு கனவிலும் நன்மை தராது. 819

10 வீட்டில் புகழ்ந்து வெளியில் தூற்றுபவரின் தொடர்பினைச் சிறிதும் வரவொட்டாதே. 820

# தீ நட்பு

1 பருகுவார் போலினும், பண்பு இலார் கேண்மை 811
பெருகலின் குன்றல் இனிது.

2 உறின் நட்டு, அறின் ஒரூஉம் ஒப்பு இலார் கேண்மை 812
பெறினும், இழப்பினும், என்?.

3 உறுவது சீர்தூக்கும் நட்பும், பெறுவது 813
கொள்வாரும், கள்வரும் நேர்.

4 அமரகத்து ஆற்றறுக்கும் கல்லா மா அன்னார் 814
தமரின், தனிமை தலை.

5 செய்து ஏமம் சாரா, சிறியவர் புன் கேண்மை 815
எய்தலின் எய்தாமை நன்று.

6 பேதை பெருங் கெழீஇ நட்பின், அறிவு உடையார் 816
ஏதின்மை கோடி உறும்.

7 நகை வகையர் ஆகிய நட்பின், பகைவரான் 817
பத்து அடுத்த கோடி உறும்.

8 ஒல்லும் கருமம் உடற்றுபவர் கேண்மை 818
சொல்லாடார், சோரவிடல்!.

9 கனவினும் இன்னாது மன்னோ-வினை வேறு 819
சொல் வேறு பட்டார் தொடர்பு!.

10 எனைத்தும் குறுகுதல் ஓம்பல்-மனைக் கெழீஇ, 820
மன்றில் பழிப்பார் தொடர்பு!.

## கூடா நட்பு

### தெளிவுரை

1 உள்ளம் பொருந்தாது ஒழுகுபவர் நட்பு 821
வாய்ப்பு வரின் அடிக்கும் பட்டறையாம்.

2 உறவுபோல நடிக்கும் வஞ்சகரின் நட்பு 822
பரத்தை மனம் போல மாறுபடும்.

3 நல்ல பல நூல்களைக் கற்றிருந்தாலும் 823
வஞ்சகர்க்கு நல்ல மனம் வாராது.

4 முகத்திலே புன்சிரிப்புக் காட்டி அகத்திலே 824
கொடிய வஞ்சகரை அஞ்ச வேண்டும்.

5 மனத்தில் ஒட்டாதவரை எந்த அளவிலும் 825
சொல்லினால் நம்புதல் கூடாது.

6 நண்பர் போல நல்லன கூறினாலும் 826
தீயவர் கருத்து உடனே தெரிந்து விடும்.

7 பகைவரின் சொற்பணிவு கண்டு ஏமாறாதே; 827
வில்லின் வளைவு தீமைக்கு அறிகுறி.

8 பகைவர் தொழுத கைக்குள் படையிருக்கும்; 828
அவர் அழுத கண்ணீரும் படையாகும்.

9 மிகவும் பழகி உள்ளே இகழ்பவருடன் 829
நீயும் மகிழப் பேசி நட்பைக் குறைக்க.

10 பகைவன் நண்பனாக வரும் சமயம் 830
முகத்தால் ஏற்று அகத்தால் நட்பை விடுக.

# கூடா நட்பு

1 சீர் இடம் காணின், எறிதற்குப் பட்டடை- 821
நேரா நிரந்தவர் நட்பு.

2 இனம் போன்று இனம் அல்லார் கேண்மை, மகளிர் 822
மனம் போல, வேறுபடும்.

3 பல நல்ல கற்றக்கடைத்தும், மனம் நல்லர் 823
ஆகுதல் மாணார்க்கு அரிது.

4 முகத்தின் இனிய நகாஅ, அகத்து இன்னா 824
வஞ்சரை அஞ்சப்படும்.

5 மனத்தின் அமையாதவரை, எனைத்து ஒன்றும், 825
சொல்லினான் தேறற்பாற்று அன்று.

6 நட்டார்போல் நல்லவை சொல்லினும், ஒட்டார் சொல் 826
ஒல்லை உணரப்படும்.

7 சொல் வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க-வில் வணக்கம் 827
தீங்கு குறித்தமையான்!.

8 தொழுத கையுள்ளும் படை ஒடுங்கும்; ஒன்னார் 828
அழுத கண்ணீரும், அனைத்து.

9 மிகச் செய்து, தம் எள்ளுவாரை நகச் செய்து, 829
நட்பினுள் சாப் புல்லற்பாற்று.

10 பகை நட்பு ஆம் காலம் வருங்கால், முகம் நட்டு, 830
அகம் நட்பு ஒரீஇவிடல்!.

## தெளிவுரை

1 பேதைமை என்ற நிலையின் இயல்பு யாது? 831
தீமையைக் கொண்டு நன்மையை விடுதல்.

2 அறியாமையுள் எல்லாம் பெரிய அறியாமை 832
வேண்டாத பொருள்மேல் விருப்பம் கொள்வது.

3 வெட்கமின்மை நாட்டமின்மை உறுதியின்மை 833
பேணுதலின்மை பேதையின் இயல்புகள்.

4 கற்றும் உணர்ந்தும் கற்பித்தும் தான் மட்டும் 834
அடங்காத அறிவிலிபோல் அறிவிலி இல்லை.

5 எழுபிறப்பிலும் தான் தங்கும் நரகத்தினை 835
ஒரு பிறப்பிலேயே பேதை தேடிக் கொள்வான்.

6 செயலறியாத பேதை செய்யப் புகுந்தால் 836
பொய்சொல்வான்; கைவிலங்கும் கொள்வான்.

7 பேதை உ ரிமையால் பெருஞ்செல்வம் பெற்றால் 837
அயலவர் கொழுப்பர்; உறவினர் வாடுவர்.

8 அறிவிலிக்குப் பொருளும் கிடைக்குமாயின் 838
பைத்தியம் கட்குடித்த நிலை போலாகும்.

9 பேதையின் உறவு பெரிதும் இனியது: 839
பிரியுங்கால் யாதும் வருத்தம் இல்லை.

10 அறிஞரின் அவைக்கு அறிவிலி போதல் 840
கழுவாதகாலைத் தவப்பள்ளியில் வைப்பதுபோல்.

# பேதைமை

1 பேதைமை என்பது ஒன்று; 'யாது?' எனின், ஏதம் கொண்டு, 831
ஊதியம் போகவிடல்.

2 பேதைமையுள் எல்லாம் பேதைமை, காதன்மை 832
கை அல்லதன்கண் செயல்.

3 நாணாமை, நாடாமை, நார் இன்மை, யாது ஒன்றும் 833
பேணாமை,-பேதை தொழில்.

4 ஓதி உணர்ந்தும், பிறர்க்கு உரைத்தும், தான் அடங்காப் 834
பேதையின் பேதையார் இல்.

5 ஒருமைச் செயல் ஆற்றும், பேதை-எழுமையும் 835
தான் புக்கு அழுந்தும் அளறு!.

6 பொய்படும் ஒன்றோ; புனை பூணும்;-கை அறியாப் 836
பேதை வினை மேற்கொளின்.

7 ஏதிலார் ஆர, தமர் பசிப்பர்-பேதை 837
பெருஞ் செல்வம் உற்றக்கடை.

8 மையல் ஒருவன் களித்தற்றால்-பேதை தன் 838
கை ஒன்று உடைமை பெறின்.

9 பெரிது இனிது, பேதையார் கேண்மை-பிரிவின்கண் 839
பீழை தருவது ஒன்று இல்!.

10 கழாஅக் கால் பள்ளியுள் வைத்தற்றால்-சான்றோர் 840
குழா அத்துப் பேதை புகல்.

# புல்லறிவு ஆண்மை

## தெளிவுரை

| | | |
|---|---|---|
| 1 | அறிவு வறுமையே வறுமை; பிறவற்றை<br>வறுமையாக உலகம் கருதாது. | 841 |
| 2 | அறிவிலான் மனம் உவந்து ஈவானாயின்<br>கொள்பவன் நல்வினையே காரணம். | 842 |
| 3 | அறிவிலி தானே தேடிக்கொள்ளும் துயரைப்<br>பகைவரும் அவனுக்குச் செய்ய இயலாது. | 843 |
| 4 | அறிவின்மை என்பது யாது? எனக்கு<br>எல்லாம் தெரியும் என்னும் இறுமாப்பு. | 844 |
| 5 | படியாதவற்றை மேற்கொண்டு நடப்பின்<br>நன்கு படித்ததிலும் உலகம் ஐயம் கொள்ளும். | 845 |
| 6 | உன்பால் குற்றத்தை ஒழிக்காத போது<br>ஆடை கட்டுதல் அறிவாமோ? | 846 |
| 7 | மறைவான செய்தியைச் சொல்லிவிடும் அறிவிலி<br>தனக்குத் தானே கேடாவான். | 847 |
| 8 | சொன்னாலும் செய்யான் தன்னாலும் தெளியான்<br>இவன் சாகும் வரை பிறர்க்கு நோயாவான். | 848 |
| 9 | அறிவிலி தான் கண்டதையே கண்டவன்;<br>அவனை அறிவுறுத்துபவன் அறியாதவன். | 849 |
| 10 | உலகம் கூறும் உண்மையை மறுப்பவன்<br>காணும் பேயாகக் கருதப் படுவான். | 850 |

# புல்லறிவு ஆண்மை



1 அறிவு இன்மை, இன்மையுள் இன்மை, பிறிது இன்மை
இன்மையா வையாது, உலகு. 841

2 அறிவு இலான் நெஞ்சு உவந்து ஈதல், பிறிது யாதும்
இல்லை, பெறுவான் தவம். 842

3 அறிவு இலார் தாம் தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்கும் செய்தல் அரிது. 843

4 'வெண்மை எனப்படுவது யாது?' எனின், 'ஒண்மை
உடையம் யாம்!' என்னும் செருக்கு. 844

5 கல்லாத மேற்கொண்டு ஒழுகல், கசடு அற
வல்லதூஉம், ஐயம் தரும். 845

6 அற்றம் மறைத்தலோ புல்லறிவு-தம்வயின்
குற்றம் மறையாவழி. 846

7 அரு மறை சோரும் அறிவு இலான் செய்யும்,
பெரு மிறை, தானே தனக்கு. 847

8 ஏவவும் செய்கலான், தான் தேறான், அவ் உயிர்
போஓம் அளவும் ஓர் நோய். 848

9 காணாதாற் காட்டுவான் தான் காணான்; காணாதான்
கண்டான் ஆம், தான் கண்ட ஆறு. 849

10 உலகத்தார், 'உண்டு' என்பது 'இல்' என்பான் வையத்து
அலகையா வைக்கப்படும். 850

## தெளிவுரை

1 மாறுபாடு என்னும் குணம் உயிர்களுக்குள் 851
பகையுணர்ச்சியைப் பரப்பும் நோயாகும்.

2 பகைமை கருதித் தகாதன செய்தாலும் 852
மாறுபாடு கருதிக் கொடுமை செய்யற்க.

3 மாறுபாடு என்னும் தொழுநோய் நீங்கினால் 853
அழிவில்லாத அறிவுவிளக்கம் உண்டாகும்.

4 மாறுபாடு என்னும் பெருந்துன்பம் ஒழிந்தால் 854
சிறந்த இன்பம் விளையும்.

5 மாறுபாட்டுக்கு ஒதுங்கிப் போய்விடுவாரை 855
வம்புக்குத் தூண்ட யாரால் இயலும்?

6 வீம்பு மிகுதியை விரும்புபவன் வாழ்வு 856
சிதைதலும் அழிதலும் நாளாகாது.

7 மாறுபடுதலை விரும்பும் கொடிய அறிவினர் 857
மேன்மை தரும் உண்மைப் பொருளை அறியார்.

8 மாறுபாட்டுக்கு ஒதுங்குதல் முன்னேற்றமாம்; 858
ஒதுங்காது நிமிர்ந்தால் கேடு வளரும்.

9 தனக்கு நலம் வரும்போது வேற்றுமை பாரான்; 859
பிறனைக்கெடுக்க வேறுபாட்டைப் பெருக்குவான்.

10 எல்லாத் துன்பமும் வேற்றுமையால் வரும்; 860
நலமான உணர்ச்சி நல்லுறவால் உண்டாம்.

# இகல்

1 இகல் என்ப-எல்லா உயிர்க்கும் பகல் என்னும் 851
பண்புஇன்மை பாரிக்கும் நோய்.

2 பகல் கருதிப் பற்றா செயினும், இகல் கருதி, 852
இன்னா செய்யாமை தலை.

3 இகல் என்னும் எவ்வ நோய் நீக்கின், தவல் இல்லாத் 853
தா இல் விளக்கம் தரும்.

4 இன்பத்துள் இன்பம் பயக்கும்-இகல் என்னும் 854
துன்பத்துள் துன்பம் கெடின்.

5 இகல் எதிர் சாய்ந்து ஒழுக வல்லாரை, யாரே, 855
மிகல் ஊக்கும் தன்மையவர்?.

6 இகலின் மிகல் இனிது என்பவன் வாழ்க்கை 856
தவலும் கெடலும் நணித்து.

7 மிகல் மேவல் மெய்ப் பொருள் காணார்-இகல் மேவல் 857
இன்னா அறிவினவர்.

8 இகலிற்கு எதிர் சாய்தல் ஆக்கம்; அதனை 858
மிகல் ஊக்கின், ஊக்குமாம் கேடு.

9 இகல்காணான், ஆக்கம் வருங்கால்; அதனை 859
மிகல் காணும், கேடு தரற்கு.

10 இகலான் ஆம், இன்னாத எல்லாம்; நகலான் ஆம், 860
நல் நயம் என்னும் செருக்கு.

# பகைமாட்சி

## தெளிவுரை

1 வலியவரோடு முரணுதலை விடுக; தன்னைக் 861
காவாத எளியவரைப் பகைக்க.

2 அன்பும் பெருந்துணையும் வலியும் இல்லாதவன் 862
பகைவன் வலியை எங்ஙனம் தாங்குவான்?

3 துணிவும் அறிவும் ஒழுங்கும் கொடையும் 863
இல்லாதவன் பகைவர்க்கு எளியவன்.

4 பொறுமையும் உறுதியும் சிறிதும் இல்லாதவன் 864
என்றும் யார்க்கும் எளியவன்.

5 வழியும் பொருத்தமும் பழியும் பாராதவன் 865
பண்பும் இல்லாதவன் பகைவர்க்கு இனியவன்.

6 புரியாத சினமும் அளவிலாத காமமும் 866
உடையவனது நிலையைப் பயன்படுத்திக் கொள்க.

7 பக்கத்திருந்தும் புரியாது செய்பவனது 867
எதிர்ப்பை யாது கொடுத்தும் கொள்க.

8 குணமின்றிக் குற்றம்பல கொண்ட அரசன் 868
துணையற்றவன்; பகைவர்க்கு வாய்ப்பானவன்.

9 அறிவற்ற துணைவற்ற பகைவர் கிடைப்பின் 869
பகைப்பவர்க்கு என்றும் நலம் உண்டு.

10 கல்லாதவனை, சினப்பவனை, சிறிய முயற்சியால் 870
பெரும்பொருளீட்டாதவனை அதிகாரம் அடையா.

# பகைமாட்சி

1 வலியார்க்கு மாறு ஏற்றல் ஓம்புக! ஓம்பா, 861
மெலியார்மேல் மேக, பகை!.

2 அன்பு இலன்; ஆன்ற துணை இலன்; தான் துவ்வான்;- 862
என் பரியும், ஏதிலான் துப்பு?.

3 அஞ்சும்; அறியான்; அமைவு இலன்; ஈகலான்;- 863
தஞ்சம் எளியன், பகைக்கு.

4 நீங்கான் வெகுளி; நிறை இலன்;- எஞ்ஞான்றும், 864
யாங்கணும், யார்க்கும், எளிது.

5 வழி நோக்கான்; வாய்ப்பன செய்யான்; பழி நோக்கான்; 865
பண்பு இலன்;- பற்றார்க்கு இனிது.

6 காணாச் சினத்தான், கழி பெருங் காமத்தான்,- 866
பேணாமை பேணப்படும்.

7 கொடுத்தும் கொளல்வேண்டும் மன்ற- அடுத்து இருந்து, 867
மாணாத செய்வான் பகை.

8 குணன் இலனாய், குற்றம் பலஆயின், மாற்றார்க்கு, 868
இனன் இலன் ஆம்; ஏமாப்பு உடைத்து.

9 செறுவார்க்குச் சேண், இகவா, இன்பம்-அறிவு இலா 869
அஞ்சும் பகைவர்ப் பெறின்.

10 கல்லான் வெகுளும் சிறு பொருள், எஞ்ஞான்றும், 870
ஒல்லானை ஒல்லாது, ஒளி.

# பகைத் திறம் தெரிதல்



## தெளிவுரை

1 பகைக்கும் தீய குணத்தை யாரும் 871
விளையாட்டாகவும் விரும்புதல் கூடாது.

2 வில்லுடைய வீரரைப் பகைத்துக் கொண்டாலும் 872
சொல்லுடைய புலவரைப் பகைக்காதே.

3 தனியனாக இருந்து பலரைப் பகைப்பவன் 873
பித்தனைக் காட்டிலும் இரங்கத்தக்கவன்.

4 பகைவனையும் நண்பனாகக்கருதும் உயர்ந்தவனது 874
பெருந்தன்மையால் உலகம் வாழ்கின்றது.

5 தனக்கோ துணையில்லை; பகையோ இரண்டு; 875
ஒரு பகையை நல்ல துணையாக்கிக் கொள்க.

6 தெளியினும் தெளியாவிடினும் துன்பநிலையில் 876
நம்பி விடாதே; பகைத்து விடாதே.

7 துன்பத்தை உணரா நண்பர்க்குச் சொல்லாதே; 877
தன்குறைபாட்டைப் பகைவர் முன் காட்டாதே.

8 வகையாகத் தன்வலி பெருக்கிக் கொண்டால் 878
மாற்றாரின் ஆணவம் தானே மறையும்.

9 முள்ளுடைய மரத்தை முளையிலே அழிக்க; 879
முதிர்ந்துவிடின் வெட்டுவார் கை புண்படும்.

10 பகைப்பவரின் இறுமாப்பை அழிக்காதவர். 880
பகைவர் மூச்சுவிட்டாற் போதும், அழிவர்.

# பகைத் திறம் தெரிதல்



1 பகை என்னும் பண்புஇலதனை, ஒருவன் 871
நகையேயும், வேண்டற்பாற்று அன்று.

2 வில் ஏர் உழவர் பகை கொளினும், கொள்ளற்க- 872
சொல் ஏர் உழவர் பகை!.

3 ஏமுற்றவரினும் ஏழை-தமியனாய்ப் 873
பல்லார் பகை கொள்பவன்.

4 பகை நட்பாக் கொண்டு ஒழுகும் பண்பு உடையாளன் 874
தகைமைக்கண் தங்கிற்று, உலகு.

5 தன் துணை இன்றால்; பகை இரண்டால்; தான் ஒருவன் 875
இன் துணையாக் கொள்க, அவற்றின் ஒன்று!.

6 தேறினும், தேறாவிடினும், அழிவின்கண் 876
தேறான் பகாஅன் விடல்!.

7 நோவற்க, நொந்தது அறியார்க்கு! மேவற்க, 877
மென்மை, பகைவரகத்து!.

8 வகை அறிந்து, தற் செய்து, தற் காப்ப, மாயும்- 878
பகைவர்கண் பட்ட செருக்கு.

9 இளைதாக முள்மரம் கொல்க- களையுநர் 879
கை கொல்லும் காழ்த்த இடத்து!.

10 உயிர்ப்ப உளர் அல்லர் மன்ற-செயிர்ப்பவர் 880
செம்மல் சிதைக்கலாதார்.

# உட்பகை

## தெளிவுரை

1 குளிர்ந்த நீரும் தீமை எனின் விரும்பத்தகா; உறவினர் 881
குணங்களும் கேடுதரின் பிடிக்கா.

2 வாள் போல் கொடிய பகைக்கு அஞ்சவேண்டாம்; 882
உறவுபோல் நடிக்கும் உட்பகைக்கு அஞ்சுக.

3 உட்பகையிலிருந்து தன்னைக் காத்துக்கொள்க; 883
தளருங்கால் மண்வெட்டி போலச் சாய்ந்துவிடும்.

4 உள்ளம் ஒட்டாத உட்பகை இருந்தால் 884
சுற்றம் ஒட்டாதபடி பல துன்பம் தரும்.

5 உறவு முறையில் பகை உண்டாகின் 885
சாகும்படியான பல துன்பம் தரும்.

6 கூட இருப்பவர்பால் கூடாமை ஏற்படின் 886
ஒருநாளும் அழிவிலிருந்து தப்ப முடியாது.

7 தவலையும் மூடியும் போலச் சேர்ந்திருந்தாலும் 887
உட்பகை உள்ள குடியினர் மனம் ஒன்றுபடார்.

8 உட்பகை உள்ள குடி மெல்ல வலிகுறைந்து 888
அரம் அராவிய இரும்புபோல் தேயும்.

9 எள்ளின் பிளவுபோலச் சிறிதாக இருந்தாலும் 889
உட்பகையால் கேடு உண்டு.

10 மனவொற்றுமை இல்லாதவரோடு வாழ்தல் 890
பெட்டியில் பாம்புடன் வாழ்வதைப் போலும்.

1 நிழல் நீரும் இன்னாத இன்னா-தமர் நீரும்,
இன்னா ஆம், இன்னா செயின். 881

2 வாள்போல் பகைவரை அஞ்சற்க! அஞ்சுக,
கேள்போல் பகைவர் தொடர்பு. 882

3 உட்பகை அஞ்சித் தற் காக்க! உலைவு இடத்து,
மட்பகையின் மாணத் தெறும். 883

4 மனம் மாணா உட்பகை தோன்றின், இனம் மாணா
ஏதம் பலவும் தரும். 884

5 உறல் முறையான் உட்பகை தோன்றின், இறல் முறையான்
ஏதம் பலவும் தரும். 885

6 ஒன்றாமை ஒன்றியார்கண் படின், எஞ்ஞான்றும்,
பொன்றாமை ஒன்றல் அரிது. 886

7 செப்பின் புணர்ச்சிபோல் கூடினும், கூடாதே-
உட்பகை உற்ற குடி. 887

8 அரம் பொருத பொன் போல, தேயும் உரம், பொருது-
உட்பகை உற்ற குடி. 888

9 எட் பகவு அன்ன சிறுமைத்தே ஆயினும்,
உட்பகை, உள்ளது ஆம், கேடு. 889

10 உடம்பாடு இலாதவர் வாழ்க்கை-குடங்கருள்
பாம்போடு உடன் உறைந்தற்று. 890

# பெரியாரைப் பிழையாமை

## தெளிவுரை

1 எதுவும் செயவல்லவரின் ஆற்றலைப் பழிக்காதே; 891
அதுவே தன்னைக்காக்கும் தலையாய நெறி.

2 பெரிய ஆற்றலுடையாரை மதியாது நடந்தால். 892
தவிர்க்க முடியாத துன்பம் வரும்

3 தொலைக்க நினைப்பின் தொலைக்க வல்லாரிடம் 893
தொலைய வேண்டின் உன் மனம் போல் நடக்க.

4 வலியாரை மெலியார் வம்புக்கு இழுத்தல் 894
யமனைக் கையால் அழைப்பதுபோலாகும்.

5 வலிமிக்க வேந்தனை எதிர்த்துக்கொண்டவர் 895
எங்கெங்கு போனாலும் உய்ய முடியுமா?

6 தவறி நெருப்பில் விழுந்தாலும் தப்பிக்கலாம்; 896
பெரியவர்க்குத் தவறு செய்தால் பிழைப்பில்லை.

7 எல்லாத் தகுதியும் நிறைந்தவர் சினந்தால் 897
ஏற்றமான வாழ்வும் செல்வமும் என்னாகும்?

8 குன்று போல் வலியுடையார் அழிக்க நினைப்பின் 898
குடிதழைத்து நின்றவரும் வழியின்றி மறைவர்.

9 மேலான கொள்கையர் சீறினால் இடைநடுவே 899
வேந்தனும் அரசு இழப்பான்.

10 சிறப்பு மிக்க பெரியவர் சினந்தால் ஆற்றல் மிக்கவர் 900
துணையிருப்பினும் மீளமுடியாது.

# பெரியாரைப் பிழையாமை



1 ஆற்றுவார் ஆற்றல் இகழாமை; போற்றுவார் 891
போற்றலுள் எல்லாம் தலை.

2 பெரியாரைப் பேணாது ஒழுகின், பெரியாரால் 892
பேரா இடும்பை தரும்.

3 கெடல்வேண்டின், கேளாது செய்க-அடல் வேண்டின், 893
ஆற்றுபவர்கண் இழுக்கு!.

4 கூற்றத்தைக் கையால் விளித்தற்றால்-ஆற்றுவார்க்கு 894
ஆற்றாதார் இன்னா செயல்.

5 யாண்டுச் சென்று யாண்டும் உளர் ஆகார்-வெந் துப்பின் 895
வேந்து செறப்பட்டவர்.

6 எரியான் சுடப்படினும், உய்வு உண்டாம்; உய்யார், 896
பெரியார்ப் பிழைத்து ஒழுகுவார்.

7 வகை மாண்ட வாழ்க்கையும், வான் பொருளும் என் ஆம்- 897
தகை மாண்ட தக்கார் செறின்?.

8 குன்று அன்னார் குன்ற மதிப்பின், குடியொடு, 898
நின்றன்னார் மாய்வர், நிலத்து.

9 ஏந்திய கொள்கையார் சீறின், இடை முரிந்து, 899
வேந்தனும் வேந்து கெடும்.

10 இறந்து அமைந்த சார்புஉடையர் ஆயினும், உய்யார்- 900
சிறந்து அமைந்த சீரார் செறின்.

# பெண்வழிச் சேறல்

## தெளிவுரை

1 பெண்வழி நடப்பவர் பெரும்பயன் அடையார்; 901
காரியம் விரும்புபவர் அங்ஙனம் நடவார்.

2 காரியம் பேணாமல் மனைவிவழி நடப்பவனது 902
மேன்மை பெரிய வெட்கத்துக்கு உரியதாகும்.

3 மனைவிக்குப் பணிந்து நடக்கும் போக்கு 903
என்றும் அறிஞரிடை வெட்கம் தரும்.

4 மனைவிக்கு அஞ்சுபவன் மறுமை இழந்தவன்; 904
அவன் காரியத்திறம் சிறப்பு அடையாது.

5 மனைவிக்கு அஞ்சுபவன் நல்லவர்க்கு 905
நல்லது செய்ய என்றும் அஞ்சுவான்.

6 மனைவியின் அழகிய தோளுக்கு அடங்கியவர் 906
தேவர்போல வாழ்ந்தாலும் சிறப்பில்லை.

7 மனைவி கட்டளைப்படி நடக்கும் ஆடவனைவிட 907
நாணமுடைய பெண்ணே மதிக்கத்தக்கவள்.

8 நல்ல நெற்றியுடையவள் சொற்படி நடப்பவன் 908
நண்பர்க்கு உதவான்; நல்லதும் செய்யான்.

9 மனைவி ஏவக் காரியம் செய்வாரிடத்து 909
அறமும் பொருளும் இன்பமும் இரா.

10 சிந்தனை செறிந்த மனத்திட்பம் உடையார்பால் 910
மனைவி சொற்படி நடக்கும் மடமை இராது.

# பெண்வழிச் சேறல்



1 மனை விழைவார் மாண் பயன் எய்தார்; வினை விழைவார் 901
வேண்டாப் பொருளும் அது.

2 பேணாது பெண் விழைவான் ஆக்கம் பெரியதோர் 902
நாணாக, நாணுத் தரும்.

3 இல்லாள்கண் தாழ்ந்த இயல்புஇன்மை, எஞ்ஞான்றும், 903
நல்லாருள் நாணுத் தரும்.

4 மனையாளை அஞ்சும் மறுமைஇலாளன் 904
வினை ஆண்மை வீறு எய்தல் இன்று.

5 இல்லாளை அஞ்சுவான், அஞ்சும் மற்று எஞ்ஞான்றும், 905
நல்லார்க்கு நல்ல செயல்.

6 இமையாரின் வாழினும், பாடு இலரே-இல்லாள் 906
அமை ஆர் தோள் அஞ்சுபவர்.

7 பெண் ஏவல் செய்து ஒழுகும் ஆண்மையின், நாணுடைப் 907
பெண்ணே பெருமை உடைத்து.

8 நட்டார் குறை முடியார்; நன்று ஆற்றார்;-நன்னுதலாள் 908
பெட்டாங்கு ஒழுகுபவர்.

9 அறவினையும், ஆன்ற பொருளும், பிற வினையும்,- 909
பெண் ஏவல் செய்வார்கண் இல்.

10 எண் சேர்ந்த நெஞ்சத்து, இடன் உடையார்க்கு, எஞ்ஞான்றும், 910
பெண் சேர்ந்து ஆம் பேதைமை இல்.

# வரைவு இல் மகளிர்



## தெளிவுரை

| | | |
|---|---|---|
| 1 | அன்பின்றிப் பொருளை விரும்பும் பரத்தையரின்<br>நயமான சொல் துன்பம் தரும். | 911 |
| 2 | பயனளவு பார்த்து இனிது பேசும் பரத்தையரின்<br>வஞ்சனையை அறிந்து ஒதுங்குக. | 912 |
| 3 | பொருள் விரும்பும் பரத்தையரின் பொய்த்தழுவல்<br>இருட்டறையில் ஒரு பிணம் தழுவியதுபோலும். | 913 |
| 4 | அருளை ஆராயும் அறிவினை யுடையவர்<br>பொருளை ஆராயும் பரத்தையைத் தழுவார். | 914 |
| 5 | இயற்கையறிவோடு நூலறிவும் உடையவர்<br>பொது இன்பப் பெண்டிரைத் தழுவார். | 915 |
| 6 | அழகுத் திமிரால் சிறுநலம் பரப்புவாரது<br>தோள்களை நன்மை நாடுபவர் தொடார். | 916 |
| 7 | பலவற்றைக் கருதிக் கூடும் பரத்தையரின்<br>தோள்களை நெஞ்சுறுதியற்றவரே தீண்டுவர். | 917 |
| 8 | மாயம்வல்ல பரத்தையரின் தழுவல்<br>சிந்தனையற்றவர்க்குத் தெய்வப்பேறு ஆகும். | 918 |
| 9 | மிக இழிந்தவர் கிடக்கும் நரகம் எது?<br>ஒருவரம்பில்லாத பரத்தையரின் தோளாகும். | 919 |
| 10 | திருமகள் கைவிட்டவர்களுக்கு உறவாவன<br>பரத்தையும் கள்ளும் சூதாட்டமும் ஆம். | 920 |

# வரைவு இல் மகளிர்

1 அன்பின் விழையார், பொருள் விழையும் ஆய்தொடியார்
இன் சொல் இழுக்குத் தரும். 911

2 பயன் தூக்கிப் பண்பு உரைக்கும் பண்பு இல் மகளிர்
நயன் தூக்கி, நள்ளா விடல்!. 912

3 பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம்-இருட்டு அறையில்
ஏதில் பிணம் தழீஇயற்று. 913

4 பொருட்பொருளார் புன் நலம் தோயார்-அருட் பொருள்
ஆயும் அறிவினவர். 914

5 பொது நலத்தார் புன் நலம் தோயார்-மதி நலத்தின்
மாண்ட அறிவினவர். 915

6 தம் நலம் பாரிப்பார் தோயார்- தகை செருக்கி,
புன் நலம் பாரிப்பார் தோள். 916

7 நிறை நெஞ்சம் இல்லவர் தோய்வர்-பிற நெஞ்சில்
பேணி, புணர்பவர் தோள். 917

8 'ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்கு' என்ப-
'மாய மகளிர் முயக்கு'. 918

9 வரைவு இலா மாண் இழையார் மென் தோள்-புரை இலாப்
பூரியர்கள் ஆழும் அளறு. 919

10 இரு மனப் பெண்டிரும், கள்ளும், கவறும்.-
திரு நீக்கப்பட்டார் தொடர்பு. 920

# கள் உண்ணாமை

## தெளிவுரை

1 என்றும் கள்ளாசை கொண்டு திரிபவர் 921
வெட்கப்படார். மதிப்புக்குறைவர்.

2 கள் குடியற்க; பெரியோரிடம் மதிப்புப் பெற 922
விரும்பாதார் வேண்டுமானால் குடிக்கட்டும்.

3 கள்ளாட்டம் தாய்க்கும் அருவருப்பைத் தரும்; 923
பெரியவர்க்கு என்ன ஆகும்?

4 கள் குடிக்கும் தகாத பெருங்குற்றம் உடையவரை 924
நாண் என்னும் நங்கை விட்டுப் போவாள்.

5 விலை கொடுத்தும் மெய்ம்மறதியை வாங்குதல் 925
வாழத் தெரியாமையாகும்.

6 துஞ்சினவர் என்பவர் செத்தவரே; 926
கள்ளுண்பவர் என்பவர் நஞ்சுண்பவரே.

7 கள்ளை முடிக்குடித்துக் கண் தடுமாறுபவரின் 927
உள்ளத்தை அறிந்துகொண்டு ஊர்சிரிக்கும்.

8 குடியை மறைக்கலாம் என்பதை விட்டொழி; 928
மறைத்ததைக் குடி உடனே வெளியாக்கும்.

9 குடிகாரனைச் சொல்லித் திருத்துதல் குளத்தில் 929
விழுந்தவனை விளக்கால் தேடுதல் ஒக்கும்.

10 தான் குடியா நிலையில் குடித்தவனைக் காணின் 930
தன் குடிமயக்கத்தை ஒருவன் உணரமாட்டானா?

1 உட்கப் படாஅர், ஒளி இழப்பர், எஞ்ஞான்றும்-
கள்-காதல் கொண்டு ஒழுகுவார். 921

2 உண்ணற்க, கள்ளை! உணில், உண்க, சான்றோரான்
எண்ணப்பட வேண்டாதார்!. 922

3 ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால்; என், மற்றுச்
சான்றோர் முகத்துக் களி!. 923

4 நாண் என்னும் நல்லாள் புறங்கொடுக்கும்-கள் என்னும்
பேணாப் பெருங் குற்றத்தார்க்கு. 924

5 கை அறியாமை உடைத்தே-பொருள் கொடுத்து,
மெய் அறியாமை கொளல். 925

6 துஞ்சினார் செத்தாரின் வேறு அல்லர்;-எஞ்ஞான்றும்
நஞ்சு உண்பார் கள் உண்பவர். 926

7 உள் ஒற்றி உள்ளூர் நகப்படுவர்-எஞ்ஞான்றும்
கள் ஒற்றிக் கண் சாய்பவர். 927

8 களித்து அறியேன் என்பது கைவிடுக-நெஞ்சத்து
ஒளித்ததூஉம் ஆங்கே மிகும்!. 928

9 களித்தானைக் காரணம் காட்டுதல்-கீழ் நீர்க்
குளித்தானைத் தீத் துரீஇயற்று. 929

10 கள் உண்ணாப் போழ்தில், களித்தானைக் காணுங்கால்,
உள்ளான்கொல், உண்டதன் சோர்வு!. 930

## தெளிவுரை

1 வெற்றிதரினும் சூதினை விரும்பாதே; அவ்வெற்றி
தூண்டிற் கொக்கி மீனை விழுங்கினது போலும். 931

2 ஒன்று பெற்றுப் பல இழக்கும் சூதாடிக்கும்
நலமாக வாழும் முறை உண்டாகுமா? 932

3 காயை ஓயாது சொல்லி உருட்டினால்
பொருள் வருவாய் ஓடிப்போய் விடும். 933

4 பல இழிவு தந்து பண்பைக் கெடுக்கும்
சூதுபோல் வறுமை தருவது வேறில்லை. 934

5 சூதாடுகாயும் கழகமும் கையும் விடாது
அழுந்தியவர் வறுமையாகி விடுவர். 935

6 சூதென்னும் மூதேவிக்கு ஆட்பட்டவர்
வயிறு நிறைய உண்ணாது வருந்துவர். 936

7 சூதாடு கழகத்துக்கு நாளும் சென்றால்
பழைய செல்வமும் பண்பும் தொலையும். 937

8 சூது பொருள் கெடுக்கும், பொய்யனாக்கும்;
அருள் கெடுக்கும், துன்பத்தில் அழுத்தும், 938

9 உடையும் செல்வமும் உணவும் மதிப்பும்
கல்வியும் எல்லாம் சூதாடியை அடையா; 939

10 தோற்கத் தோற்கச் சூதில் ஆசைவளரும்;
துன்பம் படப்பட வாழ்வில் பற்றுவளரும். 940

# சூது

1 வேண்டற்க, வென்றிடினும் சூதினை! வென்றதூஉம்,
தூண்டில்-பொன் மீன் விழுங்கியற்று. 931

2 ஒன்று எய்தி, நூறு இழக்கும் சூதர்க்கும் உண்டாம்கொல்-
நன்று எய்தி வாழ்வதோர் ஆறு?. 932

3 உருள் ஆயம் ஓவாது கூறின், பொருள் ஆயம்
போஒய்ப் புறமே படும். 933

4 சிறுமை பல செய்து, சீர் அழிக்கும் சூதின்,
வறுமை தருவது ஒன்று இல். 934

5 கவறும், கழகமும், கையும், தருக்கி
இவறியார்-இல்லாகியார். 935

6 அகடு ஆரார்; அல்லல் உழப்பர்;-சூது என்னும்
முகடியான் மூடப்பட்டார். 936

7 பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்-
கழகத்துக் காலை புகின். 937

8 பொருள் கெடுத்து, பொய் மேற்கொளீஇ, அருள் கெடுத்து,
அல்லல் உழப்பிக்கும்- சூது. 938

9 உடை, செல்வம், ஊண், ஒளி, கல்வி என்று ஐந்தும்
அடையாவாம்-ஆயம் கொளின். 939

10 இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல், துன்பம்
உழத்தொறூஉம் காதற்று, உயிர். 940

# மருந்து

## தெளிவுரை

1 மருத்துவர் கூறும் வாத பித்த கபங்கள்
கூடினாலும் குறைந்தாலும் நோய் தரும். 941

2 முன் உண்டது செரித்தது பார்த்து உண்டால்
உடம்புக்கு மருந்து எதுவும் வேண்டாம். 942

3 செரித்தால் செரிமானம் பார்த்து உண்;
அதுவே உடல் பெற்றவன் நெடுநாள் வாழும் நெறி. 943

4 செரித்தது பார்த்து அம்முறை பற்றி
ஒத்துக்கொள்வதை நன்கு பசித்த பின் உண்க; 944

5 ஒத்துக்கொள்வதையும் அளவாக உண்டால்
உயிர்க்கு யாதும் நோய் இல்லை. 945

6 கழிவறிந்து உண்பவனிடம் உடல் நலம் இருக்கும்;
நிரம்பத்தின்னியிடம் நோய் குடிகொள்ளும். 946

7 பசியளவு தெரியாமல் மிக உண்டால்
நோய் அளவில்லாமல் வரும். 947

8 நோயையும் காரணத்தையும் தீர்க்கும் வழியையும்
மருத்துவன் அறிந்து வெற்றியாகச் செய்க. 948

9 நோயாளியின் நிலையையும் நோயின் நிலையையும்
காலத்தையும் மருத்துவன் அறிந்து செய்க. 949

10 நோயாளி மருத்துவன் மருந்து துணையாளி
என்ற நான்கும் மருத்துவத்தின் கூறுகள். 950

# மருந்து

1 மிகினும் குறையினும், நோய் செய்யும்-நூலோர் 941
வளி முதலா எண்ணிய மூன்று.

2 மருந்து என வேண்டாவாம், யாக்கைக்கு- அருந்தியது, 942
அற்றது போற்றி உணின்.

3 அற்றால், அளவு அறிந்து உண்க! அஃது உடம்பு 943
பெற்றான் நெடிது உய்க்கும் ஆறு.

4 அற்றது அறிந்து, கடைப்பிடித்து, மாறு அல்ல 944
துய்க்க, துவரப் பசித்து!.

5 மாறுபாடு இல்லாத உண்டி மறுத்து உண்ணின், 945
ஊறுபாடு இல்லை, உயிர்க்கு.

6 இழிவு அறிந்து உண்பான்கண் இன்பம்போல், நிற்கும், 946
கழி பேர் இரையான்கண் நோய்.

7 தீ அளவு அன்றித் தெரியான் பெரிது உண்ணின், 947
நோய் அளவு இன்றிப் படும்.

8 நோய் நாடி நோய் முதல் நாடி, அது தணிக்கும் 948
வாய் நாடி, வாய்ப்பச் செயல்!.

9 உற்றான் அளவும், பிணி அளவும், காலமும், 949
கற்றான், கருதிச் செயல்!.

10 உற்றவன், தீர்ப்பான், மருந்து, உழைச்செல்வான், என்று 950
அப் பால் நாற் கூற்றே-மருந்து.

## தெளிவுரை

1 இயற்கையாகவே ஒழுங்கும் நாணமும்
நற்குடிப் பிறந்தாரிடம் சேர்ந்து இருக்கும். 951

2 ஒழுக்கம் உண்மைச்சொல் நாணம் மூன்றிலும்
குடிப்பிறந்தவர் என்றும் குறையார். 952

3 முகமலர்ச்சி கொடை இன்சொல் மதித்தல்
இவை ஒழுங்கான குடியின் இயல்புகள். 953

4 கோடி கோடி பெற்றாலும் உயர்குடியாளர்
குறைவான காரியங்களைச் செய்யார். 954

5 கொடுத்தற்குப் பொருள் சுருங்கிய இடத்தும்
பழங்குடி மக்கள் கொடைத்தன்மையை விடார். 955

6 நற்குடும்பத்துக்கு ஏற்ப நடக்கின்றோம் என்பவர்
வஞ்சகங் கொண்டு பொருந்தாதன் செய்யார். 956

7 வானத்தில் மதிக்கண் களங்கம் போல
உயர்ந்தோர் குற்றம் ஊருக்குத் தெரிந்துவிடும். 957

8 குடும்பப் பண்பில் பற்றில்லா விட்டால்
அவன் குடும்பப் பிறப்பில் ஐயம் தோன்றும். 958

9 நிலத்தின் தன்மையை முளை காட்டும்;
குலத்தின் தன்மையைச் சொல் காட்டும். 959

10 நன்மை வேண்டின் தீயது செய்ய நாணுக;
குலப்பெருமை வேண்டின் யார்க்கும் பணிக. 960

1 இற் பிறந்தார்கண் அல்லது இல்லை-இயல்பாகச் 951
செப்பமும் நாணும் ஒருங்கு.

2 ஒழுக்கமும், வாய்மையும், நாணும், இம் மூன்றும் 952
இழுக்கார்-குடிப் பிறந்தார்.

3 நகை, ஈகை, இன் சொல், இகழாமை, நான்கும் 953
வகை என்ப-வாய்மைக் குடிக்கு.

4 அடுக்கிய கோடி பெறினும், குடிப் பிறந்தார் 954
குன்றுவ செய்தல் இலர்.

5 வழங்குவது உள்வீழ்ந்தக்கண்ணும், பழங்குடி 955
பண்பின் தலைப் பிரிதல் இன்று.

6 சலம் பற்றிச் சால்பு இல செய்யார்-'மாசு அற்ற 956
குலம் பற்றி வாழ்தும்' என்பார்.

7 குடிப்பிறந்தார்கண்-விளங்கும்-குற்றம், விசும்பின் 957
மதிக்கண் மறுப்போல், உயர்ந்து.

8 நலத்தின்கண் நார் இன்மை தோன்றின், அவனைக் 958
குலத்தின்கண் ஐயப்படும்.

9 நிலத்தில் கிடந்தமை கால் காட்டும்;-காட்டும், 959
குலத்தில் பிறந்தார் வாய்ச் சொல்.

10 நலம் வேண்டின், நாண் உடைமை வேண்டும்; குலம் வேண்டின், 960
வேண்டுக, யார்க்கும் பணிவு!

# மானம்

## தெளிவுரை

1 கட்டாயம் செய்ய வேண்டியன என்றாலும்
பெருமைக்குக் குறைவானவற்றைச் செய்யற்க. 961

2 பெருமையொடு பேராற்றல் வேண்டுபவர்
புகழ்களில் மானக் குறைவானவை செய்யார். 962

3 வளம் பெருகும்போது பணிவு வேண்டும்;
வளம் சுருங்கும்போது பெருமிதம் வேண்டும். 963

4 மக்கள் உயர்ந்த தரத்திலிருந்து இறங்கினால்
தலையிலிருந்து விழுந்த மயிர் போல்வர். 964

5 குண்டுமணி அளவு தரக்குறைவாக நடந்தால்
மலைபோல் உயர்ந்தவரும் தாழ்வர். 965

6 மதியாதார் பின்னே மானங்கெட்டு நிற்பதேன்?
புகழ் வருமா? தேவருலகு கிடைக்குமா? 966

7 பகைவருக்குப் பின்போய் வாழ்ந்தான் என்பதினும்
மானத்தோடு கெட்டான் என்பது நல்லது. 967

8 மானத்தின் ஏற்றம் அழியும் நிலையில்
உடலை வளர்த்தல் உயிருக்கு மருந்தாகுமா? 968

9 மயிர் பறிப்பின் இறக்கும் கவரிமான் போன்றவர்
மானம் போவதாயின் உயிரைப் போக்குவர். 969

10 இழிவு நேர்ந்தால் சாகும் மானமுடையவரின்
புகழ் விளக்கை உலகம் தொழுது போற்றும். 970

# மானம்



1 இன்றி அமையாச் சிறப்பின ஆயினும்,
குன்ற வருப விடல். 961

2 சீரினும், சீர் அல்ல செய்யாரே-சீரொடு
பேராண்மை வேண்டுபவர். 962

3 பெருக்கத்து வேண்டும், பணிதல்; சிறிய
சுருக்கத்து வேண்டும், உயர்வு. 963

4 தலையின் இழிந்த மயிர் அனையர்-மாந்தர்
நிலையின் இழிந்தக்கடை. 964

5 குன்றின் அனையாரும் குன்றுவர்-குன்றுவ
குன்றி அனைய செயின். 965

6 புகழ் இன்றால்; புத்தேள் நாட்டு உய்யாதால்; என் மற்று,
இகழ்வார்பின் சென்று நிலை?. 966

7 ஒட்டார் பின் சென்று ஒருவன் வாழ்தலின், அந் நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று. 967

8 மருந்தோ, மற்று ஊன் ஓம்பும் வாழ்க்கை-பெருந்தகைமை
பீடு அழிய வந்த இடத்து?. 968

9 மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர் நீப்பர், மானம் வரின். 969

10 இளி வரின், வாழாத மானம் உடையார்
ஒளி தொழுது ஏத்தும், உலகு. 970

# பெருமை

## தெளிவுரை

1 ஊக்கம் மிகுதியே ஒருவர்க்கு மதிப்பாகும்;
அதனை விட்டு வாழ்தல் என்பது குறைவாகும். 971

2 ஒரு தாய் வயிற்று மக்களுக்குள்ளும்
செயல் வேற்றுமையால் சிறப்பு வேறுபடும். 972

3 மேலிருந்தும் மேலான செய்யாதார் சிறியவர்;
கீழிருந்தும் கீழான செய்யாதார் பெரியவர். 973

4 மகளிர் கற்பைத் தாமே காத்தல் போலப்
பெருமையும் அவரவர் காத்தால் உண்டு. 974

5 பெருமையைக் காத்துக் கொண்டவர் முறையாக
அருமையான காரியங்களைச் செய்து முடிப்பர். 975

6 பெரியவர்களைப் போற்றிக் கொள்ளும் கருத்து
சிறியவர்கள் அறிவிற் படுவதில்லை. 976

7 சிறப்புக்கள் இழிந்தவர்களைச் சேருமாயின்
தாறுமாறான காரியங்களே நடக்கும். 977

8 என்றும் பணிதல் பெருமையின் இயல்பு;
தற்புகழ்ச்சி பாடுதல் சிறுமையின் இயல்பு. 978

9 தற்செருக்கு இன்மை பெருமையின் குணம்;
தற்செருக்கின் வடிவு சிறுமையின் குணம். 979

10 பிறர் குற்றம் மறைத்தல் பெருமையின் இயல்பு;
குற்றமே கூறுதல் சிறுமையின் இயல்பு. 980

# பெருமை

1 ஒளி, ஒருவற்கு உள்ள வெறுக்கை; இளி ஒருவற்கு, 971
'அஃது இறந்து வாழ்தும்' எனல்.

2 பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பு ஒவ்வா, 972
செய்தொழில் வேற்றுமையான்.

3 மேல் இருந்தும், மேல் அல்லார் மேல் அல்லர்; கீழ் இருந்தும், 973
கீழ் அல்லார், கீழ் அல்லவர்.

4 ஒருமை மகளிரே போல, பெருமையும், 974
தன்னைத்தான் கொண்டு ஒழுகின், உண்டு.

5 பெருமை உடையவர் ஆற்றுவார்-ஆற்றின் 975
அருமை உடைய செயல்.

6 சிறியார் உணர்ச்சியுள் இல்லை-'பெரியாரைப் 976
பேணிக் கொள்வேம்' என்னும் நோக்கு.

7 இறப்பே புரிந்த தொழிற்று ஆம் சிறப்பும்தான் 977
சீர் அல்லவர்கண் படின்.

8 பணியுமாம், என்றும் பெருமை; சிறுமை 978
அணியுமாம், தன்னை வியந்து.

9 பெருமை பெருமிதம் இன்மை; சிறுமை 979
பெருமிதம் ஊர்ந்துவிடல்.

10 அற்றம் மறைக்கும் பெருமை; சிறுமைதான் 980
குற்றமே கூறிவிடும்.

## தெளிவுரை

1 கடமை அறிந்து நிறைகுணம் கொண்டவர்க்கு 981
நல்லவை எல்லாமே கடமைகள் என்பர்.

2 நற்குணமே பெரியவர்தம் நலம்; பிறநலங்கள் 982
அவர்க்கு ஒரு நலமும் இல்லை.

3 அன்பு நாணம் பொது நலம் இரக்கம் வாய்மை 983
ஐந்தும் சால்புக் கட்டடத்தின் தூண்கள்.

4 ஓருயிரையும் கொல்லாமை தவமாகும்; 984
யாரையும் குறைகூறாமை சால்பாகும்.

5 வலியார்க்கு வலியாவது தாழ்ந்து போதல்; 985
அதுவே சான்றோர் பகைவரைத் திருத்தும்படை.

6 நிறைகுணத்தை மதிப்பிடும் உரைகல் யாது? 986
தோல்வியைத் தாழ்ந்தவரிடத்தும் ஏற்பது.

7 துன்பம் செய்தவருக்கும் இன்பம் செய்யாவிடின் 987
நிறைகுணத்துக்கு என்ன பொருள்?

8 சால்பாகிய உறுதி மாத்திரம் இருக்குமானால் 988
வறுமை ஒருவர்க்கு இழிவாகாது.

9 நிறைகுணம் என்னும் கடலுக்குக் கரையானவர் 989
காலம் பிறழ்ந்தாலும் தாம் ஒழுக்கம் பிறழார்.

10 நிறைந்தவர் நிறைகுணம் குறைந்தால் 990
நிலம் பாரம் பொறுக்குமா?

1 கடன் என்ப, நல்லவை எல்லாம்-கடன் அறிந்து, 981
சான்றாண்மை மேற்கொள்பவர்க்கு.

2 குண நலம், சான்றோர் நலனே; பிற நலம் 982
எந் நலத்து உள்ளதூஉம் அன்று.

3 அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மையொடு 983
ஐந்து-சால்பு ஊன்றிய தூண்.

4 கொல்லா நலத்தது, நோன்மை;-பிறர் தீமை 984
சொல்லா நலத்தது, சால்பு.

5 ஆற்றுவார் ஆற்றல் பணிதல்; அது சான்றோர் 985
மாற்றாரை மாற்றும் படை.

6 'சால்பிற்குக் கட்டளை யாது?' எனின், தோல்வி 986
துலை அல்லார்கண்ணும் கொளல்.

7 இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால், 987
என்ன பயத்ததோ, சால்பு?.

8 இன்மை ஒருவற்கு இளிவு அன்று-சால்பு என்னும் 988
திண்மை உண்டாகப்பெறின்.

9 ஊழி பெயரினும், தாம் பெயரார்-சான்றாண்மைக்கு 989
ஆழி எனப்படுவார்.

10 சான்றவர் சான்றாண்மை குன்றின், இரு நிலம்தான் 990
தாங்காது மன்னோ, பொறை!.

# பண்பு உடைமை



## தெளிவுரை

1 பண்புடைமை என்ற நடத்தையை யாரிடத்தும் 991
எளிதாகக் கலந்து பழகுவதால் எய்தலாம்.

2 அன்பு கொள்ளுதலும் குடிக்கேற்ப ஒழுகுதலும் 992
இரண்டும் பண்பான நெறிகளாம்.

3 முகமொப்பு ஒருகுடி மக்கள் ஒப்பாகாது; 993
நிறைந்த குணவொப்பு ஒப்பாகும்.

4 விருப்பத்தோடு நன்மை செய்து வாழ்பவரின் 994
எளிய குணத்தையே உலகம் போற்றும்.

5 நட்பிலும் இகழ்ச்சி பிடிக்காது: பண்பாளரிடம் 995
பகைவரும் மதிக்கும் குணங்களே இருக்கும்.

6 பண்புடையார் இருப்பதால் உலகம் இருக்கிறது; 996
இல்லாவிடின் மண்ணாகிப் போயிருக்குமே.

7 சமுதாயப் பண்பில்லாதவர் அரம்போன்ற 997
கூரிய அறிஞராயினும் மரம் போல்வர்.

8 நட்புக் கொள்ளாமல் தீமை செய்வாரிடத்தும் 998
பண்பொடு பழகாமை இழிவாகும்.

9 யாரோடும் சிரித்துப் பழகத் தெரியாதவர்க்கு 999
இப்பேருலகம் பகற்காலத்தும் இருளாகும்.

10 தீயவன் பெற்ற செல்வம் நல்ல பால் 1000
தீய பாத்திரத்தால் முரிந்தது போலாம்.

# பண்பு உடைமை

1 எண் பதத்தால், எய்தல் எளிது என்ப, யார்மாட்டும், 991
பண்பு உடைமை என்னும் வழக்கு.

2 அன்பு உடைமை, ஆன்ற குடிப்பிறத்தல், இவ் இரண்டும் 992
பண்பு உடைமை என்னும் வழக்கு.

3 உறுப்பு ஒத்தல் மக்கள் ஒப்பு அன்றால்; வெறுத்தக்க 993
பண்பு ஒத்தல், ஒப்பது ஆம் ஒப்பு.

4 நயனொடு நன்றி புரிந்த பயன் உடையார் 994
பண்பு பாராட்டும், உலகு.

5 நகையுள்ளும் இன்னாது, இகழ்ச்சி; பகையுள்ளும் 995
பண்பு உள, பாடு அறிவார் மாட்டு.

6 பண்பு உடையார்ப் பட்டு, உண்டு உலகம்; அது இன்றேல், 996
மண் புக்கு மாய்வதுமன்.

7 அரம் போலும் கூர்மையரேனும், மரம் போல்வர், 997
மக்கள் பண்பு இல்லாதவர்.

8 நண்பு ஆற்றார் ஆகி, நயம் இல செய்வார்க்கும், 998
பண்பு ஆற்றாராதல் கடை.

9 நகல் வல்லர் அல்லார்க்கு மா இரு ஞாலம், 999
பகலும், பாற் பட்டன்று, இருள்.

10 பண்பு இலான் பெற்ற பெருஞ் செல்வம்-நன் பால் 1000
கலம் தீமையால் திரிந்தற்று.

# நன்றி இல் செல்வம்



## தெளிவுரை

1 இடமெல்லாம் பெரும்பொருளை ஈட்டிவைத்து 1001
உண்ணாது செத்தவனுக்கு உரிமை யாதுமில்லை.

2 எல்லாம் பொருளால் ஆகும் என்று கொடாது 1002
இறுக்கிய பேதைக்கு இழிபிறப்பு உண்டாகும்.

3 ஈட்டிய பொருளை இறுகப் பற்றிக்கொண்டு 1003
பழ்விட்ட ஆடவர் பூமிக்குப் பாரம்.

4 ஒருவராலும் விரும்பப் படாத கஞ்சன் 1004
தனக்குப் பின் என்று எதனைக் கருதுகிறான்?

5 பிறர்க்கு வழங்கான் தானும் உண்ணான் 1005
இவனுக்குப் பலகோடி இருந்தால் என்ன?

6 தானும் நுகரான் ஏழைக்கும் ஈயான் 1006
இவன் பெருஞ்செல்வத்துக்கு ஒரு நோய்.

7 ஏழைக்கு யாதும் ஈயாதவனது செல்வம் 1007
அழகுள்ள குமரி மணவாது மூத்தது போலும்.

8 யாராலும் விரும்பப் படாதவனது செல்வம் 1008
நடுவூரில் நஞ்சுமரம் பழுத்தது போலாம்.

9 அன்பின்றித் தன் வாய்வயிற்றைக் கட்டிச் 1009
சேர்த்த பொருளை எடுத்துக்கொள்வார் யாரோ?

10 கொடைச் செல்வர்கள் சிலநாள் வறுமைப்படுதல் 1010
மேகம் வறுமைப்படுவது போலும்.

# நன்றி இல் செல்வம்

1 வைத்தான், வாய் சான்ற பெரும் பொருள்; அஃது உண்ணான் 1001
செத்தான், செயக்கிடந்தது இல்.

2 'பொருளான் ஆம், எல்லாம்' என்று, ஈயாது இவறும் 1002
மருளான், ஆம், மாணாப் பிறப்பு.

3 ஈட்டம் இவறி, இசை வேண்டா ஆடவர் 1003
தோற்றம் நிலக்குப் பொறை.

4 எச்சம் என்று என் எண்ணும் கொல்லோ-ஒருவரால் 1004
நச்சப் படாஅதவன்!.

5 கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு, அடுக்கிய 1005
கோடி உண்டாயினும், இல்.

6 ஏதம், பெருஞ் செல்வம்-தான் துவ்வான், தக்கார்க்கு ஒன்று 1006
ஈதல் இயல்பு இலாதான்.

7 அற்றார்க்கு ஒன்று ஆற்றாதான் செல்வம்- மிகு நலம் 1007
பெற்றாள் தமியள் மூத்தற்று.

8 நச்சப்படாதவன் செல்வம்-நடுவூருள் 1008
நச்சு மரம் பழுத்தற்று.

9 அன்பு ஒரீஇ, தற் செற்று, அறம் நோக்காது, ஈட்டிய 1009
ஒண் பொருள் கொள்வார், பிறர்.

10 சீருடைச் செல்வர் சிறு துனி-மாரி 1010
வறம் கூர்ந்தனையது உடைத்து.

## தெளிவுரை

1 வெட்கம் என்பது தீயசெயலுக்கு நாணுதல்; 1011
பெண்களின் வெட்கம் வேறுவகை.

2 உணவு உடை பின்வழி எல்லார்க்கும் பொது; 1012
வெட்கமே நன்மக்களின் சிறப்பு.

3 உயிரெல்லாம் உடம்பைப்பற்றி நிற்கின்றன; 1013
நிறைகுணம் வெட்கத்தைப் பற்றி நிற்கின்றது.

4 பெரியவர்கட்கு வெட்கம் ஓர் அழகாகும்; 1014
வெட்கமில்லாத வீறுநடை நோயாகும்.

5 பிறர்பழிக்கும் தம்பழிக்கும் நாணுபவரை 1015
வெட்கத்தின் வாழ்விடமென் உலகுபோற்றும்.

6 நாணாகிய வேலியை அமைத்துக் கொண்டன்றி 1016
உயர்ந்தோர் உலகத்தை மதியார்கள்.

7 நாணம் மிக்கவர் அதற்காக உயிர்விடுவர். 1017
உயிருக்காக நாணத்தை விடார்.

8 பிறர் வெட்கப்படுதற்குத் தான் வெட்கப் படாவிடின் 1018
அவன் செயலுக்கு அறம் வெட்கப்படும்.

9 கொள்கை தவறினால் குடி அழியும்; 1019
நாணம் கெட்டால் நன்மை கெடும்.

10 நாணம் இல்லாதாரின் நடமாட்டம் 1020
மரப்பாவை கயிற்றால் நடமாடியது போலும்.

# நாண் உடைமை

1 கருமத்தான் நாணுதல், நாணு; திருநுதல் 1011
நல்லவர் நாணு, பிற.

2 ஊண், உடை, எச்சம், உயிர்க்கு எல்லாம் வேறு அல்ல; 1012
நாண் உடைமை மாந்தர் சிறப்பு.

3 ஊனைக் குறித்த, உயிர் எல்லாம்; நாண் என்னும் 1013
நன்மை குறித்தது, சால்பு.

4 அணி அன்றோ, நாண் உடைமை சான்றோர்க்கு! அஃது இன்றேல் 1014
பிணி அன்றே, பீடு நடை!.

5 'பிறர் பழியும் தம் பழியும் நாணுவார் நாணுக்கு 1015
உறைபதி' என்னும், உலகு.

6 நாண் வேலி கொள்ளாது, மன்னோ, வியல் ஞாலம் 1016
பேணலர்-மேலாயவர்.

7 நாணால் உயிரைத் துறப்பர்; உயிர்ப்பொருட்டால் 1017
நாண் துறவார்;-நாண் ஆள்பவர்.

8 பிறர் நாணத்தக்கது தான் நாணான் ஆயின், 1018
அறம் நாணத் தக்கது உடைத்து.

9 குலம் சுடும், கொள்கை பிழைப்பின், நலம் சுடும், 1019
நாண் இன்மை நின்றக்கடை.

10 நாண் அகத்து இல்லார் இயக்கம்-மரப்பாவை 1020
நாணால் உயிர் மருட்டியற்று.

# குடி செயல் வகை



## தெளிவுரை

1 குடும்பக்கடமை செய்யப் பின்வாங்கேன் என்ற
பெருமைபோலப் பெருமையுடையது வேறில்லை. 1021

2 நீண்ட முயற்சியும் நிறைந்த அறிவும் என்ற
இரண்டின் பெருஞ்செயலால் குடி பெருகும். 1022

3 குடும்பத்தை உயர்த்துவேன் என்பானுக்குத்
தெய்வம் வரிந்து கட்டிக்கொண்டு முன் வரும். 1023

4 தன் குடும்பம் கீழாகாமல் உழைக்கின்றவனுக்கு
இயல்பாக எல்லாம் தானே நிறைவேறும். 1024

5 குற்றமின்றிக் குடும்பம் காத்து வாழ்பவனைச்
சுற்றமாக உலகம் சுற்றிக் கொள்ளும். 1025

6 ஒருவர்க்கு நல்லவீரம் என்பது தான் பிறந்த
வீட்டுப்பொறுப்பைத்தனதாக்கிக்கொள்ளுவதே. 1026

7 போரில் பொறுப்பு பெருவீரரையே சாரும்;
வீட்டுச்சுமை தாங்கவல்லார்மேலே விழும். 1027

8 கடமை செய்வார்க்குக் காலம் என்பது இல்லை;
சோம்பி வீண்பெருமை கருதின் குடிகெடும். 1028

9 குடும்பத்தைக் குற்றப்படாமல் காப்பவனது
உடம்பு துன்பத்தின் உறைவிடமோ? 1029

10 முட்டுக் கொடுக்கும் ஆளில்லாத குடும்பம்
துன்பம் தாக்கினால் அடியோடு விழும். 1030

# குடி செயல் வகை

1 'கருமம் செய'-ஒருவன்-'கைதூவேன்' என்னும் 1021
பெருமையின், பீடு உடையது இல்.

2 ஆள்வினையும், ஆன்ற அறிவும், என இரண்டின் 1022
நீள் வினையான், நீளும் குடி.

3 'குடி செய்வல்' என்னும் ஒருவற்கு, தெய்வம் 1023
மடி தற்று, தான் முந்துறும்.

4 சூழாமல் தானே முடிவு எய்தும்-தம் குடியைத் 1024
தாழாது உஞற்றுபவர்க்கு.

5 குற்றம் இலனாய், குடி செய்து வாழ்வானைச் 1025
சுற்றமாச் சுற்றும், உலகு.

6 நல் ஆண்மை என்பது ஒருவற்குத் தான் பிறந்த 1026
இல் ஆண்மை ஆக்கிக்கொளல்.

7 அமரகத்து வன்கண்ணர் போல, தமரகத்தும் 1027
ஆற்றுவார் மேற்றே, பொறை.

8 குடி செய்வார்க்கு இல்லை, பருவம்; மடி செய்து, 1028
மானம் கருத, கெடும்.

9 இடும்பைக்கே கொள்கலம்கொல்லோ-குடும்பத்தைக் 1029
குற்றம் மறைப்பான் உடம்பு!.

10 இடுக்கண் கால் கொன்றிட, வீழும்-அடுத்து ஊன்றும் 1030
நல் ஆள் இலாத குடி.

## தெளிவுரை

1 உலகம் முன்னேறினாலும் உழவுக்குப் பின்னே;
துயரப் பட்டாலும் உழவே தலைத் தொழில். 1031

2 உழ அஞ்சி ஓடுவாரைத் தாங்குதலால்
உழவரே எல்லார்க்கும் அச்சாணி ஆவர். 1032

3 உழுது உண்டு வாழ்பவரே உரிமையாளர்;
பிறரெல்லாம் உழவரைத்தொழும் அடிமைகள். 1033

4 நெற்கதிரின் நிழலில் வாழும் உழவர்கள்
பலரையும் தம் அரசனுக்குக் கீழ்ப்படுத்துவர். 1034

5 உழுதுண்ணும் உழவர் பிச்சை எடுக்கார்;
பிச்சைக்காரர்களுக்கு ஒளிக்காது கொடுப்பர். 1035

6 உழவர்கள் வேலைநிறுத்தம் செய்வாராயின்
துறவிகட்கும் பற்றுக்கோடு இல்லை. 1036

7 பலப்புழுதியைக் காற்புழுதியாகக் காயவிடின்
பிடியளவு உரமின்றியும் நிலம் நன்கு விளையும். 1037

8 உழுதல் உரமிடல் களை பறித்தல் நீர்பாய்ச்சல்
காத்தல் ஒன்றைவிட ஒன்று நல்லது. 1038

9 உடையவன் வயலுக்கு நாளும் போகாதிருப்பின்
வயல் மனைவி போலப் பிணங்கி வாடும். 1039

10 ஏழை என்று சோம்பியிருப்பாரைக் கண்டால்
நிலமகள் சிரிப்பாள். 1040

# உழவு

1 சுழன்றும் ஏர்ப் பின்னது, உலகம்; அதனால், 1031
உழந்தும் உழவே தலை.

2 உழுவார் உலகத்தார்க்கு ஆணி-அஃது ஆற்றாது 1032
எழுவாரை எல்லாம் பொறுத்து.

3 உழுது, உண்டு, வாழ்வாரே வாழ்வார்; மற்று எல்லாம் 1033
தொழுது, உண்டு, பின் செல்பவர்.

4 பல குடை நீழலும் தம் குடைக்கீழ்க் காண்பர்- 1034
அலகு உடை நீழலவர்.

5 இரவார்; இரப்பார்க்கு ஒன்று ஈவர்-கரவாது 1035
கை செய்து ஊண் மாலையவர்.

6 உழவினார் கைம்மடங்கின், இல்லை-'விழைவதூஉம் 1036
விட்டேம்' என்பார்க்கு நிலை.

7 தொடிப் புழுதி கஃசா உணக்கின், பிடித்து எருவும் 1037
வேண்டாது, சாலப் படும்.

8 ஏரினும் நன்றால், எரு இடுதல்; கட்டபின், 1038
நீரினும் நன்று, அதன் காப்பு.

9 செல்லான் கிழவன் இருப்பின், நிலம் புலந்து 1039
இல்லாளின் ஊடிவிடும்.

10 'இலம்!' என்று அசைஇ இருப்பாரைக் காணின், 1040
நிலம் என்னும் நல்லாள் நகும்.

## தெளிவுரை

1 வறுமைபோலக் கொடியது ஒன்று உண்டா? 1041
அதுபோலக் கொடுமையுடையது அதுவே.

2 வறுமை என்ற பேர்பெற்ற பாவி 1042
எப்பிறப்பிலும் தொடர்ந்து வரும்.

3 வறுமைப்பிடி வழிவந்த குடிப்புகழையும் 1043
உடல் வனப்பையும் ஒருங்கே அழிக்கும்.

4 வறுமை உயர்குடிப் பிறந்தாருக்கும் 1044
தாழ்வான சொல்லைச் சொல்லச் செய்யும்.

5 வறுமையாகிய நெருக்கடியில் 1045
பல துன்பங்கள் வந்து சேரும்.

6 நல்ல பொருளை நன்றாகச் சொன்னாலும் 1046
வறியவர் சொல் ஏறாது.

7 வாழ்வுக்குப் பொருந்தாத வறுமை வரின் 1047
பெற்ற தாயும் யாரோ எனப் பார்ப்பாள்.

8 நேற்றும் வந்த கொலை போன்ற வறுமை 1048
இன்றும் என்னை வாட்டுதற்கு வருமோ?

9 நெருப்பிற்கூட உறங்கவும் செய்யலாம்; 1049
வறுமையில் சிறிதும் கண்மூட முடியாது.

10 வறியவர் முற்றும் துறவியாகாது இருத்தல் 1050
உப்புக்கும் கஞ்சிக்கும் தண்டம்.

# நல்குரவு

1 'இன்மையின் இன்னாதது யாது?' எனின், இன்மையின்
இன்மையே இன்னாதது. 1041

2 இன்மை என ஒரு பாவி, மறுமையும்
இம்மையும் இன்றி, வரும். 1042

3 தொல் வரவும் தோலும் கெடுக்கும், தொகையாக-
நல்குரவு என்னும் நசை. 1043

4 இற்பிறந்தார்கண்ணேயும், இன்மை, இளி வந்த
சொல் பிறக்கும் சோர்வு தரும். 1044

5 நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும். 1045

6 நற் பொருள் நன்கு உணர்ந்து சொல்லினும், நல்கூர்ந்தார்
சொல் பொருட் சோர்வு படும். 1046

7 அறம் சாரா நல்குரவு, ஈன்ற தாயானும்,
பிறன் போல நோக்கப்படும். 1047

8 இன்றும் வருவது கொல்லோ-நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு!. 1048

9 நெருப்பினுள் துஞ்சலும் ஆகும்; நிரப்பினுள்
யாது ஒன்றும் கண்பாடு அரிது. 1049

10 துப்புரவு இல்லார் துவரத் துறவாமை
உப்பிற்கும் காடிக்கும் கூற்று. 1050

# இரவு

## தெளிவுரை

1 கேட்கத் தக்கவரிடம் உதவி கேட்க; 1051
ஒளித்தால் அவர்க்குப் பழி, உனக்கு இல்லை.

2 கேட்ட பொருள்கள் கடினமின்றிக் கிடைப்பின் 1052
உதவி கேட்பதும் மகிழ்ச்சியைத் தரும்.

3 ஒளிக்காத மனமும் கடமையுணர்ச்சியும் 1053
உடையவர் முன் நின்று இரத்தலும் ஓர் அழகு.

4 ஒளிப்பதைக் கனவிலும் அறியாதாரிடம் 1054
சென்று கேட்பது கொடுப்பதை ஒக்கும்.

5 நேர்நின்று ஒருவர் இரக்க முற்படுவது 1055
ஒளிக்காதவர் உலகத்து இருப்பதால் அன்றோ.

6 ஒளிக்கும் துயரம் இல்லாரைக் கண்டால் 1056
வறுமைத் துயரம் எல்லாம் போய்விடும்.

7 இகழ்ந்து பேசாது கொடுப்பாரைக் கண்டால் 1057
உள்ளம் உள்ளுக்குள்ளே மகிழும்.

8 உதவி கேட்பார் இல்லாவிடின் இப்பேருலகம் 1058
மரப்பாவைபோல உணர்ச்சியற்று நடக்கும்.

9 இரந்து கொள்ள விரும்புவோர் இல்லாதபோது 1059
கொடுப்பவர்க்குப் பெருமிதம் என்ன உண்டு?

10 இரப்பவனுக்குக் கோபம் வருதல் கூடாது; 1060
தான் வறுமைப்படுவதே அதற்குச் சான்று.

1 இரக்க, இரத்தக்கார்க் காணின்! கரப்பின்,
அவர் பழி தம் பழி அன்று. 1051

2 இன்பம் ஒருவற்கு இரத்தல்-இரந்தவை
துன்பம் உறாஅ வரின். 1052

3 கரப்பு இலா நெஞ்சின் கடன் அறிவார் முன் நின்று
இரப்பும் ஓர் ஏஎர் உடைத்து. 1053

4 இரத்தலும் ஈதலே போலும்-கரத்தல்
கனவினும் தேற்றாதார்மாட்டு. 1054

5 கரப்பு இலார் வையகத்து உண்மையான், கண் நின்று,
இரப்பவர் மேற்கொள்வது. 1055

6 கரப்பு இடும்பை இல்லாரைக் காணின், நிரப்பு இடும்பை
எல்லாம் ஒருங்கு கெடும். 1056

7 இகழ்ந்து எள்ளாது ஈவாரைக் காணின், மகிழ்ந்து உள்ளம்
உள்ளுள் உவப்பது உடைத்து. 1057

8 இரப்பாரை இல்லாயின், ஈர்ங்கண் மா ஞாலம்
மரப்பாவை சென்று வந்தற்று. 1058

9 ஈவார்கண் என் உண்டாம், தோற்றம்-இரந்து கோள்
மேவார் இலாஅக்கடை?. 1059

10 இரப்பான் வெகுளாமை வேண்டும்; நிரப்பு இடும்பை
தானேயும் சாலும் கரி. 1060

# இரவு அச்சம்



## தெளிவுரை

1 ஒளிக்காது மகிழ்ந்து கொடுக்கும் அன்பரிடத்தும், 1061
ஒன்றுபோய்க் கேளாமை கோடி நல்லது.

2 பிச்சையாலும் வாழ ஏற்படுத்தி இருப்பின் 1062
படைத்தவன் கெட்டு அலைவானாக.

3 வறுமைத் துன்பத்தை வாங்கித் தீர்ப்பேன் 1063
என்பது பெரிய முரட்டுத்தனமாம்.

4 இல்லாத போதும் இரக்காத நிறைகுணம் 1064
வீடு நிறைந்த செல்வத் தன்மை உடையது.

5 உழைப்பால் வந்தது கஞ்சித் தண்ணீராயினும் 1065
அதனை உண்பதுபோல் சுவை வேறில்லை.

6 பசுவுக்குத் தண்ணீர் என்று கேட்டாலும் 1066
கேட்ட நாவிற்குப் பெருமை இல்லை.

7 கேட்டாலும் ஒளிப்பாரிடம் கேளாதீர் என்று 1067
இரப்பாரை எல்லாம் கேட்டுக் கொள்வேன்.

8 பிச்சை என்னும் துணையற்ற படகு 1068
ஒளிப்பாகிய பாறை மோதின் உடைந்துவிடும்.

9 பிச்சையை நினைத்தால் மனம் குலையும்; 1069
மறைப்பதை நினைத்தால் மனம் சாகும்.

10 கேட்பவருக்குக் கேட்டளவில் போகும் உயிர் 1070
மறைப்பவருக்குப் போகாது எங்கிருக்கும்?

# இரவு அச்சம்



1 கரவாது, உவந்து ஈயும் கண் அன்னார்கண்ணும்
இரவாமை கோடி உறும். 1061

2 இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின், பரந்து
கெடுக, உலகு இயற்றியான்!. 1062

3 'இன்மை இடும்பை இரந்து தீர்வாம்' என்னும்
வன்மையின் வன்பாட்டது இல். 1063

4 இடம் எல்லாம் கொள்ளாத் தகைத்தே-இடம் இல்லாக்
காலும், இரவு ஒல்லாச் சால்பு. 1064

5 தெள் நீர் அடு புற்கை ஆயினும், தாள் தந்தது
உண்ணலின் ஊங்கு இனியது இல். 1065

6 'ஆவிற்கு நீர்' என்று இரப்பினும், நாவிற்கு
இரவின் இளிவந்தது இல். 1066

7 இரப்பன், இரப்பாரை எல்லாம்-'இரப்பின்,
கரப்பார் இரவன்மின்' என்று. 1067

8 இரவு என்னும் ஏமாப்பு இல் தோணி, கரவு என்னும்
பார் தாக்க, பக்கு விடும். 1068

9 இரவு உள்ள, உள்ளம் உருகும்; கரவு உள்ள,
உள்ளதூஉம் இன்றிக் கெடும். 1069

10 கரப்பவர்க்கு யாங்கு ஒளிக்கும்கொல்லோ-இரப்பவர்
சொல்லாடப் போஒம் உயிர்!. 1070

## தெளிவுரை

1 கயவர் மக்கள் போன்றே இருப்பர்; அன்ன
வடிவொற்றுமையை யாம் கண்டதில்லை. 1071

2 மெய்யறிஞர் போலக் கயவரும் மகிழ்வுடையர்;
ஏன்? மனத்தில் எதற்கும் கவலைப் படார். 1072

3 கயவர்கள் அரசர் போன்றவர்கள்; ஏன்?
தாம் விரும்பியபடியே நடப்பார்கள். 1073

4 கயவர் தம்மினும் இழிந்தவரைக் கண்டால்
அவரால் போற்றப்பட்டு இறுமாப்பர். 1074

5 அச்சமே கயவர்களின் இயல்பு;
புகழாசை இருந்தால் சிறிது இருக்கலாம். 1075

6 கயவர் அறிவிக்கும் பறைபோல்வர்;ஏன்?
மறைச்செய்தியைப் பிறரிடம் போய்க்கூறுவர். 1076

7 பல்லை உடைக்கும் கொடுங்கையர்க்கு அன்றிக்
கயவர்கள் எச்சிற்கையும் உதறமாட்டார்கள். 1077

8 சொன்ன அளவிலே பயன் செய்வர் மேலோர்;
கரும்புபோல் நசுக்கின் பயன் செய்வர் கீழோர். 1078

9 உண்டு உடுத்து நடப்பதைக் கண்டாலே
அவர்கள்மேல் குற்றஞ் சுமத்துவான் கயவன். 1079

10 எதற்குத் தகுதி கயவர்? ஏதும் கிடைப்பின்
விரைந்து தன் மானத்தை விற்கத் தகுதி. 1080

# கயமை

1 மக்களே போல்வர், கயவர்; அவர் அன்ன 1071
ஒப்பாரி யாம் கண்டது இல்.

2 நன்று அறிவாரின் கயவர் திரு உடையர்- 1072
நெஞ்சத்து அவலம் இலர்!.

3 தேவர் அனையர், கயவர்-அவரும் தாம் 1073
மேவன செய்து, ஒழுகலான்!.

4 அகப் பட்டி ஆவாரைக் காணின், அவரின் 1074
மிகப்பட்டுச் செம்மாக்கும், கீழ்.

5 அச்சமே கீழ்களது ஆசாரம்; எச்சம் 1075
அவா உண்டேல், உண்டாம் சிறிது.

6 அறை பறை அன்னர் கயவர்-தாம் கேட்ட 1076
மறை பிறர்க்கு உய்த்து உரைக்கலான்.

7 ஈர்ங் கை விதிரார் கயவர்-கொடிறு உடைக்கும் 1077
கூன் கையர் அல்லாதவர்க்கு.

8 சொல்ல, பயன்படுவர் சான்றோர்; கரும்புபோல் 1078
கொல்ல, பயன்படும் கீழ்.

9 உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின், பிறர்மேல் 1079
வடுக் காண வற்று ஆகும், கீழ்.

10 எற்றிற்கு உரியர் கயவர்-ஒன்று உற்றக்கால், 1080
விற்றற்கு உரியர் விரைந்து.



# 3. இன்பத்துப்பால்

இல்லறம் சிறந்து நல்லறம் அமைய களவையும் கற்பினையும் இன்புற அணிவகுத்து இயம்புவதே இன்பத்துப்பாலாகும்.



# தகை அணங்கு உறுத்தல்



## தெளிவுரை

1 தெய்வமோ மயிலோ தோடணிந்த பெண்ணோ 1081
என்று என் நெஞ்சம் மயங்கும்.

2 பார்த்தவள் மேலும் எதிர்ப்பார்வை பார்த்தல் 1082
கொடுந்தெய்வம் சேனையோடு தாக்கியது போல்.

3 கூற்றை முன்பு கண்டறியேன்; இன்றறிந்தேன்; 1083
பெண்மையும் பெருங்கண்ணும் உடையது.

4 பார்த்தவரின் உயிர்குடிக்கும் கவர்ச்சி கொண்டு 1084
பெண்ணின் கண்கள் போர்செய்கின்றன.

5 இது எமனோ கண்தானோ பெண்மானோ 1085
இவள் பார்வையில் இம் முக்குணமும் உண்டு.

6 வளைந்த புருவம் நேர்நின்று தடுப்பின் 1086
இவள் கண்கள் என்னை நடுக்கா.

7 கைபடாத முலைமேல் கிடக்கும் மெல்லாடை 1087
மதயானைக்கு இட்ட முகமூடி போலும்.

8 போரில் வராதவரும் அஞ்சும் என் ஏற்றம் 1088
இந்த நெற்றி யழகுக்கே உடைந்து விட்டதே

9 மான்பார்வையும் வெட்கமும் உடையவளுக்கு 1089
வேறு அணிகள் போடுதல் எதற்கு?

10 கள் குடித்தால்தான் மகிழ்ச்சிதரும்; 1090
காமம்போல் பார்த்தளவில் மகிழ்ச்சி தருமா?

# தகை அணங்கு உறுத்தல்



1 அணங்குகொல்! ஆய் மயில்கொல்லோ!- கனங்குழை- 1081
மாதர்கொல்! மாலும், என் நெஞ்சு.

2 நோக்கினாள் நோக்கு எதிர் நோக்குதல்-தாக்கு அணங்கு 1082
தானைக் கொண்டன்னது உடைத்து.

3 பண்டு அறியேன், 'கூற்று' என்பதனை; இனி அறிந்தேன்; 1083
பெண்தகையான் பேர் அமர்க் கட்டு.

4 கண்டார் உயிர் உண்ணும் தோற்றத்தான், பெண் தகைப் 1084
பேதைக்கு, அமர்த்தன கண்.

5 கூற்றமோ! கண்ணோ! பிணையோ!- மடவரல் 1085
நோக்கம் இம் மூன்றும் உடைத்து.

6 கொடும் புருவம் கோடா மறைப்பின், நடுங்கு அஞர் 1086
செய்யலமன், இவள் கண்.

7 கடாஅக் களிற்றின்மேல் கண் படாம்-மாதர் 1087
படாஅ முலைமேல் துகில்!.

8 ஒள் நுதற்கு, ஓஒ! உடைந்ததே-ஞாட்பினுள் 1088
நண்ணாரும் உட்கும் என் பீடு!.

9 பிணை ஏர் மட நோக்கும், நாணும் உடையாட்கு 1089
அணி எவனோ, ஏதில தந்து?.

10 உண்டார்கண் அல்லது, அடு நறா, காமம்போல் 1090
கண்டார் மகிழ் செய்தல் இன்று.

# குறிப்பு அறிதல்

## தெளிவுரை

1 இவள் மைக்கண்ணில் இரு பார்வை உண்டு; 1091
ஒன்று நோயாகும். ஒன்று மருந்தாகும்.

2 கண்கொண்டு கவரும் சிறிய பார்வை 1092
இன்பத்தில் சரிபாதியினும் கூடுதலாகும்.

3 பார்த்தாள் பார்த்துக் குனிந்தாள்; அது அவள் 1093
காதற் பாத்தியில் இறைத்த நீராகும்.

4 நான் பார்க்கும்போது நிலம் பார்ப்பாள்; 1094
பாராக்கால் என்னைப் பார்த்துப் புன்சிரிப்பாள்.

5 என்னை நேராகப் பார்க்கவில்லையே யன்றி 1095
ஒருகண்ணை இடுக்கினாற்போலச் சிரிப்பாள்.

6 உறவில்லாதவர் போலச் சொன்னாலும் 1096
வெறுப்பில்லாதவர் சொல் விரைவில் புரியும்.

7 பகையாத கடுஞ்சொல் பகை போல் பார்வை 1097
இவை அயலவர் போன்ற அன்பர் குறிப்பு.

8 யான் பார்க்க நெகிழ்ந்து மெல்லச் சிரிப்பாள்; 1098
மெல்லியலுக்கு அப்போது ஓர் அழகு உண்டு.

9 அயலவர்போல மேலோடாகப் பார்த்தல் 1099
காதலரிடமே உண்டு.

10 கண்ணோடு கண் இணையும் பார்வை இசையின் 1100
வாய்ப்பேச்சுக்கு என்ன பயன் உண்டு?

# குறிப்பு அறிதல்

1 இரு நோக்கு இவள் உண்கண் உள்ளது; ஒரு நோக்கு 1091
நோய் நோக்கு; ஒன்று அந் நோய் மருந்து.

2 கண் களவு கொள்ளும் சிறு நோக்கம் காமத்தின் 1092
செம்பாகம் அன்று; பெரிது.

3 நோக்கினாள்; நோக்கி இறைஞ்சினாள்; அஃது அவள் 1093
யாப்பினுள் அட்டிய நீர்.

4 யான் நோக்கும் காலை நிலன் நோக்கும்; நோக்காக்கால், 1094
தான் நோக்கி, மெல்ல நகும்.

5 குறிக்கொண்டு நோக்காமை அல்லால், ஒரு கண் 1095
சிறக்கணித்தாள் போல நகும்.

6 உறாஅதவர்போல் சொலினும், செறாஅர் சொல் 1096
ஒல்லை உணரப்படும்.

7 செறாஅச் சிறு சொல்லும், செற்றார்போல் நோக்கும்,- 1097
உறாஅர் போன்று உற்றார் குறிப்பு.

8 அசையியற்கு உண்டு, ஆண்டு ஓர் ஏஎர்; யான் நோக்க, 1098
பசையினள், பைய நகும்.

9 ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல் 1099
காதலார் கண்ணே உள.

10 கண்ணொடு கண் இணை நோக்கு ஒக்கின், வாய்ச் சொற்கள் 1100
என்ன பயனும் இல.

# புணர்ச்சி மகிழ்தல்



## தெளிவுரை

1 கண்டு கேட்டு உண்டு முகர்ந்து தொடும் 1101
ஐம்புல இன்பமும் இவளிடமே உண்டு.

2 நோய்வேறு அதற்கு மருந்து வேறு; 1102
இவள் தந்த நோய்க்கோ இவளே மருந்து.

3 தன்காதலியின் மென்தோளில் துயிலுதலைவிடத் 1103
திருமாலின் மேலுலகம் இனிதாமோ?

4 நீங்கினால் சுடும், நெருங்கினால் குளிரும்; 1104
இன்ன தீயை இவள் எங்கிருந்து பெற்றாள்?

5 பூங்கொத்து நிறைந்த கூந்தலவள் தோள்கள் 1105
விரும்பியபோது விரும்பிய பொருள் ஆகியவை.

6 உடல் அணையுந்தோறும் உயிர் தழைத்தலால் 1106
இவளுக்குத் தோள்கள் அமிழ்தால் ஆயவை.

7 அழகிய மாநிறப் பெண்ணைத் தழுவுதல் 1107
தன் வீட்டிலிருந்து தன் பங்கை உண்பதுபோல்,

8 காற்றும் புகாதபடி தழுவும் தழுவல் 1108
காதலர் இருவர்க்கும் பேரின்பமாம்.

9 பிணங்குதல் தெளிதல் சேருதல் இவை 1109
இன்பக் கூட்டுறவினர் பெற்ற பயன்கள்.

10 நகையுடையாளைக் கூடுந்தோறும் காமவுணர்ச்சி 1110
அறிய அறிய அறியாமையை அறிவதுபோலும்.

# புணர்ச்சி மகிழ்தல்



1 கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று, அறியும் ஐம்புலனும் 1101
ஒண்டொடிகண்ணே உள.

2 பிணிக்கு மருந்து பிறமன்; அணியிழை 1102
தன்நோய்க்குத் தானே மருந்து.

3 தாம் வீழ்வார் மென் தோள்-துயிலின் இனிதுகொல்- 1103
தாமரைக்கண்ணான் உலகு?.

4 நீங்கின் தெறூஉம், குறுகுங்கால் தண்ணென்னும், 1104
தீ யாண்டுப் பெற்றாள், இவள்?.

5 வேட்ட பொழுதின் அவை அவை போலுமே- 1105
தோட்டார் கதுப்பினாள் தோள்.

6 உறுதோறு உயிர் தளிர்ப்பத் தீண்டலான், பேதைக்கு 1106
அமிழ்தின் இயன்றன, தோள்.

7 தம் இல் இருந்து, தமது பாத்து உண்டற்றால்- 1107
அம் மா அரிவை முயக்கு.

8 வீழும் இருவர்க்கு இனிதே-வளி இடை 1108
போழப் படாஅ முயக்கு.

9 ஊடல், உணர்தல், புணர்தல் இவை-காமம் 1109
கூடியார் பெற்ற பயன்.

10 அறிதோறு அறியாமை கண்டற்றால்-காமம் 1110
செறிதோறும் சேயிழைமாட்டு.

# நலம் புனைந்து உரைத்தல்



## தெளிவுரை

1 அனிச்சப்பூவே! நற்பண்பு உடையாய் வாழ்க; 1111
என் காதலி உன்னைவிட மென்மையள்

2 நான் ஒருவன் பார்க்கும் இவள்கண், மனமே! 1112
பலர்பார்க்கும் மலர் ஒக்குமென மயங்குகிறாய்.

3 மூங்கில் போலும் தோளிக்குத் தளிரே மேனி 1113
முத்தே பல், மலரே மணம், வேலே கண்.

4 குவளைகள் இவள் கண்ணைக் காண நேர்ந்தால் 1114
உவமையாகோம் என்று தலைசாய்த்துக் குனியும்.

5 ஓர் அனிச்சமலரைக் காம்புடன் சூடினாள்; 1115
இவள் இடைக்கு நல்ல பறைகள் ஒலியா.

6 வானவட்டத்துச் சுழன்றுதிரியும் விண்மீன்கள் 1116
இது திங்கள் இது மாதர் முகம் என அறியா.

7 குறைந்து நிறையும் திங்களுக்குப் போலக் 1117
காதலி முகத்தில் களங்கம் உண்டோ?

8 என்காதலி முகம்போல ஒளிவிட முடியின் 1118
திங்களே நீயும் என்காதலுக்கு உரியை.

9 மலர் கண்ணாளின் முகம் போல் ஆகவிரும்பின் 1119
திங்களே! பலர் பார்க்கத் தோன்றாதே.

10 அனிச்ச மலரும் அன்னத்தின் இறகும் 1120
காதலியின் அடிக்கு நெருஞ்சி முள்.

# நலம் புனைந்து உரைத்தல்



1 நல்நீரை! வாழி!-அனிச்சமே!-நின்னினும்
மெல் நீரள், யாம் வீழ்பவள். 1111

2 மலர் காணின் மையாத்தி-நெஞ்சே!-'இவள் கண்
பலர் காணும் பூ ஒக்கும்!' என்று. 1112

3 முறி, மேனி, முத்தம், முறுவல்; வெறி, நாற்றம்;
வேல், உண்கண்;-வேய்த்தோளவட்கு. 1113

4 காணின், குவளை கவிழ்ந்து நிலன் நோக்கும்-
'மாணிழை கண் ஒவ்வேம்!' என்று. 1114

5 அனிச்சப்பூக் கால் களையாள் பெய்தாள்; நுசுப்பிற்கு
நல்ல படாஅ, பறை. 1115

6 மதியும் மடந்தை முகனும் அறியா,
பதியின் கலங்கிய, மீன். 1116

7 அறுவாய் நிறைந்த அவிர் மதிக்குப் போல
மறு உண்டோ, மாதர் முகத்து!. 1117

8 மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்,
காதலை-வாழி, மதி!. 1118

9 மலர் அன்ன கண்ணாள் முகம் ஒத்திஆயின்,
பலர் காணத் தோன்றல்!-மதி!. 1119

10 அனிச்சமும் அன்னத்தின் தூவியும், மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம். 1120

# காதல் - சிறப்பு உரைத்தல்



## தெளிவுரை

1 கொஞ்சுமொழி பேசும் வெண்பல்லில் ஊறிய நீர் 1121
பாலும் தேனும் கலந்தாற் போலும்.

2 உடம்புக்கும் உயிருக்கும் என்ன உறவு 1122
அன்ன உறவு இவளுக்கும் எனக்கும்.

3 என் நெற்றியழகிக்கு இடம் வேறில்லை; 1123
கருவிழியிற் பாவையே! நீ போய்விடு.

4 புணருங்கால் உயிர் இருத்தல் போன்றவள்; 1124
பிரியுங்கால் அது பிரிதல் போன்றவள்.

5 போராடும் கண்களை யுடையவள் குணங்களை 1125
மறந்தால் நினைப்பேன்; மறக்கவே இல்லை.

6 எம் காதலர் மிகவும் சிறிய வடிவினர்; 1126
கண்ணுள் இருப்பார், இமைப்பின் வருந்தார்.

7 காதலர் கண்ணுள் இருக்கின்றார் ஆதலின் 1127
சிறிது மறைவார் என்றஞ்சி மையும் தீட்டேன்.

8 காதலர் நெஞ்சில் உள்ளார் ஆதலின் 1128
வெந்து போவார் என்று சூடாக உண்ணேன்.

9 இமைத்தால் மறைவாரென இமையேன்:; அதற்கே 1129
அவரை அயலவர் என்று இவ்வூர் தூற்றும்,

10 என்நெஞ்சில் என்றும் மகிழ்ந்து இருக்கின்றார்; 1130
பிரிந்தார் அயலவர் என்று ஊர் பழிக்கும்.

# காதல் - சிறப்பு உரைத்தல்



1 பாலொடு தேன் கலந்தற்றே-பணிமொழி
வால் எயிறு ஊறிய நீர்!. 1121

2 உடம்பொடு உயிரிடை என்ன, மற்று அன்ன-
மடந்தையொடு எம்மிடை நட்பு. 1122

3 கருமணியின் பாவாய்! நீ போதாய்-யாம் வீழும்
திருநுதற்கு இல்லை, இடம்!. 1123

4 வாழ்தல் உயிர்க்கு அன்னள், ஆயிழை; சாதல்
அதற்கு அன்னள், நீங்கும் இடத்து. 1124

5 உள்ளுவன்மன், யான் மறப்பின்; மறப்பு அறியேன்,
ஒள் அமர்க் கண்ணாள் குணம். 1125

6 கண்ணுள்ளின் போகார்; இமைப்பின் பருவரார்;
நுண்ணியர் எம் காதலவர். 1126

7 கண் உள்ளார் காதலவராக, கண்ணும்
எழுதேம், கரப்பாக்கு அறிந்து. 1127

8 நெஞ்சத்தார் காதலவராக, வெய்து உண்டல்
அஞ்சுதும், வேபாக்கு அறிந்து. 1128

9 இமைப்பின், கரப்பாக்கு அறிவல்; அனைத்திற்கே,
'ஏதிலர்' என்னும், இவ் ஊர். 1129

10 உவந்து உறைவர், உள்ளத்துள் என்றும்; 'இகந்து உறைவர்;
ஏதிலர்' என்னும், இவ் ஊர். 1130

# நாணுத் துறவு உரைத்தல்

## தெளிவுரை

1 காமத்தில் பட்டு வருந்தினவர்கட்கு மடல் 1131
ஏறுதலல்லது வேறு பற்றுக்கோடு இல்லை.

2 காமம் தாங்காத உடம்பும் உயிரும் 1132
வெட்கத்தை விட்டு மடல் ஏறத் துணியும்.

3 நாணமும் வீரமும் முன்பிருந்தன; இன்றோ 1133
காமங்கொண்டார் ஏறும் மடற்குதிரை உண்டு.

4 நாணமும் வீரமும் ஆகிய தெப்பம் என்னைக் 1134
காமப் பெருவெள்ளத்தில் தள்ளிவிடுமே.

5 மடலோடு மாலையிற் படும் காமத்துயரை 1135
அடுக்கிய வளையல் அணிந்தவள் தந்தாள்.

6 மடலேறுதலை நடுயாமத்தும் நினைப்பேன்: ஏன்? 1136
காதலியை நினைத்து என் கண்கள் மூடா.

7 கடல் போன்ற காமத்து வருந்தினும் மடலேறாப் 1137
பெண்பிறவியே பெருமைக்கு உரியது.

8 திட்பமற்றவர் அருளத் தக்கவர் என்னாது 1138
காமம் ஒளிக்க முடியாமல் அம்பலப்படும்.

9 இதுவரை யார்க்கும் தெரியாது என்பதனால் 1139
என்காமம் மயங்கித் தெருவெல்லாம் திரியும்.

10 நான் பட்டது தாங்கள் படாமையினால் 1140
பேதையர்கள் என் கண்பார்க்கச் சிரிப்பார்கள்.

# நாணுத் துறவு உரைத்தல்



1 காமம் உழந்து வருந்தினார்க்கு, ஏம 1131
மடல் அல்லது இல்லை, வலி.

2 நோனா உடம்பும் உயிரும், மடல் ஏறும்- 1132
நாணினை நீக்கி நிறுத்து.

3 நாணொடு நல் ஆண்மை பண்டு உடையேன்; இன்று உடையேன், 1133
காமுற்றார் ஏறும் மடல்.

4 காமக் கடும் புனல் உய்க்குமே-நாணொடு 1134
நல் ஆண்மை என்னும் புணை.

5 தொடலைக் குறுந்தொடி தந்தாள், மடலொடு 1135
மாலை உழக்கும் துயர்.

6 மடல் ஊர்தல் யாமத்தும் உள்ளுவேன் மன்ற;- 1136
படல் ஒல்லா, பேதைக்கு என் கண்.

7 கடல் அன்ன காமம் உழந்தும், மடல் ஏறாப் 1137
பெண்ணின் பெருந்தக்கது இல்.

8 'நிறை அரியர்; மன் அளியர்' என்னாது, காமம் 1138
மறை இறந்து, மன்று படும்.

9 'அறிகிலார், எல்லாரும்' என்றே, என் காமம் 1139
மறுகில் மறுகும், மருண்டு.

10 யாம் கண்ணின் காண நகுப, அறிவு இல்லார்- 1140
யாம் பட்ட தாம் படாவாறு.

## தெளிவுரை

1 ஊர் தூற்றுவதால் என் உயிர் வாழ்கின்றது; 1141
நல்லகாலமாக அது பலருக்குத் தெரியாது.

2 மலர்போல் கண்ணாளின் அருமையை அறியாமல் 1142
இந்த ஊர் எனக்கு அலரைத் தந்தது.

3 ஊர்ப்பேச்சு எனக்கு வாராதோ? அதனைப் 1143
பெறாமலே பெற்றது போல் என் மனம் மகிழும்.

4 காதல் ஊர்ப்பேச்சால் கவர்ச்சி அடைகின்றது; 1144
இல்லாவிடின் சிறப்பிழந்து சப்பென்றிருக்கும்.

5 மகிழ மகிழ கள்ளில் ஆசை பெருகும்; 1145
பலர் அறிய அறியக் காதல் சிறக்கும்.

6 அவரைக் கண்டது ஒருநாள்தான்; ஊர்ப்பேச்சோ 1146
திங்களைப் பாம்பு பிடித்தது போலப் பரவியது.

7 ஊர்ப்பேச்சு உரம்; தாயின் கடுஞ்சொல் நீர்; 1147
இப்படியாக வளரும் இக்காதற் பயிர்.

8 ஊர்ப் பேச்சால் காமத் தீயை அணைக்க முடியுமா? 1148
நெய்யூற்றி நெருப்பை நூக்க முடியுமா?

9 அஞ்சாதே என்றவர் பலரறியப் பிரிந்தபோது 1149
ஊர்ப்பேச்சுக்கு அஞ்சி இருக்க முடியுமா?

10 காதலர் அவர் விரும்பினால் அருளுவார்; 1150
இவ்வூர் நாம் எதிர்பார்த்தபடி தூற்றுகின்றது.

# அலர் அறிவுறுத்தல்



1 அலர் எழ, ஆர் உயிர் நிற்கும்; அதனைப் 1141
பலர் அறியார், பாக்கியத்தால்.

2 மலர் அன்ன கண்ணாள் அருமை அறியாது, 1142
அலர் எமக்கு ஈந்தது, இவ் ஊர்.

3 உறாஅதோ, ஊர் அறிந்த கௌவை? அதனைப் 1143
பெறாஅது பெற்றன்ன நீர்த்து.

4 கவ்வையான் கவ்விது, காமம்; அது இன்றேல், 1144
தவ்வென்னும், தன்மை இழந்து.

5 களித்தொறும் கள் உண்டல் வேட்டற்றால்-காமம் 1145
வெளிப்படும்தோறும் இனிது.

6 கண்டது மன்னும் ஒரு நாள்; அலர் மன்னும் 1146
திங்களைப் பாம்பு கொண்டற்று.

7 ஊரவர் கௌவை எருவாக,அன்னை சொல் 1147
நீராக, நீளும்-இந் நோய்.

8 'நெய்யால் எரி நுதுப்பேம்' என்றற்றால்-'கௌவையான் 1148
காமம் நுதுப்பேம்' எனல்.

9 அலர் நாண ஒல்வதோ-'அஞ்சல் ஓம்பு!' என்றார் 1149
பலர் நாண நீத்தக்கடை?.

10 தாம் வேண்டின் நல்குவர், காதலர்; யாம் வேண்டும் 1150
கௌவை எடுக்கும், இவ் ஊர்.

# பிரிவு ஆற்றாமை

## தெளிவுரை

1 பிரியேன் எனின் எனக்குச்சொல்; பிரிந்தால் நின்
வேண்டா வருகையை இருப்பார்க்குச் சொல். 1151

2 அவர் பார்வை இனிமையுடையது; புணர்ச்சியோ
பிரிவுக்கு அஞ்சும் துன்பக் குறிப்பு உடையது. 1152

3 பிரியேன் என்றவர் ஒரு சமயம் பிரிதலால்
நன்கு தெரிந்தவரையும் நம்புதல் அரிதாம். 1153

4 அணைத்துக் கலங்காதே' என்றவர் பிரிந்தால்
உறுதியை நம்பியவர்மேல் குற்றம் உண்டோ? 1154

5 தடுப்பின் புறப்படுவார் பிரிவைத் தடுக்க ;
அவர் பிரியின் நான் இருந்து கூடுதல் எங்கே? 1155

6 பிரிவு பேசும் துணிவுடையர் ஆயின் வந்து
அருளுவார் என எதிர்பார்த்தல் பயனற்றது. 1156

7 மணிக்கட்டிலிருந்து கழலுகின்ற வளையல்கள்
தலைவன் பிரிவை வெளிப்படுத்த வில்லையா? 1157

8 உறவில்லாத ஊரில் வாழ்தல் துன்பம்;
இன்பக் காதலரைப் பிரிதல் பெருந்துன்பம். 1158

9 தீ தொட்டால் சுடும்; காமசுரம் போல
விட்டாலும் சுடுமோ? 1159

10 பொறுத்துத் துன்பம் நீக்கிப் பிரிவைத் தாங்கி
அவருக்குப் பின்னும் இருப்பார் பலர். 1160

# பிரிவு ஆற்றாமை



1 செல்லாமை உண்டேல், எனக்கு உரை; மற்று நின்
வல்வரவு, வாழ்வார்க்கு உரை. 1151

2 இன்கண் உடைத்து அவர் பார்வல்; பிரிவு அஞ்சும்
புன்கண் உடைத்தால், புணர்வு. 1152

3 அரிதுஅரோ, தேற்றம்-அறிவுடையார்கண்ணும்
பிரிவு ஓர் இடத்து உண்மையான். 1153

4 அளித்து, 'அஞ்சல்!' என்றவர் நீப்பின், தெளித்த சொல்
தேறியார்க்கு உண்டோ, தவறு?. 1154

5 ஓம்பின், அமைந்தார் பிரிவு ஓம்பல்! மற்று அவர்
நீங்கின், அரிதால், புணர்வு!. 1155

6 பிரிவு உரைக்கும் வன்கண்ணர் ஆயின், அரிது, 'அவர்
நல்குவர்' என்னும் நசை. 1156

7 துறைவன் துறந்தமை தூற்றாகொல்-முன்கை
இறை இறவாநின்ற வளை!. 1157

8 இன்னாது, இனன் இல் ஊர் வாழ்தல்; அதனினும்
இன்னாது, இனியார்ப் பிரிவு. 1158

9 தொடின் சுடின் அல்லது, காமநோய் போல,
விடின் சுடல் ஆற்றுமோ, தீ?. 1159

10 அரிது ஆற்றி, அல்லல் நோய் நீக்கி, பிரிவு ஆற்றி,
பின் இருந்து, வாழ்வார் பலர். 1160

# படர் மெலிந்து இரங்கல்

## தெளிவுரை

1 நான் காம நோயை மறைக்க மறைக்க அது இறைப்பவர்க்கு ஊற்றுநீர் போலப் பெருகும். 1161

2 மறைக்க முடியவில்லை; நோய் செய்தாருக்கு நாணம் விட்டு உரைக்கவும் முடியவில்லை. 1162

3 பொறுக்காத என் உடம்பினுள் காமமும் நாணமும் உயிர்காவடியின் இருபுறமும் தொங்குகின்றன. 1163

4 காமக்கடல் மட்டும் உண்டு; அதனைக் கடக்கச் சேமத் தெப்பந்தான் இல்லை. 1164

5 துயரத்தை உறவினர்க்குச் செய்ய வல்லவர் பகைவர்க்கு என்னதான் செய்ய மாட்டார்? 1165

6 காம இன்பம் கடலாகும் ; வருத்தும்போது காமத்துன்பம் கடலினும் பெரிதாகும். 1166

7 காம வெள்ளத்து நீந்திக் கரைதெரியேன்; நடுச்சாமத்தும் தனியே விழித்துள்ளேன். 1167

8 எல்லா உயிரையும் துயிலச்செய்து அருளியபின் இரவிற்கு என்னை யல்லது துணையில்லை. 1168

9 இப்போது நேரமாகி விடியும் இரவுகள் பிரிந்த தலைவரினும் கொடுமையுடையன. 1169

10 அவர் இடத்துக்கு என் மனம் போவதுபோல் கண்களும் போக முடியின் கண்ணீரில் நீந்தா. 1170

# படர் மெலிந்து இரங்கல்



1 மறைப்பேன்மன் யான், இஃதோ, நோயை-இறைப்பவர்க்கு 1161
ஊற்றுநீர் போல மிகும்.

2 கரத்தலும் ஆற்றேன், இந் நோயை; நோய் செய்தார்க்கு 1162
உரைத்தலும் நாணுத் தரும்.

3 காமமும் நாணும் உயிர் காவாத் தூங்கும், என் 1163
நோனா உடம்பினகத்து.

4 காமக் கடல் மன்னும் உண்டே;அது நீந்தும் 1164
ஏமப் புணை மன்னும் இல்.

5 துப்பின் எவன் ஆவர்மன்கொல்-துயர் வரவு 1165
நட்பினுள் ஆற்றுபவர்.

6 இன்பம் கடல் மற்றுக் காமம்; அஃது அடுங்கால், 1166
துன்பம் அதனின் பெரிது.

7 காமக் கடும் புனல் நீந்திக் கரை காணேன், 1167
யாமத்தும், யானே உளேன்.

8 மன் உயிர் எல்லாம் துயிற்றி,-அளித்து, இரா!- 1168
என் அல்லது இல்லை, துணை.

9 கொடியார் கொடுமையின் தாம் கொடிய-இந் நாள் 1169
நெடிய கழியும் இரா.

10 உள்ளம் போன்று உள்வழிச் செல்கிற்பின்,வெள்ளநீர் 1170
நீந்தல மன்னோ, என் கண்.

# கண் விதுப்பு அழிதல்



## தெளிவுரை

1 தீராத நோயைக் கண்காட்ட நான் பெற்றேன்;
நோய் தந்த கண் இப்போது ஏன் அழுகின்றன? 1171

2 அன்று ஆராயாது அவரை நோக்கிய கண்கள்.
இன்று பொறுக்காமல் துன்பப் படுவது ஏன்? 1172

3 அன்று விரைந்து பார்த்தன்; இன்று அழுகின்றன;
இது கேலிக்கு உரியது. 1173

4 தப்ப முடியாத நோயை எனக்குத் தந்து விட்டுக்
கண்கள் இனி அழமுடியாமல் வறண்டன. 1174

5 கடலினும் பெரிய காமம் தந்த என் கண்கள்
தூங்கமுடியாது துன்பப் படுகின்றன. 1175

6 எனக்கு இத்துன்பம் தந்த கண்கள் தாமும்
அத்துன்பப் படுவது எவ்வளவோ மகிழ்ச்சி. 1176

7 விரும்பி உருகிக் காதலரைக் கண்ட கண்கள்
வருந்தி வருந்தி வறண்டு போகட்டும். 1177

8 மனமின்றியே காதலித்தார் ஒருவர் உளர்;
அவரைப் பாராது கண்கள் தூங்கா. 1178

9 அவர் வாராவிடினும் தூங்கா; வரினும் தூங்கா;
இருநிலையிலும் கண்கள் பெருந்துயர்ப்பட்டன. 1179

10 பறை போலும் கண்ணுடைய மகளிரிடமிருந்து
மறைவை ஊரார் அறிதல் கடினமில்லை. 1180

1 கண்தாம் கலுழ்வது எவன்கொலோ-தண்டா நோய், 1171
தாம் காட்ட, யாம் கண்டது!.

2 தெரிந்து உணரா நோக்கிய உண்கண் பரிந்து உணரா, 1172
பைதல் உழப்பது எவன்?.

3 கதுமெனத் தாம் நோக்கித் தாமே கலுழும் 1173
இது நகத்தக்கது உடைத்து.

4 பெயல் ஆற்றா நீர் உலந்த, உண்கண்-உயல் ஆற்றா 1174
உய்வு இல் நோய் என்கண் நிறுத்து.

5 படல் ஆற்றா, பைதல் உழக்கும்-கடல் ஆற்றாக் 1175
காம நோய் செய்த என் கண்.

6 ஓஒ, இனிதே!-எமக்கு இந் நோய் செய்த கண் 1176
தாஅம் இதற்பட்டது.

7 உழந்து உழந்து உள்நீர் அறுக-விழைந்து இழைந்து 1177
வேண்டி அவர்க் கண்ட கண்!.

8 பேணாது பெட்டார் உளர்மன்னோ-மற்று அவர்க் 1178
காணாது அமைவு இல கண்.

9 வாராக்கால், துஞ்சா; வரின், துஞ்சா; ஆயிடை 1179
ஆர் அஞர் உற்றன கண்.

10 மறை பெறல் ஊரார்க்கு அரிது அன்றால்-எம்போல் 1180
அறை பறை கண்ணார் அகத்து.

# பசப்பு உறு பருவரல்



## தெளிவுரை

1 பிரிவை விரும்பியவர் கொடுமைக்கு இசைந்தேன்;
பின் என்பசலையை யார்க்குச் சொல்வது? 1181

2 தந்தவர் அவர் என்னும் பெருமிதங் கொண்டு
பசலை படர்ந்து என் மேனிமேல் ஏறும். 1182

3 காமத்தையும் பசலையையும் மாற்றாகத் தந்து
சாயலையும் நாணையும் எடுத்துக் கொண்டார். 1183

4 நினைப்பதும் பேசுவதும் எல்லாம் அவரையே;
இருந்தும் பசலை வந்தது கள்ளத்தனமா வேறா? 1184

5 அதோ பார்! காதலர் போகிறார். இதோ பார்!
என்மேனிமேல் பசலை படர்கிறது. 1185

6 இருள் வெளிச்சம் மறைவதை எதிர்ப் பார்க்கும்;
பசலை தலைவன் தழுவாமையை எதிர்பார்க்கும். 1186

7 தழுவிக்கிடந்த நான் சிறிது தள்ளிப்படுத்தேன்;
அவ்வளவிற்கே பசலை கொட்டிக் கிடந்தது. 1187

8 பசலையுற்றாள் இவள் எனப் பழிக்கின்றனர்;
பிரிந்தாரே அவர் எனச் சொல்வார் இல்லை. 1188

9 பிரிவை இசைவித்த தோழி நலம் எனின்
பட்டுப் போலும் என் மேனி பசக்கட்டும். 1189

10 தோழி அவர் கொடுமையைத் தூற்றாளெனின்
பசலைப்போ பற்றிக் கவலையில்லை. 1190

# பசப்பு உறு பருவரல்



1 நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன்; பசந்த என் 1181
பண்பு யார்க்கு உரைக்கோ, பிற.

2 அவர் தந்தார் என்னும் தகையால் இவர்தந்து, என் 1182
மேனிமேல் ஊரும், பசப்பு.

3 சாயலும் நாணும் அவர் கொண்டார்-கைம்மாறா 1183
நோயும் பசலையும் தந்து.

4 உள்ளுவன்மன் யான்; உரைப்பது அவர்திறமால்; 1184
கள்ளம் பிறவோ, பசப்பு.

5 உவக்காண், எம் காதலர் செல்வார்; இவக்காண், என் 1185
மேனி பசப்பு ஊர்வது!.

6 விளக்கு அற்றம் பார்க்கும் இருளேபோல், கொண்கன் 1186
முயக்கு அற்றம் பார்க்கும், பசப்பு.

7 புல்லிக் கிடந்தேன், புடைபெயர்ந்தேன்; அவ் அளவில், 1187
அள்ளிக்கொள்வற்றே, பசப்பு.

8 'பசந்தாள் இவள்' என்பது அல்லால், 'இவளைத் 1188
துறந்தார் அவர்' என்பார் இல்.

9 பசக்கமன் பட்டாங்கு, என் மேனி-நயப்பித்தார் 1189
நல் நிலையர் ஆவர் எனின்!.

10 பசப்பு எனப் பேர் பெறுதல் நன்றே-நயப்பித்தார் 1190
நல்காமை தூற்றார் எனின்.

## தெளிவுரை

1 நாம் காதலித்தவர் நம்மைக் காதலித்தால் 1191
கொட்டையிலாத காமப்பழம் பெற்றது போலும்.

2 காதலியர்க்குக் காதலர் காட்டும் அன்பு 1192
எதிர்பார்த்த உழவர்க்கு மழை பெய்ததுபோல்.

3 காதலரால் என்றும் காதலிக்கப் பட்டார்க்கு 1193
வாழ்கின்றோம் என்ற பெருமிதம் பொருந்தும்.

4 தாம் விரும்பியவரே விரும்ப வில்லை யெனின் 1194
விரும்பிய மகளிர் எவ்வுறவும் இல்லாதவர்.

5 நாம் காதலித்தவர் நம்மைக் காதலிக்கா விடின் 1195
அவர் நமக்கு வேறு என்ன நலம் செய்வார்?

6 காமம் ஒரு பக்கம் இருப்பது துன்பம் ; காவடிப் 1196
பாரம்போல் இருபக்கமும் இருப்பது இன்பம்.

7 மன்மதன் ஒருவரிடமே இருக்கின்றான் ஆதலின் 1197
காமத் துன்பமும் வருத்தமும் அறியானோ?

8 காதலரின் இன்சொல்லைப் பெறாமல் பிரிந்து 1198
உலகத்து இருக்கும் மகளிரே கொடியவர்.

9 காதலர் அருளார் எனினும் அவரைப் பற்றிக் 1199
கூறும் புகழ்ச் சொற்கள் காதுக்கு இன்பமாம்.

10 துன்பப் படாதவர்க்கு நீடற்ற துன்பத்தைத் 1200
தூதாற் சொல்;நெஞ்சே! கடலை வெறுக்காதே.

# தனிப் படர் மிகுதி

1 தாம் வீழ்வார் தம் வீழப்பெற்றவர் பெற்றாரே, 1191
காமத்துக் காழ் இல் கனி.

2 வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால்-வீழ்வார்க்கு 1192
வீழ்வார் அளிக்கும் அளி.

3 வீழுநர் வீழப்படுவார்க்கு அமையுமே, 1193
'வாழுநம்' என்னும் செருக்கு.

4 வீழப்படுவார், கெழீஇயிலர், தாம் வீழ்வார் 1194
வீழப்படாஅர் எனின்.

5 நாம் காதல் கொண்டார் நமக்கு எவன் செய்பவோ 1195
தாம் காதல் கொள்ளாக்கடை.

6 ஒருதலையான் இன்னாது, காமம்; காப் போல 1196
இருதலையானும் இனிது.

7 பருவரலும் பைதலும் காணான்கொல்-காமன் 1197
ஒருவர்கண் நின்று ஒழுகுவான்!.

8 வீழ்வாரின் இன் சொல் பெறாஅது, உலகத்து 1198
வாழ்வாரின் வன்கணார் இல்.

9 நசைஇயார் நல்கார் எனினும், அவர்மாட்டு 1199
இசையும் இனிய, செவிக்கு.

10 உறாஅர்க்கு உறு நோய் உரைப்பாய்-கடலைச் 1200
செறாஅஅய்!-வாழிய நெஞ்சு!.

# நினைந்து அவர் புலம்பல்



## தெளிவுரை

1 நினைத்தாலும் நீங்காத மகிழ்ச்சி தருதலால் 1201
கள்ளைக் காட்டிலும் காமம் இன்பமானது.

2 எந்த அளவிற்கும் இனியது காமம்; 1202
காதலர் நினைத்தால் துன்பம் ஒன்றும் வராது.

3 தும்மல் வருவதுபோல நின்று விடுதலின் அவர் 1203
என்னை நினைப்பதுபோல விட்டுவிடுவாரோ?

4 அவர் நெஞ்சில் நான் இருக்கின்றேனா? 1204
என் நெஞ்சிலோ அவர் நன்றாக இருக்கின்றார்.

5 தன் நெஞ்சில் என்னை வரவொட்டாதவர் 1205
என் நெஞ்சில் ஓயாது வர நாணவில்லையே.

6 அவரோடு கூடியிருந்த நாட்களை நினைப்பதால் 1206
வாழ்கின்றேன்; வேறு எதனால் வாழ்கின்றேன்?

7 கூட்டத்தை மறந்தால் என்னாவேன்? மறவேன்; 1207
பிரிவை நினைப்பினும் உள்ளம் கொதிக்கும்.

8 எத்தனை முறை நினைத்தாலும் காதலர் சினவார்; 1208
எனக்கு அவர்காட்டும் பெருமை அவ்வளவு.

9 நாம் ஒருவர் என்று சொன்ன காதலரின் 1209
கொடுமையை மிக எண்ணி என்உயிர் போகும்.

10 துணிந்து சென்றவரைக் கண்டுபிடிப்பதற்குள் 1210
திங்களே! நீ மறைந்து விடாதே; வாழ்க.

# நினைந்து அவர் புலம்பல்

1 உள்ளினும், தீராப் பெரு மகிழ் செய்தலால், 1201
கள்ளினும் காமம் இனிது.

2 எனைத்து ஒன்று இனிதேகாண் காமம்; தாம் வீழ்வார் 1202
நினைப்ப, வருவது ஒன்று இல்.

3 நினைப்பவர் போன்று நினையார்கொல்-தும்மல் 1203
சினைப்பது போன்று கெடும்!.

4 யாமும் உளேம்கொல், அவர் நெஞ்சத்து?-எம் நெஞ்சத்து, 1204
ஓஒ! உளரே அவர்!.

5 தம் நெஞ்சத்து எம்மைக் கடி கொண்டார் நாணார்கொல்- 1205
எம் நெஞ்சத்து ஓவா வரல்?.

6 மற்று யான் என் உளேன் மன்னோ! அவரொடு யான் 1206
உற்ற நாள் உள்ள, உளேன்.

7 மறப்பின், எவன் ஆவன் மன்கொல்-மறப்பு அறியேன், 1207
உள்ளினும் உள்ளம் சுடும்?.

8 எனைத்தும் நினைப்பினும் காயார்; அனைத்து அன்றோ, 1208
காதலர் செய்யும் சிறப்பு?.

9 விளியும், என் இன் உயிர்-'வேறு அல்லம்' என்பார் 1209
அளி இன்மை ஆற்ற நினைந்து.

10 விடாஅது சென்றாரைக் கண்ணினால் காணப் 1210
படாஅதி-வாழி மதி!.

# கனவு நிலை உரைத்தல்



## தெளிவுரை

1 காதலரின் தூதாக வந்த கனவுக்கு
என்ன விருந்து நான் செய்வேன்? 1211

2 கண்கள் தூங்கின் கனவில் வரும் காதலர்க்கு
எப்படிப் பிழைத்துள்ளேன் என்பது சொல்வேன். 1212

3 நனவிலே வந்து அணையாத காதலரைக்
கனவிலேனும் பார்த்தலின் என் உயிர் உண்டு. 1213

4 நனவில் அருளாதவரைத் தேடிக் காட்டுதற்குக்
கனவில் காமம் உண்டாகின்றது. 1214

5 கனவும் பார்க்கும் அப்போது இனிது; நனவும்
அவரைப் பார்க்கும் அப்போது இனிது. 1215

6 விழிப்புநிலை என்பது ஒன்று இல்லையெனின்
காதலர் கனவை விட்டு நீங்கார். 1216

7 நேரிலே வந்து அன்பு செய்யாத கொடியவர்
கனவிலே வந்து என்னை வருத்துவது ஏன்? 1217

8 தூங்கும் போது கனவில் தோள்மேல் இருந்து
விழித்தவுடன் நெஞ்சிற்குள் போய்விடுவார். 1218

9 கனவிலும் காதலரைக் காணாதவர்கள்தாம்
நேரிலே அருளாத அவரைப் பழிப்பர். 1219

10 நனவிலே விட்டுப்பிரிந்தார் என்பர் இவ்வூரார்
கனவிலே வருவதை அறியமாட்டார்களோ? 1220

# கனவு நிலை உரைத்தல்



1 காதலர் தூதொடு வந்த கனவினுக்கு 1211
யாது செய்வேன்கொல், விருந்து!.

2 கயல் உண்கண் யான் இரப்பத் துஞ்சின், கலந்தார்க்கு 1212
உயல் உண்மை சாற்றுவேன்மன்.

3 நனவினான் நல்காதவரைக் கனவினான் 1213
காண்டலின் உண்டு, என் உயிர்.

4 கனவினான் உண்டாகும் காமம்-நனவினான் 1214
நல்காரை நாடித் தரற்கு.

5 நனவினான் கண்டதூஉம், ஆங்கே கனவும்தான் 1215
கண்ட பொழுதே இனிது.

6 நனவு என ஒன்று இல்லைஆயின், கனவினான் 1216
காதலர் நீங்கலர்மன்.

7 நனவினான் நல்காக் கொடியார் கனவினான், 1217
என், எம்மைப் பீழிப்பது?.

8 துஞ்சுங்கால் தோள் மேலர் ஆகி, விழிக்குங்கால் 1218
நெஞ்சத்தர் ஆவர், விரைந்து.

9 நனவினான் நல்காரை நோவர்-கனவினான் 1219
காதலர்க் காணாதவர்.

10 நனவினான், நம் நீத்தார் என்பர்; கனவினான் 1220
காணார்கொல், இவ் ஊரவர்!.

# பொழுது கண்டு இரங்கல்

## தெளிவுரை

1 பொழுதே நீ மாலைக்காலமா? இல்லை; 1221
கூடிப்பிரிந்தார் உயிர்குடிக்கும் காரியவேல்.

2 மயங்கும் மாலையே! நீயும் வருந்துகின்றாய்; 1222
என் காதலன் போல் நின்காதலனும் கொடியனா?

3 நடுங்கி வருந்தும் மாலை வெறுப்பு வாட்டிப் 1223
பிரிவுத் துன்பம் பெருகுமாறு வருகின்றது.

4 காதலர் இல்லாதபோது மாலைக் காலம் 1224
கொலைக்களத்துக்குப் பகைவர்போல் வரும்.

5 காலைப் பொழுதுக்கு நான் செய்த நலம் என்ன? 1225
மாலைப் பொழுதுக்கு நான் செய்த தீமை என்ன?

6 மாலைக்காலம் நோய் செய்யும் என்பது 1226
காதலர் பிரியாதபோது எனக்குத் தெரியாது.

7 காமம் என்னும் பூ காலையில் அரும்பும்; 1227
பகலெல்லாம் மொட்டாகும்; மாலையில் மலரும்.

8 புல்லாங்குழல் என்னைக் கொல்லும் படையாகும்; 1228
தீப்போன்ற மாலைக்குத் தூதும் ஆகும்.

9 திங்களோடு மாலைக்காலம் வரும்போது 1229
ஊரே மயங்கி வருந்தும்.

10 பொருள் மயக்கம் உடையவரை நினைந்து 1230
பொறுத்த என்னுயிர் இம்மாலையில் போகும்.

# பொழுது கண்டு இரங்கல்



1 மாலையோ அல்லை; மணந்தார் உயிர் உண்ணும் 1221
வேலை நீ;-வாழி, பொழுது!.

2 புன்கண்ணை-வாழி, மருள் மாலை!-எம் கேள்போல் 1222
வன்கண்ணதோ, நின் துணை?.

3 பனி அரும்பிப் பைதல் கொள் மாலை, துனி அரும்பித் 1223
துன்பம் வளர, வரும்.

4 காதலர் இல் வழி, மாலை, கொலைக்களத்து 1224
ஏதிலர் போல, வரும்.

5 காலைக்குச் செய்த நன்று என்கொல்? எவன்கொல், யான் 1225
மாலைக்குச் செய்த பகை?.

6 மாலை நோய் செய்தல், மணந்தார் அகலாத 1226
காலை அறிந்ததிலேன்.

7 காலை அரும்பி, பகல் எல்லாம் போது ஆகி, 1227
மாலை மலரும்-இந் நோய்.

8 அழல் போலும் மாலைக்குத் தூது ஆகி, ஆயன் 1228
குழல்போலும் கொல்லும் படை.

9 பதி மருண்டு, பைதல் உழக்கும்-மதி மருண்டு, 1229
மாலை படர்தரும் போழ்து.

10 பொருள் மாலையாளரை உள்ளி, மருள் மாலை 1230
மாயும், என் மாயா உயிர்.

# உறுப்பு நலன் அழிதல்



## தெளிவுரை

1 நமக்குத் துன்பம் தந்து தொலை சென்றாரை 1231
நினைந்தழுத கண்கள் மலருக்கு நாணின.

2 சோகை நிறம் பெற்று அழுகின்ற கண்கள் 1232
காதலரின் கொடுமையைக் காட்டுவன் போலும்.

3 கூடிய நாளில் பெருத்த தோள்கள் மெலிந்து 1233
அவர் பிரிவை அம்பலப்படுத்துவன் போலும்.

4 துணைவரைப் பிரிந்து அழகு வாடிய தோள்கள் 1234
பருமன் நீங்கி வளையல்களைக் கொட்டும்.

5 வளையல்களும் வனப்பும் சுருங்கிய தோள்கள் 1235
கொடியவரின் கொடுமையைச் சொல்லுகின்றன.

6 வளையலும் தோளும் நெகிழ்வதால் அவரைக் 1236
கொடியரெனக் கூறக்கேட்டு வருந்துகிறேன்.

7 காதலர்க்கு மெலியும் தோள்களின் மாறுபாட்டைச் 1237
சொல்லி, நெஞ்சே! பெருமை அடையாயா?

8 அணைத்த கைகளைத் தளர்த்திய அளவிற்கே 1238
இப்பேதையின் நெற்றி பசலை பெற்றது.

9 தழுவலிடைக் குளிர்காற்றுப் புகுந்த அளவிற்கே 1239
இப்பேதையின் குளிர்ந்த கண்கள் பசந்தன.

10 நல்ல நெற்றி பசலை அடைந்ததைப் பார்த்துக் 1240
கண்ணின் பசலையோ வருத்தப் பட்டது.

# உறுப்பு நலன் அழிதல்

1 சிறுமை நமக்கு ஒழியச் சேண் சென்றார் உள்ளி,
நறு மலர் நாணின, கண். 1231

2 நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்-
பசந்து பனி வாரும் கண். 1232

3 தணந்தமை சால அறிவிப்ப போலும்-
மணந்த நாள் வீங்கிய தோள். 1233

4 பணை நீங்கிப் பைந் தொடி சோரும்-துணை நீங்கித்
தொல் கவின் வாடிய தோள். 1234

5 கொடியார் கொடுமை உரைக்கும்-தொடியொடு
தொல் கவின் வாடிய தோள். 1235

6 தொடியொடு தோள் நெகிழ நோவல்-அவரை,
'கொடியர்' எனக் கூறல் நொந்து. 1236

7 பாடு பெறுதியோ-நெஞ்சே!-கொடியார்க்கு என்
வாடு தோட் பூசல் உரைத்து?. 1237

8 முயங்கிய கைகளை ஊக்க, பசந்தது-
பைந் தொடிப் பேதை நுதல்!. 1238

9 முயக்கிடைத் தண் வளி போழ, பசப்பு உற்ற-
பேதை பெரு மழைக்கண். 1239

10 கண்ணின் பசப்போ பருவரல் எய்தின்றே-
ஒள் நுதல் செய்தது கண்டு. 1240

# நெஞ்சொடு கிளத்தல்

## தெளிவுரை

1 சிறிதாயினும் காமநோய் தீர்க்கும் மருந்தினை
நெஞ்சே எண்ணிப் பார்த்துச் சொல்லாயா? 1241

2 நம்மேல் காதல் இவருக்கு இல்லாத போது
நீ வருந்துவது நெஞ்சே மடமை. 1242

3 நெஞ்சே நீ இருந்து நினைத்து வருந்துவதேன்?
அன்பெண்ணம் நோய் செய்தாருக்கு இல்லை. 1243

4 நெஞ்சே கண்களையும் அழைத்துக்கொண்டு போ;
அவரைக் காண விரும்பி என்னைத் தின்னும். 1244

5 நாம் துன்புற்றாலும் வாராதவர் , நெஞ்சே!
நம்மைக் கைவிட்டாரென விட முடியுமா? 1245

6 கூடியுணர்த்தும் அவரைக்கண்டால் வெறுக்காய்;
நெஞ்சே! இப்போது பொய்யாக வெறுக்கிறாய். 1246

7 காமத்தை விடு அல்லது நாணத்தை விடு;
நெஞ்சே! இரண்டையும் நான் தாங்கேன். 1247

8 காதலர் அருளார் என்றேங்கி நெஞ்சே!
பிரிந்தவர்பின் போவாய்; நீ பேதை. 1248

9 காதலர் உள்ளத்தில் இருக்கவும் நெஞ்சே!
நீ யாரிடம் சொல்ல நினைக்கின்றாய்? 1249

10 வாராது துறந்தவரை நெஞ்சில் வைத்திருக்கவும்
இன்னும் அழகை இழக்கின்றோம். 1250

# நெஞ்சொடு கிளத்தல்



1 நினைத்து ஒன்று சொல்லாயோ-நெஞ்சே!-எனைத்து ஒன்றும் 1241
எவ்வ நோய் தீர்க்கும் மருந்து?.

2 காதல் அவர் இலர் ஆக நீ நோவது 1242
பேதைமை-வாழி, என் நெஞ்சு!.

3 இருந்து உள்ளி, என் பரிதல்?-நெஞ்சே!-பரிந்து உள்ளல் 1243
பைதல் நோய் செய்தார்கண் இல்.

4 கண்ணும் கொளச் சேறி-நெஞ்சே!-இவை என்னைத் 1244
தின்னும், அவர்க் காணல் உற்று!.

5 செற்றார் எனக் கைவிடல் உண்டோ-நெஞ்சே!-யாம் 1245
உற்றால் உறாஅதவர்?.

6 கலந்து உணர்த்தும் காதலர்க் கண்டால், புலந்து உணராய்; 1246
பொய்க் காய்வு காய்தி-என் நெஞ்சு.

7 காமம் விடு, ஒன்றோ; நாண் விடு-நல் நெஞ்சே!- 1247
யானோ பொறேன், இவ் இரண்டு.

8 பரிந்து அவர் நல்கார் என்று, ஏங்கி, பிரிந்தவர்- 1248
பின் செல்வாய்; பேதை-என் நெஞ்சு.!

9 உள்ளத்தார் காதலவர் ஆக, உள்ளி நீ 1249
யாருழைச் சேறி?- என் நெஞ்சு!.

10 துன்னாத் துறந்தாரை நெஞ்சத்து உடையேமா, 1250
இன்னும் இழத்தும், கவின்.

# நிறை அழிதல்



## தெளிவுரை

| | | |
|---|---|---|
| 1 | நாணத் தாழ்ப்பாள் இட்ட உறுதிக் கதவைக்<br>காமக் கோடாலி தகர்த்து விடும். | 1251 |
| 2 | காமம் என்பது சிறிதும் இரக்கம் இல்லாமல்<br>என் நெஞ்சத்தை நடுயாமத்தும் ஆளுகின்றது. | 1252 |
| 3 | நான் காமத்தை மறைக்கத்தான் செய்கின்றேன்;<br>திமரெனத் தும்மல்போல் வெளியாகின்றது. | 1253 |
| 4 | உறுதியுடையேன் என்று சொல்லுவேன் நான்;<br>என் காமமோ ஒளிவின்றி அம்பலப்படும். | 1254 |
| 5 | வெறுத்தவர்பின் செல்லாத மானவுணர்ச்சி<br>காமநோயாளிக்குத் தெரியக் கூடியதன்று. | 1255 |
| 6 | வெறுத்தவரின் பின்னே செல்ல விரும்புதலால்<br>என்னைச் சேர்ந்த நோய் இரங்கத்தக்கது. | 1256 |
| 7 | காதலர் காமத்தோடு நாம் விரும்பியன் செய்யின்<br>நாணம் என்ற உணர்ச்சி நமக்குத் தெரியாது. | 1257 |
| 8 | பசப்புடைய காதலனது தாழ்ந்த மொழியன்றோ<br>நம்பெண்மைக் கதவைத் தகர்க்கும் படை. | 1258 |
| 9 | நெஞ்சம் கூடவிரும்புவதைப் பார்த்துவிட்டுப்<br>பிணங்கச் சென்ற நானும் தழுவினேன். | 1259 |
| 10 | தீயில் இட்ட கொழுப்புப்போல் உருகுபவர்க்குக்<br>காதலரை நெருங்கி வாடி நிற்க முடியுமா? | 1260 |

# நிறை அழிதல்



1 காமக் கணிச்சி உடைக்கும்-நிறை என்னும் 1251
நாணுத் தாழ் வீழ்த்த கதவு.

2 காமம் என ஒன்றோ கண் இன்று! என் நெஞ்சத்தை 1252
யாமத்தும் ஆளும், தொழில்.

3 மறைப்பேன்மன் காமத்தை யானோ; குறிப்பு இன்றித் 1253
தும்மல்போல் தோன்றிவிடும்.

4 நிறை உடையேன் என்பேன்மன், யானோ; என் காமம், 1254
மறை இறந்து, மன்றுபடும்.

5 செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை, காம நோய் 1255
உற்றார் அறிவது ஒன்று அன்று.

6 செற்றவர்பின் சேறல் வேண்டி,-அளித்துஅரோ!- 1256
எற்று, என்னை உற்ற துயர்?.

7 நாண் என ஒன்றோ அறியலம்-காமத்தான், 1257
பேணியார் பெட்ப செயின்.

8 பல மாயக் கள்வன் பணிமொழி அன்றோ-நம் 1258
பெண்மை உடைக்கும் படை!.

9 'புலப்பல்' எனச் சென்றேன்; புல்லினேன், நெஞ்சம் 1259
கலத்தல் உறுவது கண்டு.

10 நிணம் தீயில் இட்டன்ன நெஞ்சினார்க்கு உண்டோ- 1260
புணர்ந்து ஊடி நிற்பேம் எனல்?.

# அவர்வயின் விதும்பல்



## தெளிவுரை

1 அவர்வரும் வழிபார்த்துக் கண்களும் மழுங்கின; 1261
அவர் சென்ற நாள் எண்ணி விரலும் தேய்ந்தன.

2 தோழியே! இன்று அவரை மறந்தால் 1262
என் தோள் அழகு கெட்டு வளை கொட்டும்.

3 உறுதியை நம்பி ஊக்கத்தோடு சென்றவர் 1263
வருதலை நம்பி இன்னும் வாழ்கின்றேன்.

4 கூடிப்பிரிந்தவர் வருகின்றாரா என்று 1264
என்நெஞ்சம் கிளை தோறும் ஏறிப் பார்க்கும்.

5 என் காதலனைக் கண்ணாரக் காண்பேன்; 1265
பின்பு என் தோளின் பசலைநிறம் நீங்கிவிடும்.

6 என் காதலன் ஒருநாள் என்னிடம் வருவான்; 1266
என்நோயெல்லாம் கெட அவனை நுகர்வேன்.

7 கண்போன்ற காதலர் வந்தால் 1267
ஊடுவேனா? தழுவுவேனா? கூடுவேனா?

8 வேந்தன் போரில் ஈடுபட்டு வென்று வருக; 1268
மனையில் மகிழ்ந்து மாலையில் விருந்திடுவோம்.

9 தொலை சென்றார் வரும் நாளை எண்ணுபவர்க்கு 1269
வாராத ஒருநாள் ஏழுநாள் போல் தோன்றும்.

10 உள்ளம் உடைந்து சிதறியபின் அவரைப் 1270
பெற்றால் என்ன? தழுவினாலும் என்ன?

# அவர்வயின் விதும்பல்

1 வாள் அற்றுப் புற்கென்ற, கண்ணும்; அவர் சென்ற
நாள் ஒற்றித் தேய்ந்த, விரல். 1261

2 இலங்கிழாய்! இன்று மறப்பின், என் தோள்மேல்
கலம் கழியும், காரிகை நீத்து. 1262

3 உரன் நசைஇ, உள்ளம் துணையாகச் சென்றார்
வரல் நசைஇ, இன்னும் உளேன். 1263

4 கூடிய காமம் பிரிந்தார் வரவு உள்ளி,
கோடு கொடு ஏறும், என் நெஞ்சு. 1264

5 காண்கமன், கொண்கனைக் கண் ஆர; கண்டபின்,
நீங்கும், என் மென் தோட் பசப்பு. 1265

6 வருகமன், கொண்கன் ஒருநாள்; பருகுவன்,
பைதல்நோய் எல்லாம் கெட. 1266

7 புலப்பேன்கொல்-புல்லுவேன் கொல்லோ-கலப்பேன்கொல்-
கண் அன்ன கேளிர் வரின்?. 1267

8 வினை கலந்து வென்றீக, வேந்தன்! மனை கலந்து
மாலை அயர்கம், விருந்து!. 1268

9 ஒரு நாள் எழு நாள்போல் செல்லும்-சேண் சென்றார்
வரு நாள் வைத்து ஏங்குபவர்க்கு. 1269

10 பெறின் என் ஆம்-பெற்றக்கால் என் ஆம் உறின் என் ஆம்-
உள்ளம் உடைந்து உக்கக்கால்?. 1270

# குறிப்பு அறிவுறுத்தல்

## தெளிவுரை

1 நீ மறைத்தாலும் மீறி உன் கருங்கண்கள்
ஏதோ ஒன்றைச் சொல்லுகின்றன. 1271

2 கண்நிறைந்த அழகும் மூங்கில் போன்ற தோளும்
பெற்ற காதலிக்குப் பெண் தன்மை மிகுதி. 1272

3 மணிக்கோவையுள் நூல் தெரிவது போல
மங்கை அழகில் ஒரு குறிப்புத் தெரிகின்றது. 1273

4 மொட்டுக்குள் மணம் இருத்தல் போல
இவள் சிரிப்புக்குள் ஒரு குறிப்பு உண்டு. 1274

5 வளை நிறைந்தவள் செய்து போன கள்ளத்தில்
என் துயர் தீர்க்கும் மருந்து உண்டு. 1275

6 மிக அன்பு காட்டி ஆசையாகக் கூடுவதில்
பிரியும் கொடுமைக் குறிப்பு உண்டு. 1276

7 குளிர்ந்த துறைவன் பிரிவான் என்பதை
நம்மினும் முந்தி வளையல்கள் உணர்ந்தன. 1277

8 நேற்றுத்தான் காதலர் பிரிந்தார். அதற்குள்
ஏழு நாள் அளவு பசலை அடைந்து விட்டேன். 1278

9 வளையலையும் தோளையும் காலையும் பார்த்தாள்;
இது பிரிவு சொன்னபோது அவள் செய்தது. 1279

10 காமநோயைக் கண்ணாற் சொல்லி வேண்டுதல்
சிறந்த பெண்தன்மை என்று சொல்லுவர். 1280

# குறிப்பு அறிவுறுத்தல்



1 கரப்பினும், கையிகந்து ஒல்லா, நின் உண்கண் 1271
உரைக்கல் உறுவது ஒன்று உண்டு.

2 கண் நிறைந்த காரிகை, காம்பு ஏர் தோள், பேதைக்குப் 1272
பெண் நிறைந்த நீர்மை பெரிது.

3 மணியுள் திகழ்தரும் நூல்போல், மடந்தை 1273
அணியுள் திகழ்வது ஒன்று உண்டு.

4 முகை மொக்குள் உள்ளது நாற்றம்போல், பேதை 1274
நகை மொக்குள் உள்ளது ஒன்று உண்டு.

5 செறிதொடி செய்து இறந்த கள்ளம், உறு துயர் 1275
தீர்க்கும் மருந்து ஒன்று உடைத்து.

6 பெரிது ஆற்றிப் பெட்பக் கலத்தல், அரிது ஆற்றி, 1276
அன்பு இன்மை சூழ்வது உடைத்து.

7 தண்ணந் துறைவன் தணந்தமை, நம்மினும் 1277
முன்னம் உணர்ந்த, வளை.

8 நெருநற்றுச் சென்றார் எம் காதலர்; யாமும் 1278
எழு நாளேம், மேனி பசந்து.

9 தொடி நோக்கி, மென் தோளும் நோக்கி, அடி நோக்கி, 1279
அஃது, ஆண்டு அவள் செய்தது.

10 பெண்ணினான் பெண்மை உடைத்து என்ப-கண்ணினான் 1280
காம நோய் சொல்லி இரவு.

## தெளிவுரை

1 நினைக்கவும் காணவும் மகிழ்ச்சி தருதல்
கள்ளுக்கு இல்லை; காமத்திற்கு உண்டு. 1281

2 பனையளவு காமவேட்கை பெருகுமாயின்
தினையளவுகூட ஊடுதல் ஆகாது. 1282

3 புறக்கணித்துத் தாம் விரும்பியனவே செய்தாலும்
காதலனைக் காணாமல் என் கண்கள் பொருந்தா. 1283

4 தோழி நான் பாடச் சென்றேன்; என் நெஞ்சோ
அது மறந்து கூடச் சென்றது. 1284

5 மைதீட்டுங்கால் தூரிகை கண்ணுக்குத் தெரியாது;
அவரைக்கண்டபோது பழி எனக்குத் தெரியாது. 1285

6 காணும்போது அவர் பிழையைக் காண்பதில்லை;
காணாதபோது பிழைதவிர வேறு காண்பதில்லை. 1286

7 கரை சேர்த்தலை அறிந்து நீரில் பாய்வதுபோல்
பொய் என்று தெரிந்தும் ஊடிப் பயன் என்ன? 1287

8 இழிவான துன்பங்கள் செய்யினும், கள்வனே!
நின்மார்பு குடியர்க்குக் கள் போன்றது. 1288

9 காமவுணர்வு மலரைவிட மென்மையானது;
அதன் பக்குவம் அறிந்து துய்ப்பார் மிகச்சிலரே. 1289

10 தழுவுதற்கு என்னைவிடத் தான் துடிதுடித்துக்
கண்ணால் பாடிக் கலங்கினாள். 1290

# புணர்ச்சி விதும்பல்



1 உள்ளக் களித்தலும், காண மகிழ்தலும், 1281
கள்ளுக்கு இல்; காமத்திற்கு உண்டு.

2 தினைத் துணையும் ஊடாமை வேண்டும்-பனைத் துணையும் 1282
காமம் நிறைய வரின்.

3 பேணாது பெட்பவே செய்யினும், கொண்கனைக் 1283
காணாது அமையல, கண்.

4 ஊடற்கண் சென்றேன்மன்;-தோழி! அது மறந்து 1284
கூடற்கண் சென்றது, என் நெஞ்சு.

5 எழுதுங்கால் கோல் காணாக் கண்ணேபோல், கொண்கன் 1285
பழி காணேன், கண்ட இடத்து.

6 காணுங்கால் காணேன் தவறு ஆய; காணாக்கால், 1286
காணேன், தவறு அல்லவை.

7 உய்த்தல் அறிந்து புனல் பாய்பவரேபோல், 1287
பொய்த்தல் அறிந்து, என் புலந்து?.

8 இளித்தக்க இன்னா செயினும், களித்தார்க்குக் 1288
கள் அற்றே-கள்வ!- நின் மார்பு.

9 மலரினும் மெல்லிது காமம்; சிலர், அதன் 1289
செவ்வி தலைப்படுவார்.

10 கண்ணின் துனித்தே, கலங்கினாள், புல்லுதல் 1290
என்னினும் தான் விதுப்புற்று.

# நெஞ்சொடு புலத்தல்

## தெளிவுரை

1 அவர்மனம் அவர் பக்கம் இருப்பதைப் பார்த்தும் 1291
என்மனமே! நீ என் பக்கம் இராதது ஏன்?

2 பொருந்தாதவரின் நிலை தெரிந்த பின்னும் 1292
வெறுக்கார் என்று என் நெஞ்சே போகின்றாய்.

3 நெஞ்சே! உன்நோக்கப்படி அவரிடம் செல்லுதல் 1293
கெட்டவர்க்கு நண்பரில்லை என்பது கருத்தோ

4 நெஞ்சே முதலில் பிணங்கிப் பின் கூடாய்; இனி 1294
அத்தகைய உன்னோடு யார் ஆராய்வார்?

5 என் நெஞ்சம் என்றும் துன்பம் உடையது; 1295
கூடாமைக்கும், கூடின் பிரிவுக்கும் வருந்தும்.

6 தனித்திருந்து அவரை நினைத்த போது 1296
என் நெஞ்சம் என்னைத் தின்ன உடனிருந்தது.

7 அவரை மறக்கமுடியாத மடமையுடைய 1297
சிறிய நெஞ்சின்வயப்பட்டு நாணை விட்டேன்.

8 இகழ்தல் இழிவென்று அவர் பண்புகளையே 1298
உயிர்ப்பற்றுடைய நெஞ்சு எண்ணும்.

9 தன்னுடைய நெஞ்சமே துணையாகாத போது 1299
துன்பக் காலத்து வேறு யார் துணையாவார்?

10 தன்னுடைய நெஞ்சமே உறவாகாத போது 1300
அயலவர் உறவாகாமை இயல்புதானே.

# நெஞ்சொடு புலத்தல்



1 அவர் நெஞ்சு அவர்க்கு ஆதல் கண்டும், எவன்,-நெஞ்சே!-
நீ எமக்கு ஆகாதது?. 1291

2 உறாஅதவர்க் கண்ட கண்ணும், அவரைச்
செறாஅர் எனச் சேறி-என் நெஞ்சு. 1292

3 'கெட்டார்க்கு நட்டார் இல்' என்பதோ-நெஞ்சே!-நீ
பெட்டாங்கு அவர்பின் செலல்?. 1293

4 இனி, அன்ன நின்னொடு சூழ்வார் யார்-நெஞ்சே!
துனி செய்து துவ்வாய்காண் மற்று?. 1294

5 பெறாஅமை அஞ்சும்; பெறின், பிரிவு அஞ்சும்;
அறாஅ இடும்பைத்து-என் நெஞ்சு. 1295

6 தனியே இருந்து நினைத்தக்கால், என்னைத்
தினிய இருந்தது-என் நெஞ்சு. 1296

7 நாணும் மறந்தேன்-அவர் மறக்கல்லா என்
மாணா மட நெஞ்சின் பட்டு. 1297

8 'எள்ளின், இளிவாம்' என்று எண்ணி, அவர் திறம்
உள்ளும்-உயிர்க் காதல் நெஞ்சு. 1298

9 துன்பத்திற்கு யாரே துணை ஆவார்-தாம் உடைய
நெஞ்சம் துணை அல்வழி?. 1299

10 தஞ்சம், தமர் அல்லர் ஏதிலார்-தாம் உடைய
நெஞ்சம் தமர் அல்வழி. 1300

## தெளிவுரை

1 தழுவாது இருந்து பிணங்குக; அப்போது
அவர் படும் துன்பத்தைச் சிறிது காண்போம். 1301

2 ஊடல் உணவுக்கு உப்பளவு போன்றது;
ஊடல் மிகுவது உப்புக் கூடுவது போலும். 1302

3 பிணங்கிய மகளிரைத் தழுவாது விடுதல்
வருந்தியவரை மேலும் வருத்துதல் போலாம். 1303

4 ஊடிய மகளிரை உணராத் தன்மை வாடிய
கொடியை அடியோடு அறுத்தது போலும். 1304

5 நற்பண்பு உடைய ஆடவர்க்கு அழகு
மலரன்ன மகளிரின் உடலை நீக்குதல். 1305

6 துனியில்லாக் காமம் பழம் ஒக்கும்;
புலவி யில்லாக் காமம் பிஞ்சு ஒக்கும். 1306

7 கூட்டம் நீளாதா என்று ஐயப் படுதலின்
ஊடலிலும் ஒரு துன்பம் உண்டு. 1307

8 கூடுதற்கு வருந்தினார் என்று ஊடலைப் புரியும்
காதலர் இல்லாத போது வருந்திப் பயனென்? 1308

9 நீரும் நிழலிடத்தே குடித்தல் இனியது;
பிணக்கமும் விரும்புவாரிடத்தே இனியது. 1309

10 ஊடலை வாட விடுவாரோடு என் மனம்
கூட நினைப்பது வெறும் ஆசையே. 1310

# புலவி

1 புல்லாது இராஅப் புலத்தை; அவர் உறும் 1301
அல்லல் நோய் காண்கம், சிறிது.

2 உப்பு அமைந்தற்றால், புலவி; அது சிறிது 1302
மிக்கற்றால், நீள விடல்.

3 அலந்தாரை அல்லல் நோய் செய்தற்றால்-தம்மைப் 1303
புலந்தாரைப் புல்லா விடல்.

4 ஊடியவரை உணராமை-வாடிய 1304
வள்ளி முதல் அரிந்தற்று.

5 நலத்தகை நல்லவர்க்கு ஏஎர், புலத் தகை, 1305
பூ அன்ன கண்ணார் அகத்து.

6 துனியும் புலவியும் இல்லாயின், காமம் 1306
கனியும் கருக்காயும் அற்று.

7 ஊடலின் உண்டு ஆங்கு ஓர் துன்பம்-'புணர்வது 1307
நீடுவது அன்றுகொல்!' என்று.

8 நோதல் எவன், மற்று-'நொந்தார்' என்று அஃது அறியும் 1308
காதலர் இல்லாவழி.

9 நீரும் நிழலது இனிதே; புலவியும் 1309
வீழுநர்கண்ணே இனிது.

10 ஊடல் உணங்க, விடுவாரொடு, என் நெஞ்சம், 1310
'கூடுவேம்' என்பது அவா.

# புலவி நுணுக்கம்

## தெளிவுரை

1 பரத்தையர் உன்னைக் கண்ணால் நுகர்வர்; 1311
ஆதலின் பரத்தனே நின் மார்பு தீண்டேன்.

2 பேசாது வாடியபோது தும்மினார்; அவரை 1312
நீடுவாழ்க என்று சொல்வேனென் நினைத்து.

3 குவியாத கோட்டுப் பூவைச் சூடினும் ஊடாத 1313
பரத்தையைக் காட்டச் சூடியதாகச் சினப்பாள்.

4 யாரையும் விடக் காதல் உடையோம் என்றதும் 1314
யாரைவிட யாரைவிட என்று பிணங்கினாள்.

5 இப்பிறப்பில் பிரிய மாட்டோம் என்றதும் 1315
மறுபிறப்பில் பிரிவுண்டா என்று அழுதாள்.

6 நினைத்தேன் என்றேன்; திரும்ப நினைக்குமாறு 1316
முன் ஏன் மறந்தீர் என்று தழுவாது வாடினாள்.

7 தும்மினேன் வாழ்த்தினாள்; திரும்ப அழுதாள் 1317
யார் நினைத்ததால் தும்மல் வந்ததென்று.

8 வந்ததும்மலை அடக்கினேன். அதற்கும் அழுதாள் 1318
உம் பெண்டிர் நினைப்பதை ஒளிக்கிறீர் என்று.

9 அவள் ஊடலைப் பணிந்து நீக்கினாலும் காய்வாள்; 1319
பிறரிடமும் இங்ஙனந்தானே நடப்பீர் என்று.

10 அவள் அழுகை உற்றுநோக்கினாலும் காய்வாள்; 1320
யாரோடு ஒப்பு நோக்கினீர் என்று.

# புலவி நுணுக்கம்



1 பெண் இயலார் எல்லாரும் கண்ணின் பொது உண்பர்; 1311
நண்ணேன்-பரத்த!-நின் மார்பு.

2 ஊடி இருந்தேமா, தும்மினார்-யாம் தம்மை, 1312
'நீடு வாழ்க!' என்பாக்கு அறிந்து.

3 கோட்டுப் பூச் சூடினும் காயும்-'ஒருத்தியைக் 1313
காட்டிய சூடினீர்!' என்று.

4 'யாரினும் காதலம்' என்றேனா, ஊடினாள்- 1314
'யாரினும்! யாரினும்!' என்று.

5 'இம்மைப் பிறப்பில் பிரியலம்' என்றேனா, 1315
கண் நிறை நீர் கொண்டனள்.

6 'உள்ளினேன்' என்றேன்; 'மற்று என் மறந்தீர்' என்று என்னைப் 1316
புல்லாள், புலத்தக்கனள்.

7 வழுத்தினாள், தும்மினேனாக; அழித்து அழுதாள், 1317
'யார் உள்ளித் தும்மினீர்?' என்று.

8 தும்முச் செறுப்ப, அழுதாள், 'நுமர் உள்ளல் 1318
எம்மை மறைத்திரோ?' என்று.

9 தன்னை உணர்த்தினும் காயும், 'பிறர்க்கும் நீர் 1319
இந் நீரர் ஆகுதிர்!' என்று.

10 நினைத்திருந்து நோக்கினும், காயும், 'அனைத்தும் நீர் 1320
யார் உள்ளி நோக்கினீர்?' என்று.

# ஊடல் உவகை

## தெளிவுரை

1 அவரிடம் ஒரு தவறும் இல்லை யாயினும் 1321
ஊடல் அவரைப் பேரன்பு கொள்ளச் செய்யும்.

2 கடலால் சிறுபொழுது தோன்றும் வெறுப்பு 1322
அவரன்பை வருத்தினும் பெருமைக்கு உரியது.

3 மண்ணோடு நீர் குழைந்தாற் போன்ற காதலரிடம் 1323
ஊடுதலைவிடத் தேவருலகம் இன்பமானதோ?

4 காதலரை உடனே தழுவிவிடாத ஊடலில் 1324
என் நிறையை உடைக்கும் படை பிறக்கின்றது.

5 தவறில்லை யாயினும் தன்காதலியின் தோளைச் 1325
சிறிது பிரிந்திருத்தலில் ஓரின்பம் உண்டு.

6 உண்பதைவிட உண்டது செரித்தல் இன்பம்; 1326
காமம் சேர்தலைவிடப் பிணங்குதல் இன்பம்.

7 ஊடலில் தோல்விப்பட்டவரே வென்றவர்; 1327
அவ்வுண்மை கூடுஞ் செய்கையில் விளங்கும்.

8 நெற்றி வேர்க்கப் புணர்ந்த இனிமையை 1328
இன்னும் ஒருமுறை ஊடிப் பெறுவேனோ?

9 காதலி மேன்மேலும் ஊடுக; நான் வேண்ட 1329
இரவு நேரம் மேன்மேலும் நீளுக.

10 காமவுணர்ச்சிக்கு ஊடுதல் இன்பம்; 1330
கூடித் தழுவுவதே அதற்குப் பேரின்பம்.

# ஊடல் உவகை



1 இல்லை தவறு அவர்க்கு ஆயினும், ஊடுதல் 1321
வல்லது, அவர் அளிக்குமாறு.

2 ஊடலின் தோன்றும் சிறு துனி, நல் அளி 1322
வாடினும், பாடு பெறும்.

3 புலத்தலின் புத்தேள்-நாடு உண்டோ-நிலத்தொடு 1323
நீர் இயைந்தன்னாரகத்து?.

4 புல்லி விடாஅப் புலவியுள் தோன்றும்-என் 1324
உள்ளம் உடைக்கும் படை.

5 தவறு இலர் ஆயினும், தாம் வீழ்வார் மென் தோள் 1325
அகறலின், ஆங்கு ஒன்று உடைத்து.

6 உணலினும், உண்டது அறல் இனிது; காமம் 1326
புணர்தலின், ஊடல் இனிது.

7 ஊடலின் தோற்றவர் வென்றார்; அது மன்னும் 1327
கூடலின் காணப்படும்.

8 ஊடிப் பெறுகுவம்கொல்லோ-நுதல் வெயர்ப்பக் 1328
கூடலின் தோன்றிய உப்பு!.

9 ஊடுக மன்னோ, ஒளியிழை! யாம் இரப்ப, 1329
நீடுக மன்னோ, இரா!.

10 ஊடுதல் காமத்திற்கு இன்பம்; அதற்கு இன்பம், 1330
கூடி முயங்கப் பெறின்.



# வ. சுப. மாணிக்கனார்.

மாணிக்கனார் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த மேலைசிவபுரியில் 17-4-1917-ம் ஆண்டு சுப்பிரமணியன் செட்டியாருக்கும், தெய்வானை ஆச்சிக்கும் ஐந்தாவது மகனாய்ப் பிறந்தார். ”அண்ணாமலை” என்ற தம் இயற்பெயரை, மாணிக்கவாசகரின் திருவாசகத்தின் மீது ஆழ்ந்த பற்று கொண்டிருந்ததால், ”மாணிக்கம்” என மாற்றிக் கொண்டார். இவரை சிறுவயதில் பொய் சொல்லா மாணிக்கம் என்று அழைத்ததாகவும் கூறப்படுகிறது. தன்னுடைய ஆறாம் வயதில் தாயை இழந்தார். இளம் பருவத்திலே பெற்றோரை இழந்த இவர் தனது தாய்வழிப் பாட்டனாரால் வளர்க்கப்பட்டார்.

தன் தொடக்கக் கல்வியினைத் தம் ஏழாம் வயது வரை புதுக்கோட்டையில் உள்ள பள்ளி ஒன்றில் பயின்றார். மாணிக்கனாருக்கு தமிழ் நூல்களை ஊன்றிக் கற்ற பண்டிதமணி மு.கதிரேசச் செட்டியார் அவர்களுடைய தொடர்பு கிடைத்து தமிழ் மொழியின் மீது மிகுந்த நாட்டம் உண்டானது. பண்டிதமணி அவர்கள் வழி நடத்துதலில் தொடர்ந்து விடா முயற்சியுடன் பயின்று வித்வான், பி.ஒ.எல், எம்.ஒ.எல், எம்.ஏ, (பிஎச்.டி) பட்டங்களைப் பெற்றார்.

இவருடைய திருமணம் 1945 ஆம் ஆண்டு ஏகம்மை ஆச்சி உடன் நடந்தது. இவர்களுக்குத் தொல்காப்பியன், பூங்குன்றன், பாரி என்று மூன்று ஆண் குழந்தைகளும், தென்றல், பொற்கொடி என்று இரண்டு பெண் குழந்தைகளும் பிறந்தனர். இவருடைய திருமணத்திற்குப் பிறகுதான் இவருடைய ஆய்வுகளும், எழுத்துப்பணிகளும் மிக அதிகமாக இவரால் மேற்கொள்ளப்பட்டன. தமிழ்நாடு அரசு இவர் எழுதிய நூல்கள் அனைத்தையும் 2006 ஆம் ஆண்டு நாட்டுடமையாக்கியது.

இவர், தமிழகப் புலவர் குழுத் தலைவர், பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தலைவர் தமிழ்வழிக் கல்வி இயக்கம், தமிழ்ப்பல்கலைக்கழக வடிவமைப்புக் குழுத்தலைவர், தமிழ்ப்பல்கலைத் ”தொல்காப்பியத் தகைஞர் போன்ற பதவிகளை வகித்தார்.

செம்மல், முதுபெரும் புலவர், டி.லிட் போன்ற சிறப்புப் பட்டங்களைப் பெற்றுள்ள மாணிக்கனாருக்கு தமிழ் நாடு அரசு இவரது இறப்பிற்குப் பின் திருவள்ளுவர் விருதினையும் வழங்கிச் சிறப்பித்துள்ளது. தமிழின் சிறப்புக்களைப் பற்றி ஆய்வுகள் பல செய்தமையால் தமிழ் இமயம் என்று தமிழ் அறிஞர்களால் போற்றப்பட்ட வ.சுப.மா. பன்முக ஆற்றல் உடையவர். மிகச் சிறந்த சிந்தனையாளரான இவர் எழுதிய நூல்கள் இவரைச் சிறந்த கவிஞராகவும், உரைநடை ஆசிரியராகவும், உரையாசிரியராகவும், நாடக ஆசிரியராகவும், ஆய்வாளராகவும் விளங்கினார் என்பதை நமக்குத் தெளிவுபடுத்துகின்றன.

“எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்” என்று வாழ்ந்த வ.சுப.மாணிக்கம் அவர்கள், மாரடைப்பின் காரணமாக 1989ஆம் ஆண்டு ஏப்ரல் 25ஆம் தேதி இரவு 11 மணிக்குப் புதுச்சேரியில் காலமானார். உயிர் பிரிந்த போது கூட அவர் கையில் திருவாசகம் நூல் தான் இருந்தது. சிறப்புமிக்க திருக்குறளுக்குப் பலர் பல்வேறு உரைகள் எழுதியுள்ளனர். முன்னோர் எழுதிய உரைப்பொருளைப் பெரிதும் தழுவக்கூடாது; தாம் ஒரு தனியுரை எழுத வேண்டும் என்ற ஆர்வம் மாணிக்கனார் அவர்களுக்கு ஏற்பட்டதால் தான், வ.சுப. மாணிக்கனார் திருக்குறள் தெளிவுரை எழுந்துள்ளது என்பதை நம்மால் அறியமுடிகின்றது. மாணிக்கனார் எழுதிய திருக்குறள் தெளிவுரை திருவள்ளுவரின் எல்லாக் கருத்துக்களையும் எல்லாரும் எளிதில் அறிந்துகொள்ளுவதற்குப் பெரிதும் துணைசெய்கிறது.



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com